இனம்
இனம் இனத்தைச் சேரும்
ISSN : 2455 - 0531
Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

# பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
# International E-Journal of Tamil Studies

**இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!**

மலர்:3 இதழ்:11 நவம்பர் 2017 Vol. 3 Issue : 11 November 2017




ஆ.மணி நா.ஹேமமாலதி ர.யரனியா ஆ.ஈஸ்வரன்
தி.நிரஞ்சினி வி.வசந்தா பா.சத்யாதேவி கு.தனலட்சுமி கா.அறிவரசு
யே.டிலானி ச.மரியதாஸ் மா.ஆசியாதாரா சே.முனியசாமி

*Inam* *ISSN : 2455 - 0531*

# இனம்

**பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்**
*An Internationally Refereed e_ Journal of Tamil Studies*


## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)



## இதழாக்கமும் வெளியீடும்


*முனைவர் த.சத்தியராஜ்*
கோயமுத்தூர்
*09600370671*
*inameditor@gmail.com*
*www.inamtamil.com*

நவம்பர் 2017 **மலர் : 3 இதழ் : 11**
*November 2017* ***Volume III Issue 11***

# உள்ளே ...

**தனித்தமிழ்ச் சிறுகதைகள்**
முனைவர் ஆ.மணி | 3

**வியங்கோள் வினை வடிவ வளர்ச்சியும் சமூகப் பின்புலமும்**
முனைவர் மா.ஆசியாதாரா | 18

**வங்காளத் திரைப்பாடலின் செவ்வியல் தன்மை**
ஆ.ஈஸ்வரன் | 23

**நீலத்திமிங்கல (Blue Whale) விளையாட்டும் அறிவுசார் விழிப்புணர்வின் தேவையும்**
வினாயகமூர்த்தி - வசந்தா | 28

**பத்துப்பாட்டு உயிரினங்கள் உணர்த்தும் உலக உண்மைகள்**
கு.தனலட்சுமி | 33

**கல்விச் செயற்பாடு வெற்றியடைவதில் மாணவர்களின் பங்களிப்பும் மாணவர்களின் நடத்தையைச் சீர்குலைக்கின்ற புறவயக் காரணிகளும்**
சந்துரு மரியதாஸ் & யேசுஜயா டிலானி | 37

**தமிழர் சிந்தனை மரபின் ஊடாக வெளிப்படும் மெய்யியல் அம்சங்கள்**
திரவியராசா நிரஞ்சினி | 43

**நம்பியகப்பொருள் உணர்த்தும் கல்வி**
முனைவர் நா.ஹேமமாலதி | 50

**விசேட கல்வியின் முக்கியத்துவமும், வினைத்திறனான விசேட கல்வி வழங்குவதில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களும்**
சந்துரு மரியதாஸ் | 54

**பாலை நிலத்தில் அஃறிணை உயிர்களின்வழி அன்புப் புலப்பாடு**
கா.அறிவரசு | 61

**கணினி நச்சுநிரல்களும் (Computer Virus) அவற்றால் ஏற்படும் பாதிப்புக்களும்**
திரவியராசா நிரஞ்சினி & வினாயகமூர்த்தி வசந்தா | 64

**சுந்தரத்தம்மையாரின் 'பெண்மாட்சி'யில் வெளிப்படும் பெண்மொழி**
முனைவர் பா.சத்யா தேவி | 70

**இந்து தேசத்தாரின் அறிவியல் சிந்தனையில் இரசாயனவியல்**
ரவீந்திரராசா யரனியா | 81

**சர்வக்ஞர் : கன்னட அற இலக்கியத் தந்தை**
சே.முனியசாமி | 90

**குழந்தையின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு**
யேசுஜயா டிலானி | 105

...

மதிப்பிடப்பெற்றது

# தனித்தமிழ்ச் சிறுகதைகள்

முனைவர் **ஆ.மணி**,
துணைப்பேராசிரியர் - தமிழ் & இணைத் தேர்வாணையர்,
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி,
புதுச்சேரி - 605 003, பேச: 9443927141,
மின்னஞ்சல்: manikurunthogai@gmail.com

**உரைக்களம்**

மறைமலையடிகளால் ஊட்டப்பட்ட தனித்தமிழ் உணர்ச்சியும், தனித்தமிழ்ப் படைப்புக்களும் தமிழ் இலக்கியப் பெருவெளியில் சிறப்பாகக் குறிக்கத்தக்கவை. தனித்தமிழ் இயக்கத்தைத் தொடக்கிவைத்த பெருமைக்குரிய மறைமலையடிகளே, தனித்தமிழ்ப் படைப்புக்களைத் தந்து, அதன் இலக்கிய வரலாற்றுக்கும் முன்னோடியாக விளங்குகின்றார் என்பர். எனினும், தற்காலத்தில் கிடைக்கின்ற தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் தனித்தமிழ் இலக்கியங்களின் வரலாறு கூறப்படுகின்றதா? என்ற வினாவுக்கு விடை இல்லை என்பதே. பிற மொழிக்கலப்புடைய இலக்கியங்களுக்கு எழுதப்படுகின்ற வரலாறுகளைவிடத் தனித்தமிழ் இலக்கியங்களுக்கு எழுதப்படுகின்ற வரலாறே மெய்யான தமிழ் வரலாறாக அமையும் பெற்றியுடையதென்பதனை மறுப்பார் உண்டோ?. எனினும், தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களை எழுதுவாருக்குத் தனித்தமிழ் உணர்வின்மையானே இத்தகைய நிலைகள் தொடர்கின்றன என்றே கருதத் தோன்றுகின்றது. இனியாகிலும் இத்தகைய நிலைகள் நீக்கப்பட வேண்டும். இனி எழுதப்படுகின்ற தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் தனித்தமிழ் இலக்கியப் படைப்புக்களின் வரலாறு இடம்பெற வேண்டும் என்பதே நம் விழைவு. இது நிற்க.

தனித்தமிழ்ச் சிறுகதைகள் என்னும் பெயரிய இந்த ஆய்வுரை, தனித்தமிழில் எழுதப்பட்டுள்ள சிறுகதைகளை அறிமுகம் செய்வதுடன், அச்சிறுகதைகளின் இயல்பினை எடுத்துரைக்க முயலுகின்றது. அத்தோடு, பிற சிறுகதைகளுக்கும் தனித்தமிழ்ச் சிறுகதைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குவதும் இவ்வுரையின் நோக்கமாகும். இம்முயற்சிக்கு, க. தமிழமல்லன் வெளியிட்டுள்ள விருந்து, வந்திடுவார், மஞ்சளுக்கு வேலையில்லை, வழி, வெல்லும் தூயதமிழ் சிறுகதைச் சிறப்பிதழ் (2014, 2015, 2016) ஆகிய நூல்களும் இதழ்களும் அடிப்படைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், க. தமிழமல்லனின் தனித்தமிழ் வளர்ச்சி, தனித்தமிழ் ஆகிய ஆய்வுநூல்களும், இரா. இளங்குமரனின் தனித்தமிழ் இயக்கம், கு. திருமாறனின் தனித்தமிழ் இயக்கம் ஆகிய ஆய்வுநூல்களும் பிறவும் துணைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. ஓரோவழித் தமிழ் இலக்கண; இலக்கியங்களும், அவற்றின் உரைகளும், ஆய்வுகளும் பயன்கொள்ளப்பட்டுள்ளன.

**தனித்தமிழின் வரலாற்றுத் தொன்மை**

தமிழ் இலக்கண; இலக்கிய வரலாற்றைப் படித்தறிந்துள்ள பலருக்குத் தனித்தமிழ் வரலாறு புதுமையாகவும் மருட்கைக்குரியதாகவும் தோன்றலாம். தனித்தமிழ் வரலாற்றை ஆராய்ந்த அறிஞர் பலரும் (க. தமிழமல்லன் 1978: 4; இரா. இளங்குமரன் 1991: 16; கு. திருமாறன் 2003: 35) வடமொழியெழுத்துக்களைத் தமிழாக்கி எழுதுவதற்குத் தொல்காப்பியர் கூறியுள்ள கருத்துக்களை எடுத்துக்காட்டி, அவர் காலத்திலேயே மொழித்தூய்மைச் சிந்தனைகள் இருந்துள்ளதை விளக்கியுள்ளனர். கிடைத்துள்ள நூல்களில் தமிழின் முதல்நூல் எனக் கூறத்தகும் தொல்காப்பியம் மொழித்தூய்மைச் சிந்தனையுடையதாதலை அறியும்போது, தமிழர்தம் மொழிக்காப்புச் சிந்தனைகளை உணரமுடிகின்றது.

**தொல்காப்பியமும் மொழிக்காப்பும்**

தொல்காப்பியர் வடவெழுத்துக்களைத் தமிழாக்கி எழுதுவது குறித்த நூற்பா ஒன்றில்தான் மொழிக்கலப்புக்கு எதிரான கருத்தினை மொழிந்து மொழித்தூய்மை குறித்து விளக்கியுள்ளார் என அறிஞர்கள் உரைத்துள்ளனர். ஆனால், வேறு சில நூற்பாக்களிலும் தொல்காப்பியர் மொழிக்கலப்பு குறித்து உரைத்துள்ளார் என்பதைக் காணமுடிகின்றது. அவற்றை விளக்குவோம்.

தொல்காப்பியர், சொற்களை வகைப்படுத்தும்போது அதாவது, செய்யுள் ஈட்டச் சொற்களைப் பற்றிக் கூறும்போது இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்காக்கி உரைக்கின்றார் (கே.எம்.வேங்கடராமையா முதலானோர் 1996 தொல்.881). இவற்றுள் இயற்சொல்லும், திரிசொல்லும்

செந்தமிழ்ச் சொற்களாகவும், திசைச்சொல்லும் வடசொல்லும் பிறமொழிக் கலப்புடைய சொற்களாகவே தெரிகின்றன.

திசைச்சொல்லை விளக்க முனையும் இளம்பூரணர் "செந்தமிழ் நாட்டை அடையும் புடையும் கிடந்த பன்னிரு நிலத்தார்தம் குறிப்பினையே இலக்கணமாகவுடைய திசைசொற்கிளவிகள்" (ஆ. சிவலிங்கனார் 1988: 25) என்கின்றார். அடையும் புடையும் என்பதற்கு "அடைந்து (சேர்ந்தும்) பக்கத்தும் கிடந்த என விளக்கம் தருகின்றார் ஆ. சிவலிங்கனார் (1988: 25 அடிக்குறிப்பு எண்: 1). இதன்மூலம் திசைச்சொல் என்பது செந்தமிழ் நிலத்தின் எல்லைப்பகுதியில் உள்ள பிற மொழி வழங்கும் நிலத்துச் சொல் என்பதை உணரலாம். இக்கருத்து தெய்வச்சிலையார் காலத்திலும் வழங்கியுள்ளது என்பதை "செந்தமிழ் சேர்ந்த நாடென்றமையால், பிற நாடாகல் வேண்டும் என்பார் உதாரணம் காட்டுமாறு:

"கன்னித் தென்கரைக் கடற்பழந் தீபம்
கொல்லங் கூபகம் சிங்களம் என்னும்
எல்லையின் புறத்தவும் கன்னடம் வடுகம்
கலிங்கம் தெலுங்கம் கொங்காணம் துளுவம்
குடகம் குன்றகம்"

என்பன" (ஆ. சிவலிங்கனார் 1988: 27) என்ற பாடல் / நூற்பாவை எடுத்துக்காட்டுவதன்வழி அறியலாம். இக்கருத்து தெய்வச்சிலையாரால் பிறர் கருத்தாகக் காட்டப்பட்டபோதிலும் அக்கருத்து அவருக்கு உடன்பாடான ஒன்றே என்பதை அவருரையால் நுணுகியுணர்க. நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையார் குறித்த பகுதிகளையே குறிக்கின்றார். செந்தமிழ் நிலம்சேர் "பன்னிரண்டையும் சூழ்ந்த பன்னிரண்டாவன" (ஆ. சிவலிங்கனார் 1988: 28) என்பது அவருடைய உரைப்பகுதி.

ஆதித்தர் "பிற மொழிச் சொற்கள் தமிழில் வருவனவற்றைத் திசைச்சொல் என்பதே சாலும். ஏன்? இவை பிற திசைகளிலிருந்து வந்தவையாதலின்" (ஆ. சிவலிங்கனார் 1988: 29) என உரைத்திருப்பது நம் கருத்துக்கு மேலும் வலுச் சேர்க்கின்றது.

நன்னூலார்,

"செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினுந்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப" (நன்.273)

எனத் தெளிவுபடவே தமிழொழி நிலம் எனக் குறித்துள்ளதைக் காணும்போது திசைசொல் என்பது பிற மொழிச் சொல்லே என்பது தெளிவாகின்றது.

"தமிழொழி பதினேழ்நிலமாவன: "சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகம், கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலிங்கம் கலிங்கம் வங்கம், கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலம், தங்கும் புகழ்த் தமிழ் சூழ்பதி னேழ்நிலந் தாமிவையே" என்பன" எனப் பதினேழ் நிலப்பகுதிகளைச் சுட்டுகின்றார் நன்னூலின் முதல் உரையாசிரியராகக் கருதப்படுகின்ற மயிலைநாதர்.

நன்னூலின் உரையாசிரியராகிய சங்கர நமச்சிவாயர், "செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலத்தின்கண்ணும் பதினெண் மொழியுள் தமிழும் மேற் கூறும் வடசொற்குக் காரணமாகிய ஆரிய மொழியும் ஒழிந்த பதினாறு மொழியும் வழங்கும் பதினாறு நிலத்தின்கண்ணும் உள்ளோர் தம் குறிப்பினவாய்ச் செந்தமிழோர் குறிப்பினவன்றி, அத்திசைகளினின்றும் செந்தமிழ் நிலத்து வந்து வழங்குவன திசைச்சொல் என்று கூறுவர் புலவர்" (உ.வே. சாமிநாதையர் 1953: 189) என உரைப்பதும் காண்க. செந்தமிழ் நிலம் பன்னிரண்டு; அதனைச் சேர்ந்த பிற மொழி வழங்கும் (கொடுந்தமிழ்) நிலம் பன்னிரண்டு என வகைப்படுத்தியுள்ளமை அறியத்தக்கது. இக்கருத்து அதாவது செந்தமிழ் நிலம் பன்னிரண்டு; அதனைச் சேர்ந்த நிலம் பன்னிரண்டு என்ற கருத்து நச்சினார்க்கினியர் உரையிலும் கூறப்பட்டுள்ளதை மேலே கண்டோம்.

திசைச்சொல் முழுமையான செந்தமிழ்ச் சொல்லல்ல என்பதையும், உரையாசிரியர்கள் பிற மொழிகள் வழங்கும் எல்லை சார்ந்த சொற்களையே திசைச்சொற்களாக வழங்குவதையும், அவர்தம் சான்றுகள்வழி உறுதிப்படுத்த முடிகின்றது. இவற்றின்வழி, தொல்காப்பியர் கூறியுள்ள திசைச்சொல்லும் பிற மொழிச் சொல்லாகவே அமைவதை அறிய முடிகின்றது. எனினும், தொல்காப்பியத்தில் வடவெழுத்து

குறித்த நூற்பாவைத் தனித்தமிழ்க் கொள்கைக்குச் சான்றாக மொழிந்த அறிஞர்கள் யாரும் திசைச்சொற்களைப் பற்றி ஏதும் உரைத்துள்ளதாகத் தெரியவில்லை. எனினும், தொல்காப்பியர் வடவெழுத்துக்களை நீக்கி எழுதுக எனக் கூறியபோலத் திசைச்சொற்களை எவ்வாறு எழுதவேண்டும் எனக் கூறியிருப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும், வடசொல்லுக்கான இலக்கணத்தையே திசைச்சொல்லுக்கும் கொள்ளுவது பொருத்தமுடையதாகலாம்.

வடசொல் எனத் தொல்காப்பியர் குறிப்பது செந்தமிழ், கொடுந்தமிழ் அல்லாத பிற மொழிச் சொற்கள் அனைத்துக்கும் பொதுவானதாகக் கருதலாம். எனினும், அவர் காலத்தில் வடமொழிச் சொல்லே தமிழில் மிகுதியும் கலந்தமையால், அதனையே முதன்மையாக்கி அவர் உரைத்தார் எனக்கொள்ளல் தகும். ஒரு மொழி பேசுவோர் மட்டுமே ஓரிடத்தில் வாழவேண்டும் என்பது இயல்பான ஒன்றல்ல என்பதை உணர்ந்தவர் தொல்காப்பியர். குமுகாயம் என்பது பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் ஓரிடத்தில் இணைந்து வாழும் சூழலுக்கு ஆட்படுவது இயற்கை என்ற குமுகாய உண்மையையும் உணர்ந்தவராகத் தொல்காப்பியர் இருந்தமையான், தமிழ்ச் செய்யுள் இயற்றுவதற்குரிய சொற்களைத் தொகைப்படுத்தும்போது பிற மொழிச் சொற்களும் தமிழில் கலந்து வழங்குவதை அறிந்து, அக்கலப்புக்கு வரம்பு கட்டுவதுபோலத் தம் நூற்பாக்களை அமைத்தார். பிற மொழிச் சொற்களைத் தமிழ்ச்செய்யுளில் ஆளும்போது, அவற்றை அம்மொழிக்குரிய எழுத்துக்களால் எழுதுவது அறிவுடைமையன்று; அவ்வாறு எழுதுவது தமிழ்ச்சொல் வளம் குன்றுவதற்கும்; அதன்வழி மொழிக்கலப்புக்கு அடிப்படையாகித் தமிழ்மொழி தன் இயல்பு திரிந்துபோவதற்கு வழிகோலும் என்பதானால், பிற மொழியெழுத்துக்களாகக் குறிப்பாக, வடமொழி எழுத்துக்களை அறவே நீக்கித் தமிழ்மொழிக்கேயுரிய எழுத்துக்களால் எழுதவேண்டும் என வழிகாட்டினார். இவ்வகை மொழிக்காப்பு முயற்சிகள் தொல்காப்பியரைத் தனித்தமிழ்க் கருத்தாளராக நமக்கு இனம் காட்டுகின்றன. நூற்பாக்கள் வருமாறு:

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ(ய்)

எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

(கே.எம். வேங்கடராமையா முதலானோர் 1996, தொல்.885),

"சிதைந்தன வரினு மியைந்தன வரையார்"

(கே.எம்.வேங்கடராமையா முதலானோர் 1996, தொல்.886).

(பார்வைக்கு: ஆ. மணி (க..ஆ.) 2017: 401 - 404).

**தமிழ் நூல்களும் மொழிக்கலப்பும்**

தொல்காப்பியரின் மேற்கருத்துக்கள் தமிழ்நூல்களில் பன்னெடுங்காலமாகப் போற்றப்பட்டன என்பதைத் தனித்தமிழ் அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். கழக இலக்கியங்கள் பிற சொற்கலப்பின்றி இலங்குவதைத் தனித்தமிழியக்கத் தந்தை எனப் போற்றப்படுகின்ற மறைமலையடிகள் விளக்கியுள்ளார். பிற மொழி இலக்கியங்களைத் தழுவி நூல் செய்யும்போதும், பிற பண்பாட்டுக் கருத்துக்களை உள்வாங்கி நூல் செய்யும்போதும் பிற மொழிச் சொற்கள் தமிழில் புகத்தலைபட்டன. இருந்தபோதிலும், பரிபாடலின் பாடலாசிரியர்கள், சீத்தலைச் சாத்தனார் முதலானோர் பிற மொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்தியே வழங்கினர் என்ற உண்மையைத் தனித்தமிழ் இயக்க ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. தொல்காப்பியர் காட்டிய வழியில் தொடர்ந்து வந்த மொழிக்காப்புச் செயல்களால் குறைந்த எண்ணிக்கையில் இருந்த பிற மொழிச் சொற்கள், மொழிக்காப்பு முயற்சிகள் தளர்வடையவே, காலப்போக்கில் மிகுதியாகத் தொடங்கின. இம்மாற்றம் மதத்தின் பெயரால் முன்னிறுத்தப்பட்டது என்பது தமிழ் நூல்களின்வழி அறியப்பெறும் உண்மையாகும். இறை தொடர்பான கருத்துக்களை முன்னிறுத்தியே பிற மொழிக் கலப்பு செய்யப்பட்டதைக் காணமுடிகின்றது; விதிவிலக்குகளும் இருக்கலாம். ஆனால், மிகுதியான மொழிக்கலப்புக்கு மதமே கரணியமாக அமைந்ததை மணிப்பவள நடை முதலான நிலைகளால் அறியலாம். தொல்காப்பியர் கால முதலாக இருந்த தமிழுணர்ச்சி மழுங்கியதன் விளைவாகத் தமிழ் இலக்கிய நூல்கள் மட்டுமல்லாது இலக்கண நூல்களிலும் பிற மொழிகளின் தாக்கம் மிகுந்து மொழிக்கலப்பு அளவில்லாமல் தமிழில் நிகழத் தொடங்கியது எனலாம். தமிழ் இலக்கண நூல்களின் (குறிப்பாக, வீரசோழியம்) இயல்களின் பெயர்களும்கூட உபகாரகப் படலம் (வேற்றுமைப்படலத்துக்கு உதவியாகிய பொருள்களைக் கூறும் படலம் (உபகாரகம் - உதவியைச் செய்வது), தத்திதப் படலம் (குறிப்பு வினையாலணையும் பெயர் பற்றிய படலம்), தாதுப் படலம் (அடிச்சொற்கள் பற்றிய படலம்), கிரியாபதப் படலம் (வினைச்சொற்களைப் பற்றிய படலம்) என்றவாறு பிற மொழிச் சொற்களில் தரப்பட்டுள்ளதிலிருந்து பிற மொழிக் கலப்பின் தாக்கத்தைக் அறியமுடிகின்றது.

*நூல்களிலிருந்து உரைகளும் உரைகளிலிருந்து நூல்களும் கருத்துக்களைப் பெறும் என்பது வெளிப்படை. இலக்கியங்களிலிருந்து இலக்கணம் உருப்பெறுதல் என்பது மாறி, உரைகளிலிருந்து இலக்கணம் உருவாதல் என்னும் மரபு மாற்றம் தமிழ்ச் சூழலில் நிகழ்ந்தது வரலாற்று உண்மையாகும். இதன் பின்புலங்கள் தனித்த ஆய்வுகளுக்குரியவை. எனினும், இம்மரபுமாற்றத்தால் கொடிய நிகழ்வுகளும் தமிழில் ஏற்பட்டமை குறிக்கத்தக்கது. அவ்வகையில், தமிழ் இலக்கண மரபில் தமிழுக்கும் வடமொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்னும் கருத்துக்குக் கால்கோள் செய்தனவாக உரைகளே அமைந்துள்ளன என்ற உண்மையைப் பின்வரும் பகுதி விளக்கக் காணலாம்.*

*"தொல்காப்பியம் சொல்லதிகார உரையில் சேனாவரையர் வடமொழிக்கும் தமிழுக்கும் இலக்கணம் ஒன்றே என்ற கருத்திற்குக் கால்கோள் செய்தார். அக்கருத்தினை வீரசோழிய ஆசிரியரும் அதற்கு உரை கண்ட பெருந்தேவனாரும் பேணி வளர்த்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில், பிரயோக விவேகம் இயற்றிய ஆழ்வார் திருநகரி சுப்பிரமணிய தீட்சிதரும், இலக்கணக் கொத்தின் ஆசிரியரான சாமிநாத தேசிகரும் வடமொழிக்கு ஏற்றம் தந்து சிறப்புச் செய்து இரு மொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்று சாதித்தனர்.*

*தமிழறிஞர்கள் இத்தகைய ஆசிரியர்களின் கொள்கைகளைத் தகர்த்து எறிந்தனர்; கண்டித்துத் தமிழின் பெருமையை நிலை நாட்டினர். நாவலர் சோமசுந்தர பாரதியார் 'தமிழ் மரபு உணர்ந்து பேணாத வட நூல் வல்ல உரைகாரரால் இத் தகவிலா வழக்குப் பெருகி, தமிழ் ஒரு தனி மொழி அன்று என இகழும் பியோக விவேகம், இலக்கணக்கொத்துப் போன்ற பனுவல்களும் தமிழில் எழுதப்பட்டன' என்று கண்டிக்கின்றார்" (மு.வை. அரவிந்தன் **2008: 636 - 637**). தனித்தமிழியக்கத்தின் தோற்றத்தால் மொழித்தூய்மைக் கருத்துக்கள் மக்கள் உள்ளத்தில் பதிந்தன. எனினும், இக்காலத்திலும் தனித்தமிழியக்கத்தின் தேவை குறைந்துவிடவில்லை என்றே சொல்லலாம். இந்நிலையில் தனித்தமிழியக்கத்தின் தலைவர் க. தமிழமல்லனின் தொண்டு அளப்பரியது என்றே சொல்லலாம். தனித்தமிழ்ப் படைப்பிலக்கியங்களின் வளர்ச்சிக்கென அவர்தம் பன்னிலை முயற்சிகள் பாராட்டத்தக்கன. கடந்த சில ஆண்டுகளாகத் தனித்தமிழ்ச் சிறுகதைப் போட்டிகளை நடத்திப் பரிசுகளும் வழங்கி வருகின்றார். வெல்லும் தூய தமிழ் இதழ்களில் சிறுகதைச் சிறப்பிதழ்களும் வெளியிட்டு வருகின்றார். தனி இயக்கமாகவே செயல்படும் அவருக்குத் தமிழ் உணர்வாளர்களின் நன்றியறிதலைப் புலப்படுத்துவது எம் கடன். இனி, படைப்பிலக்கியங்களில் உரைநடையில் அமைந்த இலக்கியங்களில் ஒன்றாகிய சிறுகதைகள் குறித்துக் காண்போம்.*

**படைப்பிலக்கியம் - உரைநடை - சிறுகதை**

*"அச்சு இயந்திரங்களின் வரவால் தமிழில் முதலில் மலர்ச்சி பெற்றது உரைநடையே. பல கையான கட்டுரை நூல்கள், சிறுகதை, நாவல், மொழி பெயர்ப்புகள், திறனாய்வு, உரையாசிரியர்கள் எனப் பல பிரிவுகளில் உரைநடை வளர்ந்தது" (http://www.tamilvu.org/courses/degree/a041/a0414/html/a041451.htm) என்று கூறுவது தமிழ் நூல்களில் பரவலாகக் காணப்பெறும் கருத்தாகும். இவ்வகைக் கருத்துக்கள் பரப்புரையாகவே செய்யப்படுவதையும் காணமுடிகின்றது. எனவே, இக்கருத்துக்களின் உண்மைநிலையினை அறிவது இன்றியமையாததாகும். எனவே, அவற்றைக் காண்போம்.*

**உரைநடையின் தொன்மையும் தோற்றமும்**

*தமிழின் தொன்மை சான்ற நூலாகிய தொல்காப்பியத்திலேயே உரை, அதன் வகைகள் பற்றிய கருத்துக்கள் இடம்பெற்றிருப்பது உரைகளின் தொன்மையையும் வளமையையும் எடுத்துரைக்கும் நற்சான்றுகளாகும். உரைநடைகளையும் தொல்காப்பியம் விளக்கியுள்ளது. உரைநடையைத் தொல்காப்பியர் உரைவகைநடை எனக் குறித்துள்ளார். உரை, உரைநடை வகையுள் ஒன்று என்பதுபோன்ற கருத்து தொல்காப்பியத்தில் நேரடியாகக் குறிக்கப்படவில்லை என்றபோதிலும், அவ்வாறு கருதுவதற்குத் தொல்காப்பியம் தடையாக இல்லை என்றே சொல்லலாம். இக்காலத் தமிழர்க்கு இவை பற்றிய தெளிந்த சிந்தனைகள் உண்டென்று சொல்லிவிட இயலாது. தொன்மையையும் வளமையும் இழித்தும் பழித்தும் பேசுவது பெருமைக்குரிய செயல்களாக நினைக்கப்படுவதும் பேசப்படுவதும் தமிழ்க் குமுகாயத்தின் பெருமைக்கு உரிய செயல்களன்று என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். தொல்காப்பிய நூற்பா வருமாறு:*

*"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்*
*பாவின் றெழுந்த கிளவி யானும்*

பொருண்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப'' (தொல்.பொருள். பேரா. 485)

இந்நூற்பாவில் உள்ள 'பொருள்மரபில்லாப் பொய்ம்மொழியானும்' என்னும் தொடருக்கு, ''ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லுவன. அவை: ஓர் யானையும் குரீஇயும் தம்முள் நட்பாடி இன்னுழிச் சென்று இன்னவாறு செய்தனவென்று அவற்றுக்கியையாப் பொருள்படத் தொடர்நிலையான் ஒருவனுழை ஒருவன் கற்று வரலாற்றுமுறையான் வருகின்றன.

பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் என்பது, பொய்யெனப்படாது மெய்யெனப்பட்டும் நகுதற்கேதுவாகுந் தொடர்நிலை; அதுவும் உரையெனப்படும்; அவையாவன, சிறுகுரீஇயுரையும், தந்திரவாக்கியமும் போல்வனவென்க கொள்க. இவற்றுட் சொல்லப்படும் பொருள் பொய்யெனப்படாது உலகியலாகிய நகை தோற்றுமென்பது. இவ்வகையான் உரை நான்கெனப்படுமென்றவாறு'' (நா. பொன்னையா 1943: 565) எனப் பேராசிரியர் உரைக்கின்றார். பேராசிரியரின் உரைப்பகுதியால் அறியப்பெறும் கருத்துக்களாவன:

1. பொருள் மரபில்லாப் பொய்ம்மொழியாவது ஒரு பொருளின்றிப் பொய் படத் தொடர்ந்து செல்லுவதாகும்.
2. யானையும் குருவியும் ஒன்றோடொன்று நட்பு கொண்டு, இன்னவாறு சென்று இன்னவாறு செய்தன என ஒருவனிடம் ஒருவன் கற்றுச் சொல்லி வருவனவாகும்.
3. பொய்யாக அமையாது, மெய்யாகவே அமைந்தாலும், நகைச்சுவைக்கு ஏதுவாக அமைவது பொருளொடு புணர்ந்த நகைமொழியாகும்.
4. சிறுகுரீஇயுரை, தந்திரவாக்கியம் ஆகியன பொருளொடு புணர்ந்த நகைமொழிக்குச் சான்றுகளாகும்.

மேற்பகுதியால் அறியப்பெறும் உண்மைகளாவன:

1. உரைவகை நடை நான்கனுள், தொல்காப்பியரால் கூறப்படும் பின்னிரு வகைகளுள் முதல் வகைக்குப் பேராசிரியரால் கூறப்படும் சான்று இக்காலத்தில் கூறப்படும் சிறுகதையை ஒத்துள்ளது எனலாம். ஒருபுடையாக, 'பஞ்சதந்திரக்' கதைகளைக் கூறலாமோ எனின், விலங்கினக் கதை என்பதைத் தவிர வேறு வகைகள் இருப்பதாகத் தோன்றவில்லை.
2. பொருள் மரபில்லாப் பொய்ம்மொழிக்குப் பேராசிரியர் கூறும் சான்று ஒரு கதையின் சுருக்கம் போலத் தோன்றுகின்றது.
3. ஒரு நிகழ்ச்சி அல்லது சிக்கல்தான் தலைதூக்கி இருக்க வேண்டும் என்ற சிறுகதை இலக்கணம் பேராசிரியர் கூறும் சான்றோடு ஒத்திருப்பதுபோலத் தோன்றுவதைக் காண்க.
4. பேராசிரியர் காட்டும் கதையில் மிகுதியான கதைமாந்தர்களுக்கும் இடமிருப்பதாகத் தெரியவில்லை.
5. பேராசிரியர் கூறும் கதை, ஒருவரிடம் இருந்து ஒருவர் கற்றுக் கொண்டு சொல்லி வருவது என்பதன்மூலம், இக்கதைகள் வாய்மொழியாக வழங்குவன என்னும் மரபை அறியலாம்.
6. தொல்காப்பியர் காலத்திய கதைகள் நமக்குக் கிட்டாதபோதிலும், தொல்காப்பிய மரபினை அறிந்த பேராசிரியர் தரும் சான்றுகளை நாம் எளிதில் புறந்தள்ளிவிட முடியாது என்பதையும் நினைய வேண்டும். மேலும், சில கதைகள் செய்யுள்நிலையிலும் காப்பியங்களில் இடம்பெற்றுள்ள உண்மையும் குறிக்கத்தகும். கீரியைப் பார்ப்பனி கொன்ற கதை சிலப்பதிகாரத்திலும் (சிலப். 15:54 - 75), தனக்குத் துணையான ஆண் புறாவைக் கொன்ற வேடனின் பசியைப் போக்க தானும் நெருப்பில் விழுந்து இறந்துபோன பெண் புறாவின் கதை கம்பராமாயணத்திலும் (கம்ப. யுத்த. 4 வீபீடணன் அடைக். 112) இடம்பெற்றுள்ளமை அறியத்தகும். இவை செய்யுள்நிலையில் உள்ள கதைகள். எனினும், தொல்காப்பியர் காலக் கதைகள் மட்டுமல்லாது, பேராசிரியர் குறிப்பிடும் கதைகள் கூடச் சுவடி உருவில் கிடைக்காதது ஏன்? என்ற வினாவும் நம்முள் எழுவது இயல்பானதே. அதற்கும் விடை காண்பது தமிழ் உரைநடையின் தோற்றம் குறித்த பல வினாக்களுக்கும் / மயக்கங்களுக்கும் விடையளிக்கும் என்பதனால், அதனையும் ஈண்டு விளக்குவோம்.

**தமிழில் உரைநடை நூல்கள் சுவடியுருவில் கிடைக்காதது ஏன்?**

உரைநடை நூல்கள் தொல்காப்பியர் காலம் தொடங்கிக் கூறப்பட்டாலும், அவை சுவடி உருவில் ஏதும் கிடைக்கவில்லையே என்ற வினாவுக்கு விடை காணும் முன்னர், சுவடி உருவாக்கம், சுவடிகளில் எழுதும் முறை ஆகியவை குறித்து அறிய வேண்டும். எனவே, அதனைக் காண்போம்.

**சுவடி உருவாக்கம்**

சுவடிகளை உருவாக்குவது என்பது எளிய செயலன்று. இதனைப் பின்வரும் கருத்துக்கள் உணர்த்தக் காணலாம். பனை மரத்தில் உள்ள ஓலைகளில் அதிக முற்றலும், அதிக இளமையதும் இல்லாமல் நடுநிலையில் உள்ளவற்றைத் தேர்ந்தெடுத்து (இவையே நீண்ட நாட்கள் அழியாமல் இருக்கக் கூடியவை), அவற்றைத் தனித்தனியாகப் பிரித்து நரம்பு நீக்கித் தேவையான அளவில் நறுக்கி எடுக்க வேண்டும். இதனை 'ஓலைவாருதல்' என்பர். ஒத்த அளவாக உள்ள ஓலைகளை ஒன்று சேர்த்தலைச் 'சுவடி சேர்த்தல்' என்பர். பனை ஓலைகளின் மேற்பரப்பு கடினமானதாக இருப்பதால் பதப்படுத்தாமல் ஓலைகளில் எழுத முடியாது. அவற்றை எழுதுவதற்குத் தக்கவாறு மென்மையாக்க வேண்டும். அப்போதுதான் ஓலைகள் எழுதுவதற்கு எளிதாகவும் சேதமடையாமலும் இருக்கும். எழுதுதற்குச் செம்மைப்படுத்தும் முறைகளால் ஓலைகளை விரைவில் அழிந்துவிடாமலும், பூச்சிகளால் அரிக்கப்படாமலும் பாதுகாக்கலாம். அதனால் எழுதுவதற்காக வெட்டப்பட்ட ஓலைகளைப் பதப்படுத்த நிழலில் உலர்த்தல், பனியில் போட்டுப் பதப்படுத்தல், வெந்நீரில் போட்டு ஒரு சீராக வெதுப்பி எடுத்தல், சேற்றில் புதைத்தல் போன்ற பல முறைகளை முன்னோர்கள் கையாண்டுள்ளனர்.

சுவடிகள் எவ்வாறு அணியமாக்கிப் பதப்படுத்தப்பட்டன என்பதை, "சுவடிகள் தயாரிப்பதற்கு முதலில் பனையோலைகளைத் தேவையான அளவில் கத்தரித்துக் கொள்வர். இவ்வாறு அளவு செய்து கொள்ளப்பட்ட ஏடுகள் மிக நன்றாக உலர்த்தப்படும். கொஞ்சம்கூட ஈரமில்லாமல் நன்றாகக் காய்ந்த பிறகு இவ்வோலைகளைத் தண்ணீரில் இட்டு வேகவைக்க வேண்டும். இவ்வாறு கொதிக்க வைப்பதால் ஏடுகளில் ஒரு வகையான துவள்வு ஏற்படுகிறது. பிறகு ஓலைகளை மீண்டும் நன்கு காய வைக்கவேண்டும். காய்ந்த பிறகு, கனமான சங்கு அல்லது மழுமழுப்பான கல் கொண்டு ஓலைகளை நன்றாகத் தேய்க்க வேண்டும். இப்படிச் செய்வதால் ஏட்டிற்கு ஒரு பளபளப்பு ஏற்படும். மேலும் ஓலை நேரான தகடுபோல ஆகிவிடும். இப்போது ஏடு எழுதுவதற்கு ஏற்ற நிலையை அடைந்து விட்டது. இம்முறைக்கு ஏட்டைப் பாடம் செய்தல் அல்லது பதப்படுத்துதல் என்று பெயர்.

'ஓலையைப் பதப்படுத்த மேற்கண்ட வழிகள் மட்டுமல்லாது, வேறு சில வழிமுறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் சில முறைகள்: அ. ஓலைகளைத் தண்ணீர் அல்லது பாலில் வேகவைத்தல், ஆ. நீராவியில் வேகவைத்தல், இ. ஈரமணலில் புதைத்து வைத்தல், ஈ. நல்லெண்ணெய் பூசி ஊற வைத்தல், உ. ஈரமான வைக்கோற் போரில் வைத்திருத்தல்.

சில முறைகளில் ஓலைகளின் மேல்பரப்பு மென்மையாவதுடன் அதில் உள்ள 'லிக்னின்' என்ற பொருளும் வெளியேறும். இதனால் ஓலைகள் விரைவில் சேதமடைவதில் இருந்து பாதுகாக்கப்படுகின்றன. ஒரிசாவில் பாதுகாப்பிற்காக மஞ்சள்நீர் அல்லது அரிசிக்கஞ்சியில் அரைமணி நேரம் ஊறவைத்துப் பதப்படுத்துவர்' என்று கூறுவர். இவ்வாறு பதப்படுத்திய சுவடிகளில் ஒன்று அல்லது இரண்டு துளைகளிடுவர். இதனை 'ஓலைக்கண்' என்பர். ஒரு துளையில் கயிற்றை நுழைப்பர். கயிறு உருவாமலிருக்க ஈர்க்குடன் உள்ள ஓலையில் இரண்டு முக்கோணங்கள் உள்ளதாகக் கிளிமூக்குப் போலக் கத்தரித்துக் கட்டுவர். இதற்குக் 'கிளிமூக்கு' என்று பெயர். மற்றொரு துளையில் ஒரு குச்சி அல்லது ஆணியைச் செருகியிருப்பர். இதற்குச் 'சுள்ளாணி' என்று பெயர். சுவடிகளுக்கு மேலும் கீழும் மரத்தாலான சட்டங்களை வைத்துக் கிளிமூக்கினைக் கட்டிய கயிற்றினால் சுவடியை இறுக்கிக் கட்டி வைப்பர். இவ்வாறு சுவடிகள் பல நிலைகளைக் கடந்துதான் அணியமாகின்றன. இதன்மூலம், ஒரு சுவடி வேண்டுமென்றாலும், இத்தனை உழைப்பும் தேவையென்பதை அறியும்போது, சுவடிகளைப் பயன்படுத்துவதில் சிக்கனக்கொள்கை தானே வந்துவிடும் என்பதை உணரலாம்.

செய்யுள் என்பது சொற்செட்டும், கட்டும் உடையது; மாறாக, உரைநடை என்பது மிகுதியான சொற்பயன்பாடு உடையது என்பதை நாம் அறிவோம். எழு சீர்களைக் கொண்ட திருக்குறட் பாடலுக்கு எழுதப்பட்ட விளக்கவுரைகளைக் கொண்டு இவ்வுண்மையை அறியலாம். முதற்குறளுக்கு எழுதப்பட்டுள்ள விளக்கவுரைகள் வருமாறு:

1. "சூளைச் சோமசுந்தரநாயகர் ஆங்கீரச ஆண்டு தை மாதத்தில் 'சித்தாந்த சேகரம்' என்னும் நூலில் முதற் குறளுக்கு விளக்கம் தந்து அத்வைதத்தை மறுத்தார்.

2. சித்தாந்த சேகர நூலை மறுத்து ‘ஆரியன்’ என்பவர், ‘திருவள்ளுவர் முதற் குறள்’ என்னும் நூலை 8 பக்க அளவில் இயற்றினார்.
3. இதே காலத்தில், சித்தாந்த சேகரத்துக்கு நாகப்பட்டினத்திலிருந்து ஒரு மறுப்பு நூல் வந்தது. நாகைவாதி என்பவர், நாகையிலிருந்து வெளிவந்த ‘ஸஜ்ஜன பத்திரிக்கை’ என்ற இதழில் மறுப்புரை எழுதினார்.
4. நாகைவாதியை மறுத்து, முருகவேள் என்னும் துவித சைவர், ‘நாகை நீலலோசனி’ என்னும் இதழில் மறுப்புத் தந்தார்.
5. முருகவேள் கருத்திற்கு எதிர் நூலாகத் தோன்றியது 16 பக்கமுள்ள ‘முதற் குறள் வாதம்’ என்னும் நூல். இதனை இயற்றியவர், துவிதமத திரஸ்காரி என்பவர்.
6. முதற் குறள் வாதத்தை மறுத்து (வேதாசலம் பிள்ளை என்ற பெயருடன் இருந்த) மறைமலையடிகள் 52 பக்க அளவில் முதற் குறள் வாத நிராகரணம் என்ற நூலை இயற்றினார்.
7. முதற் குறள் வாத நிராகரணத்தை மறுத்து, 250 பக்க அளவில் முதற் குறள் உண்மை அல்லது முதற் குறள் வாத நிராகரண சத தூஷணி என்ற நூலை, சாது இரத்தின செட்டியார் (துவித மத திரஸ்காரி) இயற்றினார் (1900)” (மு.வை. அரவிந்தன் 2008: 446).

ஏழு சீர்களைக் கொண்ட குறட்பாவை விளக்க இன்றைய நூல் அளவில் 250 பக்கம் விளக்கம் எழுதப்பட்டுள்ளது என்பதன்மூலம் செய்யுளின் சொற்சுருக்கமும், உரைநடையின் சொற்பெருக்கமும் புலப்படும். தமிழர்கள் உரைநடையைச் சுவடிகளில் எழுதாமைக்குரிய கரணியம் சுவடிகள் கிடைப்பதில் இருந்த தடைகளே என்னும் உண்மை இதன்மூலம் புலனாகக் காணலாம்.

சுவடிகளின் அருமைப்பாட்டுக்காகவே, உரைநடையைச் சுவடிகளில் எழுதிப் பாதுகாக்கும் வழக்கம் இல்லாமல் போனது என்பதை நாம் உணரவேண்டும். தாள்களும், அச்சுக் கருவிகளும் வந்ததாலும், செய்யுள் புனையும் ஆற்றல் தமிழறிந்த அனைவருக்கும் இயலாத கரணியத்தாலும், உரைநடையில் எழுதும் வழக்கம் மிகுதியானது எனலாம். எனவே, முற்காலத்தில் உரைநடையில் எழுதப்பட்ட சுவடிகள் நமக்குக் கிடைக்கவில்லை எனக் கருதுவது பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது. இனிச் சிறுகதைகளின் இலக்கணத்தை அறிமுகநோக்கில் காண்போம்.

**சிறுகதை இலக்கணம்**

சிறுகதைக்கு இலக்கணமோ, வரையறையோ, குறிப்பிடத்தக்க பண்போ கிடையாது என்று கூறுவது உண்டு. அவ்வாறு கூறிவிட இயலாது என்போரும் உண்டு. சிறுகதைக்கென இரண்டு நூற்றாண்டு காலப் புதிய மரபு தோன்றிவிட்டது. இலக்கியத்திலிருந்து இலக்கணம் உருவாதல் தமிழியல்பு. இது பிற மொழிகளுக்கும் பொருந்தும். மேனாட்டார் தந்த கொடை எனச் சிலரால் கூறப்படுகின்ற சிறுகதைகளுக்கும், அவற்றின் பொதுவான தன்மைகள் குறித்துக் கருத்துகள் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கூறப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் சிறுகதைக்கெனச் சில வரையறைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றைத் தொகுத்துக் காண்போம்.

1) “சிறுகதை என்றால் அளவில் சிறியதாய் இருக்க வேண்டும்.
2) தனிமனித அல்லது சமுதாய வாழ்க்கையைச் சுவையோடு பிரதிபலிக்க வேண்டும்.
3) சிறுகதையில் ஒரு மனிதர் அல்லது ஓர் உணர்வு, ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு சிக்கல் தான் தலைதூக்கியிருக்க வேண்டும்.
4) அளவுக்கு அதிகமான கதைமாந்தர்களுக்கு அங்கு இடமில்லை.
5) விரிவான வருணனைக்கும், சூழ்நிலைக்கும் சிறுகதை இடம்தரல் கூடாது.
6) குறைவான, ஏற்ற சொற்களால் இவை சுட்டிக் காட்டப்பட வேண்டும்.
7) பாத்திரங்களின் உரையாடல்களில் சொற்செட்டு அவசியம்.
8) சிறுகதை அளவிற் சிறியதாய், முழுமை பெற்று இருக்க வேண்டும்.
9) சிறுகதை நம்பக் கூடிய உண்மைத் தன்மையினைக் கொண்டு விளங்குதல் வேண்டும்.
10) நல்ல சிறுகதை ஆல விதையைப் போல் விரிவாகக் கூடிய கதைக்கருவைக் கொண்டிருத்தல் வேண்டும். (http://www.tamilvu.org/courses/degree/p203/p2033/html/p2033112.htm).

**தனித்தமிழ்ச் சிறுகதைகளும் சிறுகதை இலக்கணமும்**

மேனாட்டார் கருத்துக்களின் அடிப்படையில் கூறப்பட்டுள்ள மேற்கண்ட இலக்கணம் அல்லது வரையறை தனித்தமிழ்ச் சிறுகதைகளுக்குப் பொருந்துமா? என்ற வினா நமக்குள் எழுவது இயல்பே.

தனித்தமிழ்ச் சிறுகதைகளில் இருந்தே இவ்வகை இலக்கணம் வடித்தெடுக்கப்பட வேண்டும் என்பதே நம் கருத்தாயினும், சிறுகதை ஆய்வாளர்கள் கூறும் வரையறைகளும் தனித்தமிழ்ச் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள தன்மையை எடுத்துக்காட்டும் முகத்தான் இவ்வொப்பீடு அமைந்துள்ளது. அவற்றைக் காண்போம்.

**1. அளவில் சிறியதாக இருத்தல்**

சிறுகதை என்பது அளவில் அதாவது, படிக்கும் கால அளவில் / பக்க அளவில் சிறியதாக இருக்கவேண்டும் என்ற கருத்து தனித்தமிழ் சிறுகதைகளுக்கும் பொருந்தியுள்ளது. விருந்து சிறுகதைத் தொகுப்பில், த. பழமலை எழுதிய நினைப்பு, ச. குறளேந்தி எழுதிய எல்லோரும் மாந்தர்களே, தேவமைந்தன் எழுதிய நல்லதற்குக் காலமில்லை போன்ற சிறுகதைகள் அளவில் சிறியவையாக அமைந்துள்ளன.

**2. மாந்த வாழ்வைச் சுவையுடன் வெளிப்படுத்துதல்**

மாந்தர்களின் தனிப்பட்ட வாழ்வை; குமுகாய வாழ்வை வெளிப்படுத்துவது சிறுகதைகளின் பண்புகளில் ஒன்றாகும். தனித்தமிழ்ச் சிறுகதைகளில் இப்பண்பு மிகச் சிறப்பாக வெளிப்பட்டுள்ளது. இவ்வுண்மையைப் பின்வரும் சான்று வெளிப்படுத்தக் காணலாம்.

மாந்தர்கள் மேடைகளில் பேசுவது ஒன்றாகவும், வாழ்க்கையில் செய்வது ஒன்றுமாக இருப்பதை நாம் கண்ணாரக் கண்டு வருகின்றோம். இப்பண்பினை வெளிப்படுத்தும் வகையில் க. தமிழமல்லன் (2004: 45 48) எழுதித் தொகுத்த 'வழி' என்ற சிறுகதைத் தொகுப்பில் உள்ள வேகம் என்னும் சிறுகதை புனையப்பட்டுள்ளது. பொறுமையைப் பற்றி மிக அழகாகப் பேசிய பேச்சாளரைப் பாராட்ட நினைக்கும் ஒருவர் (பேச்சாளர், கதையைச் சொல்லும் மாந்தர் ஆகிய யாருடைய பெயரும் இக்கதையில் இடம்பெறவில்லை என்பது குறிக்கத்தக்கது) அந்தப் பேச்சாளரை ஒரு சாலை நிறுத்தத்தில் காண்கின்றார். ஆனால், பச்சை விளக்கினைக் கண்டதும், பேச்சாளர் தன்னுடைய வண்டியில் விரைவாகச் செல்லுகின்றார். அவரைப் பாராட்ட நினைக்கும் கதைமாந்தரும் தன்னுடைய உந்துவண்டியில் விரைந்து செல்கின்றார். ஆனால் மிக வேகமாகச் செல்லும் பேச்சாளரைத் துரத்திப் பிடிக்க முயலும்போது, விபத்துக்களைச் சந்திக்கும் நிலையில் இருந்து மயிரிழையில் தப்புகின்றார். எனவே, அவரைத் தொடர இயலாமல் போகின்றது. இவருடைய வேகத்தைக் கண்ட பலரும் இவரைச் சாடுகின்றனர். இருந்தாலும் இவர் வேகமாகவே தொடர்ந்து சென்று அவரை நெருங்க முயலும்போது, சட்டென்று அந்தப் பேச்சாளர் நின்று விடுகின்றார். மூன்று சக்கர வண்டி ஒன்று கரும்புகையைக் கக்கியதே அவர் உந்துவண்டியை நிறுத்தக் கரணியம் என்பதை அறியும் கதைமாந்தர் அதன் பின்னர் என்ன செய்தார் என்பதைக் கூறாமலே கதை முடிந்துவிடுவது பொருத்தமுடையது. சாலையில் கக்கப்பட்ட கரும்புகையே பேச்சாளருக்கு மட்டுமல்லாது, அவருடைய பேச்சைப் பாராட்டத் துரத்தியவருக்கும் பொறுமையைக் கற்றுக் கொடுக்கின்றது. இதனைவிடச் சிறப்பாக, மாந்தர்களின் வாழ்க்கையை வெளிப்படுத்திவிட இயலாது என்றே சொல்லலாம்.

**3. ஓர் உணர்வு / ஒரு நிகழ்ச்சியே முதன்மை பெறுதல்**

சிறுகதைகளில் ஓர் உணர்வோ; ஒரு நிகழ்ச்சியோ தான் முதன்மை பெறவேண்டும் என்பதுதான் சிறுகதையின் உயிர்நாடியான பண்பு எனலாம். பல்வேறு உணர்வுகளோ, பல்வேறு நிகழ்ச்சிகளோ ஒரு சிறுகதையில் இடம்பெற்றால் அக்கதை தொடர்கதை என்ற நிலைக்கு நம்மை இட்டுச் செல்லுமே தவிர, சிறுகதை என்ற உணர்வை நமக்குத் தராது. அவ்வகையில் ஒரு கதையைச் சிறுகதையாக நிலைநிறுத்தும் இப்பண்பு, தனித்தமிழ்ச் சிறுகதைகளில் இயல்பாகவே அமைந்துள்ளது.

க. தமிழமல்லனின் (1992: 9 - 10) 'வந்திடுவார்' என்னும் சிறுகதைத் தொகுப்பில் உள்ள 'தனிக்குடும்பம்' என்னும் சிறுகதை தனிக்குடும்பமாகச் செல்ல நினைக்கும் ஒரு நிகழ்ச்சியை முதன்மையாகக் கொண்டு அமைகின்றது. குளியலறையிலும் கழிவறையிலும் கதவைத் தாளிடாமல் ஒழுக்கக்குறைபாடுடன் இருக்கின்றார் என்ற குற்றம் சாற்றுகின்ற மனைவியின் பேச்சைப் பொறுத்துக்கொள்ள இயலாமல் தனிக்குடும்பமாகச் செல்ல முயலுகின்றான் மணி. அதனைத் தடுக்கும் தன் தந்தையிடம் சீறுகின்றான் மணி. குருதி அமுத்தம் உடையவர்கள் நடக்கும்போதுகூடக் கீழே விழுந்து இறந்துவிடக்கூடும். நான் குளிக்கும்போது அப்படி ஏதும் நடந்துவிட்டால், என் பிணத்தை எடுக்கத் தொல்லைப்படக் கூடாதென்றுதான் அவ்வாறு கதவைத் தாழிடாமல் குளித்தேன் என்று அவனுடைய தந்தைக் கூறுவதைக் கேட்ட மணிக்கு மட்டுமல்லாமல் நமக்கும் துக்கம் தொண்டையை அடைத்துக் கொள்வதை மறுக்க இயலாது. இரு பக்கங்களில் அமைந்தாலும் மிகச் சிறந்த ஓர் உணர்ச்சியை இச்சிறுகதை ஊட்டுவது மெய்யே.

**4. குறைந்த கதைமாந்தர்களைக் கொண்டிருத்தல்**

சிறுகதைகள் அளவில் சிறியனவாகவும், ஒரு நிகழ்ச்சிக்கு மட்டும் முதன்மை கொடுப்பனவாகவும் இருக்க வேண்டுமென்றால், கதைமாந்தர்களின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கக் கூடாது என்பது இயல்பான ஒன்றே. அவ்வகையில் தனித்தமிழ்ச் சிறுகதைகள் குறைவான கதைமாந்தர்களையே கொண்டு சிறப்பதைக் காணமுடிகின்றது.

க. தமிழமல்லனின் (1997: 98 - 101) சிறுகதைத் தொகுப்பாகிய 'மஞ்சளுக்கு வேலையில்லை' என்னும் நூலில் 'நிறுத்தடா வானொலியை' என்னும் சிறுகதையில் கதைமாந்தர் இருவரே என்பதைக் காணும்போது, குறைவான கதைமாந்தர் என்னும் பண்பு தனித்தமிழ்ச் சிறுகதைகளின் பண்பும்தான் என்பது புலனாகின்றது.

**5. விரிவான வண்ணனைகளைப் படைக்காதிருத்தல்**

சிறுகதைகளில் வண்ணனைகள் விரிவாக அமையக்கூடாது எனக் கருதுவர். அவ்வகையில் கழக இலக்கியங்களில் ஒன்றாகிய அகநானூற்றைப் போல விரிந்த வண்ணனைகளைக் கொண்டிராமல், குறுந்தொகை போலக் குறுகிய வண்ணனைகளைக் கொள்வது சிறுகதைகளின் பண்பாகும் என்ற வரையறைக்கு உரு. அசோகன் எழுதிய பஞ்சு இனிப்பு (த. தமிழ்ச்செல்வி 2014 : 47 - 49) என்னும் சிறுகதை சான்றாகும்.

**6. குறைவான, ஏற்ற சொற்களால் அமைதல்**

சொல்லுக பயனிற் சொல்லிற் பயனுடைய (குறள். 200) என்றும், சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல், வெல்லும்சொல் இன்மை அறிந்து (குறள். 645) என்றும், பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற, சிலசொல்லல் தேற்றா தவர் (குறள். 649) என்றும் சொற்சுருக்கத்தின் பெருமையைப் பலபட மொழிவார் வள்ளுவப் பேராசான். இவை சிறுகதைக்கும் ஏற்றவை என்று சொல்வது மிகை. சிறுகதைகளின் அமைப்பே இத்திறனால் சிறப்பது உண்மை. இப்பண்பு தனித்தமிழ்ச் சிறுகதைகளிலும் உண்டு. பணம் ஒன்றே குறிக்கோளாகத் திரியும் மருத்துவர் சிலரின் பண்பினைப் படம்பிடித்துக் காட்டும் "பார்க்க மாட்டேன்" என்னும் சிறுகதையின் நிறைவுப் பகுதி மிகச் சுருக்கமாக அமைந்து சிறுகதை இலக்கணத்திற்குச் சான்றாகின்றது. அப்பகுதி வருமாறு: " 'காணி (ஸ்கேன்) எடுத்து வந்திருக்கேன். நீங்க பார்க்கவில்லையே! பார்க்காமலேயே மருந்து எழுதிக் கொடுக்கிறீங்க...' என்றான் மாறன். சினத்தை மறைத்துக் கொண்டு 'பார்க்கமாட்டேன், கொண்டு போங்க'.

மருத்துவரிடம் 50உருவா நீட்டினான் மாறன்.

'100உருவா கொடுங்க' என்று கை நீட்டினார். மருத்துவர் சிவன் நல்லவர்!" (தமிழமல்லன் 2004: 93 - 96). இதைவிடச் சுருக்கமாக மருத்துவர் சிலரின் பண்பினை வெளிப்படுத்துவது இயலாது என்றே கூறத் தோன்றுகின்றது.

**7. சொற்கட்டுடைய உரையாடல்கள்**

சிறுகதைகளின் இன்றியமையாப் பண்புகளில் ஒன்று உரையாடல். அவ்வுரையாடல்களும் சுருக்கமாகவும் பயனற்ற சொற்கள் இன்றியும் அமைவது கதையின் சிறப்புக்கு அடிகோலுகின்ற ஒன்றாகும். அவ்வகையில் தனித்தமிழ்ச் சிறுகதைகள் அமைவதைக் காணமுடிகின்றது.

கருநாடகக் கன்னடர்களின் மொழிப்பற்றையும், தமிழர்களின் மொழியுணர்வையும் எடுத்துக்காட்டும் வகையில் அமைந்த பின்வரும் உரையாடல் மேற்கருத்துக்கும் கதையின் ஓட்டத்திற்கும் துணையாவதைப் பாருங்கள். "நீ சொல்லுவதைப் பார்த்தா எல்லோரையும்விட நீங்கதாண்டா சிறந்தவங்க. உங்க மாநிலத்தில்தான் எங்குமே தமிழ் இல்லையே! உங்களைப்போல எங்களை நினைச்சிடாதே!" (தமிழமல்லன் 1997: 76).

**8. அளவில் சிறிதாக, முழுமையுடையதாக அமைதல்**

சிறுகதை என்னும் பெயரே அளவில் சிறிதாக அமையும் கதை என்பதை உணர்த்தும். எனினும், சிறுகதையின் பண்புகளில் ஒன்றாக கதை, அளவில் சிறிதாக அமைய வேண்டும் என்பதைக் குறித்துள்ளனர். அளவில் சிறிதாக இருந்தாலும், முழுமை பெற்றதாக இருப்பதே சிறுகதை என்ற இலக்கணம் தனித்தமிழ்ச் சிறுகதைளுக்கும் பொருந்துவது குறிப்பிடத்தக்கது. ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட தனித்தமிழ்ச் சிறுகதைகள் பான்மையும் அளவில் சிறியனவாகவும், பொருண்மையில் முழுமையுடையனவாகவும் இருப்பதைக் காணமுடிகின்றது. பல சிறுகதைகள் நான்கு, ஐந்து பக்க அளவில் நிறைவுபெற்றுள்ளமை குறிக்கத்தக்கது. சான்றாகச் சில கதைகளைக் கூறலாம். விருது (தமிழமல்லன் 2004: 26 - 29), தொல்லை வேணாம்

(தமிழமல்லன் 2004: 35 - 36), வேகம் (தமிழமல்லன் 2004: 45 - 48), வேலை இல்லை (தமிழமல்லன் 2004: 56 - 57), நழுவல் (தமிழமல்லன் 2004: 67 - 69), பார்க்க மாட்டேன் (தமிழமல்லன் 2004: 93 - 96), பெண் வண்டி (தமிழமல்லன் 1997: 9 - 11), தொலைகாட்சியே நன்றி (தமிழமல்லன் 1997: 25 - 26), அமைச்சர் அதற்குள் புறப்பட்டாரா (தமிழமல்லன் 1997: 27 - 29), வெளியேற்றம் (தமிழமல்லன் 1997: 38 - 40), எங்கே போவது (தமிழமல்லன் 1997: 102 - 103), பட்டு (தமிழமல்லன் 1997: 109 - 110), விடுதலை (தமிழமல்லன் 1997: 123 - 126), திருநீறு (தமிழமல்லன் 1997: 127 - 130), வெறிநாய்க்குட்டி (தமிழமல்லன் 1997: 136 - 138)அத்தை (தமிழமல்லன் 1997: 139 - 141).

### 9. சிறுகதைகள் நம்பக் கூடிய உண்மைத் தன்மை கொண்டிருத்தல்

சிறுகதைகள் நாம் நம்புவதற்குத் தகுந்த நிகழ்வுகளைக் கதைநிகழ்வுகளாகக் கொண்டு, உண்மைத் தன்மை பெற்றிருக்க வேண்டும் என்ற வரையறை, உண்மைக்குப் புறம்பானவற்றைச் சிறுகதைகளாக்கக் கூடாது என்ற கருத்தின் அடிப்படையில் எழுந்ததாகும். நம்பக்கூடியன என்பன இனம், பண்பாட்டு அடிப்படையில் மாறக்கூடியவை என்றாலும், எந்த இனத்தில்; பண்பாட்டில் ஒரு கதை எழுகின்றதோ, அதற்கு ஏற்பக் கதைகள் அமையவேண்டும் எனக் கருதலாம்.

தமிழ் இலக்கண, இலக்கியப் பரப்பில் இவ்வகைக் கருத்து, இலக்கண; இலக்கியம் முழுமைக்கும் வலியுறுத்தப்பட்ட ஒன்றே என்பது இவ்விடத்தில் நினையத்தக்கது. பொருளொடு புணராப் பொய்மொழி (தொல்.பொருள். பேரா. 485) பற்றிய தொல்காப்பியக் கருத்துக்கள் இவ்விடத்தில் நினையத்தக்கன. இக்கருத்துக்களுக்கு மாறாக, இறையனார் களவியல் உரைகாரர் "அஃது இவ்வுலகினும் இயற்கையான் நிலைபெறாது புலவரான் இல்லது இனியது நல்லதென நாட்டப்பட்டதோர் ஒழுக்க மென்பார் ' கண்ணிய' என்றார்'' (பவானந்தம் பிள்ளை 1916: 270*) எனக் களவியல் என்பது இவ்வுலகில் இல்லாதது; புனைந்துரை எனக் கருத்துரைத்தார். இக்கருத்து நச்சினார்க்கினியரால் "இஃது இல்லதெனப்படாது உலகியலேயாம். உலகியலின்றேல் ஆகாயப்பூ நாறிற்றென்றவழி அதுகூடக் கருதுவாருமின்றி மயங்கக் கூறினானென்று உலகம் இழித்திடப்படுதலின் இதுவும் இழித்திடப்படும்'' (நா. பொன்னையா 1948: 9*) என மறுத்துரைக்கப்பட்டது. வ.சுப. மாணிக்கனாரும் (1980: 290) "இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் ஐந்திணையாவது இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கம் எனவும், உலக வழக்கோடு இயையாது எனவும் ஒரு பெருங்கருத்தை எழுதியுள்ளார். இக்கருத்து இகலின்றி ஆராய்தற்கு உரியது. 1. புலவர்கள் கற்பித்த ஒழுக்கம், 2.உலக வழக்கில் இல்லாத ஒழுக்கம், 3. இல்லை எனினும் கற்பனையாற் படைத்தற்குக் காரணம் இனிய ஒழுக்கம், 4. நல்ல ஒழுக்கம் என்ற நான்கு கூறுகள் இவர் கருத்தில் அடங்கியுள. இனியது நல்லது என்ற கூறுகளை நாமும் ஒத்துக் கொள்கின்றோம். ஐந்திணைக் காதல் தமிழ்ச் சமுதாயத்தில் காண்கில்லா அரிய பொருளா? மலடி பெற்ற நொண்டி முயற்கொம்பை ஏணியாகக் கொண்டு படிவைத்து ஏறிச் சென்று வானத்துக் கருந்தாமரையை வாயாற் பறித்துப் பேரனுக்குப் பிறந்த நாட் பரிசாக அளித்தான் என்பது போலும் கட்டுக் கதையா? முழுதும் புலவர்தம் கற்பனைப் படைப்பா? சங்க இலக்கியம் புராணத்திலும் பெரும் புராணமா? இல்லது என்று புலவரால் நாட்டப்பட்டது என்னும் உரையாசிரியர் கொள்கை அதிர்ச்சி தருவதாகும்'' என மறுத்துரைக்கின்றார். தமிழ் இலக்கண, இலக்கியங்கள் உள்ளதைப் புனைதலையே கருப்பொருளாகக் கொண்டவை என்பதை இதுகாறும் கண்ட கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன. நம்பக்கூடிய உண்மை நிகழ்ச்சிகளைப் புனைவதே சிறுகதைக்கும் இலக்கணம் என்ற கருத்து பிற மொழி இலக்கியங்களின் அடிப்படையில் கூறப்பட்டதாயினும், முந்தைய தமிழ் மரபின் தொடர்ச்சியே அன்றி; வேறில்லை எனலாம். ஒரோவகையில் இவ்வகைக் கருத்துக்கள் உலகப் பொதுமையன என்றும் கூறலாம்.

தனித்தமிழ்ச் சிறுகதைகள் முற்றும் உலக நிகழ்வுகளையே கதைப்பொருளாகக் கொண்டுள்ளன. நம்பக்கூடாத நிகழ்வுகள் எவையும் தனித்தமிழ்ச் சிறுகதைகளில் இல்லை என்றே சொல்லலாம். இன்னும் சொல்லப்போனால், தனித்தமிழ்ச் சிறுகதைகளில் நாம் காணும் நிகழ்வுகள் நம்மில் பலரது வாழ்க்கையில் நாம் சந்தித்தவை அல்லது சந்திப்பவையே என்றே கூறலாம்.

### 10. விரியக்கூடிய கதைக்கருவைக் கொண்டிருத்தல்

சிறுகதைகள் அளவில் சிறியவையாக இருப்பினும், அக்கதைகளின் கருப்பொருள்கள் ஒரு புதினமாகவோ அல்லது தொடர்கதையாகவோ விரித்துரைக்கக் கூடியனவாக அமைய வேண்டும் என்ற கருத்து, தனித்தமிழ்ச் சிறுகதைகளுக்கும் பொருந்துகிற ஒன்றே. எனினும், ஒரு சிறுகதை ஒற்றை நிகழ்ச்சியை நடுவமாகக் கொண்டு அமைவதால், ஒரோவிடங்களில் இவ்விலக்கணம் எவ்வகையில் பொருந்தும்

என்பதும் சிந்திக்கத்தக்கது. இனி, தனித்தமிழ்ச் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள உத்தி முதலானவற்றைக் காண்போம்.

**சிறுகதை உத்திகளும் தனித்தமிழ்ச் சிறுகதைகளும்**

"ஆசிரியர் தான் உணர்த்த விழையும் கருத்துக்களை வெளிப்படுத்தும் முறையே உத்தி" என உத்தியை விளக்குவர் (இரா. ஹேமமாலினி 1987 :102). 'உத்தியும் உள்ளடக்கமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. உள்ளடக்கத்தினை உணர்த்துவது உத்தி' என்னும் கருத்து (வீ. உண்ணாமலை 1991 : 86) உத்திக்கும் உள்ளடக்கத்திற்கும் உள்ள தொடர்பினை விளக்குகின்றது. தனித்தமிழ்ச் சிறுகதைகளில் காணப்பெறும் உத்திகளை 1. உள்ளடக்கம் சார்ந்த உத்திகள், 2. உருவம் சார்ந்த உத்திகள் என வகைப்படுத்தலாம்.

**1. உள்ளடக்கம் சார்ந்த உத்திகள்**

தனித்தமிழ்ச் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள உள்ளடக்கம் சார்ந்த உத்திகளை 1. தலைப்பிடுதல் உத்தி, 2. கதைத்தொடக்க உத்தி, 3. கதைப்பின்னல் உத்தி, 4. கதைமாந்தர் படிப்பாக்க உத்தி, 5. கதைநிறைவு உத்தி எனப் பகுத்தறியலாம்.

**1. தலைப்பிடுதல் உத்தி**

சிறுகதைகள் அளவிலும் பொருண்மையிலும் சிறியன. புற்றீசல் போலப் பல்கிப் பெருகும் சிறுகதைகளுக்கிடையே ஒரு சிறுகதையைப் படிக்க வரும் வாசகனை ஈர்ப்பதற்கு அச்சிறுகதைக்குத் தரப்பட்டுள்ள தலைப்பே இன்றியமையாதது என்பது வெளிப்படை. ஒரு வகையில் சொன்னால் தலைப்புத்தான் ஒரு சிறுகதைக்கு வாயில் என்றே சொல்லலாம். எனவே, ஒவ்வொரு படைப்பாளரும் தம்முடைய கதைகளுக்குத் தலைப்புக்களிடுவதில் தனிக்கவனம் செலுத்துவர். தனித்தமிழ்ச் சிறுகதைகளிலும் இவ்வகையான போக்கினைக் காணமுடிகின்றது. ச. அமுதன் எழுதிய " ஐயோ மகனே" (த. தமிழ்ச்செல்வி 2016: 21) என்னும் சிறுகதை படிப்பாளியின் உள்ளத்தில் ஒரு பதற்றத்தையும் என்ன நிகழ்ந்தது? என அறிகின்ற ஆர்வத்தையும் தூண்டும் வகையில் அமைந்துள்ளது இதற்குச் சான்றாகும். அதுபோன்றே, கனிமொழி எழுதிய "யார் பணம்?" (த. தமிழ்ச்செல்வி 2016: 37) என்னும் சிறுகதையும் அமைந்துள்ளது.

பட்டுக்கோட்டை இராசா எழுதிய "ஒன்றுக்குள் ஒன்று "(த. தமிழ்ச்செல்வி 2016: 48) என்னும் சிறுகதை ஒரு புதிர் போல அமைந்து ஈர்க்கின்றது. க. தமிழமல்லனின் வந்திடுவார் என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலில் உள்ள 16 சிறுகதைகளில் 11 சிறுகதைகள் "இளநீர்", "நடிகை" என்னுமாப்போல ஒற்றைச் சொல் தலைப்புக்களைக் கொண்டவை. 3 சிறுகதைகள் இரட்டைச் சொல் தலைப்புக்களும் கொண்டவை. இவ்வாறு ஓரிரு சொற்களில் தரப்படும் தலைப்புக்களும் படிப்பாளியை ஈர்ப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன என்றே சொல்லலாம்.

**2. கதைத்தொடக்க உத்தி**

சிறுகதைகளின் தொடக்கம் மிகச்சிறப்பாக அமையவேண்டும் என்பதைச் சிறுகதையாசிரியர்களும் திறனாய்வாளர்களும் பலபடக் கூறியுள்ளனர். ஒரு குதிரை ஓட்டத்தின் தொடக்கம்போலச் சிறுகதையின் தொடக்கமும் அமையவேண்டும் எனச் சிறுகதைத் திறனாய்வாளர்கள் கருதுவர். தலைப்பு ஒரு வாயில் போல அமைந்து படிப்பாளியை ஈர்த்தால், தொடக்கம் அவனைக் கதைக்குள் செல்ல வழிநடத்த வேண்டும் என்றே கூறலாம். மிகச் சிறந்த சிறுகதை எனப் பாராட்டப்பட்ட சிறுகதைகள் அனைத்தும் மிகச் சிறந்த தொடக்கத்தைக் கொண்டவை எனக் கூறுதல் மிகை. அவ்வகையில் தனித்தமிழ்ச் சிறுகதைகளும் ஈர்க்கும் தன்மையுள்ள தொடக்கங்களைக் கொண்டுள்ளன.

"வாழ்க்கையை வெளிப்படுத்துவதாகவே சிறுகதை அமைவதால், வரையறுத்த தொடக்கம் என்பது அதற்குக் கிடையாது" (சு. வேங்கடராமன் 1977: 154) என்னும் கருத்து சிறுகதைகளின் தொடக்கத்தை அமைப்பதில் படைப்பாளியின் விடுதலை மனநிலையை உணர்த்தினாலும், பிறரால் படிக்கப்படுவதற்கெனவே சிறுகதைகள் எழுதப்படுவதால், படிப்போரின் உள்ளத்தை ஈர்க்கும் வகையிலான தொடக்கத்தைத் தரவேண்டிய பொறுப்பு படைப்பாளிக்கு உண்டு. இது அவர்தம் விருப்பத்தைச் சார்ந்து அமைந்தாலும் / அமையவில்லை என்றாலும், படைப்பாளி ஈர்ப்புடைய கதைத் தொடக்கத்தை தருகின்ற நிலைக்கு இயல்பாகவே தள்ளப்படுகின்றார் என்பதே உண்மை. தனித்தமிழ்ச் சிறுகதைகளும் உள்ளத்தை ஈர்க்கும்வகையிலான கதைத்தொடக்கங்களைத் தந்துள்ளன என்பதைக் காணமுடிகின்றது. சான்று ஒன்று தருவோம்.

"இனி ஒரு நொடிகூட நான் இங்கிருக்க மாட்டேன். உங்கப்பாவுக்குக் கொஞ்சங்கூட நாகரிகமே தெரியவில்லை. இவ்வளவு முதுமையிலும் கீழ்த்தரப்பண்பு போகவில்லையே. ஒன்று, நான் இங்கே இருக்கணும் அல்லது அவர் இருக்கணும். உடனே ஒரு வழி பண்ணுங்க" ( க. தமிழமல்லன் 1992: 9).

சிறுகதைத் தொடக்கங்களில் '1. மரபுநிலைத் தொடக்கம், 2. ஆர்வநிலையைத் தூண்டுவன, 3. அறிமுகப்படுத்துவன, 4. உரையாடல் வடிவின, 5.வருணனையில் அமைவன, 6. கதைமாந்தர் பண்பு விளக்கத்தன, 7. கூற்று நிலைத் தொடக்கம் ஆகிய வகைமைகள் உள்ளன என்ப. தனித்தமிழ்ச் சிறுகதைகளில் இவ்வகைகள் அனைத்துக்கும் சான்றுகளைக் காணமுடிகின்றது.

### 3. கதைப்பின்னல் உத்தி

கதைப்பின்னல் என்பது ஆசிரியர் பல நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் கோர்வையாக அளிப்பதைக் குறிக்கும் என்பர் (தா.ஏ. பியூலா மெர்சி 1974: 29). மேலும், 'கற்போர் மனத்தில் தான் பதிக்க விரும்பும் உணர்வைத் தோற்றுவிக்கும் வகையில் கதைநிகழ்ச்சிகளைக் கலைஞன் முறைமாற்றி அமைத்தபின், முழுவடிவம் பெற்றுவிட்ட சிறுகதையில் நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ள நிரல்முறையே கதைப்பின்னல்" என்றும் கூறுவர் (மீனாட்சி முருகரத்தினம் 1976: 54). இதுகாறும் கூறப்பட்ட கருத்துக்கள் சிறுகதைகளின் உயிர்நாடியாக அமைவது கதைப்பின்னலே என்னும் உண்மையை உணர்த்துகின்றன. ஒரு படைப்பாளின் தனித்தன்மையைக் காட்டும் இடமாக அமைவது கதைப்பின்னலே என்ற கருத்தை மறுக்க இயலாது. படைப்பாளியின் அடையாளத்தைச் சுட்டிக் காட்டும் பகுதியாக அமையும் கதைப்பின்னலில் படைப்பாளிகள் மிகுதியும் கவனம் செலுத்துவது இயல்பான ஒன்றே. தனித்தமிழ்ச் சிறுகதைகளும் இவ்வகையில் கதைப்பின்னலில் சிறக்க அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

சிறுகதைகளில் 1. பின்னோக்கு உத்தி, 2. நனவோடை உத்தி, 3. கனவுநிலை உத்தி, 4. உருவக உத்தி, 5. உரையாடல் உத்தி, 6. உரையாடலின்றி அமைவன, 7. எடுத்துக்காட்டுக் கதை வடிவின, 8. நாட்குறிப்பு, 9. பேட்டி முறை, 10. கடித உத்தி ஆகிய கதைப்பின்னல் உத்திகள் அமையக்கூடும் என்ப. இவ்வகைகள் நீங்கலான, உத்திகளும் தனித்தமிழ்ச் சிறுகதைகளில் உண்டென்பதற்குப் பின்வரும் சிறுகதை சான்றாகும்.

மலைவாழ் பழங்குடியினாகிய கருமலை ஒரு அலுவலகத்தில் கணக்கர் பணிக்கு வந்து சேருகின்றான். அந்த அலுவலகத்தில் இருந்த முத்துவும் முருகையனும் அவன்மீது வெறுப்புக் கொண்டு விலகியிருக்கின்றனர். பின்னர் ஒரு நாள் கருமலை முத்துவுக்கு விருந்து வைக்கின்றான். பின்னொரு நாள் முருகையனையும் கருமலை விருந்துக்கு அழைக்கின்றான். முருகையன், முத்துவிடம் விருந்து எப்படி எனக் கேட்க, அருமையான விருந்து; அத்தோடு அவன் மனைவியும் இரவு விருந்தானாள் என்கின்றான். மனக் குறுகுறுப்படைந்த முருகையன் விருந்துக்குச் செல்கின்றான். நல்ல விருந்துக்குப் பின், விருந்தினர் ஓரிரவு தங்கினால்தான் முழு விருந்து தந்த உணர்விருக்கும் எனக் கருமலை கூறுகின்றான். இரவில் முருகையனும் அந்த அழகு மங்கையின் கையைப் பிடித்து அன்பே எனத் தொடங்குகின்றான். அவளோ பளார் என அறைந்து விடுகின்றாள். முருகையன் அறை தாளாமல் சாய்ந்து விடுகின்றான். பின்னர் மலைவாழின மகளிர் சந்திக்கும் ஆண், அவளுடைய விருப்பத்திற்குரியவனாக இருந்தால், அவன் கன்னத்தில் ஓங்கி அறைவது அவர்களுடைய வழக்கம் என்றொரு செய்தியைக் கண்ட முருகையன் தான் வாங்கிய அறை எந்த வகை? என்ற குழப்பத்தில் இருப்பதாக முடிவடையும் விருந்து என்னும் சிறுகதை (க. தமிழமல்லன் 1985:43 - 48) சிறந்த ஒரு கதைப்பின்னலுக்குச் சான்றாகும்.

### 4. கதைமாந்தர் படைப்பு உத்தி

தனித்தமிழ்ச் சிறுகதைகளில் இடம்பெறும் கதைமாந்தர்கள் பல வகையினர். அவர்களைப் படைப்பதில் பல உத்திகளைப் படைப்பாளர்கள் கைக்கொண்டுள்ளனர். அவற்றைப் பின்வருமாறு பகுத்தமைக்கலாம்: 1. குறிக்கோள் மாந்தர்களைப் படைத்தல், 2. முரண்நிலை மாந்தர்களைப் படைத்தல், 3. அஃறிணைகளைக் கதைமாந்தர்களாகப் படைத்தல், 4. படைப்பாளியே கதைசொல்லியாதல்.

தனக்கின்னா செய்தாருக்கும் இனியவே செய்யாக்கால் சால்பென்பது என்ன பயனுடைத்து? என்பார் வள்ளுவப் பெருந்தகை (குறள். 987). இத்தகைய குறிக்கோள் கொண்ட மாந்தர்களைக் காண்பது எளிதன்று. இவ்வகை மாந்தர்களைப் படைப்பது, மாந்தர்களிடையே தாமும் அப்பண்புடையவர்களாக வாழவேண்டும் என்னும் எண்ணத்தை விதைக்கும் என்னும் கருத்தில் தனித்தமிழ்ச் சிறுகதையாசிரியர்கள் தம் கதைகளில் அத்தகைய மாந்தர்களைப் படைத்துள்ளனர். க. தமிழமல்லனின் (2004: 26 - 29) விருது என்னும் சிறுகதையில் வரும் முதன்மைக் கதைமாந்தராகிய அறிவுத் தொடர்பன், தன் பெயரைக்கூட அழைப்பிதழில் போடுவதற்கு இசையாத, திருமகள் கேள்வனுக்கு விருது கொடுக்கப் பரிந்துரை

செய்கின்றார். திருமகள் கேள்வன் செய்த இன்னாத செயல்களை இனியர் எடுத்துக் கூறியும், தம் கருத்தில் மாறாத் தன்மையாராக நிற்கும் அறிவுத்தொடர்பன் 987ஆம் குறளுக்கு இலக்கியமாகத் திகழ்கின்றார்.

### 5. கதை நிறைவு உத்தி

சிறுகதைகளைப் பொருத்தவரையில், அவற்றின் தொடக்கம் எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது கதை நிறைவும். கதையின் நிறைவே, படிப்போருக்கு உள்ளநிறைவையோ, ஏக்கத்தையோ தந்து, அக்கதைகளை உள்ளத்தில் நிலைநிறுத்தும் என்றே சொல்லலாம். "சிறுகதையின் முடிவு அதன் திருப்பத்தில் உள்ளது என்றோம். அது வாசகனை அந்தக் கதையை முற்றிலும் புதிதாக மீண்டும் கற்பனையில் எழுப்பச் செய்யவேண்டும்.

அப்படியானால் அது முடிந்தவரை குறைவான சொற்களில் சொல்லப்பட வேண்டும். எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு வாசகனின் கற்பனைக்கு விடப்பட வேண்டும்" (*http://www.jeyamohan.in/336#.WVZ67JKGPhk*) என்னும் கருத்து, நம் கருத்துத் துணையாவதைக் காண்க.

"கதை வளர்ச்சிக்கேற்ப முடியவேண்டும். இப்படித்தான் முடியப்போகிறது என்று படிப்போர் தெரிந்துகொள்ளாத வகையிலும், முடிந்த பின்னர் இதுதான் சரியான முடிவு என்று அவர்கள் ஒத்துக்கொள்ளும் வகையிலும் கதை முடியவேண்டும்" (தா.ஏ. பியூலா மெர்சி **1974: 47**) என்னும் கூற்று கதைமுடிவு பற்றிய பொதுக்கருத்தாகும். தனித்தமிழ்ச் சிறுகதைகள் இவ்வகையில் கதைநிறைவினைக் கொண்டிலங்குவதைக் காணமுடிகின்றது. ஓரோவிடங்களில் இக்கதைகள் மாறுபட்டு அமைவதையும் காணமுடிகின்றது.

கம்பித் தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிசெய்பவன் போல வந்து, கழுத்தணி முதலானவற்றைத் திருடிக்கொண்டு செல்ல நினைத்த ஒருவன், மக்களால் அடிபட்டு மயங்கி விடுகின்றான். என்ன செய்தும் மயக்கம் தீராததுபோல, அவன் நடிப்பதைக் கண்ட மருத்துவர் நெஞ்சு (இதய) அறுவை செய்துவிட வேண்டும் என்று கூறிக் கொண்டே, "மயக்க ஊசியை மார்பில் குத்தினார். ஊசி முனை பட்டதும், இளைஞன் "ஐயையோ என்னை ஒன்னும் செய்துவிடாதீங்க! நான் சாகவில்லைங்க" என்று அலறிக்கொண்டே கீழே குதித்தான்" (க. தமிழமல்லன் **2004: 44**) என வரும் சிறுகதை முடிவுப்பகுதி, இதுதான் சரியான முடிவு என்று பிறர் ஒத்துக்கொள்ளும் வகையில் முடிவதற்குச் சான்றாகும்.

### 6. நடையியல் உத்தி

ஒரு படைப்பாளர் தம் கருத்துக்களைப் படைப்புக்களில் வெளிப்படுத்தும் மொழிநிலையை நடை எனலாம். மனிதர்களுக்கிடையே எண்ணங்கள் ஒன்றுபடுவதும், வேறுபடுவதும் போலக் கருத்துக்களை வெளிப்படுத்தும் மொழிநிலையிலும் ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் காணமுடியும். மொழி என்பது ஒரு கருவியே என்று சிலர் கூறினாலும், மொழி இல்லையென்றால், கருத்து வெளிப்பாட்டுக்கு வழியில்லாமல் போய்விடும். கருத்து வெளிப்பாட்டுக்கு வழியில்லையென்றால் மாந்தர்களுக்கும் விலங்கினங்களுக்கும் வேறுபாடில்லாமல் போய்விடும் என்பதை மறுக்க இயலாது. எனவே, மொழியே மாந்தர்களுக்கு உயிர் எனல் தகும்.

மொழியைக் கருவியென்றே நீங்கள் கொண்டாலும், கருவி செவ்வையாக இல்லையெனில், அதனால் விளையும் பயன் என்ன?. கூரியதோர் வாள்மன் என உரையாசிரியர்கள் கூறுவதுபோல, கூர்மையாக அமையாத வாளால் என்ன பயன்?. பிழைபடப் பேசுவதையும் எழுதுவதையும் சரியெனக் கருதுவோரால் விளையும் மொழிக்கேடுகள் கொஞ்சமா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஆங்கிலத்தில் பிழைபட எழுதிவிட்டால் துடிக்கும் உள்ளம்; தமிழில் எழுதும்போது செத்துப் போவது எப்படியெனத் தெரியவில்லை. பிழையற எழுதுவதும் பேசுவதும் நம் கடமையும் உரிமையுமாகும் என்பதை நினைவில் கொண்டால் தமிழ் தழைக்கும்.

படைப்பிலக்கியமாகிய சிறுகதையின் மொழிநடை எவ்வாறு அமையவேண்டும் என்பதைப் பற்றிப் பலரும் கருத்துக்களைக் கூறியுள்ளனர். அவற்றைக் காண்போம்.

"நடை என்பது கதை சொல்லப்படும் முறையும், கருத்து வெளியீட்டிற்குப் பயன்படுத்தப்படும் சொல் தொடர் அமைப்புகளும் ஆகும் என்பார் மீனாட்சி முருகரத்தினம் (**1976: 146**). இதன்மூலம், கதையும், கருத்தும் சொல்லப்படுவதற்கு இன்றியமையாதவை சொற்களும், தொடர்களுமே என்பதை அறியமுடிகின்றது.

தமிழ் இணையக் கல்விக்கழகப் பாடத்திட்டப் பகுதியில் தரப்பட்டுள்ள கருத்து வருமாறு: "சிறுகதைகளில் மொழிநடை எளிமையாய் இருத்தல் வேண்டும். சமுதாயத்தில் உள்ள பல்வேறு

நிலையினரும் படித்து, பயன் கொள்ளும் இலக்கியம் இது. எனவே எளிய மொழிநடையின் மூலம் மட்டுமே படைப்பாளர்கள் வாசகர்களின் மனத்தில் கருத்துகளைப் பதிக்க வேண்டும். தனித்தமிழ் நடை, பண்டித நடை ஆகியவை சிறுகதைக்குக் கை கொடுக்காது. அதற்காக இழிவழக்குடன் கூடிய நடையும் உதவாது. ஒரு பழகிய நடையுடன் கூடிய பேச்சு வழக்கு சிறுகதைகளில் இடம்பெறல் வேண்டும். இதன் மூலமே படைப்பாளனின் படைப்பிலக்கியம் வெற்றி பெற இயலும்'' (http://www.tamilvu.org/courses/degree/p203/p2033/html/p2033113.htm). இக்கருத்துக்களின் பொருத்தத்தைக் காண்போம்.

மேலே தரப்பட்டுள்ள கருத்துக்களை உற்றுநோக்கும்பொழுது, பின்வரும் வினாக்கள் நமக்குள் எழுகின்றன. அவற்றைக் காண்போம். 1. மொழிநடை எளிமை என்பதற்கான அளவுகோல் என்ன? 2. சமுதாயத்தில் பல்வேறு நிலையில் உள்ளவர்களும் படித்துப் பயன்பெறும் இலக்கியம் என்பதை முழுமையாக நாம் அறிய இயலுமா? உணவுக்கே வழியில்லாத நிலையில் வாழும் மக்களும், படிக்கும் திறனற்ற மக்களும் சிறுகதை முதலான இலக்கியங்களைக் காண்பதும் படிப்பதும் இயலுமா?. உணவு, உடை, இருப்பிடம் முதலான அடிப்படை ஏந்துகளைக் கொண்டோரும் கல்வியறிவுடையோரும் தான் இலக்கியங்களைப் படிக்க முன்வருவர் என்பது வெள்ளிடை. இந்நிலையில் பாடத்திட்டப் பகுதியில் இப்படி எழுதுவது பொருத்தமுடையதாகுமா என்பது எண்ணிப் பார்க்கத்தக்கது. 3. தனித்தமிழ் நடை சிறுகதைக்குக் கை கொடுக்காது என்பது எவ்வளவு அறியாமையுடைய கருத்து. தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள் எழுதிய சிறுகதைகளுக்கும் இக்கருத்து பொருந்துமா?. தமிழ் என்பதே தனித்தமிழ் தான் என்பதை அறியாமல் சொல்லப்படும் இதுபோன்ற கருத்துக்களால்தான் உரைநடை இலக்கியங்களை எழுதுவோர் தமிழில் எழுத இயலாதவர்களாக இருந்தும் தமிழின் சிறந்த எழுத்தாளர்களாகக் கொண்டாடப்படுகின்றனர். இந்த இழிநிலை எப்போது மாறுமோ?.

தனித்தமிழ்நடை சிறுகதைக்குக் கைகொடுக்காது என்போர் கருத்துக்குச் சாட்டையடி கொடுக்கும் முறையில் தனித்தமிழ்ச் சிறுகதைகள் அமைந்திருப்பதைக் காண்போர் அறிவர். இக்கதைகளைக் காணும்போது அவை தனித்தமிழால் எழுதப்பட்டன என்றாலும், இயல்பான பழகிய நடையிலே இருப்பதுபோலவே இவை அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. சான்று ஒன்று தருவோம்.

“அரசு சார்பு வழக்கறிஞர் எழுந்தார். “மாண்பு மிக்க நடுவர் அவர்களே! பெண் காவல் அதிகாரி புகழரசி மேல் பலவகையான குற்றச்சாற்றுகள் உள்ளன. அவற்றை அறிக்கையாகத் தருவதற்கு மேலும் சிறிது காலம் தேவை. எனவே அன்புகூர்ந்து இந்த வழக்கை ஒத்தி வைக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்'' என்று கேட்டுக் கொண்டார்'' (க. தமிழமல்லன் 1997: 123). இப்பகுதியில் அறிய இயலாத சொற்களோ, தொடர்களோ இல்லை. புதிய சொற்கள் (அவை பழக்கமின்மையாலும், அறியாமையாலும் புதியனவாகத் தெரிகின்றன) இருந்தாலும், பொருள் மயக்கம் தருவனவாக இல்லையென்றே சொல்லலாம். மேலும் பிற மொழிச் சொற்கள் வருமிடங்களில் அவற்றுக்குரிய தமிழ்ச்சொற்களைத் தந்து பிற மொழிச் சொல்லைப் பிறைக்குறிப்பில் தருவதால் [காணி (ஸ்கேன்)] , கதை படிக்கும் இன்பத்தோடு புதிய தமிழ்ச்சொற்களை அறியும் அகராதி இன்பமும் தனித்தமிழ்ச் சிறுகதைகளில் கிடைக்கின்றது. இரட்டை இன்பம் தரும் தனித்தமிழ்ச் சிறுகதைகளைப் போற்றுவோம்.

**2. உருவம் சார்ந்த உத்திகள்**

சிறுகதைகளை அவற்றின் உருவம் சார்ந்து ஒரு பக்கக் கதைகள், சில பக்கங்களைக் கொண்டமைந்தவை, பல பக்கங்களைக் கொண்டமைந்தவை எனப் பகுக்கலாம். தனித்தமிழ்ச் சிறுகதைகளில் இவ்வகைக் கதைகள் பரவலாகக் காணப்படுகின்றன. இன்னும் கூடுதலாகப் பல வகைகள் இருப்பினும், காலம்கருதி இத்துடன் நிறைவு செய்கின்றேன்.

**முடிப்புரை**

சிறுகதை என்னும் இலக்கிய வகைமை, தமிழைப் பொருத்தவரை புதியதன்று. காலந்தோறும் வழங்கி வந்த கதைகள் நமக்குச் சுவடி வடிவில் கிடைக்காமையால் இவ்வகை மயக்கங்கள் நேருகின்றன எனலாம். மொழித்தூய்மைக் கருத்தாக்கம் தொல்காப்பியர் காலம் முதலே இருந்து வந்த போதினும், இன்னும் அவற்றின் தேவை குறைந்துவிடவில்லை என்பதை அறிய முடிகின்றது. தனித்தமிழ்ச் சிறுகதைகள், மொழிக்கலப்புடைய பிற கதைகளைக் காட்டிலும், பல வகைகளில் மேம்பட்டுள்ளன. மேலும், மொழிநடையைப் பொருத்தவரையில் தனித்தமிழ்ச் சிறுகதைகள் உயர்நிலையின என்பதைல் ஐயமில்லை. எனினும், கற்பனை, கதைப்பின்னல், ஈர்ப்புடைய சூழல்களைப் புனைதல் ஆகிய நிலைகளில் தனித்தமிழ்ச் சிறுகதைகள் இன்னும் மேம்பட்டால் பிற கதைகளைப் படிப்போரும் தனித்தமிழ்ச் சிறுகதைகளை விரும்பிப் படிப்பர் என்றே கூறலாம்.

**துணைநூல்கள்**


1. அரவிந்தன்.மு.வை. 2008(இரண்டாம் பதிப்பு). உரையாசிரியர்கள். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
2. இளங்குமரன். இரா.. 1991. தனித்தமிழ் இயக்கம். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
3. உண்ணாமலை.வீ.. 1991. புதுக்கவிதையில் சமுதாயம். சிவகங்கை: செல்மா.
4. சாமிநாதையர். உ.வே. (பதி.ஆ.). 1995 (மூன்றாம் பதிப்பு). நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும். சென்னை : உ.வே.சா. நூல்நிலையம்.
5. சிவலிங்கனார். ஆ. (பதி.ஆ.). 1988. தொல்காப்பியம் உரைவளம் - சொல்லதிகாரம் - எச்சவியல். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
6. தமிழ்ச்செல்வி.த. (பதி.ஆ.). 2014 செபுதம்பர். வெல்லும் தூயதமிழ் - இலக்கிய மாத இதழ் - சிறுகதைச் சிறப்பிதழ். புதுச்சேரி: திரு இராமன் மறுதோன்றி அச்சகம்.
7. தமிழ்ச்செல்வி.த. (பதி.ஆ.). 2015 செம்டம்பர். வெல்லும் தூயதமிழ் - இலக்கிய மாத இதழ் - சிறுகதைச் சிறப்பிதழ். புதுச்சேரி: திரு இராமன் மறுதோன்றி அச்சகம்.
8. தமிழ்ச்செல்வி.த. (பதி.ஆ.). 2016 அகுத்தோபர். வெல்லும் தூயதமிழ் - இலக்கிய மாத இதழ் - சிறுகதைச் சிறப்பிதழ். புதுச்சேரி: திரு இராமன் மறுதோன்றி அச்சகம்.
9. தமிழமல்லன். க.. 1978. தனித்தமிழ். புதுச்சேரி: பொ. கண்ணையன்.
10. தமிழமல்லன். க.. 1997. மஞ்சளுக்கு வேலையில்லை. புதுச்சேரி: தனித்தமிழ்ப் பதிப்பகம்.
11. தமிழமல்லன்.க. (தொகு.ஆ.). 1985. விருந்து (சிறுகதைகள்). புதுச்சேரி: தனித்தமிழ்க் கழகம்.
12. தமிழமல்லன்.க.. 1992. வந்திடுவார் (சிறுகதைகள்). புதுச்சேரி: தனித்தமிழ்ப் பதிப்பகம்.
13. திருமாறன். கு. 2003. தனித்தமிழியக்கம். சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.
14. பியூலா மெர்சி.தா. எ.. 1974. இருபதில் சிறுகதைகள். நாகர்கோவில்: செயகுமாரி.
15. மீனாட்சி முருகரத்தினம். 1976. கல்கியின் சிறுகதைக்கலை. மதுரை: சர்வோதய இலக்கியப் பண்ணை.
16. வேங்கடராமன்.சு.. 1977. அகிலன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு. சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்.
17. வேங்கடராமையா.கே.எம். முதலானோர் (பதி.ஆ.). 1996. தொல்காப்பிய மூலம் - பாடவேறுபாடுகள் - ஆழ்நோக்காய்வு. திருவனந்தபுரம் : பன்னாட்டுத் திராவிட மொழியியற் கழகம்.
18. ஹேமமாலினி (க.ஆ.). 1987. முதல் கருத்தரங்கு தமிழ் இலக்கிய ஆய்வுக்கோவை. தஞ்சாவூர்: அனைந்திந்திய தமிழ் இலக்கியக் கழகம்.
19. http://tamil.thehindu.com/opinion/columns/சிறுகதையாற்றுப்படை/article7741927.ece நாள்:14.01.2017.
20. http://www.jeyamohan.in/336#.WHpcJdJ97hk நாள்:14.01.2017.
21. http://www.muthukamalam.com/essay/seminar/s2/p2.html நாள்: 14.01.2017.
22. http://www.tamilvu.org/courses/degree/a041/a0414/html/a041451.htm நாள்: 14.01.2017.
23. http://www.tamilvu.org/courses/degree/p203/p2033/html/p2033112.htm நாள்: 14.01.2017.
24. http://www.tamilvu.org/courses/degree/p203/p2033/html/p2033113.htm நாள்: 30.06.2017.

மதிப்பிடப்பெற்றது

# வியங்கோள் வினை வடிவ வளர்ச்சியும் சமூகப் பின்புலமும்

முனைவர் **மா.ஆசியாதாரா**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
காவேரி மகளிர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 18.

ஒரு மொழியின் இலக்கணக்கூறுகள் அம்மொழி வழங்கும் சமூகத்தைச் சார்ந்தே அமைகின்றன. ஓர் இலக்கணக்கூறிற்கான சொற்றொகுதி மற்றும் அமைப்பு நிலைகளிலான மாற்றங்கள் அவற்றின் சமூகப் பின்னணியிலேயே நிகழ்கின்றன. தமிழில் காணப்படும் வியங்கோள் வினைமுற்றுக் குறித்த காலந்தோறுமான கருத்தாக்கங்களை உற்றுநோக்கினால் சமூக மாற்றத்திற்கேற்ப, இவ்அமைப்பு மாற்றம் பெற்று வந்திருப்பதும் அம்மாற்றங்களை இலக்கணவியலாளர் முன்னெடுத்துச் சென்றிருப்பதும் தெளிவாகின்றன.

இவ்வியங்கோள் வினையினைச் சமூக அடிப்படையில் ஆராய்ந்த கார்த்திகேசு சிவத்தம்பி,

> ‘வியங்கோளுக்குரியனவாகக் கொள்ளப்படும் வாழ்த்தல், விதித்தல், வேண்டிக்கோடல், வைதல் ஆகியன உயர்மட்டமக்களின் நிலைகொண்டு வகுக்கப்பட்டுள்ளவையே. வியங்கோள் உயர்நிலை வழக்காக, கீழ்நிலைப்பட்டோரை ஏவற்கடுமையுடன் ஆணையிடுவது ஏவல்வினையாயிற்றென்ப. நெருங்கிய உறவுள்ளோரிடத்தும் இம்முறையைப் பயன்படுத்தலாமெனினும், ஏவல் வினையின் சமூக முக்கியத்துவம் மரியாதையற்ற ஏவலுக்கு இலக்கணங்கள் அங்கீகாரம் கொடுத்துள்ளமையையே எடுத்துக்காட்டுகின்றன. அதாவது சமூக ஏற்றத்தாழ்வினை இலக்கணம் பிரதிபலிக்க வேண்டியதாயிற்று’ (1942:45)

என்கிறார்.

பொருண்மை அடிப்படையில் மட்டுமன்றி, வரலாற்று நோக்கில் வியங்கோளின் அமைப்பு ஆராயப்படும்போதும் சமூக மாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அதன் வளர்ச்சி நிலை அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

தொல்காப்பியம் வியங்கோள் வினை குறித்துப் பின்வரும் கருத்துக்களைக் கூறுகிறது.

i. அகர ஈற்று ‘ஏவல் கண்ணிய வியங்கோள் கிளவி ’ இயல்பாகப் புணரும் (உயிர் மயங்கியல், 8)
ii. வாழிய என்னும் கிளவியின் இறுதி யகரம் புணர்ச்சியில் கெட்டும் வரும் (உயிர் மயங்கியல், 9)
iii. ஒரு தொடரில் உயர்திணை, அஃறிணைப் பெயர்கள் எண்ணி வரும்போது வியங்கோள் வினைமுற்று வரும் (கிளவியாக்கம், 43)
iv. எழுவாய் வேற்றுமை வியங்கோள் வினையைப் பயனிலையாக ஏற்று வரும் (வேற்றுமையியல், 4)
v. இருதிணைக்கும் உரிய திணை (வினையியல், 25)
vi. தன்மை, முன்னிலையில் மன்னாது, படர்க்கையிலேயே வரும்(வினையியல், 29)
vii. மா என்னும் இடைச்சொல் வியங்கோட்கண் அசையாக வரும் (இடையியல், 24)

வியங்கோள் குறித்த இக்கருத்துக்களைஅடிப்படையாகக் கொண்டு உரையாசிரியர்களும், பின்வந்த இலக்கண நூலாரும் தத்தம்கருத்துக்களைக் கட்டமைக்கின்றனர்;வியங்கோள் வினைமுற்றின் அமைப்பினை அதன் விகுதிகளை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் வரையறுக்கின்றனர். திணை பால் உணர்த்தாத நிலை மாறி, பால் உணர்த்தும் அமைப்புகளுடன் விகுதிகள் இணைவது அவற்றின் அமைப்பு நிலையில் காணும் வளர்ச்சிப் போக்காகும்.

தொல்காப்பியர் வியங்கோளுக்கான விகுதிகள் எனத் தனியாக எவற்றையும் கூறவில்லை. அகர ஈற்றுப் புணர்ச்சியில் வியங்கோளைக் குறிப்பிட்டுள்ளார் என்பதால் வியங்கோள் விகுதியாக ‘க’ என்பதைக் குறிப்பிட்டுள்ளார் என்னும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் வியங்கோளிற்கான விகுதிகளைப் பட்டியலிட்டுள்ளனர்.

இளம்பூரணர் - க

*நச்சினார்க்கினியர்* - க, ய, அல், ஆல், அர், மார், உம், ஐ

*சேனாவரையர்* - க, ய, அல்

*கல்லாடர்* - க, அர், ய, அல், ஆல், மார்

*தெய்வச்சிலையார்* - க திரிந்து உருவான இ, ய, அர், ஆல், அல்

எ.கா.

ஆ செல்க, வாழிய, செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல், மரீயதொராஅல்,வாழியர், காண்மார் எமர், வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல், அஞ்சாமை அஞ்சுவதொன்றின், வாழி

இவற்றின் அமைப்பு

- வினையடி + விகுதி
- வினையடி + இடைநிலை + விகுதி

என்றவாறு அமைந்து பால் உணர்த்தாத நிலையில் உள்ளன.

இலக்கண நூல்களில் வீரசோழியமும்(9), நேமிநாதமும்(69), 'க' விகுதியை மட்டும் குறிப்பிடுகின்றன. நன்னூல்(338), க, ய, ர் என்று மூன்று விகுதிகளையும்குறிப்பிட, இலக்கண விளக்கம்(239) இவற்றுடன் அல், ஆல், உம், மார், ஐ என்ற விகுதிகளையும் குறிப்பிடுகின்றது. தொல்காப்பிய உரையாசிரியர்கள், இலக்கண நூல்கள் என எவரும் பால் உணர்த்தும் வியங்கோள் அமைப்புகளைக் கூறாதிருக்க, இடைக்கால சாசனங்களை ஆராய்ந்த ஆ.வேலுப்பிள்ளை (2002:148)அவ்வமைப்புகளை எடுத்துக்காட்டுகிறார்.அவை:

நடக்கக்கடவது, நடக்கக்கடவன், நடக்கக்கடவேன், நடக்கக்கடவோம், நடப்பதாக, நடப்பனவாக, நடப்பேனாக, நடப்போமாக, செய்யப்பெறாதோமாக, செய்யப்பெறாதாராக, செய்யப்பெறாததாக.

இவ்வியங்கோள் வினைமுற்றுகள்

- செயவெனெச்சம் + கட + பால், இடம் காட்டும் விகுதி
- திணை,பால் உணர்த்தும் வினைமுற்று + ஆக

என்ற அமைப்புகளில் உள்ளன.

இவ்வமைப்புகளைத் தனது இலக்கண நூலில் எடுத்துரைக்கும் ஆறுமுக நாவலர், சிறுபான்மை அவை இக்காலத்து உலக வழக்கிலே வருவன என்கிறார்(1993:128). அட்டும் என்ற விகுதியை வியங்கோளுக்கு உரியதாகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது(எ.கா.செய்யட்டும்). இவ்வமைப்பு முன்னிலையில் வராததாலும் வசவுப் பொருளில் வராததினாலும் இதனை வியங்கோள் அமைப்பு அல்ல என மறுக்கிறார் கு.பரமசிவம் (2011:235). தற்காலத்துத் தமிழில் உள்ள வியங்கோள் விகுதிகளைக் குறிப்பிடும் ச.அகத்தியலிங்கம், அவை வருமிடங்களையும் குறிப்பிடுகிறார்.அவைபின்வருமாறு :

-க > வினையடிக்குப் பின்

(எ.கா. வாழ்க, வளர்க, செய்க)

- அட்டும், - வேண்டும், - வேண்டாம், - கூடாது, -உம்

> செயவென் எச்சத்திற்குப் பின்

(எ.கா. வரட்டும், நன்றாய் வாழ வேண்டும், நீ / அவன் / நான்

வாழ வேண்டாம், நீ / அவன் / நான் வாழக்கூடாது, ஊற்றவும்) (2002அ:258,259).

இவ்அமைப்புகள் மூவிடங்களிலும் பயின்றுவருகின்றன. விகுதிகள்வழி வளர்ந்துள்ள வியங்கோள் வினைமுற்றின் அமைப்புகள், அதன் படர்க்கையில் வரும், பால் காட்டாது என்ற அடிப்படை வரையறையிலிருந்து விலகி, மூவிடத்திலும் வழங்கப்படும் பால் உணர்த்தும் அமைப்புகள் வியங்கோள் வினைகளாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன என்பதை உணர்த்திநிற்கின்றன.

காலந்தோறும் வியங்கோள் வினைகளுக்கு வேறுபட்ட வடிவங்கள் உருவாகியிருப்பது அவற்றின் பொருண்மை நிலைகளை முன்னிறுத்தியே. பால் காட்டும் அமைப்பை வியங்கோள் வினைமுற்று வடிவமாகக் கொண்டதும், அதன் பொருண்மையை மையப்படுத்தித்தான்.

தொல்காப்பியம் 'ஏவல் கண்ணிய வியங்கோள்' (உயிர்மயங்கியல்,8) என்று குறிப்பிட்டுள்ள தொடரை வியங்கோளுக்கான பொருண்மை விளக்கமாகக் கொள்ளலாம். இத்தொடரின்வழி உரையாசிரியர்கள் வியங்கோளை ஏவல்கண்ணிய வியங்கோள், ஏவல்கண்ணாத வியங்கோள் என இருவகைப்படுத்தினர். வகைகளை ஒன்றாகக் கொண்டாலும் அவற்றிற்கான விளக்கங்களை உரையாசிரியர்கள் வெவ்வேறு விதங்களில் கொண்டனர்.

*இளம்பூரணர் :*

1. ஏவல் கண்ணிய வியங்கோள் (ஏவல் உடனே நிகழ்தல்,எ.கா. செல்க குதிரை)
2. ஏவல் கண்ணாத வியங்கோள் (ஏவல் உடனே நிகழாதது, எ.கா. மன்னிய பெரும)

*நச்சினார்க்கினியர்:*

1. ஏவல் கண்ணிய வியங்கோள் (ஏவலை முற்ற முடிப்பன - உயர்திணை)
2. ஏவல் கண்ணாத வியங்கோள் (ஏவலை முற்ற முடிக்காதன - அஃறிணை)

*கல்லாடர் :*

1. ஏவல் கண்ணியது (உயர்ந்தான் இழிந்தானை இன்னது செய்க என விதித்தல்)
2. ஏவல் கண்ணாதது (இழிந்தான் உயர்ந்தானை இன்னது செய்யப்பெற வேண்டிக்கோடல்)

கல்லாடர் அளித்திருக்கும் விளக்கத்திற்கு மாறான கருத்தை நச்சினார்க்கினியர் வினையியலில் 'அவைதாம் கூறுகின்றவர் கருத்தான், ஏவல் கண்ணியே வரும். உயர்ந்தான் இழிந்தானை 'இன்னது செய்க' என விதித்தல்ஏவல் கண்ணியது. இழிந்தான் உயர்ந்தானை 'இன்னது செய்ய வேண்டும்' என வேண்டிக்கோடலும் ஏவல் கண்ணிற்று'(**2017:188**) எனக் கூறுகிறார்.

வியங்கோளுக்கு உரியதாக விதித்தல், வேண்டிக்கோடல் என்னும் பொருண்மைகளைக் கல்லாடரும் தெய்வச்சிலையாரும் குறிப்பிட,சேனாவரையர் வாழ்த்துதல், வேண்டிக்கோடல் பொருண்மைகளைக் குறிப்பிடுகிறார். கல்லாடரின் விளக்கத்தின்வழி உயர்ந்தான்,இழிந்தான் என்ற வர்க்கப் பாகுபாடு நிலைபெற்று வலுவூன்றிய சமூகச்சூழலும், அவர்களது சமூகச் செயற்பாட்டு நிலையும் தெளிவுறுத்தப்படுகின்றன. விதித்தல், வேண்டிக்கோடல் என வர்க்கப் பாகுபாடு பிரதிபலிக்கும் வினைகளை வேறுபடுத்த வியங்கோள் வினை வடிவம் பயன்பட்டிருப்பதும் அறிய முடிகிறது.

மேலும், எம்.ஏ.நுஃமான் வியங்கோளின் பயன்பாடாக ' இவ்வினை வடிவம் ஒருவரை வாழ்த்துதற்கு, அல்லது அவர் மீதுள்ள எதிர்ப்பை அல்லது வெறுப்பைத் தெரிவிப்பதற்கு, அல்லது ஒருவரிடம் ஒரு காரியத்தைச் செய்யுமாறு வினயமாக வேண்டிக் கொள்வதற்குப் பயன்படுகிறது'(**2007: 132,133**) என்பனவற்றைக் கூறுகிறார்.

இப்பொருண்மை விளக்கங்களை வரலாற்றடிப்படையில் நோக்கினால் விழைதல், வாழ்த்துதல், விதித்தல், வேண்டிக்கோடல், வைதல், எதிர்ப்பு, வெறுப்பு என்ற வரிசைமுறையில் வளர்ச்சி அடைந்து நிலைபெறுகின்றதனைஅறியலாம். பொருண்மைகளாக வெளிப்படும் உணர்வுகள் நீட்சி அடையும் சூழலில் யாரை நோக்கி இவ்வடிவம் ஆளப்படுகிறது என்பதை அறிதல் இன்றியமையாததொன்றாகும்.

வியங்கோள் இருதிணை, ஐம்பாலில் வரும். மேலும் படர்க்கையிலேயே வரும் எனத்தொல்காப்பியம்கூறுகிறது(வினையியல்.25,29). உரையாசிரியர்கள் தொல்காப்பிய நூற்பாவில் வரும் 'மன்னாதாகும்' என்ற தொடரைப் பயன்படுத்தித் தன்மையிலும், முன்னிலையிலும் வியங்கோள் வருவதற்கான வாய்ப்புகளைக் கொண்டுவருகின்றனர்.எனினும் தெய்வச்சிலையார் படர்க்கையில் மட்டுமே வருமெனக் கூறுகிறார். நிலைத்த ஆட்சி அமைப்புகள் உருவான காலச்சூழலில்இலக்கண அமைப்புகளிலும் நிலைத்த மாற்றங்கள் ஏற்படுகின்றன. நன்னூல்(**338**) மூவிடங்களிலும் வியங்கோள் வினைமுற்று வரும் என்கிறது. இடைக்காலச் சாசனங்களில் படர்க்கை, முன்னிலைகளில் வியங்கோள் வினைமுற்றுக் காணப்படுவதை ஆ.வேலுப்பிள்ளை எடுத்துக்காட்டுகிறார். இவ்அமைப்பு பின்வந்த காலங்களில் நிலைபேறு அடைகிறது.

தொல்காப்பியர் கருத்துப்படி, படர்க்கையில் பால் வேறுபாடு அற்றுக் குறிப்பிடப்படும் வினை வியங்கோள் வினை ஆகும். பால் வேறுபாடு நிலவாத சமூகநிலை குறித்து 'மக்களின் தனிப்பட்ட உறவுகளின்பொழுதே, சம்பந்தப்பட்டவர்களின் பால் வேறுபாடு முக்கியமானதாக அமைகிறது. மக்களைத் தொகுதியாக நோக்கும்பொழுதுஅப்பால்வேறுபாடு முக்கியமற்றதாகின்றது. அதாவது அவர்கள் முழுக் குழுவாகவே கருதப்பட்டார்களேயன்றிக் குழுவின் பிரிநிலைக் கூட்டங்களாக எண்ணப்படவுமில்லை,கருதப்படவுமில்லை'(**1982:27**)என்கிறார் கா.சிவத்தம்பி. மேலும்,கண வாழ்க்கையிலிருந்து நிலமானிய அமைப்புக்கு மாறும், மாறிய நிலையினைத் தொல்காப்பியம்

சுட்டுகிறதெனக்(1982:25) கூறும் அவர்,'திணை பால் பாகுபாடற்ற நிலை, முற்றுமுழுதான கண வாழ்க்கையைக் குறிக்கிறதெனலாம்'(1982:25)என்கிறார். பால்பேதமற்ற சொல்லாடல் நிலை கணவாழ்க்கைக்கு உரித்தானது என்ற இக்கருத்தின் அடிப்படையில் வியங்கோள் வினையை அணுக வேண்டியதாகிறது.

தொல்காப்பியர் ஏவல் வினையைத் தனித்துக் கூறவில்லை. முன்னிலை வினை அமைப்புகளில் ஏவல் அடங்கிவிடுகிறது. ஆனால் 'தொல்காப்பியர் காலத்தில் ஏவல் வினையும் வியங்கோளில் அடங்கியிருக்கலாம்'(2002ஆ:138)என ஆ.வேலுப்பிள்ளை கூறுகிறார். தற்காலத் தமிழிலும் ஏவலுக்கும், வியங்கோளுக்கும் ஒரே அமைப்புக் காணப்படுகிறது(2002அ:257). முன்னிலை ஏவலிலேயே மரியாதைப் பண்பு வந்துவிட்ட காரணத்தினால் வியங்கோள் வினையின் தேவை தற்காலத் தமிழுக்கு இல்லை என்கிறார் சண்முகதாஸ்(1997:181).

ஏவலைத் தனித்து விளக்காத தொல்காப்பியர் வியங்கோள் வினைமுற்றை அணுகியுள்ள விதம் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

i. படர்க்கைக்கான விகுதிகளில் வியங்கோள் விகுதிகளைச் சேர்க்கவில்லை
ii. வியங்கோளுக்கான பொருண்மைகளையும் அமைப்பையும் கூறவில்லை

தொல்காப்பியர் காலத்தில் படர்க்கைக்கான பால்வேறுபாட்டுடன் கூடிய விகுதிகள் வந்துவிட்டன. பால்வேறுபாடற்ற வியங்கோள் விகுதிகளைத் தொல்காப்பியர் தனித்துக் குறிப்பிடவுமில்லை, படர்க்கையுடன் இணைக்கவுமில்லை.

உரையாசிரியர்கள் கூறியதுபோல் குறிப்பிட்ட பொருண்மைகளில், குறிப்பிட்ட விகுதிகளில் மட்டும்தான் வியங்கோள் வரும் எனில், அவற்றை வரையறுப்பது தொல்காப்பிய எடுத்துரைப்பிற்கு முரணானது அன்று. ஆனால் முந்தைய காலச்சமூகச்சூழலின் வழக்கான இவ்வினை அமைப்பை விவரித்துக் கூறாமலும் தன் காலத்து வினைநிலை அமைப்புகளுடன் வியங்கோள் வினை அமைப்புகளை இணைக்காமலும் விடுகிறார்.ஆனால் உரையாசிரியர்கள் ஏவல் கண்ணிய வியங்கோள் என்னும் பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு வியங்கோள் வினைமுற்று வடிவத்தை வரையறுக்கத் தொடங்கினர். பால் காட்டாது என்ற அடிப்படைத்தன்மையே மாறி, பொருண்மை அடிப்படையாகக் கொண்ட பால் காட்டும்வியங்கோள் வடிவங்களைஇடைக்காலசாசனங்கள்முதல் அறியமுடிகின்றன.

ஏவலின் கடுமை வியங்கோளில் இருக்காது. கடுமையற்ற ஏவலும் பால் பாகுபாடற்ற நிலையும்இனக்குழு வாழ்க்கைக்கு உரித்தானவை. எனில், வியங்கோள் வினைமுற்று இனக்குழு வாழ்க்கைக்கு உரித்தான ஒரு வினை அமைப்பு ஆகும்.

இனக்குழுச் சமூகத்திற்கு ஏற்ற ஒரு வடிவம், தனக்குரிய மதிப்பை இழந்துவிடாமல் காலத்திற்கேற்பஅமைப்பையும், பொருண்மையையும்மாற்றிக்கொண்டு நிலைபெற்றிருப்பதைக் கூறும் இலக்கணநூல்கள், அவ்வாறு நிலைபெறவைக்க முயன்று வந்துள்ளமையை வரலாற்று நிலையிலான நோக்கு வெளிப்படுத்திநிற்கிறது.

**துணைநூற்பட்டியல்**


- ❖ அகத்தியலிங்கம் ச., தமிழ்மொழி அமைப்பியல், மெய்யப்பன் தமிழாய்வகம்,சென்னை, 2002.
- ❖ ஆறுமுக நாவலர், தமிழ் இலக்கணம், முல்லை நிலையம், சென்னை,1993.
- ❖ இளவழகன் (ப.ஆ.),தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - இளம்பூரணம், தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2003.
- ❖ இளவழகன் (ப.ஆ.),தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - கல்லாடம், தமிழ்மண் பதிப்பகம், சென்னை,2003.
- ❖ இளவழகன் (ப.ஆ.), தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம், தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2003.
- ❖ இளவழகன் (ப.ஆ.), தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - நச்சினார்க்கினியம், தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2003.
- ❖ கோபாலையர் தி.வே.(ப.ஆ.), இலக்கணவிளக்கம், சொல்லதிகாரம், சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1971.
- ❖ கோவிந்தராச முதலியார் கா.ரா. (உ.ஆ.), நேமிநாதம், கழகவெளியீடு, சென்னை, 1970.
- ❖ ---, வீரசோழியம், கழகவெளியீடு, சென்னை, 1970.

- சங்கர நமச்சிவாயர் (உ.ஆ.), நன்னூல், கழக வெளியீடு,சென்னை, 1956.
- சண்முகதாஸ் அ., தமிழ்மொழி இலக்கண இயல்புகள், குமரன் பதிப்பகம், சென்னை, 1997,
- சிவத்தம்பி கார்த்திகேசு, இலக்கணமும் சமூகஉறவுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1982.
- நுஃமான் எம் ஏ., அடிப்படைத் தமிழ் இலக்கணம், அடையாளம் வெளியீடு, திருச்சி, 2007.
- பரமசிவம் கு., இக்காலத் தமிழ் மரபு, அடையாளம் வெளியீடு, திருச்சி, 2011.
- வேலுப்பிள்ளை ஆ., தமிழ் வரலாற்றிலக்கணம், குமரன் புத்தக இல்லம்,கொழும்பு-சென்னை, 2002.
- ..., தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - நச்சினார்க்கினியர் உரை, அமராவதிவெளியீடு, சென்னை, 2017.
- *Tamil lexicon, vol.1-6, University of Madras, 1982.*

மதிப்பிடப்பெற்றது

# வங்காளத் திரைப்பாடலின் செவ்வியல் தன்மை

**ஆ.ஈஸ்வரன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்
ஸ்ரீகணேஷ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சேலம்-636014, அலைபேசி:9487581815
மின்னஞ்சல்: aeswar94@gmail.com

"செம்மொழியின் அடிப்படையான பதினொரு பண்புகளும் (தொன்மை, தனித்துவம், பொதுமை, நடுநிலைமை, தாய்மைப் பண்பு, பண்பாட்டுக் கலையறிவு, பிறமொழித் தாக்கமின்மை, இலக்கிய வளம், உயர் சிந்தனை, கலை இலக்கியத் தனித்துவம், மொழிக் கோட்பாடு) நவீனத் தமிழ்க் கவிதையில் பொருத்துவது சாத்தியமற்றது. இன்றைய உலகமயமாக்கல் காலகட்டத்தில் எல்லாவிதமான அடையாளங்களும் அழிக்கப்பட்டு ஒற்றைத்தன்மை வலியுறுத்தப்படுகின்றது. இன்னொருபுறம் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வாழ்க்கை, பாரம்பரியமான வாழ்க்கை முறையில் சிதிலத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலைக்குத் தமிழ்மொழியும் தமிழ்ப் பண்பாடும் விதிவிலக்கு அல்ல. இத்தகைய நிலையில் சங்க இலக்கியத்தில் காணப்பெறும் செம்மொழிப் பண்புகள் அல்லது மரபின் தொடர்ச்சி நவீனக் கவிதையில் எங்ஙனம் வெளிப்படுகின்றன என்பது முக்கியமானது. மிகப் புதியதில் மிகப் பழையதின் சாயல் இருக்கும் என்பது நவீனத் தமிழ்க் கவிதைக்கும் பொருந்தும்." (**ந.முருகேசபாண்டியன்** (2014):நவீன தமிழ்க் கவிதைகளும் செம்மொழிக் கூறுகளும், உயிர்மை, நவம்பர் மாத இதழ்)

வாழ்க்கையின் அன்றாடத் தேவைகள் தாண்டிய ஆடம்பரமான பிற தேவைகளுக்கான தொடர் ஓட்டத்தில் கலை-இலக்கியங்கள் பொருட்படுத்தப் படுவதில்லை. கலையும் இலக்கியமும் வாழ்வின் ஒரு பகுதியாக இருக்க வேண்டிய நிலை இல்லாமல் போய்விட்டது. நேரத்தைக் கடத்த வேறு எதுவுமே இல்லாத நிலையில் அவ்விடத்தை நிரப்பக் கலை-இலக்கியங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவையும் முழுக்க முழுக்க கேளிக்கைத் தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பதே மனிதர்களின் இன்றைய மனநிலையாக இருக்கிறது. அதற்கு முற்றிலும் எதிர்த்தன்மையானதாக அறிவுரை பரப்பும் பிரச்சார கலை-இலக்கிய வடிவங்கள் இருக்கின்றன. இதற்கு இடையில் இயங்கும் அகநிலை உணர்வுகள் சார்ந்த கலை-இலக்கியங்கள், கீழே விழுந்த பொருளை எடுத்துக் கொடுத்த ஒருவனுக்குத் தரும் ஒரு வெற்றுப் புன்னகையின் மதிப்பைத்தான் பெறுகின்றன. மனிதனின் அகமனத்தேவை, சிக்கலை உணர்தல், தனிமனித ஒழுக்கம், சகமனிதனிடத்துக் கொண்டுள்ள உறவு ஒழுக்கம், கலைந்திருக்கும் மனித வாழ்க்கையின் நேர்க்கோவை போன்றவற்றைத் தாமாகவே உணர வைக்கும் தன்மை கொண்டவை மேற்கூறிய இரண்டிற்கும் இடையில் கலை-இலக்கியங்களே. இதனைக் காலந்தோறும் கலை இலக்கியங்கள் செய்து கொண்டே வருகின்றன. ஆனால் அதனைத் தனது தேவைகள் தாண்டிய ஆடம்பரமான பிறதேவைகளைப் பெறுதலுக்கான தொடர் ஓட்டத்தில் மனிதர்கள் கண்டுகொள்வதில்லை; அல்லது அதனைக் கலை-இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டவில்லை என்றும் கூறலாம். இதனைச் செய்யாததன் விளைவுதான் இன்று பல சாமியார் மடங்களின் செல்வாக்கு மிக்க, செலவுமிக்க ஆன்மீக வணிகத்திற்குக் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

இக்கட்டுரையானது வங்காளத் திரைப்பாடலொன்றின்* உள்ளுறைந்திருக்கும் அகமன உணர்வுகளை பாடல் சொற்களின் ஊடாகவே விளக்குகிறது. மேலும் அதில் செவ்வியல் பண்புகள் எனும் இலக்கண

*இது ஆட்டோகிராப் என்ற 2010-ஆம் ஆண்டு வெளியான வங்காளத் திரைப்படத்தில் இடம்பெற்ற ஸ்ரீஜாத-வின்(*Srijato*) பாடல். இதனை ஸ்ரேயா கோஷல்(*Shreya Ghoshal*) தனியாகவும் பிரியம் முகர்ஜியோடு(*Priyam Mukherjee*) சேர்ந்தும் பாடியுள்ளார். இப்பாடலுக்குத் தெபோஜோதி மிஸ்ரா (*Debojyoti Mishra*) இசை அமைத்து உள்ளார்.

வரையறைகள் தவிர்த்து, சங்க அக இலக்கியப் பாடல்களின் சில தன்மைகள் உள்ளதைச் சுட்டிக் காட்டுவதாகவும் அமைகிறது.

**தலைவியின் கூற்று**

இப்பாடல் மொத்தம் பன்னிரண்டு அடிகளைக் கொண்டுள்ளது. நான்கு நான்கு வரிகளாக ஒரே பொருண்மையில் மூன்று பாடல் அமைப்பு முறையில் உள்ளது. மூன்று பாடல்களின் இறுதி அடியும் ஒரே அடியாக உள்ளது. இதனை மகுடவரி¶ என்பதாகக் கொள்ளலாம். இப்பாடலை ஒரு பெண்ணின் பாடலாகத்தான் காணமுடிகிறது. **(முழுப் பாடலும் பின்னிணைப்பாக உள்ளது.)** அதனை உறுதி செய்வதற்கான குறிப்புகள் பாடலிலேயே கிடைக்கின்றன. பாடலின் இரண்டாவது பத்தியின் முதல் அடியில் 'அன்பான பக்கத்து அறை நண்பன்' எனும் குறிப்பு, இது பெண் பாடும் பாடல் என்பதை வெளிப்படையாகத் தாங்கி நிற்கிறது. மேலும் தெர்மாமீட்டர் கொண்டு வெப்பம் கணக்கிடும் போது உணரும் இன்பம், குளிருக்காய் உறையிட்ட கைவிரல் வெப்பத்தில் இனிப்பை உணர்தல் போன்ற மெல்லிய உணர்வுகள் பெண்ணுணர்வு பாடலாக வாசிக்கும் போது அல்லது கேட்கும் போது பாடல் உணர்வு மேலும் நெகிழ்வு பெறுகிறது.

**உவமை**

இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமைகள் நிலவியல் சூழலாகிய கொல்கத்தாவோடு மட்டுமே பொருத்திப் பார்க்க வேண்டியதாகிறது. ஒரு குறிப்பிட்ட நிலவியல் சூழல் சார்ந்து உவமைகளைப் பயன்படுத்தப்படுவது *இடச்சார்போடு பொருந்திய உவமைகள்* என்கிறார் இரா.சீனிவாசன். இதைக் கவிதைகளின் உவமைப் பயன்பாட்டோடு தொடர்புடைய ஒரு செவ்வியல் பண்பாகவே கொள்ள வழியுள்ளது.

**'ட்ராம் தண்டவாளமாய் கிடப்போம்'**

இரயில் தண்டவாளம் மேற்கு வங்காளத்தின் எல்லா இடங்களிலும் இருந்தாலும், ட்ராம் தண்டவாளம் கொல்கத்தா பகுதியில் மட்டுமே இன்றும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும் பயன்படுத்தப்படும் உவமையும் கவனத்திற்கு உரியது. இரயில் தண்டவாளம் போல் இருப்போம் என்பது இரண்டு வேறுபட்ட உட்பொருளுக்கு உவமையாகக் காலந்தோறும் கொள்ளப்பட்டு வருகிறது.

*1.இணை பிரியாமல் இருப்போம்*

*2.சேரவே மாட்டோம்*

இப்பாடலின் முழுமையும் படிக்குமிடத்து, இப்பாடல் ஒரு பக்குவமடைந்த பெண்ணின் வேண்டுதல் போல அமைந்துள்ளதை அறியமுடிகிறது. எனவே இவ்வுவமையை, சீரான இடைவெளியோடு இலக்கை அடையும் வரை இணைந்தே பயணிப்போம் எனும் பக்குவப்பட்ட நேர்மையான தன்மானமிக்க காதல் வேண்டுதலாகவே கொள்ள வேண்டியதாகிறது. இவ்வுவமையில் காணவேண்டிய மற்றொரு முக்கியக் கூறு, உவமிக்கப்படும் தண்டவாளத்தைப் பொருத்தே மேற்கூறிய இரண்டில் ஒன்று தேர்வு செய்து கொள்ளப்படும். தண்டவாளம் பாலைவனத்தின் நடுவே கிடத்தலுக்கும் நாள்தோறும் பயன்படுத்தப்படும் பாதையின் ஊடே கிடப்பதற்கும் உள்ள வேறுபாடு 'இணைந்தே பயணிப்போம்' எனும் கருத்திற்கு வலுச் சேர்க்கிறது.

மற்றொரு உவமை: **அறிந்த நிலா போய்விட்டது ரிக்ஷாவில்**

ரிக்ஷா இன்றைய சூழலில் வட இந்தியாவின் சில பகுதிகள் தவிர்த்து, கொல்கத்தாவில்தான் இன்றும் இருக்கிறது. அதுவும் கையிழு ரிக்ஷா என்றால் அது கொல்கத்தாவைத் தான் குறிக்கும்.

மேற்கூறிய இடச்சார்போடு பொருந்திய உவமைகளைப் பயன்படுத்தும் இப்பண்பு சங்க இலக்கியத்தில் குறிப்பாக கலித்தொகை உவமைகளில் காணப்படுவதை இரா.சீனிவாசனின் தனது 'சங்க இலக்கியங்களில் உவமை' எனும் ஆய்வில் எடுத்துக் காட்டியுள்ளார்.

**காட்சிப்படுத்தல்**

சங்க இலக்கியத்தின் செவ்வியல் பண்பிற்கு மிக முதன்மைக் காரணியாக இருப்பவை காட்சிப்படுத்தும் நிகழ்வுகள் ஆகும். அணில் விளையாடும் முற்றம், குப்பையைக் கிண்டும் கோழி,

---

¶சதகம் போன்ற இலக்கிய வகைமைகளில் அனைத்துப் பாடல்களின்(நான்கு அடிப் பாடல்) இறுதி அடி ஒன்றாக அமையும் .(எ.வேமனாவின் தெலுங்கு சதகம் .கா.)

கரையை அடைய முடியாமல் நிறுத்தப்பட்டு மழையில் கரையும் உப்பு வண்டி, மயிலின் முட்டைகளை உருட்டி விளையாடும் குரங்குக் குட்டிகள் போன்ற பலவற்றைக் கூறலாம். இவை எல்லாமே உள்ளுற ஓர் உவமைத் தன்மையைக் கொண்டிருப்பதால் தான் இவை போன்ற உவமைகளை 'உள்ளுறை உவமை' என்கின்றனர். இத்தன்மையினை இப்பாடலிலும் காணமுடிகிறது.

காய்ச்சல் வந்து போர்த்திக் கொண்டிருக்கும் பெண்ணின் வாயில் தெர்மா மீட்டர் வைத்து அளவிடும் ஆணின் வெப்பம் அவ்வாணை விரும்பும் பெண்ணிற்கு எவ்வகையாக இன்பத்தைக் கொடுக்கும்? இதை வாசகனே ஊகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவ்வாறு நாமாகவே ஊகிக்கும்போது அந்த வெப்பத்தின் கதகதப்பை நம்மாலும் உணரமுடிகிறது. எப்போதும் சத்தமிட்டவாறே இருக்கும் பக்கத்து அறை நண்பன் அறையைக் காலி செய்து ரிக்ஷாவில் போகும்போது அவனோடு சேர்த்து முழுநிலவும் சேர்ந்தே பயணிப்பதை இரண்டாம் மாடியின் ஜன்னல்வழியாகக் காணும் காட்சியைப் போல ஒரு காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது.

**அன்பான நண்பனின் பக்கத்து அறை அமைதியில்,**
**அறிந்த நிலா போய்விட்டது ரிக்ஷாவில்**

இந்த வரிகள் காட்டுவன வெறும் நண்பன் என்பதை மட்டுல்ல, அவன் அவளின் முன்னாள் காதலானவும் இருந்திருக்கிறான். அதை அவள் அப்பக்கத்து அறைக்காரனிடம் சொல்லியிருக்க வாய்ப்பில்லை. இதைப் பாடலில் மகுடவரியாகிய

**நான், யார் எனக்கு வேண்டும் என்பதையும்**
**யாரை நீ விரும்பினாய் என்பதையும் பார்க்க மறந்தேன்.**

என்பதோடு இணைத்துப் பார்க்கும் போது அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் மற்றொரு தொடரான

**இரவு தூங்குகிறது; தனிமையான நடைபாதை**

என்பது. ஒரு நடுத்தர வயது பெண் கொல்கத்தா போன்ற மக்கள் அடர்த்தி மிகுந்த நகரத்தின் அமைதியான இரவில் தனிமையில் நடக்கிறாள். இக்காட்சியில் நிச்சயம் அவள், மனதில் ஏதோ ஒன்றை அசைப்போட்டுக் கொண்டே நடப்பதை உணரமுடிகிறது. இப்பாடல் காதலின் மெல்லிய உணர்வுகளைப் படம்பிடிப்பதாக இருப்பதால் அவள் காதலன் நினைவோடு தனிமையான இரவில் நடப்பதாகக் கொள்ள வேண்டியதாகிறது. இவ்வரியின் மற்றொரு அழகு நடத்தலைக் குறிப்படவே இல்லை. மாறாக அதனை வாசகனே யூக்கித்துக் கொள்ள நடைபாதை மட்டுமே காட்டப்பட்டுள்ளது.

**பனியில் நனைந்த பிளாஸ்டிக் பேப்பர்**

எனும் மேல் உள்ள தொடரின் தொடர்ச்சியான அடுத்த தொடர் அப்பெண் பனி விழும் இரவில் நடக்கிறாள் என்பதைச் சுட்டுகிறது. அது யூகிக்கும் வாசகனுக்கு ஓர் உள்குளிர்ச்சியைத் தருகிறது. பனி விழும் இரவில் நடைபாதையில் காதல் நினைவோடு தனிமையில் நடக்கும் பெண்ணின் நடை நடையாக இருக்காது என்பதை இயல்பாக மனம் உணரும்.

இயல்பான சாமானிய மனிதர்கள் நாள்தோறும் பல்வேறு நிகழ்வுகளைக் கடந்து போய்க்கொண்டே இருக்கின்றார்கள். சாமனியன் நாள்தோறும் காணும் அதே நிகழ்வை ஒரு கவிஞன் வார்தைகளால் தன் உள்மன உணர்வுகளோடு ஒப்புமைப்படுத்தி விளக்கும் போது அந்நிகழ்வு புதுவித பொருண்மையைப் பெற்று விடுகிறது. அதை உணரும் வாசகன் அந்நிகழ்வை மறுபடியும் கடக்கும்போது முன்பு கடந்து போனதைப் போல இயல்பாகக் கடக்க முடியாது. இதை ஒரு பாடலின் சிறு வார்த்தை கூட செய்து விடலாம். அவ்வாறான ஒரு நிகழ்வாகத்தான் இந்த மொத்தப் பாடலின் மிக முக்கிய தொடராக *பனியில் நனைந்த பிளாஸ்டிக் பேப்பர்* என்பதைக் காண வேண்டியுள்ளது. மரக்கூழ் தாளாக இருப்பின் பனியினை உறிஞ்சி நமத்துவிடும். ஆனால் பாலிஎத்திலின் பேப்பர் பெய்யும் பனியினைத் துளிகளாகச் சேர்த்து வைத்துக்கொண்டு உள்புறம் எங்கும் துளிகளைத் தெளித்தாற் போல நிறைந்து காணப்படும். இரவின் தனிமையில் நடக்கும் பெண்ணின் பார்வைக்கு ஏதேதோ படலாம். ஆனால் நடைபாதையில் நனைந்து நீர் பூத்திருக்கும் பிளாஸ்டிக் தாளைப் பார்க்கிறாள் அல்லது பாடலாசிரியர் அவளைப் பார்க்க வைத்திருக்கிறார்.

இத்தொடர் தன்னெனக் கிடக்கும் இயல்பின் மீது தன்மன நெகிழ்வை ஏற்றி வைக்கிறது. இது இயல்பாய்த் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தையின் கன்னத்தைத் தடவி முத்தமிடும் உணர்வாக உணர முடிகிறது. இவ்வரிகளுக்கான பொருள் அப்பெண்ணின் காதல் சார்ந்த ஓர் உள்ளுணர்வோடு பொருந்தி வருவதாக இங்கு விளக்க முற்படவில்லை. அவ்வாறாக ஒரு பாடலின் எல்லா

உவமைகளும் உவமிக்கப்படும் பொருளோடு பொருந்தி விடவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. அவ்வாறு இருக்க வேண்டும் என்று கடுமையான வரையறை பாடலின் பொதுமைத் தன்மையை, அதாவது வாசகர்கள் தன்வயப்படுத்திக் கொள்ளும் தன்மையைக் குறைத்துவிடும் என்பதாகத் தோன்றுகிறது. எனவே வாசகர்கள் மேற்குறிப்பிட்ட தொடரோடு பலவாறான தன் உள்மன மெல்லுணர்வைத் தனதனுபவம் சார்ந்த ஒன்றாக உருவாக்கிக் கொள்ள வேண்டுவதாகவே கொள்ள வேண்டும்.

மேற்கூறிய தொடரின் தன்மையில் அமைந்த மற்றொரு முக்கியமான வரி மூன்றாவது பாடலில் உள்ளது.

> ***நடைபாதையில் தலையணையை அடியில் வைத்து விரைவில் உறக்கத்தைக் காணும் மக்கள்***
>
> ***துறைமுகத்தை நீங்கிச் சென்றிருக்கின்றனர். நான் என் ரிங்டோனை மாற்றியிருக்கிறேன்.***

உண்மையில் நடைபாதையில் உறக்கம் கொள்ளும் மக்கள் நீங்குவதற்கும் அலைபேசியின் அழைப்போசையை மாற்றிக் கொள்ளுதலுக்கும் அவளின் காதல் சார்ந்த உள் உணர்வுக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் நேரம் கடக்கிறது, என் சுவையுணர்வும் மாற்றம் பெறுகிறது என்பதே மேற்கண்ட வரிகளின் மையப் பொருண்மையாக இருக்க வாய்ப்புள்ளது. இதனை மகுட வரியோடு பொருத்திப் பார்க்குமிடத்து விளங்கிக் கொள்ள முடிகிறது.

காத்திருப்பானது காதலில் சுகம் என்று காலந்தோறும் சொல்லப்பட்டு வருகிறது. காத்திருத்தல் என்னும் அதே பொருண்மைதான் இன்று அலைபேசியில் அழைத்தல், அழைப்பைத் தவற விடுதல் என மாற்றம் பெற்றிருக்கிறது. அது வரமா சாபமா என்பது உரையாடுவோர் சார்ந்ததும், உரையாடப்போகும் பொருண்மை சார்ந்ததும் ஆகும். அத்தெளிவு இப்பாடலில் அழைக்கும் பெண்ணுக்கே இல்லை, அதனால்தான் அவள் வரமா சாபமா எனத் தெரியாமலேயே அழைத்துக் கொண்டே இருக்கிறாள்.

> ***காலம் கடந்தும் நான் உனக்குக் கால்செய்து கொண்டே இருக்கிறேன்***
>
> ***இது வரமா? சாபமா?***

இது ஒரு விதமான தவற்றை உணர்ந்த மனநிலை என்பதாகவும் கொள்ள வகையுள்ளது.

**பாடலின் பொருண்மை**

பாடல் தன் பொருண்மையைச் சரியான அளவு வார்த்தைகளில் சரியான காட்சிச் பின்புலத்தோடு விளக்கி விடுமாயின் அப்பாடல் தன்னளவில் செவ்வியல் தன்மை கொண்டதாகக் கொள்ள வேண்டும். இதனைச் சங்க இலக்கியத்தின் ஒவ்வொரு பொருண்மைக்கும் (ஊடல், பிரிவு, இரங்கல் போன்று) ஒவ்வொரு பின்னணி, ஒவ்வொரு காலம், பொழுது, உவமிப்பதற்கான கருப்பொருட்கள் உள்ளதைக் கொண்டு புரிந்து கொள்ளலாம். ஆனால் இவை மட்டுமே தமிழின் சங்க இலக்கியத்திற்குச் செவ்வியல் தகுதியைத் தந்துவிட்டதாகவும் கொள்ளக்கூடாது. இவ்விடத்துப் புரிந்துகொள்ள வேண்டியது எடுத்துக்கொண்ட பாடுபொருளைச் சரியான பின்புலத்தோடு விளக்குதலின் தேவையே ஆகும். இவற்றிற்கெல்லாம் மேலாகச் சொல்லப்படும் பொருண்மையில் உண்மை இருக்க வேண்டும்.

இப்பாடலின் பொருண்மை 'தன் மீது அக்கறை கொண்டு இயல்பாகப் பழகிய நண்பன் தன்னை விட்டு நீங்கிய பின்னர் காதலைச் சொல்ல விழைதல் ஆகும்' (ஆனால் திரைப்படத்தில் அவ்வாறு இல்லை. அது ஒரு காதலன் காதலியின் இன்பமான வாழ்க்கை நிகழ்வுகளின் பின்னணியாக ஒலிக்கிறது.) இதனைக் கொல்கொத்தாவின் இரவுப் பின்னணியில் விளக்கியிருக்கிறார் பாடலாசிரியர். முழுநிலவோடு பக்கத்து அறை நண்பன் ரிக்ஷாவில் பயணிக்கும் இரவு, பனியில் நனைந்த பிளாஸ்டிக் தாள், நடைபாதையில் தலையணை வைத்து உறங்கும் மக்கள் அதிகாலையிலேயே எழுந்துவிடுதல் இவை போன்ற இரவின் நிகழ்வுகள் பின்னணியாக்கப்பட்டு உள்ளன. இப்பெண்ணின் தனிமையான இரவு நடைபாதைப் பயணம் ஓரிரவில் முடிந்திருக்கவில்லை. அது பல இரவுகள் தொடர்ந்திருக்கிறது. இதனை

> ***சிலவற்றை நான் சொன்னாலும் சொல்லாவிட்டாலும்***
>
> ***என் இரவுகள் பரவலாக எழுந்து செலவாகின்றன.***

என்ற வரிகள் மூலம் அறியமுடிகிறது. தன்னிலை உணர்வு பெறுதலுக்கு மக்கள் அடாவடி அடங்கிய கொல்கத்தா நகரின் பனி பொழியும் தனிமையான இரவும் சரியான பின்னணியாகவே அமைகிறது. அவளின் தீர்ந்துபோகும் பல இரவுகளில் சில இரவுகள் முழுநிலவையும் கொண்டுள்ளன.

அதிகப்படியான வார்த்தைப் பயன்பாட்டைக் கொள்ளாமலும் அளவான வார்த்தைகளோடு பாடல் அமைந்துள்ளது. பாடல் கொண்டுள்ள பொருண்மை விளக்கத்திற்கு எடுத்துக்கொண்ட காட்சிகளைக்

துளியும் விளக்கவில்லை. மாறாக ஒரு புகைப்படக் கருவிபோல் முழுக்கமுழுக்க காட்சியைப் படம்பிடித்தல் போல அமைந்துள்ளதால் அதிக வார்த்தைகள் தேவைப்படாமல் போய்விட்டன.

இப்பாடல் திருமணம் ஆகாத ஒரு நடுத்தர வயதுப் பெண்ணின் பாடலாக இருக்கிறது. தனது இளமை, பசலையால் சீர்குலைக்கப்படும் தலைவியின் ஏக்கம், மனிதர்கள் நீங்கிய வீட்டில் விளையாடும் அணிலைக் காணும் தலைவியின் பார்வை, தன் காமநோய் தானாகவே தன்னை அழிக்கும் என்று தெரிந்தும் தலைவனைச் சேரமுடியாத குப்பைக்கோழித் தலைவியின் கழிவிரக்கம் போன்ற சங்க இலக்கியத் தலைவிகளின் கூற்றுகளோடு ஒப்புமைப்படுத்திப் பனியில் நனைந்த நெகிழித் தலைவியின் உள்மன ஓட்டங்களை இப்பாடல்வழி உணரலாம்.

**முதன்மைத் தரவு**


- ஸ்ரீஜாத(*Srijato*). (*2010*). 'চল রাস্তায় সাজি'(*Chawl Raastaye Saj*). ஆட்டோகிராப்(திரைப்படம்)


**துணைமைத் தரவுகள்**


- ***சீனிவாசனின், இரா.*** (நாப.:*1997*). *சங்க இலக்கியங்களில் உவமை.* சென்னை. அணியகம்
- **முருகேச பாண்டியன், ந.** (*2014*). *நவீன தமிழ்க் கவிதைகளும் செம்மொழிக் கூறுகளும்.* உயிர்மை(நவம்பர் மாத இதழ்)


**பின்னிணைப்பு**

**வங்காளப் பாடலின் தமிழ் மொழிபெயர்ப்பு:**

*1*

வா பாதையில் ட்ராம் தண்டவாளமாய் அல்லது கவிதையில் உறைவோம் இருவரியாய்,
ஆ... வெப்பம் எவ்வளவு அழகு நீ தெர்மாமீட்டர் கொண்டு அளவிட்டால்
இதயம் துடிக்கும் அமைதியில் பின்னுணர்வு, இனிப்பு, பனி மூடிய உறையில்
நான், மறந்தேன் யார் வேண்டும் என்பதையும் நீ யாரை விரும்பினாய் என்பதையும்.

*2*

அன்பான நண்பனின் பக்கத்து அறை அமைதியில். அறிந்த நிலா போய்விட்டது ரிக்ஷாவில்
சிலவற்றை நான் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் என் இரவுகள் பரவலாக எழுந்து செலவாகின்றன
இரவு தூங்குகிறது தனிமையான நடைபாதை, பனியில் நனைந்த பிளாஸ்டிக் பேப்பர்
நான், மறந்தேன் யார் வேண்டும் என்பதையும் யாரை நீ விரும்பினாய் என்பதையும்.

*3*

நடைபாதையில் தலையணையை அடியில் வைத்து விரைவில் உறக்கத்தைக் வாங்கும் மக்கள்
துறைமுகத்தை நீங்கியிருக்கின்றனர். நான் என் ரிங்டோனை மாற்றியிருக்கிறேன்.
காலம் கடந்தும் நான் உனக்குக் கால்செய்து கொண்டே இருக்கிறேன் இது வரமா? சாபமா?
நான், மறந்தேன் யார் வேண்டும் என்பதையும் யாரை நீ விரும்பினாய் என்பதையும்.

மதிப்பிடப்பெற்றது

# நீலத்திமிங்கல (Blue Whale) விளையாட்டும் அறிவுசார் விழிப்புணர்வின் தேவையும்



**வினாயகமூர்த்தி - வசந்தா**
கலைமாணி மாணவர், பொருளியல் துறை, கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**அறிமுகம்**

புதுமை நிறைந்த விஞ்ஞான உலகத்தின் பரப்பு விசாலமானது. வியக்க வைக்கும் நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் தொடர்பால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. உலகையே உள்ளங்கைக்குள் அடக்கிக் கொண்ட ஆக்கப் பூர்வமான படைப்புக்களான திறன்பேசிகள் தினந்தோறும் ஆச்சரியப்பட வைத்தாலும் மறுபுறம் மனிதகுலத்தின் அழிவுக்கான பாதையினையும் உருவாக்கிட வழிசமைக்கின்றன. உலகமானது தொழில்நுட்பத்தினுடைய வரலாற்றுக்காலத் தொடக்கம் முதல் இன்று வரை பல்வேறு மாற்றங்களைச் சந்தித்தே வந்துள்ளது. திறன்பேசி உருவாக்கமானது எண்ணில் அடங்காத பயன்களை உலகிற்குக் குறைவின்றி வழங்குகின்றது. இணையத்தின் துணையுடன் திறன்பேசிகள் ஆற்றும் சேவைகளுக்கு அளவே இல்லை. அந்த வகையில்தான் பொழுதுபோக்கான சுவாரசியமான அம்சங்கள் கொண்ட பல விளையாட்டு நிகழ்ச்சி வடிவங்களைப் பதிவிறக்கம் செய்வதற்கேற்ற வகையில் திறன்பேசிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இணையத்தோடு இணைந்ததான திறன்பேசிகளின் ((Smart Phone) பயன்பாட்டில் பொழுதுபோக்கான அம்சங்கள் கொண்ட விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு அடிமையாகிப் போகாதவரே இல்லை எனலாம். இவ்விதமே இன்று திறன்பேசிகளிலும் கணினியிலும் எல்லோரது கவனத்தினையும் ஈர்த்துள்ள விளையாட்டாக "நீலத் திமிங்கலம்"(Blue Whale) காணப்படுகிறது. சவால் நிறைந்த உணர்வுகளுடன் விளையாடப்படுகின்ற "நீலத்திமிங்கலத் தற்கொலை விளையாட்டு" உலகையே அச்சுறுத்துகின்றது. நீலத்திமிங்கல விளையாட்டானது பொழுதுபோக்கான விளையாட்டாக அல்லாமல் உயிரை மாய்க்கும் தற்கொலைக்குத் தூண்டும் விளையாட்டாகத் திகழ்வதுடன் சமூகத்தில் பல மோசமான விபரீத விளைவுகளையும் உருவாக்கியுள்ளது.

சிறுவர்களையும் இளைஞர்களையும் அடிமைப்படுத்துகின்ற இந்த விளையாட்டானது இன்றைய மனிதகுலத்திற்கு மரணத்தை ஏற்படுத்தும் ஒரு பாரிய நோயாக உருமாறியுள்ளது. இவ்விதமே விரும்பியோ விரும்பாமலோ பல காரணங்களால் இவ்விளையாட்டிற்குப் பலர் அடிமையாகித் தங்கள் உயிரினையும் மாய்த்துக் கொள்கின்றனர். இணைய விளையாட்டாகிய நீலத்திமிங்கல விளையாட்டு, தரவிறக்கம் செய்யப்பட்டு விளையாடப்படுவது சவால் நிறைந்த உணர்வினை விளையாடும் நபருக்கு ஏற்படுத்தினாலும், மறுபுறம் இவ்விளையாட்டின் இறுதியில் அந்நபரை மரணத்தின் வாசலுக்கு அழைத்துச் செல்வதோடு இது மனித உயிரைக் குடிக்கும் உயிர்க் கொல்லியாகவும் மாறியுள்ளது.

**நீலத்திமிங்கல விளையாட்டின் தோற்றம்**

திறன்பேசிகளின் வருகைக்குப் பின்னர் அவற்றில் பயன்படுத்தக்கூடிய வகையில் பல்வேறுபட்ட நிகழ்ச்சிநிரல்கள் (Programmes) நாளுக்குநாள் தொழில்நுட்பச் சந்தையில் அறிமுகமாகிக் கொண்டுதான் இருக்கின்றன. அந்தவகையில் இணைய விளையாட்டாக அடையாளப்படுத்தப்படும் நீலத்திமிங்கல விளையாட்டானது உலக அளவில் இன்று பேசப்படுவதனைக் காணலாம். இந்த விளையாட்டினை "நீலத் திமிங்கல சவால்"(Blue Whale Challenge) எனவும் கூறலாம். நீலத்திமிங்கலம் என்ற சொற்பதமானது கடல் திமிங்கலங்களின் தற்கொலை என்னும் பதத்தோடு தொடர்புடையது. இவ் விளையாட்டானது முதன்முதலாக 2013ஆம் ஆண்டு ரசியாவில் "F 57" என்ற பெயரில் வெளிவந்தது.

முன்பு இந்த விளையாட்டானது "VKontakte" என்னும் சமூக வலைத்தளத்தில் "Death Group" என்று அழைக்கப்பட்டு வந்தது. மேலும் இது சம்பந்தப்பட்ட தற்கொலையானது 2015ஆம் ஆண்டு இடம்பெற்றது. பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட 22 வயதினையுடைய முன்னாள் உளவியல் மாணவரான (Psychology Student) பிலிப் வுடேக்கின் (Philipp Budeikin) என்பவரால் உருவாக்கப்பட்ட இணைய விளையாட்டாகவே நீலத்திமிங்கல விளையாட்டு அமைகின்றது. சமூதாயத்திற்குத் தேவையில்லாதவர்களைத் தற்கொலைக்குத் தூண்டி, சமூதாயத்தைத் தூய்மை

அடையச்செய்வதை நோக்கமாகக் கொண்டதாகவே இவ்விளையாட்டினை வடிவமைத்ததாகப் பிலிப் வுடேக்கின் கூறினார். தற்போது இவர் 16 இளைஞர்களைத் தற்கொலைக்குத் தூண்டியதாகக் கூறிக் கைது செய்யப்பட்டு மூன்றாண்டுகாலச்சிறை தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். இதன்பின்னர் "ரசியன் தற்கொலை தடுப்பு சட்டம்" உருவாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

2016ஆம் ஆண்டு ரசியாவில் பத்திரிகையாளர் ஒருவர் தற்கொலை தொடர்பான விடயங்களை நீலத்திமிங்கல விளையாட்டோடு தொடர்புபடுத்தி எழுதியிருந்தார். இது பலரது கவனத்தையும் ஈர்த்தது. பின்னர் இதன் தாக்க விளைவினால் இளைஞர்கள் மத்தியில் இந்த விளையாட்டு பரவலான பாவனைக்கு வந்தது. உலக அளவில் பல அமைப்புகளோடு இது தொடர்புபட்டதாக மாற்றமடைந்தது. இது சீனாவில் உள்ள உயர்ந்துவரும் தனக்குத்தானே தீங்குவிளைவிக்கும் "Human Embroidery"அமைப்போடு இணைக்கப்பட்டுள்ளது. பல நாடுகளிலும் தற்போது இவ்விளையாட்டானது தன் ஆதிக்கத்தைச் செலுத்த ஆரம்பித்துள்ளது.

**விளையாட்டின் கட்டமைப்பு**

மனிதனுக்குப் பொழுதுபோக்காகவும், மனதை ஓய்வாக வைத்துக் கொள்ளவும் பயனுடைய வகையில் வடிவமைக்கப்பட்ட இணைய விளையாட்டுக்களுள் நீலத்திமிங்கல விளையாட்டானது முற்றிலும் மாறுபட்டதாக விளங்குகின்றது. இவ்விளையாட்டானது தற்கொலை உணர்வினைத் தூண்டி மரணத்தை இறுதியில் பரிசளிக்கின்றது. இது ஐம்பது பணிக்கடம்(Task) கொண்டதாகவும் இதில் பங்கேற்கும் ஆட்டக்காரரினதும் இந்த விளையாட்டின் வடிவமைப்பாளருக்கும் இடையிலான தொடர்பின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுவதாகவும் காணப்படுகின்றது. இந்த விளையாட்டில் வடிவமைப்பாளuhல் சில தொடர்ச்சியான பணிகளுக்கான கட்டளைகள் வழங்கப்படும். அதனை அவர்கள் கட்டாயமாக முடித்தே ஆக வேண்டும் எனும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுவர்.

ஒரு நாளைக்கு ஒரு கட்டளை மட்டுமே வழங்கப்படும். விளையாடும் ஆட்டக்காரர் அதனை நிறைவேற்றிப் புகைப்படமாக எடுத்து அனுப்ப வேண்டும். அவற்றில் சில கட்டளைகள் ஆட்டக்காரரை உருக்குலைப்பதாக அமையும். ஆட்டக்காரர் சீராகக் கட்டளைகளை நிறைவேற்றும் பட்சத்தில் அடுத்தகட்ட வேலை வடிவமைப்பாளரால் கொடுக்கப்படும். எல்லோருக்கும் கொடுக்கப்படும் பொதுவான கட்டளை வேலையாகக் குறிப்பிட்ட ஆட்டக்காரர் தன்னுடைய கையில் சவரக்கத்தி (Razor) அல்லது கத்தி (Blade) ஆகியவற்றால் திமிங்கலம் போன்ற ஒரு குறியீட்டினை வரைய வேண்டும். இதில் கொடுக்கப்படுகின்ற பணிகளைப் பார்த்தால் அது ஆட்டக்காரரின் மனதில் குழப்பத்தை உண்டாக்குகின்றவையாகக் காணப்படும்.

இந்த நீலத்திமிங்கல சவாலில் ஐம்பது பணிகள் உள்ளன. பெரும்பாலான பணிகளை நிறைவேற்ற ஏறக்குறைய அதிகாலை 4.20 மணிக்கு எழ வேண்டும். அழைப்பிற்குப் பிறகு இரண்டாவது பணியாக நீங்கள் விரும்பத்தக்க நண்பரிடம் மோசமான வார்த்தைகளைப் பேச வேண்டும் எனக் கட்டளை வழங்கப்படும். 3ஆவது நாள் நள்ளிரவில் குறிப்பிட்ட நபர் தனியாகப் பயங்கரமான திகில் திரைப்படத்தைப் பார்க்கப் பணிக்கப்படுவார். பொதுவாக "The Ring" எனும் திரைப்படம் பார்க்கக் கட்டளையிடப்படும். 4ஆவது நாள் ஆட்டக்காரர் தான் ஒரு திமிங்கலம் என்பதை வெளிக்காட்டக்கூடிய வகையில் குறிச்சொற்கள்(Tags) மூலம் வெளிக்காட்ட வேண்டுமெனப் பணிக்கப்படுவர். இவ்வாறு வடிவமைப்பாளரால் அனுப்பப்படும் ஆடியோ கோப்புக்களைக் கேட்பதும் திகில் படங்களைப் பார்ப்பதும் என்றவாறு தொடர்ந்து கட்டளைகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும். அவர்களால் அனுப்பப்படும் ஆடியோவில் மூன்று நிமிடங்களுக்கான சுவாசம் வருகின்ற ஓசையுடைய சத்தமே இருக்கும். அதனை அவர்கள் கேட்க வேண்டும்.

மேலும் அவர்கள் "Yes"" அல்லது "F 40" என்ற வார்த்தைகளைத் தமது உடலில் வெட்டிச் செதுக்க வேண்டும். இதன்மூலம் ஆட்டக்காரர் இன்னும் விளையாட்டில் இருக்கிறாரா? என்பதை வடிவமைப்பாளர் கண்டுகொள்கிறார். பின்னர் அவர்கள் ஊசி கொண்டு தங்களது கைகளைக் குத்திக்கொள்ள வேண்டும். சில வேளைகளில் அவர்கள் கன்னங்களில் ஆடைகள் தைக்கும் ஊசிகளைப் பயன்படுத்திக் கீறல்களை ஏற்படுத்தவும் பணிக்கப்படுவர். இந்த 17ஆவது கட்டத்தில்தான் ஆட்டக்காரர்கள் வெளியேற முயற்சிக்கின்றனர். ஆனாலும் வடிவமைப்பாளரால் வழங்கப்படும் மிரட்டல்களால் ஆட்டக்காரர் விளையாட்டில் இருந்து வெளிறே முடியாதவராக மாறுகின்றார். எனவே அவர் தொடர்ந்து விளையாட்டில் ஈடுபடுகின்றார்.

பின்னர் படிப்படியாகத் தற்கொலை உணர்வினைத் தூண்டிவிடுகின்றனர். சிலருக்குக் கால்களால் கூரைகளில் தொங்குமாறும், சிலருக்குப் பாலங்களில் ஏறுமாறும் கட்டளையிடுகின்றனர். சிலர் ரயில்பாதையில் அதிகாலை 4.20 மணிக்குச் செல்லும்படியாகப் பணிக்கப்படுகின்றார்கள். இன்னும் சில பணிகளானது இரகசியமான முறையில் ஆட்டக்காரர்களுக்கு வழங்கப்படுகின்றது. முப்பதாவது பணி தொடங்கி முதல் நாற்பத்தொன்பதாவது பணி வரை நீலத்திமிங்கல விளையாட்டு முடிவை நோக்கிப் பயணிக்கின்றது. இறுதியான படிக்கு ஒருபடி முன்னதாக சக திமிங்கலத்தின் சந்திப்புக்கு வடிமைப்பாளர்கள் வாய்ப்பினை ஏற்படுத்துவர். முதலாவது நபர் இரண்டாவது நபருக்குத் தற்கொலைக்கான நேரம் மற்றும் தேதியினை வழங்குவார். சமூக ஊடகத்தில் அவர்களின் இறுதிப் பதிவேற்றம் கால்கள் கூரையின் விளிம்பில் இருந்து தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு புகைப்படம் "முடிவு" என்ற வார்த்தையுடன் சேர்ந்ததாகக் காணப்படும். இவ்வாறு மரணம் என்னும் பாதையில் பயணிக்கும் கட்டமைப்பினைக் கொண்ட கொடூர விளையாட்டாக நீலத்திமிங்கல விளையாட்டு அடையாளம் காணப்படுகின்றது.

**பதிவிறக்கம் செய்யப்படும் முறைகள்**

மனித உயிரைக் கொச்சைப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள நீலத்திமிங்கல விளையாட்டானது இன்று பலவாறும் பதிவிறக்கம் செய்யப்படுவதனைக் காணலாம். இன்றைய இளைஞர் சமூதாயத்தினுடைய எண்ணங்கள், சிந்தனைகள் ஆகியன சற்று மாறுபட்டவை. வித்தியாசமான செயற்பாடுகளை ஆசையுடனும், பேரார்வத்துடனும் செய்து பார்க்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக இருக்கின்றனர். இவ்விளையாட்டைப் பொறுத்தவரையில் அது முற்றிலுமான சவால் நிறைந்ததொன்றாகக் காணப்படுகின்றது. எனவே சவாலினை விரும்பி ஏற்கும் சிறுவர்களாகட்டும் அல்லது இளம் வயதுடையவர்களாகட்டும் தமது சொந்த விருப்பத்தோடு இவ்விளையாட்டிற்குள் நுழைகின்றனர்.

வேறுசிலர் நீலதிமிங்கலம் என்னும் விளையாட்டு என்றால் என்னவென்றே தெரியாது. இணையத்தில் ஏதோ ஒரு தேவைக்காகப் பிரவேசித்தவர்கள் அந்த விளையாட்டின் மீதான விருப்பத்தினையுடயவராக மாற்றமடைந்து தன்னையும் அந்த விளையாட்டில் இணைத்துக் கொள்கின்றனர். இதனை விடவும் சமூக வலைத்தளங்களினூடாக இந்த விளையாட்டினை ஆரம்பிப்பதற்கான அதாவது நீலத்திமிங்கல விளையாட்டில் ஓர் ஆட்டக்காரராக இணைவதற்கான இணைப்புகள்(*Link*) பரிமாற்றம் செய்யப்படுகின்றன. எனவே அந்த இணைப்புகளை விரும்பியோ அல்லது விரும்பாமலோ சொடுக்குவதன்மூலம் குறிப்பிட்ட நபர் அந்த விளையாட்டின் ஆட்டக்காராக இணைக்கப்படுவார்.

மேலும் குறிப்பாக முகநூல்((*Facebook*) பாவனையின் போது இனம் தெரியாத நபர்களிடம் இருந்து நட்பு அழைப்பானது(*Friend Request*) விடுக்கப்படும். அத்தகைய நபர்களுடைய அழைப்புகளை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் குறிப்பிட்ட நபர் விளையாட்டின் ஆட்டக்காரராக இணைக்கப்பட்டு விடுவார். இவ்விதங்களில்தான் ஒரு நபர் நீலத்திமிங்கல விளையாட்டின் பயனராகிறார்.

**வெளியேற முடியாமைக்கான காரணங்கள்**

மோசமான வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இவ்விளையாட்டானது ஏனைய இணைய விளையாட்டுக்களைப் போலல்லாது ஆட்டக்காரரை நேரடியாக செயல்களுடன் கூடிய பணிகளை நிறைவேற்றுவதற்கான தன்மையுடையதாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்விளையாட்டில் இணைந்துகொண்ட மறுகணமே குறிப்பிட்ட அந்த நபர் பயன்படுத்தும் திறன்பேசியிலோ அல்லது கணினியிலோ உள்ள தகவல்கள் அனைத்தும், பிரத்தியேகமான தரவுகளும் வடிவமைப்பாளரால் திருடப்படும். சவால் நிறைந்த இந்த விளையாட்டில் விரும்பியோ விரும்பாமலோ இணைந்து கொள்கின்ற நபர் விளையாட்டில் இருந்து வெளியேறுவதற்கான எந்த வழிவகையும் இல்லை.

இந்த விளையாட்டை இடையில் நிறுத்தவும் முடியாது. ஒவ்வொரு கட்டங்களிலும் புதிய புதிய சவால்களுடன் விளையாடும் ஆட்டக்காரர் அடுத்தடுத்து வருகின்ற பணிகளை நிறைவுசெய்ய விரும்பாதவிடத்து விளையாட்டில் இருந்து வெளியேற எத்தனிப்பார். இவ்வாறு வெளியேற எத்தனிக்கும் சந்தர்ப்பத்தில் வடிவமைப்பாளரால் மிரட்டல்கள் விடுக்கப்படுவார். அத்தகைய மிரட்டல்கள் கொலை மிரட்டலாக இருக்கலாம். அல்லது குறிப்பிட்ட நபரினுடைய பிரத்தியேகத் தரவுகளைச் சமூக வலைதளங்களில் வெளியீடு செய்வதாகக் கூறும் மிரட்டல்களாகக் கூட இருக்கலாம். இவ்விதம் குறிப்பிட்ட ஆட்டக்காரர் நீலத்திமிங்கல வடிவமைப்பாளரிடம் இருந்து விலகிக் கொள்ளாத சூழ்நிலையில் சிக்கித் தவிப்பார். இத்தகைய காரணங்களால் ஆட்டக்காரரால் விளையாட்டில் இருந்து வெளியேறவே முடியாத சூழலுக்குத் தள்ளப்படுவார்.

**விளையாட்டினால் ஏற்படும் விபரீத விளைவுகள்**

இவ்விளையாட்டில் இணைந்த நபர்கள், பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவரது குடும்பம், இவ்விளையாட்டினால் இறந்து போன நபர்கள் அவர்களது குடும்பம் ஆகியோர் இதனால் பல பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம். ஒரு நபர் ஏதோ ஒருவகையில் இவ்விளையாட்டில் இணைந்து விளையாடிக் கொண்டிருக்கின்றாராயின் குறிப்பிட்ட நபர் அடுத்து என்ன பணியைச் செய்யச் சொல்வார்களோ என்ற எதிர்பார்ப்பினை உடையவராக மாற்றப்படுவார். அந்த எதிர்பார்ப்புணர்வு அச்சம் நிறைந்ததாகக் காணப்படும். வாழ்க்கையின் முக்கியப் பணிகளைக்கூட அவர்களால் மனத்திருப்தியோடு செய்ய முடியாத நிலை தோன்றலாம்.

மேலும் இவ்விளையாட்டில் இருந்து வெளியேற முயற்சிக்கும் நபர் வெளிறே அனுமதிக்கப்படாமையினால் உளவியல் ரீதியான தாக்கத்திற்கு உள்ளாவர். இவ்விளையாட்டில் கொடுக்கப்படுகின்ற கட்டளைகள் எல்லாமே அவரை உடல் ரீதியிலும் பாதிக்கின்றது. யாருக்குமே தெரியாத வகையில் இவ்விளையாட்டில் ஈடுபடுவதனால் ஏனையயோரிடம் இருந்து அதாவது குடும்பத்தினரிடம், நண்பர்களிடம் இருந்து பிரிந்து செல்லும் நிலையினை உருவாக்குகிறது. படிப்படியாகச் சமூதாயத்தில் இருந்தும் அந்நியமாக்கப்படுவர். தன்னுடைய இரகசியங்களை வெளியீடு செய்வோம் என வடிவமைப்பாளர் குறிப்பிடும்போது குறிப்பிட்ட நபர் தன்னை ஒரு குற்றவாளியாக எண்ணும் நிலையினை உருவாக்கும். இவ்வாறு இனித் தப்பிப்பதற்கு வழியில்லை என்று எண்ணி விளையாட்டின் இறுதிவரை பயணித்துத் தன்னுடைய மரணத்தைத் தானே தேடிக்கொள்ளும் நிலையினை இவ்விளையாட்டு எற்படுத்தி விடுகின்றது.

தன்னுடைய பிள்ளை குடும்பத்தோடு சரியான உறவாடலைக் கொண்டிருக்கவில்லையே என்று பெற்றோர்களும் மனவருத்தத்திற்கு உள்ளாவர். விளையாட்டில் ஈடுபட்டு எப்படியாவது இதிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்ற எண்ணமுடையவர்கள் பெற்றோர் அல்லது பெரியோரின் உதவியுடன் அதிலிருந்து மீள மிகவும் போராட வேண்டிய நிலையும் உண்டாகும். விளையாட்டின் இறுதியில் குறிப்பிட்ட நபர் இறக்கும்போது அந்தக் குறிப்பிட்ட நபரின் உறவுகள் அனைத்தும் உள்ளத்தால் மிகவும் கவலைக்கிடமான முறையில் வருந்துவர். இவ்விதம் இவ்விளையாட்டு வளர்ந்து பல சாதனைகளை எதிர்காலத்தில் நிகழ்த்தத் துடிக்கும் பிஞ்சு உள்ளங்களை மாய வலையில் சிக்கவைத்து, மரணம் வரைக்கும் அழைத்துச் செல்கின்றமை வேதனைக்குரிய விடயமாகும். இந்தியாவில் முதன்முறையாக மும்பையில் 14 வயதுச் சிறுவன் நீலத்திமிங்கல விளையாட்டினால் தன்னுயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் பரிதாபகரமானது.

2017ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்தியாவில் இந்த நீலத்திமிங்கல விளையாட்டினைக் கட்டுப்படுத்துவதற்காக Ministry of Electronic and information Technology பல அமைச்சகம் பல்வேறு இணைய நிறுவனங்களை அதாவது Google, Facebook, Yahoo ஆகியவற்றுக்கு இவ்விளையாட்டிற்கு நேரடியாக வரும் பயனாளிகளின் தொடர்பினை அகற்றக் கோரிக்கை விடுத்தது. 2017.05.11 ஆம் திகதியன்று ரசிய செய்தி ஊடகம் பிலிப் வுடேக்கினை இளைஞர்களைத் தற்கொலைக்குத் தூண்டுவதற்கான குற்றத்தினை ஒப்புக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தது. ஆனால் அவர் பாதிக்கப்பட்டவர்களை 'உயிரியல் கழிவுகள்' (biological waste) என்று கூறினார். 2017.6.8 ஆம் திகதி இவ்விளையாட்டின் நிர்வாகிகளில் ஒருவரான 26 வயதுடைய இல்யா சிடோரோவ்(Ilya Sidorov) என்பவர் மாஸ்கோவில் கைது செய்யப்பட்டார். மேலும் 2017.8.30 ஆம் திகதி இந்த விளையாட்டின் சூத்திரதாரியாகக் காணப்பட்ட 17 வயதான ரசியப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மும்பையில் பாதிக்கப்பட்ட ஒருவர் புகைப்படத்துடன் "விரைவில் உன்னிடத்தில் எஞ்சியிருக்கப்போவது என்னுடைய புகைப்படம் மட்டும்தான்" என்னும் கருத்தோடு ஒரு தகவலை வெளியிட்டதும் மிக முக்கியமான ஒரு விடயமாகும். விளையாட்டு அங்காடியில்(Play Store) இருந்து இவ்விளையாட்டானது அகற்றப்பட்டாலும் கூட சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் இணைப்புகள்(Link) மூலம் பரப்பப்படுவதனைக் காணலாம். இது பல்வேறுபட்ட மோசமான நிலைகளுக்கு வழிசமைப்பதனையும் காணலாம்.

**பரிந்துரைகள்**

வாலிபராகவும் இணையப் பயனாளியாகவும் காணப்படும் ஒவ்வொருவரும் தங்களது உயிர் குறித்த பாதுகாப்புத் தொடர்பில் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருப்பது அவசியமாகும். விரும்பியும் விரும்பாமலும் நேரடியாக இவ்விளையாட்டைச் சவாலாக எண்ணி விளையாட எத்தனிக்க வேண்டாம்.

சமூக வலைதளங்களின் பாவனையில் இருக்கும்போது தேவையில்லாமல் உங்களுக்குப் புரியாத வகையில் வருகின்ற இணைப்புகளைச் சொடுக்க வேண்டாம். முகநூலில் இனம் தெரியாத நபர்களை உங்கள் நண்பர்களாக்க முயற்சிக்க வேண்டாம். கூடுமானவரை திறன்பேசிகளைப் பயன்படுத்தும் நபர்கள் தங்களது பிரத்தியேகமான தரவுகளைத் திறன்பேசியில் வைத்திருப்பதைத் தவிர்க்கலாம். பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்குத் திறன்பேசிகளைக் கொடுப்பதைக் கூடுமானவரை தவிர்க்கலாம். உங்களது பிள்ளை வயது வந்தவராக இருந்தால்கூட அவர்கள் திறன்பேசியில் என்ன செய்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்யலாம்.

கையடக்கக் கருவிகளில் தேவையான நேரங்களில் மட்டும் இணையத்தைப் பயன்படுத்துங்கள். பாதுகாப்பற்ற வலைத்தளங்களில் நுழைவதைத் தவிர்க்க வேண்டும். திறன்பேசியில் நீலத்தமிங்கல விளையாட்டோடு தொடர்புடைய பாதுகாப்பற்ற நிகழ்ச்சிகளோ அல்லது இணைப்புகளோ தரவிறக்கம் செய்ய முடியாதவாறு திறன்பேசிகளில் முன்கூட்டியே அமைத்தல் (*Smart Phone*) பயன்பாட்டிற்குச் சென்று அறியப்படாத ஆதாரங்கள் (*Unknown Sources*) என்பதின் செயற்பாட்டினை நிறுத்திவிடுவதன் மூலம் பாதுகாப்பினைப் பெறலாம்.

நீலத்திமிங்கலங்களோடுதொடர்புடைய எதையும் பார்ப்பதை, பயன்படுத்துவதைத் தவிர்க்கலாம். இவ்விளையாட்டிற்கு அடிமையாகிப் போன நண்பர்களுக்கு நல்ல முறையில் அதிலிருந்து விடுபட்டு வாழ்வதற்கான அறிவுரைகளைக் கூறலாம். அல்லது பெற்றோரிடமோ ஆசிரியர்களிடமோ விசித்திரமான நடத்தையுடைய உங்கள் நண்பரைப் பற்றித் தெளிவுபடுத்தி அவரது மனதை மாற்றியமைக்க வழிவகை செய்யலாம். மனித உயிரின் பெறுமதிப்பைப் பற்றி எடுத்துரைக்கலாம். நம்முடைய முதன்மைத் தகவலை வெளியீடு செய்தால் செய்யட்டும், இதனால் ஏற்படும் பாதிப்புக்களை என்றோ ஒரு நாள் சரிசெய்துவிடலாம், ஆனால் அதற்காக உயிரை மாய்த்துக்கொள்ளுதல் உகந்த தீர்வல்ல என்பதைப் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் புரிந்து செயற்பட வேண்டும்.

**முடிவுரை**

தொழில்நுட்பத்தின் புதுமைகள் பல பயன்களைப் பெற்றுத் தருகின்றன. ஆனால் அவை சிலவேளைகளில் மனிதகுலத்தின் அழிவுப்பாதையைத் திறந்து விடுகின்றன. தொடர்பாடல் என்று ஆரம்பமாகிய திறன்பேசிகள் இன்று எண்ணற்ற சேவைகளைக் கொண்டதாய் மிளிர்கின்றன. இணைய விளையாட்டிற்குச் சிறியவர் முதல் பெரியவர் வரை அடிமைகளாகக் காணப்படுகின்றனர். இதுவரை விளையாட்டுக்களை ரசித்து விளையாடிய பயனாளிகள் இன்று அச்சம் நிறைந்த உணர்வோடு இணைய விளையாட்டுக்களைப் பார்க்கும் நிலை தோன்றிவிட்டது. நீலத்திமிங்கலம் எனும் இணைய விளையாட்டு உலகையே நடுங்க வைக்கிறது. தற்கொலை உணர்வைத் தூண்டும் விளையாட்டு அவசியம்தானா என்பதைச் சமூகம் சிந்திக்க வேண்டும்.

நீலத்திமிங்கலம் விளையாட்டை முற்றாக அழிப்பதற்குத் தொழில்நுட்பம்சார் ஒழுக்க சமூதாயம் தீர்வினை முன்வைக்க வேண்டும். ஒவ்வொரு நாடும் தனது நாட்டு மக்களது உயிரை இத்தகைய மோசமான விளையாட்டு மென்பொருளில் இருந்து பாதுகாக்க சமூக வலைத்தளங்களின் பாதுகாப்பினைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இத்தகைய விளையாட்டு முட்டாள்தனமுடையது என்பதைப் பல விழிப்புணர்வுகள் மூலம் முன்வைக்க அறிவுசார் மனித சமூகம் வழிவகை செய்ய வேண்டும். இனிவரும் காலங்களில் நீலத்திமிங்கலம் போன்ற உயிர்பறிக்கும் விளையாட்டு மென்பொருட்களை எந்தவிதத்திலும் தரவிறக்கம் செய்ய முடியாதவாறு புதிய செயற்றிட்டங்களை முன்னெடுக்க உலக அளவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நீலத்திமிங்கல விளையாட்டானது மோசமான வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த விளையாட்டு வடிவமைப்பினை ஆக்கபூர்வமான ஒரு விளையாட்டு வடிவமைப்பாக மாற்றியமைக்கும் வழிவகைகளினை மென்பொருள் உருவாக்குனர்கள் ஆராயவேண்டும். பயனாளர்களின் மொழி வளர்ச்சி, சிந்தனை வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, வாசிப்புத் தூண்டல், நல்ல அறம்சார் ஒழுக்கம் வளர வழிவகுத்தல் போன்றவற்றினைத் தூண்டக்கூடிய வகையில் நல்ல இணைய விளையாட்டுக்களை உருவாக்க முயற்சிக்க வேண்டும். இணைய விளையாட்டுக்கள் மூலம் திறன்பேசிப் பயனாளர்கள் எந்தத் தீங்குகளுக்கும் உட்படாத ஒரு நிலையினைத் தொழில்நுட்பம்சார் சமூகம் வழங்கவேண்டும். தைரியமான இளைஞர் சமூகம் ஏற்றம் காணும் வகையில் இன்றே செயற்படுவோம்.

**உசாவியவை**


- ✓ *http://www.indianexpress.com*
- ✓ *http://knowyourmeme.com*
- ✓ *http://bustle.com*
- ✓ *http://www.youtube.com*

மதிப்பிடப்பெற்றது

# பத்துப்பாட்டு உயிரினங்கள் உணர்த்தும் உலக உண்மைகள்

**கு.தனலட்சுமி**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத் துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (த.)
திருச்சிராப்பள்ளி -17.

தமிழ்மொழியின் தொன்மையையும், தமிழ்மக்களின் பண்பாட்டு மரபையும் உலகறியச் செய்ததோடு, உலகத்தார் கவனத்தையும் ஈர்த்து, பரந்துபட்ட ஆய்வுக் களங்களைக் கற்போருக்கு வழங்கும் சிறப்பிற்குரிய இலக்கியமாகத் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் திகழ்கின்றன.

தமிழரின் வாழ்வானது உயர்ந்த நற்சிந்தனை, வாழ்வறம், வீரம், கொடை, விருந்தோம்பல், உயர் ஒழுக்கத்தின் ஊற்று, போர் மறம் என்பன போன்ற எண்ணற்ற ஒழுகலாறுகளைக் கொண்டது. இத்தகைய நெறிசார் வரலாற்றைப் பறைசாற்றும் விதமாகப் 'பாட்டும் தொகையும்' விளங்குகின்றது.

எட்டுத்தொகை என்பது தொகைநிலைச் செய்யுளாகவும், பத்துப்பாட்டு என்பது தொடர்நிலைச் செய்யுளாகவும் அமைக்கப்பட்டுள்ளது. எட்டுத்தொகையில் அகம், புறம் சார்ந்து மக்களின் காதல், வீரம், பிரிவாற்றாமை, கையறுநிலை, நிலையாமை, மன்னர்களின் போர்த்திறம், படைச்சிறப்பு போன்ற பண்டையத் தமிழரின் வாழ்க்கை நிகழ்வுகளைப் புலவர்கள் தங்களின் பாடல் அடிகளில் வெளிப்படுத்தியுள்ளனர். தொகை இலக்கியமானது பல்வேறு புலவர்களால் பல்வேறு காலச் சூழலில் பாடப்பட்ட தனிப்பாடலின் தொகுப்பு ஆகும்.

### பத்துப்பாட்டு - அமைப்புமுறை

பத்துப்பாட்டு தொடர்நிலைச் செய்யுள் ஆகும். நூறடிச் சிறுமையும் ஆயிரமடிப் பெருமையும் கொண்டது பத்துப்பாட்டு என்பதைப் 'பன்னிருபாட்டியல்' என்னும் இலக்கண நூல் இலக்கணமாய் வகுத்துள்ளது. பத்துப்பாட்டில் ஒவ்வொரு பாடலையும் ஒருவரே இயற்றியிருப்பதால், நாடகப் பாங்கோடு திகழ்கின்றது. பக்தி நெறி, ஆற்றுப்படுத்துதல், பிரிவாற்றாமை, திணைசார்ந்த நிலங்களின் சிறப்பு, இயற்கை வளம் போன்ற அமைப்பு முறைகளை நம் கண்முன்னே காட்சி நிகழ்வுகளாக விரித்துக்காட்டி, இன்பமடையச் செய்யும் புலவர்களின் கவித்துவம் எண்ணி வியக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

'பத்துப்பாட்டு' சங்ககால மக்களின் செழிப்பான வாழ்க்கை, தன்மானம், தொழில் மேம்பாடு, நாகரிகத்தின் உச்சநிலை போன்ற நல்லறங்களின் விளைநிலம் என்பதைக் கற்றுணர வைத்துள்ளது.

### பொருநராற்றுப்படை சுட்டும் சோழ நாட்டின் வளம்

சோழநாட்டு மக்கள் வறுமையின் தாக்கமின்றி இன்பமொன்றையே நுகர்ந்து வாழ்ந்துள்ளனர். சோழநாடு இயற்கை எழிலோடும், விளைந்த நிலப்பரப்போடும், வற்றாத நீர் வளத்தோடும் பரந்துபட்ட நிலப்பரப்பைக் கொண்டு காட்சியளித்துள்ளது. பண்டைய சோழநாட்டோடு தற்காலச் சோழநாட்டை ஒப்பிட்டுக் காணும் போது, பொறாமையும் ஏக்கமும் மேலோங்குவதை வெளிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. என்னதான் நவநாகரிகத்தின் வளர்ச்சியில் நம் தலைமுறை பயனித்தாலும் இயற்கையை அழித்து, நம் அடுத்த தலைமுறையின் வாழ்வாதாரத்தை இழக்க வைத்துக் கொண்டிருக்கிறோம்.

*"மாமாவின் வயின்வயின் நெல்*
*தாழ்தாழைத் தன் தண்டலை*
*கூடு கெழீஇய, குடிவயினான்*
*செஞ்சோற்ற பசி மாந்திய*
*கருங்காக்கை கவவு முனையின்"* (பொருந. 180-184)

கரிகாற்வளவனின் சோழநாட்டில் மருதநிலத்தின் மாநிலத்தில் தாழ்ந்த தெங்கினை உடைய குளிர்ந்த மருத மரச்சோலைகளும், அவற்றிற்கிடையே நெற்கூடுகளும் நிரம்பியிருக்கும். மருதநில மக்கள் காக்கைக்கு உதிரத்தோடு கலந்த சோற்றை உணவாக அளித்தனர். எனினும் அச்சோற்றை விரும்பாது நெய்தல் நிலத்தில் உணவுதேடும் காக்கைகள் எனப் பாடல் அடிகள் விளம்புகின்றன. இதனை நோக்கும்

போது சோழநாட்டின் வளம் மட்டுமல்லாது, பிற உயிரினங்களுக்கு உணவளித்து உண்ணும் வழக்கம் நம் முன்னோர்களின் மரபாக விளங்கியதை அறிய முடிகின்றது.

காக்கைக்குச் சோறு இடுதல் இன்றைக்கும் காணப்படும் நம் தமிழரின் மரபாகும். இதற்குக் குறுந்தொகைப் பாடல் அடிகள் சான்றாக விளங்குகின்றன.

*"வெண்ணெல் வெஞ்சோறு எழுகலத் தேத்தினும்*
*சிறிதென் தோழி ...*
*விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"* (குறு.210:3-6)

இத்தகைய சீர்மிகு சோழ நாட்டையாளும் கரிகால் வளவனிடம் பொருள் பெற்றுத் தன் வறுமையைப் போக்கிக் கொள்ளலாமென ஒரு பொருநன் மற்றொரு பொருநனை ஆற்றுப்படுத்துவதே பொருநராற்றுப்படையின் அடிப்படையாகும்.

*"கொடை அளி செங்கோல் குடியோம்பல் நான்கும்*
*உடையானாம் வேந்தர்க்கு ஒளி"* (குறள் 890)

என்ற குறளடிக்குச் சான்றாக, தன் நாட்டைத் தன் இனத்தை வளப்படுத்தியதோடு, சிறந்த ஆட்சியாளனாகவும் திகழ்ந்துள்ளான் கரிகாற்சோழன். இவனால் கட்டப்பட்ட கல்லணை நீர்த் தேக்க முறைக்கு முன்மாதிரியாகத் திகழ்வதோடு, காலத்தையும் கடந்து வரலாற்று சின்னமாகக் காட்சியளிப்பதை எண்ணித் தமிழர் அனைவரும் பெருமிதம் கொள்ளலாம்.

**சிறுபாணாற்றுப்படை காட்டும் வறுமைத் துயர்**

பண் என்ற சொல்லுக்குப் பாட்டு, இசை, யாழ் எனப் பொருள்படும். இசைத் தமிழைப் போற்றி வளர்த்தவர்கள் பாணர்கள். சிறுபாணாற்றுப் படையில் குறிப்பிடப்படுபவன் யாழ் இசைக்கும் பாணன்.

'இவ்வழிச் சென்று இன்னோனை அடைவீராக' என்று குறுநில மன்னனிடம் பரிசில் பெற்ற பாணன், தன்னை ஒத்த மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துவதாகச் சிறுபாணாற்றுப்படை புலவனால் எடுத்துரைக்கப்படுகின்றது.

வறுமைத் துயரில் வாடும் பாணனின் இல்லத்தில் குட்டிகளை ஈன்ற நாயானது, தனது மார்பில் பாலற்றுக் குட்டிகளின் பசியைப் போக்கத் தவிக்கிறது. இதேபோன்று பாணனது மனைவி தனது மக்களுக்கு உணவளிக்க இயலாமல் வறுமைத் துன்பத்தை அனுபவிக்கும் குடும்பச் சூழலை விரித்துரைக்கிறது. இவ்வாற்றுப்படைப் பாடல் அடிகள்.

*"திறவாக் கண்ண சாய்செவிக் குருளை*
*கறவாப் பால்முலை கவர்தல் நோனாது"* (சிறுபாண். 130-131)

விழிக்காத கண்ணையும், சாய்ந்த செவியையும் உடைய குட்டிகள், நாயினது மார்பில் பாலருந்த எத்தனிக்கும். எனினும் பாலற்ற மார்போடு வலியால் நாய் குரைக்கின்றது என்ற பாடலின் பொருள் நெஞ்சை நெகிழ்விக்கின்றது.

*"வளக்கை கிணைமகள் வள்உகிர்க் குறைத்த*
*குப்பை வேலை உப்புஇலி வெந்ததை*
*மடவோர் காட்சி நாணி, கடை அடைத்து,*
*இரும்பேர் ஒக்கலோடு ஒருங்குஉடன் மிசையும்*
*அழிபசி வருத்தம் வீட"* (சிறுபாண். 135-139)

சிறுபாணாற்றுப்படைப் புலவர் பாணனின் இல்லத்தைக் குறிப்பிடுகிறார். கழிகளற்ற மேற்கூரை, சோறாக்கிப் பல மாதங்களாக வெறுமையில் கிடக்கும் அடுக்களை, காளான் பூத்துப் பாசி படர்ந்து கறையான் அரித்த சுவர், உடல் மெலிந்த பாணனின் மனைவி எனப் புலவர் விளக்கும்போது, பாணனின் இயலாமை பற்றியும், தன் குடும்பத்தைக் காக்கப் பிற தொழிலை நாடாமல் இருக்கக் காரணம் என்ன என்பது பற்றியும் வினா எழுகிறது.

குப்பையில் முளைக்கின்ற, பிறர் பயனற்றது என்று எண்ணுகின்ற கீரைச்செடியான வேளைக்கீரையை (குப்பைமேனிக் கீரை) புல்லென் அடுப்பில் உப்பின்றி ஆக்கி, பிறர் பார்க்க, தன்மானம் கெடும் என்ற மான உணர்வு மேலிடக் கதவடைத்து உண்ணும் துயரைப் படித்தறியும் போது, வறுமை கொடிதிலும் கொடியது என்று ஔவை கூறியதை நினைக்கச் செய்கின்றது.

தான் வாழ பிறர் அழிய வேண்டும் என எண்ணும் தற்கால மனிதர்களிடையே, பண்டைய கால மனிதர்கள் தான் பெற்ற பெருவளத்தைப் பெறாதவர்களுக்கு அறிவுறுத்தி இன்னலைத் தீர்த்து இன்பமடையச் செய்வது, சங்ககாலச் சமூகத்தின் மனிதப் பண்பை முன்னிறுத்துகின்றது.

"எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்"

என்ற புரட்சிக் கவிஞரின் பாடல்வரிகளைச் சுட்டிக்காட்ட வழிவகுக்கின்றன சிறுபாணாற்றுப்படைப் புலவரின் சிந்தனை மிகு மனிதநேயப் பாடல் அடிகள். பசித் துயரமானது அனைத்து உயிருக்கும் ஒன்றே! நாயானால் என்ன? மனிதனானால் என்ன? எல்லா உயிரினங்களையும் ஒரே நேர்கோட்டிலேயே நிலைநிறுத்திவிடுகிறது வறுமை அளவுகோல்.

**முல்லைப்பாட்டு வாயிலாக வெளிப்படும் யானையின் சிறப்பு**

முல்லைப்பாட்டு இருத்தலும் இருத்தல் நிமித்தமும் என்ற உரிப்பொருளைக் கொண்டது.

"வஞ்சி தானே முல்லையது புறனே" - (தொல். புற. 6)

எனத் தொல்காப்பியம் கூறுவதற்கேற்ப, முல்லைப்பாட்டானது முல்லை நிலத்தின் இயல்புகளை மட்டுமல்லாது அதற்குப் புறமான வஞ்சித்திணையின் இயல்பினையும் விரித்துக் கூறுகின்றது.

தலைவன் போர் அல்லது பொருள் தேடுவதன் காரணமாகப் பிரியும்போது, தலைவி கார்காலம் வரை பிரிவாற்றியிருத்தல் முல்லை ஒழுக்கம் எனலாம். தன் நாட்டிற்கும் அடுத்த நாட்டிற்கும் இடைப்பட்ட நிலத்தைத் தனதாக்க எண்ணி வரும் மாற்று நாட்டு அரசனை வெல்வதற்குப் படையெடுத்துச் செல்லுதல் வஞ்சித் திணை ஆகும்.

*"எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்*
*அஞ்சுதகத் தலைசென்று அடல்குறித் தன்றே"* (தொல்.புற.62)

என்ற தொல்காப்பியம் நூற்பா வஞ்சித்திணையின் இலக்கணத்தை நுவலுகிறது.

*"கவலை முற்றம் காவல் நின்ற*
*தேம்படு கவுள சிறுகண் யானை*
*ஓங்குநிலைக் கரும்போடு, கதிர்மிடைந்து யாத்த,*
*வயல்விளை இன்குளகு உண்ணாது நுதல்துடைத்து"* (முல்லைப். 30-33)

முல்லை நிலத்தின் ஒழுங்குபட்ட தெருக்களின் நாற்சந்தியின் முற்றத்தில் யானைகள் நிறுத்தப்பட்டுள்ளன. யானைகள் விரும்பி உண்ணுகின்ற செழிப்புடைய தீங்கரும்பு, நெற்கதிர்க்கட்டு, அதிமதுரத்தழை ஆகியவை முன்னால் இருந்தும் உண்ணாமல், அத்தாள்களைக் கொண்டு தன் நெற்றியைத் துடைத்துக் கொண்டிருக்கிறது. இதையறியாத பாகன் உணவுக் கவளத்தினை யானையின் வாயில் தின்னும்படி திணிக்கிறான் என்பதை பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன.

'யானையைக் கட்டித் தீனி போட முடியாது' என்பது முதுமொழி. அதன் மறுதலையாக முல்லைப்பாட்டில் குறிப்பிடப்படும் யானைகள் பசிக்காமல், உணவு உண்ணாமல் இருப்பதிலிருந்து முல்லை நிலத்தின் செழிப்பான வளத்தைக் காணமுடிகிறது.

மற்ற விலங்குகளைவிட யானை உருவத்திலும், பலத்திலும் உயர்ந்தது. போரில் யானையைக் கொன்றவனையே சிறந்த வீரனாவான் எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

*"பெரு நல்யானை போர்க்களத்து ஒழிய*
*விழுமிய விழுந்த குரிசிலர்"* (மதுரைக். 735-6)

என்ற மதுரைக்காஞ்சியின் பாடல் அடிகள் போரிலே யானையை வீழ்த்துபவனே சிறந்த வீரன் எனக் குறிப்பிடுகின்றன.

தன் இனத்தோடு கூடிவாழும் ஒற்றுமைப் பண்பும், ஆழ்ந்த நினைவாற்றல் திறனும், நீர்நிலைகளைக் கண்டறிந்து பிற உயிரினங்களுக்கு வழிகாட்டும் நுண்ணறிவும் உடைய உயிரினம் யானை மட்டுமே!

**நிறைவுரை**

'பத்துப்பாட்டில் உயிரினங்கள்' என்ற கட்டுரைப் பொருண்மையின் வாயிலாக, உலக வாழ்வில் உயிரினங்களின் பங்களிப்பையும், பரந்துபட்ட இந்நிலப்பரப்பில் ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒரு பண்புநலன் உண்டு என்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

பூமியில் உருவான தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் அனைத்துமே உயிரினங்களில் தான் அடங்கும்; எனினும் அவற்றின் வாழ்வாதாரமும் வாழ்க்கை களங்களும் மாறுபடுகின்றன.

இலக்கியங்களில் உயிரினங்கள் நாட்டின் இயற்கை வளங்களாக வறுமையின் இன்னலை வெளிப்படுத்தும் ஊடகமாக, கைவினை குடியிருப்பாக, வாழ்வாதாரத் தொழிலுக்காக மனிதர்களின் வாழ்வில் பங்களிக்கின்றன. பூமியில் முதலில் தோன்றிய தாவரங்களும், விலங்கினங்களும் மண்ணின் வளத்தைச் செம்மைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் இப்பூமியில் கடைசியில் தோன்றிய மனித இனமோ இயற்கை வளத்தை அழிப்பதோடு மனிதநேயத்தையும் அழித்து வாழ்கின்றது.

என்னதான் மனிதன் ஐம்பூதத்தையும் அடக்கியாள்வதாக எண்ணி, நெஞ்சை நிமிர்த்தி, புருவம் உயர்த்தி மல்யுத்த வீரனைப் போல் நின்றாலும், இயற்கைப் பேரிடரை எதிர்கொள்ள முடியாமல் மண்புழுவாகிறான். ஒரு மனிதன் அழிந்தால் அங்கே மற்றொரு மனிதன் தோன்றுவதில்லை. ஆனால் ஒரு புல் அழிந்தால் அதே விதையில் மற்றொரு புல் தோன்றும் என்ற தத்துவத்தை உணர்ந்து மற்ற உயிரினங்களைப் போல், தன் இனத்தை இவ்வுலகில் அடையாளம் காட்ட பிறருக்கு உதவியும், இன்னல் தராமலும் தான் வாழ்ந்து பிறரையும் வாழ வைக்கும் மாண்பைப் பெற வேண்டும்.

**துணைநின்றவை**


- அடிகளாசிரியர்(பதி.), 2008, தொல்காப்பியம் (பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10.
- நாகராசன் வி.(உரை.), 2011 (நா.ப.), பத்துப்பாட்டு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 98.
- நாகராசன் வி.(உரை.), 2004, குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 98.
- ..., 2008, திருக்குறள் - பரிமேலழகர் உரையுடன், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

# கல்விச் செயற்பாடு வெற்றியடைவதில் மாணவர்களின் பங்களிப்பும் மாணவர்களின் நடத்தையைச் சீர்குலைக்கின்ற புறவயக் காரணிகளும்



**சந்துரு மரியதாஸ் (**விரிவுரையாளர்)

கல்வி பிள்ளைநலத் துறை, கலை கலாசாரப் பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. chandrumariyadas@yahoo.com



**யேசுஜியா டிலானி, (**உதவி விரிவுரையாளர்)

கல்வி பிள்ளைநலத் துறை, கலை கலாசாரப் பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. dilanijesuiyah@gmail.com

**அறிமுகம்**

21ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்குப் பற்பல மாற்றங்களை அனுபவித்துப் பார்த்து அவற்றின் தீமைகளை அலசி ஆராய்ந்து சரியானவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவையும் கட்டாயமும் எழுந்துள்ளது. கல்வி நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் ஒரு மாணவனின் அறிவு வளர்ச்சியில் கல்வியின் பங்கு அளப்பரியதாகும். மாணவர்களுக்கு ஆசிரியர்கள் மூலம் வழங்கப்படுகிற கல்வியானது மாணவர்கள் மத்தியில் சிறப்பான முறையில் சென்றடைய வேண்டும். இதன் மூலமே கற்பித்தலின் வெற்றித்தன்மை உள்ளடங்கியுள்ளது. அதாவது ஒவ்வோர் ஆசிரியர்களும் தம்மிடத்தே கல்வி கற்கின்ற மாணவர்களுடைய திறமைகள், ஆளுமைகள் போன்றவற்றை அறிந்திருத்தல் வேண்டும். இவ்வாறாக ஆசிரியர்கள் மாணவர்கள் பற்றி அறிந்திருப்பதால் அம்மாணவனின் ஆற்றலுக்கு ஏற்றவகையான கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியும். இதன்மூலமே மாணவர்களின் அறிவுத்தன்மையானது சிறப்பான முறையில் விருத்தி செய்யப்படுகிறது. அந்தவகையில் பார்க்கும் போது மாணவர்களின் பொருத்தப்பாட்டைப் பொறுத்தே கல்விச் செயற்பாடுகள் வெற்றியளிக்கின்றன.

பாடசாலையில் சில மாணவர்களின் பிழையான பொருத்தப்பாட்டைச் சீராக்கி, சிறந்த பொருத்தப்பாடுகளை வழங்குவதை முக்கியமானதொரு பணியாக ஆசிரியர்கள் கருதுகிறார்கள். ஒரு வகுப்பறையினைப் பொருத்தவரையில் அங்குள்ள மாணவர்கள் பலவிதமான பழக்கவழக்கங்களை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். வகுப்பறையில் குழப்பம் செய்பவர்கள், களவெடுப்பவர்கள், வேற்றுமை பார்க்கக்கூடியவர்கள், ஒன்றுமே செய்யாது ஏனைய மாணவர்களிடமிருந்து விலகித் தனியாக ஒதுங்கியிருக்கக் கூடியவர்கள் எனப் பலதரப்பட்டோரைத் தன்னகத்தே வைத்துக்கொண்டு ஆசிரியரால் சீரான முறையில் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. மாணவர்களின் சமூக மனவெழுச்சி, அறிவுமுதிர்ச்சி என்பவற்றினை அடைதற்கு உதவுவதே கல்வியின் முக்கிய நோக்கமாகக் காணப்படுகிறது. ஒரு மாணவனின் மனவெழுச்சியும் அறிவுவளர்ச்சியுமானது ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளது என்பது பல ஆய்வுகளின் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளது. மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுள் கல்விப் பிரச்சினை ஒன்றாகும். கல்விசார் பிரச்சினைகளுள் பாடசாலைச்சூழல் ,ஆசிரியர்கள், சகமாணவர்கள் சார்ந்து மாத்திரமின்றி மனவெழுச்சி சார்ந்த பிரச்சினைகளாக இருக்கும். எனவே மாணவர்களிடத்தே நல்ல மனவெழுச்சி - சமூகப் பொருத்தப்பாடு பெறும் வகையில் பாடசாலை வேலைகள் அமைவது முக்கியமாகும்.

**இலக்கிய மீளாய்வு**

உடலியல், உளவியல்சார் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே எல்லா நடத்தைகளும் உருவாகின்றன. மாணவர்கள் தங்களுடைய அனைத்து விதமான தேவைகளையும் நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளும் அனைத்து விதமான முயற்சிகளும் தடை ஏற்படுமானால் மாணவர்கள் உளநெருக்கீடுகளுக்கு உள்ளாவார்கள். இவ்வாறு எதிர்கொள்ளும் நெருக்கடிகளை மாணவர்கள் எதிர்கொண்டு சமாளித்துக் கொள்ளும்வகையில் அவர்களது நடத்தைகள் அமைந்துள்ளன.

பொருத்தப்பாடு உடைய மாணவர்கள் கற்றலில் சிறப்பாக விளங்குவர். கற்றலில் தயார் இல்லாத நிலையில் கற்றல் பல்வேறு பின்னடைவுகளை ஏற்படுத்தல் பொருத்தப்பாடானது 3 வகைப்படும்.

- உடல் பொருத்தப்பாடு
- உள ரீதியான பொருத்தப்பாடு

- சமூக ரீதியான பொருத்தப்பாடு

சமூக, தனியார் செயற்பாடுகள் பொருத்தப்பாடு எனப்படுகிறது. உயிர், உடல் சார்ந்து தாம் வாழுகின்ற பிரதேசத்திற்கு ஏற்ப பொருத்தப்பாடு அமையும். (உ.ம்) வகுப்பறையில் கட்டுப்பாடுகளை விதித்தல், நேரத்திற்கு வகுப்பிற்கு வருதல் அல்லது, இவ்வளவு நேரம் வகுப்பறையில் இருக்க வேண்டும் என திணித்தல்.

இன்றைய பாடசாலைக் கட்டமைப்பால் பெருமளவான மாணவர்கள் பொருத்தப்பாடற்ற மாணவர்களாகக் காணப்படுதலினாலேயே பல சிக்கல்களும், பிரச்சினைகளும் தலைதூக்கி, கல்விச்செயற்பாடுகளைப் பொருளற்றதாக்கியுள்ளன. எனவே, கல்வியை வழங்கும்முன் மாணவர்களைப் பொருத்தப்பாடு அடைய வைத்துக் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதன் ஊடாகவே வெற்றியை அடைந்து கொள்ள முடியும்.

உளநெருக்கிடையின் தோற்றுவாய் மனமுறிவுகளும், முரண்பாடுகளுமாகும். ஒருவனுடைய முயற்சி தடைப்படும்போதும் தேவைகளை நிறைவேற்றாத போதும் ஊக்கிகள் செயலாற்ற முடியாத போதும் மனமுறிவு அல்லது விரக்தி ஏற்படும். ஒரே வேளையில் இரண்டு முரண்பட்ட தேவைகளை நிறைவு செய்ய முடியாது தத்தளிக்கும் போது மனமுரண்பாடு ஏற்படும்.

**மாணவர்களது பொருத்தப்பாட்டைச் சீர்குலைக்கும் காரணிகள்**

- உள ரீதியான காரணிகள்
- வெளிச்சூழல் ,சமூகத்துடன் தொடர்புடைய காரணிகள்

**உளரீதியான காரணிகள்**

ஒருவன் தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய எடுக்கும் முயற்சிகளில் ஏற்படும் தடைகளினால் உருவாகும் மனவெழுச்சிசார் வெளிப்பாடுகளே உளரீதியான தன்மைகளாகும். மாணவர்களிடம் ஏற்படும் மனமுறிவு, அச்சுறுத்தல், மன முரண்பாடு, தகைப்பு போன்ற உளரீதியான தன்மைகள் மாணவர்களின் பொருத்தப்பாட்டைச் சீர்குலைத்து நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

**மன முறிவு**

மாணவர்களின் மனத்தைத் தூண்டும் கருத்தோ அல்லது உணர்வோ தடைப்படுவதால் விரக்தி அல்லது அதிருப்தி ஏற்பட்டு மனமுறிவு உண்டாகிறது. அதாவது நோக்கம் நிறைவேற்றப்படாமையால் செயலற்ற தன்மை தோன்றி மனமுறிவாக மாறுகின்றது. மனமுறிவின் காரணமாக ஏற்படும் மாற்றங்களைச் சிலர் முதிர்ச்சி காரணமாகப் பொருத்தமான செயற்பாடுகளாக வெளிப்படுத்திக் காட்டுவர். பலர் பொருத்தமற்ற நடவடிக்கைகளைக் கடைப்பிடிப்பர். பொருத்தமற்ற நடத்தைகளுக்குத் தடை ஏற்படும்போது பிறழ்வான நடததைகளைத் தோற்றுவிப்பர். மனமுறிவில் பொருத்தப்பாடு அடையாதவர்கள் தொடர்பில் சில நுட்பங்களைக் கையாண்டு இவர்களிடம் சமநிலை ஆளுமைகளைத் தோற்றுவிக்க வேண்டும். உ-ம் வன்செயலுக்குரிய மூலகாரணம் மனமுறிவுதான் என சிக்மன் ஃப்ராய்ட் கூறியுள்ளார். மனமுறிவுக்குள்ளான மாணவர்கள் முரட்டுத்தனம், பயம், கவலை, துக்கம், பாடசாலையை விட்டு வெளியேறல் போன்ற நடத்தைகளை வெளிக்காட்டுவர்.

**மனமுறிவிற்கான காரணங்கள்**

<u>சூழல்</u> - ஒரு பிள்ளை தன் நண்பருடன் வெளியே விளையாட ஆரம்பிக்கும்போது மழை வந்து தடை செய்யலாம். நாம் சினிமாவிற்குப் போக வெளியேறும்போது நண்பர் ஒருவர் வீட்டிற்கு வந்து தடை ஏற்படுத்தலாம். இவைபோன்ற பல நேரடியாக நிகழும் தடைகளால் விரக்தி ஏற்பட்டு இலக்கினை அடையாமல் போகலாம்.

<u>சமூகக் காரணிகள்</u> - சமூகப் பழக்கவழக்கங்கள், சட்டங்கள், ஒழுங்குகள் ஆகியன நமது இலக்குகளைத் தடை செய்யும் சமூகக் காரணிகள். குழந்தைகள் தாம் விரும்பியவற்றை உண்ண, விருந்தாளிகள் முன்னிலையில் ஆடையின்றி நிற்க நாம் அனுமதிப்பதில்லை. பாடசாலை ஒழுங்குகள் பிள்ளைகளுக்குத் தடையாகவிருக்கும் இவ்வேளையில் மனமுறிவு ஏற்படலாம்.

<u>ஆளுமைக் காரணிகள்</u> - ஒருவரின் உடல், உள, சமூகக் குறைபாடுகள் மனமுறிவைக் கெடுக்கலாம். உடல் பருத்தவன், கட்டையானவன், நோயாளி, முடவன், நுண்மதி குறைந்தவன், கல்வியில் பின் தங்கியவன், எதற்கும் பயந்த சுபாவமுடையவன், சமூகத்தில் தனித்து விடப்பட்டவன் ஆகியோர் தமது தவிர்க்க முடியாத ஆளுமைக் குறைபாடுகளால் மனமுறிவடைவர்.

*பொருளியல் காரணிகள்* - வேலையின்மை, பஞ்சம் ஆகியன உதாரணங்கள். வறிய பிள்ளைகள் மற்றவர்களைப் போன்று உடையோ ஆபரணமோ அணிய முடியாது அல்லது சுவையான உணவு உண்ண முடியாது மனமுறிவடைதல்.

*மனிதத் தொடர்புகள்* - சிறுவயதில் வீட்டில் பெற்றோர் பிள்ளைத் தொடர்புகள் திருப்தியாக இல்லாவிட்டால் அல்லது ஆசிரியர், நண்பர் ஆகியோரிடமிருந்து அன்பும் ஆதரவும் பெற முடியாவிட்டால் அல்லது வெகுமதி தண்டனைகளின் உறுதியான நடைமுறை இல்லாவிட்டால் பிள்ளைகள் மனமுறிவடைவர்.

**மனமுரண்பாடு**

இரண்டு இலக்குகளில் எதனைத் தெரிவது என்னும் பிரச்சினை அடிக்கடி ஏற்படுவதுண்டு. ஓர் இலக்கின் விசை மற்றையதிலும் கூடியதானால் அதன்வழியே தொழிற்பாடு ஒன்று நடைபெறும். ஆனால் இரண்டும் சமவலுக் கொண்டிருக்குமானால் தொழிற்பாடு ஒன்றும் நடக்காது. இதுவே மன முரண்பாடாகும். இது 3 வகைப்படும்.

**அணுகல் - அணுகல் வகை**

இதிலுள்ள இரண்டு இலக்குகளும் ஒருவனால் நேர்திசையில் சமமாகத் தொழிலாற்றுவன. இரண்டு சினிமாப் படங்களில் எதற்குப் போவோம்? சாப்பாட்டுக் கடையில் உணவுப்பட்டியலில் இரண்டு சமவிருப்பமான உணவுகளில் எதனை எடுப்பது? நித்திரை செய்வோமா அல்லது இன்னும் சொற்பவேளை தொலைக்காட்சி பார்ப்போமா? விளையாடுவோமா அல்லது படிப்போமா? இவை அனைத்தும் அணுகல் - அணுகல் வகை மனமுரண்பாட்டிற்கு உதாரணமாகும்.

**தவிர்த்தல் -தவிர்த்தல் வகை**

தவிர்க்க வேண்டிய இரண்டு ஊக்கிகளில் ஒன்றைத் தெரிய வேண்டிய முரண்பாடு இதுவாகும். ஒன்றைத் தவிர்த்து மற்றையதைத் தெரிவு செய்ய முற்பட்டால் அதுவும் தவிர்க்கப்பட வேண்டியதாயிருக்கும். எனவே இரண்டையும் தவிர்க்க வேண்டிய நிலை. ஆனால் அது முடியாது ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும். உதாரணமாக மாணவன் ஆசிரியரின் தண்டனைக்குப் பயந்து படிக்க வேண்டியுள்ளான். ஆனால் படிப்பதும் அவனுக்குக் கசப்பான செயல். இங்கு ஒருபுறம் தண்டனையையும் மறுபுறம் படிப்பதையும் தவிர்க்க முடியாத நிலை அவனுக்கு இருக்கும். இதில் இரண்டு ஊக்கிகளும் ஒருவனின் எதிர்த்திசையில் வலுவுடையன.

**அணுகல் - தவிர்த்தல் வகை**

இது சாதாரணமாகக் காணப்படும் முரண்பாடாகும். இதில் ஒருவன் தெரிவு செய்ய வேண்டிய இரு ஊக்கிகளில் ஒன்று விருப்பமானது. நேர்த்திசையில் இழுக்கின்றது. மற்றையது வெறுப்பானது. எதிர்த்திசையில் தள்ளுகின்றது. இரண்டில் ஒன்றைத் தெரிய வேண்டிய நிலை இந்த வகை முரண்பாட்டில் உள்ளது.

1. ஒரு பிள்ளைக்குத் தேர்வில் வெற்றி பெற விருப்பம் அதேவேளை தனக்குத் தோல்வியும் கிடைக்கலாம் என்ற பயம்.

2. பாடத்தெரிவின்போது குறித்த பாடம் ஒன்றைக் கற்பதற்கு விருப்பம், ஆனால் அப்பாடம் எதிர்காலத்தில் தேவை ஏற்படாது என்ற அச்சம்.

**அச்சுறுத்தல்**

ஏதாவது ஒரு தீமை அல்லது அழிவு நிகழலாம் எனும்போது ஏற்படுவது அச்சுறுத்தலாகும். பாடசாலையை அடிப்படையாக கொண்டு புதிதாகப் பாடசாலையில் சேரும்போது, நண்பர்களை இழக்கும்போது, தேர்வில் தோல்வியைத் தழுவும்போது ஏற்படுவது அச்சுறுத்தலாகும். அச்சுறுத்தலின் பின்பு மனமுறிவு ஏற்படலாம். அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்து முறையான திட்டமிடலுக்கு முகங்கொடுத்து முறையாகத் திட்டமிட்டபின் தேர்வுக்கு முகங்கொடுப்பதால் தேர்வில் சித்தியடைந்து மனமுறிவைத் தடுக்கலாம். இதனை விடவும் மனமுறிவு ஏற்பட்ட போது அதனைச் சரியான நிலைக்குக் கொண்டு வருதல். தோல்வியை ஏற்றுக் கொள்ளும் உளநிலையை இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மாணவர் உளநிலையைப் பாதிப்புகளில் இருந்து விடுபடச் செய்விக்கவும் முடியும்.

ஒரு தரம் மனமுறிவு ஏற்பட்டால் திரும்பவும் அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புண்டு. இந்நிலையில் மனமுறிவும் அச்சுறுத்தலும் ஒன்றோடொன்று கலப்பதால் சில உளவியலாளர்கள் இரண்டும் ஒரே மனநிலையைக் காட்டுகின்றன என்று கூறியுள்ளனர். அதிகமாக கவலை கொள்ளும் பலரைக் கொண்டு

நடாத்திய ஆய்வுகளின் படி இரண்டும் ஒரே மன நிலையை கொண்டவை என கண்டறியப்பட்டுள்ளது.இருப்பினும் மன முறிவை விட அச்சுறுத்தல் தனி நபரிடம் பலமான செல்வாக்குச் செலுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. அச்சுறுத்தல் ஏற்படுவதற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

- நவீன பொருளாதார, சமூக சூழலியல் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குப் பொருட்களைப் பெற முடியாதபோதும் பின்தங்க வேண்டும் என்ற நிலை வரும்போதும் அச்சுறுத்தல் ஏற்படும்.
- கலைத்திட்டத்தை ஆசிரியர்கள் கற்பிக்காத நிலையில் பரீட்சை எழுத வேண்டிய வேளையில் அச்சுறுத்தல் ஏற்படும்.
- இயற்கை அழிவுகள் போன்றவற்றால் அமைதியற்ற நிலையில் தேர்வு தோன்றும் போது தாக்கம் ஏற்படும்.

**தகைப்பு**

ஒருவரின் மனத்தைக் களைப்படையச் செய்யும் ஓர் உளநிலையே தகைப்பு எனப்படும். பொதுவாக பல சந்தர்ப்பங்களில் தகைப்பு நிலை ஏற்படலாம். அதாவது தேர்வுக்கு ஆயத்தமாகும்போது அல்லது தேர்வு முடிந்து பெறுபேற்றை எதிர்பார்த்திருக்கும்போது சத்திர சிகிச்சை ஒன்றினை மேற்கொள்ள இருக்கும்போது, யுத்தம், இயற்கை அழிவுகள், அமைதியற்ற சூழல் பாதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படும். உ-ம். வன்செயலில் ஈடுபடல், அதிகம் சண்டை பிடித்தல், உடல் உள பாதிப்புக்கள்.

**பதகளிப்பு**

அதிகளவிலான துக்கம், பயம், தெளிவாகத் தெரியக்கூடிய நிலையில் தோன்றும் சிக்கலான மனவெழுச்சி அனுபவம் பதகளிப்பு எனப்படும். இதனால் நரம்புத்தளர்ச்சி, பேச்சுக் கோளாறு, அதிக நாடித்துடிப்பு, மயக்கம் போன்றன ஏற்படும்.

**மனமுறிவு**

மன முரண்பாடுகளின்போது ஏற்படும் விளைவுகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். அதாவது எல்லா நெருக்கிடைகளும் தீங்கானவைகளன்று. தேர்வுக்கு அல்லது வேறு முயற்சிகளுக்கு முன்னர் சிறிதளவு பதகளிப்பு இருந்தாலும் நன்றெனக் கருதப்படுகிறது. சிறு நெருக்கிடைகள் பணிகளைத் திறம்படச் செய்ய உதவும். ஆனால் தீவிரமானவையோ தீங்கானவை. தம் பிள்ளைகளைப் பெற்றோர்கள் சிறு நெருக்கிடைகளை அனுபவிக்க பெற்றோர் விடுவது நன்று. இச்சிறிய அனுபவங்களைப் பெற்றோர் அனுபவிக்க விடுவது பெரிய நெருக்கீடுகளை இலகுவில் தீர்ப்பதற்கு உதவும். தோல்வி, அநீதி, பெற்றோரின் உதவியுடன் தீர்க்க உதவியளிக்கப்பட வேண்டும். சிறு வயதில் சொகுசாய் வளர்ந்தபின் ஏதேனும் பெரிய நெருக்கிடைகளை எதிர்நோக்க முடியாது தவிப்பர்.

எனினும் அளவிற்கு மிஞ்சிய மனமுறிவுகளும் முரண்பாடுகளும் பிள்ளைகளுக்கு ஏற்படாதவாறு நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். நெருக்கிடைகள் ஒருவரிடம் தொழிற்படும் காலம், அதன் செறிவு, அவனுடைய ஆளுமைப்பண்புகள் என்பவற்றைப் பொருத்தே அவனிடம் கொண்ட விளைவுகளாக அமையும். கடுமையாக மனமுறிவு தீங்கானது சிறுவயதில் பெற்றோரை இழத்தல் பெற்றோரின் விவாகரத்து, வீட்டில் ஆதரவின்மை போன்ற தீவிர மனமுறிவுகளை அனுபவிக்கும் பிள்ளைகள் பிற்காலத்தில் சீர்கேடு, பிறழ்வான நெறி ஆகியவற்றைப் பெறக்கூடும்.

மன முறிவுகளுக்குரிய பொருத்தப்பாட்டு நுட்பமுறைகள் எனும்போது ஒருவன் காண்பிக்கும் பொருத்தப்பாட்டு முறை அவனுடைய ஆளுமைப் பண்புகளைப் பொருத்தே அமையும். மனமுறிவடையும் சந்தர்ப்பங்களில் பதகளிப்பேற்படாதவாறு சுய மதிப்பேற்படும் சந்தர்ப்பங்களில் அவன் சில பொருத்தப்பாட்டு முறைகளை மேற்கொள்வான். இவை அவனிடம் நனவிலி நிலையில் விருத்தியாகும். பிள்ளைகள் பிழையான மனமுறிவுகளைக் கைக்கொள்ளும்போது ஆசிரியர் எவ்வாறு அவர்களுக்கு உதவியளிக்க வேண்டுமென அறிவது அவசியமாகும்.

பொருத்தப்பாட்டு நுட்பமுறைகளைச் சரியாகப் பாகுபாடு செய்ய முடியாது எனினும் அவற்றை எதிர்த்தல், பின்வாங்கல் முறைகள் பிரதியீட்டு அல்லது இடம்பெயர் முறைகள் என 3 பெரும் கூறுகளாக வகைப்படுத்த முடிந்தாலும் சில முறைகள் இரண்டு கூறுகளுக்கும் பொதுவாக உள்ளன. இம்முறைகளுள் அடங்குபவைகளாக பின்வருவன காணப்படுகின்றன.

எதிர்த்தல் முறைகள் - மனமுறிவை அலட்சியம் செய்தல் அல்லது அதற்கெதிராகச் செயற்படுதல் அல்லது அதற்கு வேறு வகையில் விளக்கமளித்தல் எல்லாம் மனமுறிவைச் சீராக்கும் இலகுவான முறைகளாகும்.

- வன் செயல்
- நியாயங் காணல்
- புறத்தோற்றம்
- ஒடுக்கல்
- எதிர்த் தாக்கம்
- பின்வாங்கல் முறைகள்

தீர்க்க முடியாத மனமுறிவு ஏற்படும்போது பின்வாங்குதல் பயனுள்ள வகையில் அமையும். எனினும் வாழ்க்கை முறையில் முழுவதும் கைக்கொள்பவர் சமூகத்திற்கு ஒவ்வாதவர்களாகவும், பிரச்சினைகளைச் சரியாகத் தீர்க்க முடியாதவர்களாகவும் இருப்பர். அவர்கள்

- தனிமை விரும்பல்
- பின்னோக்கம்
- பகற்கனவு காணல்
- போதைப் பொருள், மதுபானம் அருந்துதல் போன்றவற்றைக் காட்டுவர்

**பிரதியீட்டு முறைகள்**

இத்தகைய முறைகளில் பிரச்சினையை வெற்றியுடன் தீர்க்க வேண்டிய வகையில் அது இடம்மாற்றப்படுகின்றது. சில உதாரணங்கள் வருமாறு: கவனம் தேடல், ஈடு செய்தல், ஒன்றுதல் போன்றனவாகும்.

**வெளிச்சூழல் காரணிகள்**

காரணிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

1. சமூக கலாசார மாற்றங்கள் - வேகமாக மாறிவரும் சமூக கலாசார மாற்றங்கள் மாணவர்களின் நடத்தைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வகுப்பறையில் அமைதியாக கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்கத் தடையாக அமைந்து விடுகின்றன.
2. பிள்ளை பெற்றோர்களுக்கிடையில் தொடர்பு குறைதல்
3. ஊடகங்களின் தாக்கம்
4. பிளவுபட்ட குடும்பம்
5. பாடசாலை - கலைத்திட்டம் - வகுப்பு நடைமுறைகள்
6. எதிர்கால இலட்சியமும் வேலைவாய்ப்பும்
7. துஷ்பிரயோகம்

**முடிவுரை**

நெறிபிறழ்வான மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனை சேவை தேவைப்படுகின்றது. இதற்கான காரணங்களாக

- வழிகாட்டல் தொழில்களைத் தெரிவு செய்தல்
- தமது தகுதியைத் தீர்மானித்தல் அதற்கேற்ப வேலையைத் தெரிவு செய்தல்
- புரிந்துணர்வு - விட்டுக் கொடுப்பு
- உளவியல் ரீதியாக சில சிகிச்சைகளுக்கு இவ்வாறாகப் பொருத்தப்பாடற்ற மாணவர்களின் பிரச்சினைகளை இனம்கண்டு தீர்வுகளளிப்பது மாணவர்களுக்கும், நாட்டுக்கும் ஏற்புடையதாக அமையும்.

**உசாத்துணைகள்**


- அரசரத்தினம், பூ.க. (2007), ''பிள்ளைகளை எப்படி அணுகவேண்டும்'' அகவிழி.
- அருள்மொழி, செ. (2008) ''கல்வி ஆய்வு முறைகள்'' எவக்கிறீன் பிரிண்டர்ஸ், மட்டக்களப்பு.
- ஆனந்தராஜா, யு.ஊ. (2006) ''உளவளத் துணை'' வின்சு பப்ளிகேஷன்.
- சின்னத்தம்பி, மா. (2008) ''பாடசாலையும் சமூகமும்'' குமரன் புத்தக இல்லம்.
- நவரெத்தினம், உ. (2007) ''கற்றல் கற்பித்தல் செயல் முறையில் கல்வி உளவியல்.''

- மகேசன், ஏ. (2010) "விசேட கல்வியும் வழிகாட்டடல் ஆலோசனைச் சேவையும்" எவக்கிறீன் பிரிண்டர்ஸ்
- விமலா கிருஷ்ணபிள்ளை, (2001) "ஆலோசனையும் வழிகாட்டலும்" சேமமடு பதிப்பகம், கொழும்பு.
- ஜெயராசா, சபா. (2007). "கடினமான வகுப்பறைகளும், பாடசாலைகளும் சமகால கருத்து வெளிப்பாடுகள்" அகவிழி.
- ஜெயராசா, சபா. (2008) கல்விக் கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும், சேமமடு பதிப்பகம், கொழும்பு.
- *http://www.child protection gov.lk*
- *11. http://www.commonwealtheducationfund.org.*

மதிப்பிடப்பெற்றது

# தமிழர் சிந்தனை மரபின் ஊடாக வெளிப்படும் மெய்யியல் அம்சங்கள்



**திரவியராசா நிரஞ்சினி**
உதவி விரிவுரையாளர்
(தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை)
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, nironiru03@gmail.Com

**ஆய்வு அறிமுகம்**

“மெய்யியல்” என்பது உண்மை பற்றிய தேடலாகும். இம்மெய்யியலானது ஆய்வு செய்யும் விடயங்களின் இயல்புகள், நோக்கங்களின் அடிப்படையில் நான்கு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பௌதீகவதீதம், அறிவாராய்ச்சியியல், ஒழுக்கவியல், அழகியல் ஆகியனவாகும். மெய்யியலின் விசேட பிரிவுகளில் ஒன்றாகவே தமிழர் மெய்யியல் அமைந்துள்ளது. தமிழர் மெய்யியல் என்பது மெய்யியலின் பிரதான எண்ணக்கருக்கள் தமிழர்களது வாழ்வியலில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் தொடர்பாக ஆராயும் ஓர் அணுகுமுறையாகும். மெய்யியலின் பிரதான எண்ணக்கருக்கள் தமிழர்களது வாழ்வியலில் ஊடுருவியுள்ளனவா? அவை எவ்வாறு ஊடுருவியுள்ளன? முதலிய கருத்துக்களை ஆய்வு செய்வதாகவும் தமிழர் மெய்யியல் விளங்குகிறது. அந்தவகையில் மெய்யியலின் பிரதான ஆய்வு விடயங்களான பௌதீகவதீதம், அறிவாராய்ச்சியியல், ஒழுக்கவியல், அழகியல் ஊடாகத் தமிழர்களின் மெய்யியல் சிந்தனைகளை இனம்கண்டு கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**1.பௌதீகவதீத சிந்தனைகள்**

மெய்யியல் விசாரணைகள் ஆரம்பத்தில் பிரபஞ்சத்தின் தோற்றம் தொடர்பாகப் பல ஆய்வுகளை மேற்கொண்டது. இதற்கு விடையிறுப்பதற்கு மேலைத்தேயத்தில் நான்கு மரபுகள் தோற்றம் பெற்று நீர், காற்று, அணுக்கள், அபய்ரோன் முதலியன பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணமானவை எனப் பதிலளித்தது. இந்நிலைப்பாட்டினைத் தமிழர் சிந்தனையிலும் காணக்கூடியதாக உள்ளது. தமிழர் சிந்தனை மரபில் குறிப்பாகச் சங்க காலத்தில் இயற்கை இகந்த அதாவது பௌதீகவதீத சிந்தனைகள் குறித்து மக்கள் எத்தகைய நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தனர் என்பதனை நோக்குவதற்கு வாய்ப்பாக, பௌதீக உலகம் குறித்துச் சங்ககால மக்களது நிலைப்பாட்டை நோக்குவது மிக அவசியமானது. சடம் குறித்த இயற்கைவாத அடிப்படையிலான நிலைப்பாட்டினையும் பௌதீகவதீத அடிப்படையிலான நிலைப்பாட்டினையும், இவர்கள் கொண்டிருந்தனர். எனினும் சிந்தனைகளைக் காட்டிலும், சடமே முதன்மை பெற்றிருந்தது.

புறநானூற்றுக் காலத்தில் இயற்கை இகந்த சக்திகள் குறித்த எதிர்மறையான நிலைப்பாட்டினைப் பல புலவர்கள் தமது தத்துவ சிந்தனைப் பாடல்களில் வெளிப்படுத்தியிருந்தனர். ஓர் அதீத ஒழுக்கமயப்பட்ட வாழ்வானது உயர் விழுமியங்களின் கடைப்பிடிப்புடன் ஒழுகப் பெறின் அவ்வாழ்வு ஒருவனைச் சுவர்க்க வாழ்வினுள் கொண்டு சென்று விடும் என்றும், மீண்டும் பிறவாமையை உறுதிப்படுத்தும் என்றவாறானதுமான கருத்தாக்கங்கள் பரவலாக இக்காலச் சிந்தனையாளர்களால் மறுதலிக்கப்பட்டன. புலன் அனுபவங்களுக்குக் கிடைக்கக்கூடியதும், விளக்கம் காணப்படக்கூடிய பொருட்களை மட்டுமே ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பாங்கே இக்கால மக்களிடம் நிலவின.

சங்ககால நூல்களில் ஒன்றான புறநானூறு, இறையின் இருப்பினையும், இயல்பினையும் பிரதிபலிக்கின்றது. இந்நூலில் காணப்படும் கருத்தமைவுகள், சோழர் காலத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட சைவசித்தாந்தம் உள்வாங்கிக் கொண்டிருக்கும் கற்பிதங்களுக்கு முன்னோடியாகவும், உடன்பாடானவையாகவும் காணப்படுகிறது.

புறநானூறு இறையிருப்பை ஏற்று இறைவனே உலகத் தோற்றத்திற்குக் காரணமானவன் என்பதையும் ஏற்றுக்கொள்கிறது. மேலும் இறைவனே படைத்தல், காத்தல், அருளல் ஆகிய மூன்றையும் ஆற்றுபவன் எனவும் குறிப்பிடப்படுகிறது. சிவன், திருமால், முருகன் முதலான பல கடவுளரையும் குறித்துப் புறநானூற்றுச் செய்யுள்கள் குறிப்பிட்டிருந்தாலும் ஓர் இறைவனை யாவற்றுக்கும் மேலானவன் என்ற செய்தியையும் இது வெளியிடுகின்றது. இவரே இறைமையுள்ள கடவுளராவார், இவரைக் குறித்துக்

குறிப்பிட்டிருக்கின்ற செய்யுள் வாக்கியங்கள் அறுதியாய்ச் சிவனையே படம்பிடித்துக் காட்டுவதாய் அமைகிறது. “நன்றாய்ந்த நீள்நிமிர் சடை முதுமுதல்வன்” (புறநானூறு 166ஆம் பாடல்)

இதிலிருந்து சிவனே மாற்றமற்ற உச்ச உயர் குறிக்கோள், அறமுறை இறுதியிலக்கணம். இந்த மேலான சிவன் அழிவில்லாதவன், மாற்றமில்லாதவன், மட்டுப்படுத்தப்பட்ட நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டவன் எனப் புறநானூற்றில் பாராட்டப்படுகிறது. தொல்காப்பியத்தில் இவ்வுலகம் ஐந்து மூலக்கூறுகளால் ஆனது எனக் குறிப்பிடப்படுகிறது. அவை முறையே நிலம், நீர், வளி, ஆகாயம், தீ ஆகும். இந்தப் பஞ்சபூத சேர்க்கைகளினாலான உலகம் அழிந்து போவதற்கான சாத்தியக்கூறுகளையும் கொண்டுள்ளது. இத்தகைய உலகப்படைப்பின் மூலகாரணி இறைவன் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. மேலும் இறைவன் விருப்பாலே உலகம் படைக்கப்படுகிறது. அவரின் விருப்பாலே அது அழிக்கப்படுகிறது. இதனால் இறைவனே உலகத் தோற்றத்தின் சடக்காரணியாகவும் துணைக்காரணியாகவும் விளங்குகிறார். ஆகாயத்தில் இயல்பாகச் சப்தத்தை இறைவன் ஏற்படுத்தியுள்ளான். ஆகவே மொழியினுடைய உருவாக்கமும் இறைவனால் ஆனது. இதற்குத் தொல்காப்பியம் சான்று பகர்கிறது. இதிலிருந்து கடவுள் இலக்கணத்திற்கும் இலக்கியத்திற்கும் காரணமானவர் என்பது புலனாகிறது. அதனைத் தொல்காப்பியம் “முனைவன் கண்டது முதல்நூ லாகும்” எனக் குறிப்பிடுகின்றது.

சைவசித்தாந்தத்தின் இறுதி இலக்கான சுவர்க்கப்பேறு பற்றிய கருத்தமைவுகள் தமிழர் சிந்தனை மரபில் காணப்படுகின்றன. சங்கப்பாடல்களில் வரும் “செய்குவம் கொல்லோ நல்வினை” (புறநானூறு-214) என்கின்ற பாடல் சுயபலியீடு செய்வதன் ஊடாக சுவர்க்கத்தை அடைய முடியாதென்றும், இலட்சியவாழ்வு வாழ்வதன் மூலமே சுவர்க்கத்தை அடையமுடியும்” என்ற கருத்தாக்கம் காணப்படுகின்றது. இக்கருத்தமைவைச் சங்கமருவிய காலத்து நூலான திருக்குறள் வலியுறுத்தி நிற்கின்றது.

“தன்னுயிர்தான் அறப் பெற்றானை ஏனைய
மண்ணுயி ரெல்லாம் தொழும்” (குறள். 268)

புறநானூற்றுக் கால தத்துவச் செய்யுட்கள் மிகவும் தீர்க்கமான மெய்யியல் கருத்துக்களைத் தனித்தனியாக, தனித்துவமாக வெளியிட்டிருந்தன. உடல், உயிர் வேறுபாடு, மறுபிறப்பு வாழ்க்கையின் பெறுமதி, சமூக அரசியல் தளைகளில் அகப்படாமல் இருத்தல் குறித்த எண்ணக்கருக்களைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. அத்துடன் இறைவனே உலகத்திற்கான வழி, காட்சியை விடவும் அறிவைக் கண்டு கொள்வதற்கான வழிகளும் உண்டு எனக் கூறுகின்றன.

**2.ஒழுக்கவியல் சிந்தனைகள்**

மெய்யியலின் பிரதான எண்ணக்கருக்களில் ஒன்றாக ஒழுக்கவியல் விளங்குகிறது. இது சீரான மனித நடத்தைக்கும் செம்மையான மனித வாழ்விற்கும் ஆதாரமான அடிப்படை நெறிகளுள் ஒன்றாக விளங்குகின்றது. மனித வாழ்க்கையின் இயல்புகளைப் பற்றியும் பிரச்சினைகளைப் பற்றியும் மனிதன் ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கியதில் இருந்து ஒழுக்கவியலும் அதனோடு தொடர்பான பிரச்சினைகளும் தோற்றம் பெற்றது. இத்தோற்றமானது நன்மை, தீமை, சரி, பிழை போன்ற எண்ணக் கருக்களினூடாக வளர்ச்சியடையத் தொடங்கியது.

ஒழுக்கவியலானது மனித செயல் பற்றியும் நடத்தையின் தரம் பற்றியும் ஆய்வு செய்கிறது. சாதாரணமாக நாம் பேசும்போது பயன்படுத்தும் சொற்களான நன்மை, தீமை, நல்லது, தீயது, ஒழுக்க செயல், ஒழுக்க ரீதியற்ற செயல், கட்டாயம் அதைச் செய்ய வேண்டும், கடமை, கடப்பாடு போன்ற சொற்களுக்கு உண்மையான அர்த்தம் என்ன? என்ற வினாவுக்கு விடையளிக்கவும் அவற்றுக்கு இடையே காணப்படும் வேறுபாடுகளை தெளிவாக்கவும் ஒழுக்கவியல் முனைகிறது. ஒழுக்கவியல் பயன்பாட்டை மூன்று வகையாகப் பிரித்து நோக்கலாம். அவையாவன,

- வாழ்க்கைமுறை அல்லது வாழ்க்கைத் தொகுப்பாகக் காணப்படும் ஒழுக்கம்
- நடத்தை அல்லது நடத்தை பற்றிய விதித் தொகுப்பு
- வாழ்வின் முறை பற்றியதும் நடத்தை விதி பற்றியதுமான கோட்பாடு அல்லது விசாரணை

தமிழர் சிந்தனை மரபில் அறவழிப்பட்ட வாழ்வினை நிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே ஒழுக்கவியல் பேசப்படுகிறது. ஒழுக்கம் சமூதாய ஒழுங்கமைவை, சமச்சீர்மையை நிலைப்படுத்துவதாய், இவ்வுலக வாழ்வின் பின்னராய் மனிதனது நிலை குறித்து நிலைப்படுத்தும், நிர்ணயப்படுத்தும், ஒன்றாகவும் அறம் கருதப்படுகிறது. இக்கருத்தமைவைத் திருக்குறளில் காணலாம்.

"அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன்பழிப்பது இல்லாயின் நன்று" ( குறள்;- 49)

தமிழர் சிந்தனை வரலாற்றில் அறம் என்னும் எண்ணக்கரு "ஏற்ற கைமாற்றாமை யென்னும் தாம் வரையாது ஆற்றாதார்க்கு ஈவதாம் ஆண்கடன்" எனும் நாலடியார் பாடலில், அதாவது இங்கு அறம் செய்தல் ஓர் அறவிதியாகவும், செய்வினையாகவும், மேலும் மரபுவழியாக நல்லனவற்றைப் பின்பற்றி ஒழுகுக என்றும் கூறுவதனூடாக விதியாகவும், செயற்பாடாகவும், நியம விதியாகவும் அமைவதைக் கண்டு கொள்ளலாம்.

அரசன் அறவழிப்பட்டவனாக வாழ்ந்தால் குடிகளும் அவ்வாறே வாழ்வார்கள். இதனால் அறத்தைப் போற்ற வேண்டிய முதற்கடன் அரசனுக்கே உரியது எனப் புறநானூற்றுப் பாடலில் கூறப்படுகிறது. "அறநெறி முதற்றே அரசின் கொற்றம்",

" அறம் புரிந்தென்ன செங்கோல் நாட்டம்" ( புறநானூறு 55ஆம்பாடல்)

எனும் பாடல் அடிகள் உணர்த்துகின்றன. அரசன் தனது ஆட்சியில் வேண்டுவோர், வேண்டாதோர் என வகைப்படுத்தித் தண்டனை வழங்காது அனைவரையும் ஒரே அளவுகோல் கொண்டு மதிப்பிடலே சிறந்த அறம் என்று புறநானூற்றுச் செய்யுள் ஒன்றில் கவிஞர் மருதனிள நாகனார் கூற்றாக வருகிறது.

தமிழர் சிந்தனை மரபில் அறம் முதன்மைப்படுத்தப்படுகின்றது. அறம் என்பதன் வழிப்பட்டே மனிதனுக்குத் தேவையான பொருள் தேடப்பட வேண்டும். அப்போதுதான் அது அர்த்தப்பாடுடையதாக இருக்கும். இதனைப் புறநானூறு 131ஆம் பாடல்

"சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்

அறத்து வழிப்படூஉம்"

என்கிறது. அறம், பொருள், இன்பம் எனும் மூன்றும் தமிழில் புருடார்த்தங்கள் என்றும் இவை அடைவதற்குரிய நோக்குகள் என்றும் சங்கப்பனுவல்கள் குறிப்பிடுகின்றன.

"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும் ஆற்றும்

பெரும்நின் செல்வம்"

மனிதன் அறம் செய்யக் கடமைப்பட்டவன். ஏனெனில் அவனுக்கு மட்டுமே ஆறறிவு உண்டு. விலங்கினத்துக்கு அது இல்லை. எனவே மானிடப்பிறப்பே உயர்பிறப்பு, சிந்தித்துச் செயலாற்றும் துணிவு மனிதனுக்கு மட்டுமே உண்டு. சிந்தனையின் வெளிப்பாடாய் அறம் போன்ற நல்ல செயல்களை ஆற்ற முடியும். இதனைத் தொல்காப்பியம் "மக்கள் தாமே ஆறறி வுயிரே…" எனும் சூத்திரத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

சமண தத்துவம், பௌத்த தத்துவம் கூறுகின்ற "வாழ்வானது மாயம் அது மண்ணாவது திண்ணம்" என்கின்ற கருத்தமைவைச் சங்கநூல் பாக்கள் முதன்மைப்படுத்தவில்லை. உலக வாழ்வு இன்பம், துன்பம் நிறைந்தது. இரவும் பகலும் மாறிமாறி வருவது போன்று இவ்வுலகமும் இவ்வுலக வாழ்க்கையும் இறப்பும் பிறப்பும் தன்னிச்சையாக இடம்பெறுவது. புணர்வும், பிரிவும் உடையது. இந்நிலைமைகள் யதார்த்தமானவை ஆனாலும் உலக வாழ்வானது நல்லது, இனியது எனவே உலகியல் வாழ்வில் அழுந்தி, தீயவற்றை ஒழித்து, நல்லனவற்றைச் செய்து வாழ்க எனக் கருத்துரைக்கிறது.

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்

அல்லது செய்தல் ஓம்புமின்"

எனும் பாடலடிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

### 3. அழகியல் சிந்தனைகள்

மெய்யியலில் கலைகளானது கலை கலையை வெளிப்படுத்தல், கலை உணர்ச்சியை வெளிப்படுத்தல், கலை அறத்தை வெளிப்படுத்தல், கலை சமூக மாற்றத்தை வெளிப்படுத்தல் என்ற வகைப்பாடுகளுக்கு ஏற்ப கோட்பாடுகள் ரீதியாக வளர்க்கப்பட்டன. ஆனால் தமிழர் சிந்தனை மரபில் கலையும், அழகியலும் கோட்பாடுகள் ரீதியாக வளர்க்கப்படாமல் மக்களின் வாழ்வியலையும், வாழ்வியல் கூறுகளையும், அதில் நிகழும் தவறுகளையும் சுட்டிக்காட்டுவதாக வளர்க்கப்பட்டன.

கலை என்பது ஒருவரது உள்ளத்தில் தோன்றும் எண்ணமானது பிறிதொருவரின் ரசனைக்கு விருந்தாக அமைவதனைக் குறிக்கும். தமிழர் சிந்தனை மரபில் கலை மனிதனை மையப்படுத்தியவாறாகவே

அமைந்திருந்தது. மனிதனது மேன்மையை நோக்கி முன்நகர்த்த வேண்டும் என்பதனையே தமிழர்களின் கலை மையமாகக் கொண்டு காணப்பட்டது.

சங்ககாலத்தில் கலையும், கலை ஆற்றுகையும் மக்களைக் கவர்ந்து அவர்களது அழகியல் நுகர்ச்சிக்கு விருந்தாய் அமைந்தன. சங்ககாலக் கவிதைகள் யாவும் சொற்சுருக்கமும், பொருள் விரிவும், கவித்துவச் செறிவும் கொண்டதாக அமைவதோடு சொல்லலங்காரம் மிக்க பல்வேறு அழகியல் அம்சங்களைக் கொண்டதாக உள்ளன. இதனடிப்படையில் சங்கத் தமிழர் அழகியலை,

1.தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் வகுக்கப்பட்ட மெய்ப்பாடுகள்

2.சங்ககால திணைக் கோட்பாடுகளின் வகைப்பாடுகள்

ஆகியவற்றின் ஊடாகவும் விளங்கிக் கொள்ளலாம்.

*1.தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் வகுக்கப்பட்ட மெய்ப்பாடுகள்*

தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் எட்டு வகையான மெய்ப்பாடுகள் கூறப்பட்டுள்ளன. அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை. இவ் எட்டுவகையான சுவைகளும் 32 வகையான காரணிகளால் தோற்றுவிக்கப்படுகின்றன.

*2.சங்ககாலத் திணைக் கோட்பாடுகளின் வகைப்பாடுகள்*

சங்ககாலத்தில் ஐந்நில மக்களின் நிலஅமைப்பு வேறுபாடுகளுக்கு ஏற்ப அன்பின் ஐந்திணையான குறிஞ்சி - புணர்தல், முல்லை - இருத்தல், மருதம் - ஊடல், நெய்தல் - இரங்கல், பாலை - பிரிதல் எனும் ஒழுக்கங்களைத் தீர்மானிப்பதற்கு இயற்கையின் அழகியல் அம்சங்கள் பயன்படுத்தப்பட்டன. உதாரணம் மலையும் மலை சார்ந்த இடமான குறிஞ்சி நிலத்தில் வாழும் வேடுவ மக்களின் காதல் ஒழுக்கத்தைப் புணர்தல் என்பர். இதனைப் பாடுவதற்கு கருப்பொருட்களாக

விலங்குகள்: புலி, யானை, பன்றி, சிங்கம், மான்

பறவைகள்: கிளி, மயில்,

இசைக்கருவி: குறிஞ்சி யாழ்

நீர்நிலைகள்: அருவி, சுனை

தாவரம்: குறிஞ்சி, வேங்கை, குவளை, அகில், மூங்கில்

பூ : குறிஞ்சி

ஆகியன பயன்பட்டன. சங்கத் தமிழரின் வாழ்வியலின் ஒவ்வொரு கூறும் கலையம்சம் நிறைந்ததாக இருந்தமையால் இவர்கள் கலை குறித்த இரசனையிலும், தேடலிலும் அதிக அக்கறைப்பாட்டினைக் கொண்டிருந்தார்கள். சங்ககாலச் செய்யுள்களில் கலை என்ற சொல் பல பெயர்களில் அழைக்கப்பட்டது. உதாரணம் "குரங்கு" - 18 இடங்கள், "மான்"- 25 இடங்கள், "மேகலை"- ஓரிடம்

தமிழரின் கலை வாழ்வினை

1.இயற்கை - புலவர்களின் கற்பனைத்திறன்

2.இசைக்கலைஞர்கள்

3.இசைக்கருவிகள்

4.ஆடல் கலைகள்

முதலியவற்றினூடாக விளங்கிக் கொள்ளலாம்.

*1.இயற்கை - புலவர்களின் கற்பனைத்திறன்*

புலவர்கள் செய்யுள்களைப் பாடும்போது இயற்கையில் நிகழும் சம்பவங்களை உள்ளுறை உவமையாகக் கையாண்டமையின் ஊடாக அகத்திணை, புறத்திணைப் பாடல்களில் இயற்கை செல்வாக்குப் பெற்றிருப்பதைக் காணலாம்.

"மையற விளங்கிய மணிநிற விசும்பிற்
கானலங் கொண்கன் தந்த........"

*2.இசைக்கலைஞர்கள்*

சங்க காலத்தில் பாணர், பாடினியர், கூத்தர் முதலிய இசைக்கலைஞர்கள் கலைத்துறையினைச் சார்ந்தோராக விளங்கினர். தமிழிலக்கிய வரலாற்றில் தொல்காப்பியக் காலத்திற்கு முற்பட்ட

பழங்காலத்தில் இருந்து சங்ககாலம் வரையிலும் இசை, கூத்து ஆகிய இரு கலைகளின் மரபினைப் போற்றி வளர்த்த பெருமை பாணரையும், பாடினியரையும் சேரும்.

பண்ணிசைப்பவர்கள் பாணர் என அழைக்கப்பட்டனர். இவர்கள் பாடல்களைப் பாடுவதிலும், யாழ் இசைப்பதிலும் கூத்து, கலை நிகழ்ச்சிகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினர். மேலும் சங்ககாலத்தின் கலையம்சத்தினை வளர்த்த பெருமை இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என மூவகைப்பட்ட பாணர்களைச் சேரும். இசைப்பாணரைப் பாடற்பாணர், அம்பனவர் என்றும், யாழ்ப்பாணரை யாழிசைத்துப் பாடுபவர் என்றும் அழைப்பர். பேரியாழ், மகர யாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்பன யாழ்ப்பாணர்கள் வாசித்தவற்றுள் சிறப்பானவையாகும்.

இதில் பேரியாழ் வாசித்த பாணரைப் பெரும்பாணர் என்றும், செங்கோட்டியாழாகிய சீறியாழை வாசித்த பாணரைச் சிறுபாணர் எனவும் அழைப்பர். அத்துடன் சங்ககால ஆற்றுப்படை நூல்களுள் பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை என்ற நூல்கள் இவர்களையே சிறப்பித்துக் கூறுகின்றன.

இவர்கள் மன்னர்களைப் பாடுவதனால் அவர்களால் பொருள் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர். சூழலுக்கு ஏற்பவும், காலத்திற்கு ஏற்பவும் பண்களை வகுக்கும் திறன்களையுடைய இவர்கள் மன்னர்கள் போருக்கும் செல்லும்போது உடனிருந்து பல்வேறு பாடல்களைப் பாடியுள்ளனர்.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு

மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றி…." (தொல்.புறத்திணை *93*)

*3.இசைக்கருவிகள்*

இயற்கையின் அசைவுகளின் ஊடாகத் தோன்றும் ஓசைகளைச் சங்கத் தமிழர்கள் இசைக்கருவிகளினால் பிறப்பிக்கப்படும் ஒலிகளுக்கு ஒப்பிட்டுள்ளனர். உதாரணம் வண்டுகளால் துளையிடப்பட்ட மூங்கிலின் மேற்புறத்தில் காற்றுப் படும்போது எழும் ஒலியைப் புல்லாங்குழல் ஓசை எனவும், பூக்களில் வண்டுகளால் தேன் நுகரப்படும் போது எழும் ஓசை யாழிசையாகவும், அருவிகளில் எழும் நீரின் ஓசை மத்தளத்தின் ஒலியாகவும், கலைமான்கள் ஓடும் போது பிறப்பிக்கப்படும் ஒலிகள் தாள ஒலியாகவும் கருதினர். சங்ககால இசைக்கலைஞர்கள் பல்வகைப்பட்ட இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர்.

"தெய்வ முணாவே மாமரம் புட்பறை"

"வாத்தியம் வாசிப்போர் வகைப்படுத்து மாற்றை ….." (புறத்திணை *335*)

சங்ககாலத்தில் *103* பண்களை இசைக்கும் *27* நரம்புகள் கொண்ட பேரியாழ் மீட்டுபவர்கள் பெரும்பாணர்கள் என்றும், *103* பண்களிலும் குறைந்த பண்களை மீட்டுபவரும், செங்கோட்டியாழை மீட்டுபவரும் சிறுபாணர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

"தேஎந் தீந்தொடைச் சீறியாழ் பாண." (புறநானூறு *70*)

*4.ஆடற் கலைகள்*

சங்ககாலத்தில் பல்வேறுபட்ட ஆடல்கலைகள் நிகழ்ந்துள்ளன. தைந்நீராடல், வீரன் வெறியாடல் (கிராமிய வழிபாட்டின் போது கூத்தர்கள் சென்று ஆடுவது), பிற ஆடல் கலைகளும் இடம்பெற்றன. சங்ககாலக் கலை மரபில் ஆடல், பாடல், கூத்துக் கலைகளில் ஈடுபட்ட பெண்களை விறலியர், பாடினியர் என அழைத்தனர்.

**4. அறிவாராய்ச்சியியல் சிந்தனைகள்**

மேலைத்தேய மெய்யியல் வரலாற்றில் நவீன காலம் "அறிவாராய்ச்சியியல் யுகம்" என அழைக்கப்பட்டது. அறிவு என்றால் என்ன? அறிவின் மூலங்கள் எவை? அறிவுக்கும் நம்பிக்கைக்கும் இடையில் ஏதாவது தொடர்பு உண்டா? ஏற்புடைய அறிவை எவ்வாறு பெறுவது? அறிவின் ஆக்கத்திற்குச் சிந்தனைத் திறன் முக்கியமா? அல்லது அனுபவம் முக்கியமா? என்பன பற்றியும் புற உலகினின்று புலன்கள் வாயிலாகப் புகுகின்ற காட்சிகளின்றி அறிவாற்றல் தொழிற்பட இயலுமா? அறிவாற்றல் அனுபவமின்றிப் பயன்பெறுதல் எவ்வாறு? அறிவாற்றல் தனித்தன்மையைக் காணவல்லதா? சிந்திக்கும் திறன் இல்லையேல் புறக்காட்சிகள் தொழிற்படுதல் எங்ஙனம்? இவ்விரண்டும் தேவை எனில் எதன் பங்கு பெரிது? என்றவாறாக அறிவு தொடர்பாகப் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. இதற்கு விடையளிக்கும் நோக்கில் இரு வேறு சிந்தனாக்கூடங்கள் தோற்றம் பெற்று (அறிவுமுதல் வாதம், அனுபவமுதல் வாதம்) எனத் தத்தமது சிந்தனையை வளர்த்துச் சென்றது.

தமிழர் சிந்தனை மரபில் அறிவாராய்ச்சியியல் தொடர்பாக மக்களது நிலைப்பாட்டினை நோக்கும் போது தமிழர்கள் அறிவைப் பெறுவதற்கு ஒரு முறையியலை முன்வைத்திருந்தனர். இது வடமொழியில் பிரமாணங்கள் என அழைக்கப்படுகிறது. அந்தவகையில் பத்து வகையான அறிவைப் பெறும் வாயில்களைத் தமிழியல் சிந்தனையாளர்கள் சுட்டிக்காட்டி அவற்றைக் காட்சி, கருதல், உரை என்ற மூன்றினுள் அடக்கிவிடலாம் என்றும் கூறுகின்றனர்.

மேலைத்தேயத்தில் உலகத்தோற்றத்திற்கான காரணங்களை ஆராய்ந்த மெய்யியலாளர்கள் நீர், நெருப்பு, அணுக்கள், அபைரோன், காற்று, எண்கள், இருப்பு, இருப்பின்மை என்றவாறாக தமது கருத்துக்களை முன்வைத்தனர். இத்தகைய நிலைப்பாட்டினைத் தமிழர் சிந்தனையிலும் கண்டு கொள்ளலாம். இது அவர்களுடைய அறிவு வளர்ச்சியினை எடுத்துக் காட்டுகிறது.

உலகம் தொடர்பான கருத்துக்களைத் தொல்காப்பியத்தில் கண்டுகொள்ளலாம்.

உதாரணம் "நிலம், தீ, நீர், வளி, விசும்போடைந்தும்

கலந்த மயக்கம் உலகம்" (தொல்காப்பியம் :635)

நீர்நிலம் தீவளி விசும்போ டைந்தும்

அளந்துகடை அறியினும் அளப்பருங் குறையை

செஞ்ஞாயிற்றுச் செலவும் (பதிற்.30: 1-5)

எனும் பாடலடிகள் தொல்காப்பியத்தை அடியொற்றி உலகம் பற்றிய வரையறைகளைக் கூறியுள்ளன.

**முடிவுரை**

செம்மொழி பேசும் தமிழர்கள் தமது வாழ்வியலில் மெய்யியலின் முதன்மையான எண்ணக் கருக்களான பௌதீக அதீதம், அழகியல், ஒழுக்கவியல், அறிவாராய்ச்சியியல் முதலிய சிந்தனைகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதனையும் இதனூடாக மெய்யியலில் மதீப்பீடுகளை மேற்கொள்ளுதல், (பொருள் சார்ந்த மதிப்பீடுகளை மேற்கொள்ளாது எண்ணக்கரு சார்ந்த மதீப்பீட்டினையே மேற்கொள்ளுதல்), பகுப்பாய்வை மேற்கொள்ளுதல், நியமம் கூறுகின்ற தன்மை போன்றவற்றில் தமிழர்கள் எத்தகையதொரு நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தனர் என்பதனையும் இக்கட்டுரையின் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

**உசாவியவை**


- ❖ அம்மன்கிளி முருகதாஸ், 2006, "சங்கக் கவிதையாக்கம் : மரபும் மாற்றமும்", குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
- ❖ அருணாசலம் மு, 1969, "தமிழ் இலக்கிய வரலாறு", ஆம் நூற்றாண்டு, தஞ்சை
- ❖ அனஸ் எம்.எஸ்.எம், 2003,"மெய்யியல் அறிமுக உரைகள்", கலாசார பண்பாட்டு வட்டம், அஸ்மினா கொம்பியூட்டர் என்டர்பிரைசஸ், பேராதனை.
- ❖ கிருஸ்ணராஜா சோ, 2000, "இருபதாம் நூற்றாண்டின் ஒழுக்கவியற் கொள்கைகள் - ஓர் அறிமுகம்" பண்பாடு - இலங்கை, இந்துக் கலாசார அலுவல்கள் திணைக்களம்.
- ❖ சிவானந்தமூர்த்தி க, 2012, "ஒழுக்க நியமங்களும் அதன் நடைமுறைகளும்", லங்கா புத்தக சாலை, கொழும்பு -12
- ❖ பாலசுப்பிரமணியன் கு.வெ, & பரிமணம் அ.மா., (உ.ஆ.), 2004, "பத்துப்பாட்டு, மூலமும் உரையும்", நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
- ❖ பிரேம்குமார் இ, 2013, "மேலைநாட்டு அழகியல்" (பிளேட்டோ முதல் நீட்ஷே வரை), குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
- ❖ வில்லியம் லில்லி, 1996, "அறவியல் ஓர் அறிமுகம்", தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு இந்தியா.
- ❖ ஜமாகிர் பீ.எம், 2012, "ஒழுக்கவியல் ஓர் அறிமுகம்", ஈஸ்வரன் புத்தகாலயம்.
- ❖ "சங்க இலக்கியமும் சமூகமும்", 2007, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
- ❖ "இந்து கலைக்களஞ்சியம்" தொகுதி-10, (ப-பௌ), 2009, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
- ❖ www. Nilacharal.com / karuvoolam / தமிழர் கலைகள்

- *https:// ta.m.wikipedia.org/wiki/* சங்க காலம்
- *https:// ta.m.wikipedia.org /wiki /* சங்ககாலக் கலைகள்
- *www.Vjpremalatha.blogspot.com* /புறநானூறு
- *www.ytamizh.com/Tirukulal/kural*-1330
- *https://ta.m.wikisorce.org/wiki/*உரைநூல்-மேற்கோள்-பாடல்கள்

மதிப்பிடப்பெற்றது

# நம்பியகப்பொருள் உணர்த்தும் கல்வி

முனைவர் **நா.ஹேமமாலதி**
துணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சாரதா கங்காதரன் கல்லூரி, புதுச்சேரி.

**கல்வியும் சமூகமும்**

பொதுவாக ஒரு சமூகத்தின் கல்வி அச்சமூகத்தின் வரலாற்றை அறிய உதவும். மனிதன் தன் வாழும் காலத்தில் பல்வேறு வகையான நோக்கங்களை அடைவதற்கு வழிகாட்டி. கல்வியே ஒரு சமூகத்தின் அறிவு வளர்ச்சியையும், சிந்தனை மரபையும் நிர்ணயிக்கும். மனிதனின் திறனை வளர்க்கவல்ல ஒரு மகத்தான சக்தி. கல்வி ஒரு சமூகத்தில் தொடர்ந்து உருவாகி வந்துள்ள அறிவை, பண்பாட்டை, சிந்தனையை, திறனை, வழங்குவதிலும், அறநெறிகளையும், விழுமியங்களையும் அடுத்தடுத்த தலைமுறைக்கும் பாதுகாப்பானதாக ஆக்குவதற்கும் அவர்கள் கையிடம் கொண்டு செல்லும் இடையறா ஒரு தொடர் சங்கிலி எனலாம். தம் முன்னோர்களிடமிருந்து இளம் தலைமுறையினருக்குக் கொடுத்து வரும் பல உள்ளீடுகளைக் (*Inputs*) கல்வி தன்னகத்தே கொண்டதாகும்.

இன்றும் கல்வி மனிதர்களை மேம்படுத்தி மனிதனின் முன்னேற்றத்திற்கும், செல்வாக்கிற்கும் தேவையான கருவியாக இருப்பதைக் காண்கிறோம். அன்றைய மனிதனின் வாழ்வுக்கும், வளத்திற்கும் அவர்களின் ஆட்சி மேன்மைக்கும் மூலமாக இருந்தது கல்வியின் பின்புலம்தான். அரசன் மிகுந்த அறிவுடையவனாக விளங்கினால் தான் உலகம் மேம்படும். கல்வி அறிவு இல்லாமல் அறியாமை நிரம்பியவனாக இருந்தால் உலகம் கெட்டழியும் என்பதைப் பின்வரும் புறப்பாடல் சுட்டிக்காட்டுகிறது.

அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி (புறம்.184: 5 - 7)

**கல்வி - விளக்கம்**

கல்வி என்ற சொல் காலத்திற்கு ஏற்றவாறு பல்வேறு பொருளில் வழங்கப்பட்டு வந்துள்ளது. மனிதனின் வளர்ச்சிக்கு உதவும் அனைத்துத் துறைகளிலும் கல்வியானது ஊடுருவி உள்ளது. கல்விக்கு கற்றல், கற்கை, கல்வியறிவு, வித்தை, பயிற்சி, நூல் எனப் பல பொருள்களைத் தருகின்றது தமிழ் லெக்சிகன். *Education* எனும் சொல் *Educare* எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டது(*A.S.Seetharamu, Philosophies of Education* (1989-11). *Educare* என்பதன் பொருள் விளக்கம் வெளிக்கொணர்தல் ஆகும். இதனையே தான் மாணவர்களின் நற்பண்புகளை வெளிக்கொணர்தல் என்று விவேகானந்தரும் கூறுவார். கல்வி என்பது தவk; முதலாகிய அகக்கருவிகளின் செயற்றிறம் என்கிறார் பேராசிரியர்.

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே" (தொல். பொருள். மெய். 9)

"வேண்டிய கல்வி யாண்டுமூன்று இறவாது" (தொல். பொருள். கற். 47)

"ஓதல் பகையே தூதுஇவை பிரிவே" (தொல். பொருள். அகத்.27)

"அவற்றுள்,
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" (தொல். பொருள். அகத்.28)

என்று பெருமிதம் குறித்த மெய்ப்பாட்டினை விளக்கும் பொருட்டும் அக்காலக் கல்வி மரபைக் குறிக்கும் ஓதல் என்ற சொல் பல இடங்களில் வந்திருப்பதனைக் கல்வி, ஓதல் எனும் இரண்டு சொற்களும் ஒரு பொருள் குறித்த சொல்லாகவே பயன்படுத்தியுள்ளார்.

ஆரம்பகாலக் கல்வி முறை குருசீடர் கல்விமுறை (*Teacher Central Education*) என அழைக்கப்படும். குரு சொல்லும் சொல் ஒவ்வொன்றையும் சீடன் மீண்டும் மீண்டும் மனனம் செய்யும் நிலை காணப்பட்டது. எனவே கல்வி, ஓதல் என்ற சொற்கள் ஒலித்தல் (*Sound*) எனும் பொருளிலேயே வந்துள்ளன. எனவே நன்கு வளர்ச்சியடைந்த காலத்திலேயே கல்வி ஒலித்தலுடன் தொடர்புடையதாக இருந்துள்ளதால் இச்சொல்லின் தோற்றம் ஒலித்தலுடன் தொடர்பு கொண்டுள்ளது எனலாம்.

இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் நன்கு வளர்ந்துவிட்ட அறிவியல்சார் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. கற்பித்தலில் பல மாற்றங்கள் ஏற்பட்டாலும், கற்பித்தலுக்கான கருவிகள் போதுமானதாக இல்லை. தொடக்க காலத்தில் கல்வி என்பது ஒலித்தலின் மூலம் மட்டுமே கற்றல் என்பது பரிமாறப்பட்டது என்பதில் ஐயமில்லை. இத்தகைய உயர்ந்த கல்வியை நாற்கவிராசர், தான் இயற்றிய நம்பியகப்பொருளில் எங்ஙனம் சுட்டியுள்ளார் என்பதை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**நாற்கவிராசர்**

இவர் சைன சமயத்தைச் சார்ந்தவர் என்பதைப் பாயிரத்தின்வழி அறியமுடிகிறது. நம்பி நயினார் என்ற இயற்பெயர் கொண்ட இவர் பாண்டி நாட்டுத் திருப்புள்ளியங்குடியில் வாழ்ந்த உய்ய வந்தார் என்ற முத்தமிழ் ஆசானுடைய மகனார். ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் பாடவல்லவராதலின் இவர் நாற்கவிராச நம்பி எனச் சிறப்புப் பெயர் பெற்றார். இவரது காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியும் 13ஆம் நூற்றாண்டின் தொடக்கமுமான பாண்டியன் குலசேகரன் காலமாகும். தொல்காப்பியத்தையும், சங்க இலக்கியத்தையும் இறையனார் களவியலுரையையும் நன்கு ஆராய்ந்து அவற்றுள் வகுத்துக் கூறப்பட்ட தகவல்களைத் தொகுத்துச் சுருக்கமாக இந்நூலைச் செய்துள்ளார். அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என ஐந்தாகப் பகுத்து மொத்தம் 252 நூற்பாக்களில் அகப்பொருட் செய்திகளைச் சொல்லிச் சென்றுள்ளார். இவரே இந்நூலுக்கு உரையையும் எழுதியுள்ளார்.

“மனிதரும் தேவரும் துதிக்க, முக்குடையின்கீழ்ச் சிங்கம் சுமந்த பொற்கட்டிலில் மதிமூன்றும் கவிய, உதய மலையில் இளஞாயிறு ஒன்று இருந்தாற்போல அழகோடு விளங்கியவனும், மெய்ப்பொருளை அருளிச் செய்தவனுமான அருகதேவனது திருவடியைச் சேர்ந்த திருப்புள்ளியங்குடி உய்ய வந்தான் என்னும் ஆசிரியனுக்கு மைந்தனாய்த் தோன்றி ஆரியம் தமிழ் என்னும் இரண்டற்கும் தலைவனாகவும் உள்ள பாற்கடல் போன்ற பல்புகழைப் பரப்பிய நாற்கவிராச நம்பி என்ற பெயருடையவன் ஆவான்” என்று சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர். ஆனால் சிறப்புப் பாயிரம் பாடியவர் யார் என அறியமுடியவில்லை.

**சமயக் கல்வி**

தொடக்க காலத்தில் அந்தணர்களுக்கு மிகுந்த மதிப்பு வழங்கப்பட்டிருந்தது. அவர்களைக் கல்வியாளர் எனப் போற்றியுரைத்துள்ளனர். மறைநூல்களைக் கற்றுணர்ந்து பலருக்கும் பயன் நல்கும் பணியை அந்தணர்கள்; செய்துள்ளனர்.

“ஓதல் முதலா ஓதிய ஐந்தினும்

பிரிவோன் அழுங்கற்கும் உரிய னாகும்” (நம்பி.அகத்.86)

என்பதில் பிரிவு பற்றி அகத்திணையில் உரைக்கும்போது கல்வி பயிலுதல் முதலாக ஓதற்பிரிவு, நாடுகாவல், தூதிற்பிரிவு, துணைவயிற்பிரிவு, பொருள்வயிற் பிரிவு என ஐந்துக்கும் தலைவன் பிரிந்து செல்வான் எனச் சொல்லுமிடத்தில் ஓதற் பிரிவு என்பது வேதம் ஓதுதல் என்னும் கல்வி காரணமாகப் பிரியும் பிரிவு. இது அந்தணர், அரசர், வைசிகர் என்னும் மூவகை வருணத்தார்க்கும் உரியது என்றும்,

“ஓதற் றொழிலுரித் துயர்ந்தோர் மூவர்க்கும்”

“அல்லாக் கல்வி எல்லார்க்கும் உரித்தே” (நம்பி. அகத். 69,70)

வேதம் அல்லாத பிற கல்வி நான்கு வருணத்தார்க்கும் உரியது என்றும் கூறுவர். இதில் அல்லாக் கல்வி என்பது வேதக் கல்வியல்லாத பிற கல்வி. அஃதாவது, படைக்கலம் பயிறல், யானை, தேர், குதிரை முதலியன ஊர்தல் என்பர். இதில் அந்தணர் தவிரப் பிறரும் கல்வி பயின்றனர் என்பதையும் அக்காலத்தில் அந்தணர்களால் மட்டுமே சமயப் படைப்புகள் காக்கப்பட்டன எனவும், சமயக் கல்வி முறையாகக் கற்பிக்கப்பட்டது எனவும் தெரியவருகிறது. இக்கூற்றுக்குப் பின்வரும் சங்க அடிகளைச் சான்றாகக் காட்டலாம்.

“மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே” (புறநானூறு 1:6)

“நான்மறை முனிவர்” (புறநானூறு 6:20)

“வேத வேள்வித் தொழின்” (புறநானூறு 224:9)

மேலும்,

“ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன”

எனத் தொல்காப்பியர் சுட்டும் இடத்தில், ஓதல் என்ற சொல் அக்காலத்தின் அடிப்படைக் கல்விமுறையையே குறித்துள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் ஔவையாரின் "ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" என்னும் பாடலடியும் அமைந்துள்ளது. அனைத்துச் சமூகத்தினருக்கும் பொதுவாகவே ஔவையார் மொழிந்துள்ளதைக் காணும்போது, அக்காலக் கல்வி ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமானதாக இல்லை என்பதை உணரமுடிகின்றது. இதன்வழி அக்காலக் கல்விமுறையில் வருணப் பாகுபாடு ஆளுமை செலுத்துகின்ற ஒன்றாக இல்லை என்பதை நம்மால் அறியமுடிகிறது. பின்னாளில் இக்கருத்தில் மாற்றங்கள் நிகழ்துள்ளதையும் உணரமுடிகின்றது.

**குருகுலக் கல்வி**

அக்காலத்தில் குருவுக்கு உதவியாக அருகில் இருந்தும்> தேவையான பொருட்களைத் தந்தும் குருவிடம் கல்வி பயின்றதைப் புறநானூற்றால் அறியமுடிகின்றது.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" (புறநானூறு 183:1-2)

அங்ஙனம் கொடுத்துஇ; பயிலுதலுக்கு;; தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்ல நேர்ந்தது. கற்பு;; காலத்தில் நிகழும் பிரிவின் வகையில்,

"இல்வாழ்க்கையே பரத்தையிற் பிரிவே
ஓதற் பிரிவே காவற் பிரிவே
தூதிற் பிரிவே துணைவயிற் பிரிவே
பொருள்வயிற் பிரிவெனப் பொருந்திய ஏழும்
வளமலி கற்பின் கிளவித் தொகையே" (நம்பி. 201)

என்பதில் இல்வாழ்க்கையில், பரத்தையிற்பிரிவு, ஓதற்பிரிவு, காவற்பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு எனப் பொருந்துகின்ற ஏழும் வரும். இதில் ஓதற்பிரிவு என்பது கல்வி காரணமாகப் பிரியும் பிரிவு. இப்பிரிவிற்கான காலவரையறையையும் நாற்கவிராச நம்பி கீழ்வருமாறு சுட்டுகின்றார்.

"ஓதற் பிரிவுடைத் தொருமூன் றியாண்டே" (நம்பி. 89)

என்பதில் ஓதற்பிரிவு மூன்றாண்டு எல்லையை உடையது. பிற பிரிவுகள் ஓராண்டுக்கு உரியன. இங்ஙனம் கல்விக்காகப் பிரியும் தலைவன் கல்வி முதலாகிய எல்லா வினைகளுக்கும் தலைவன் தலைவியிடம் சொல்லியும் சொல்லாமலும் பிரிவான் என்பதை,

"கல்வி முதலாக எல்லா வினைக்குஞ்
சொல்லி அகறலுஞ் சொல்லா தகறலும்
உரியன் கிழவோன் பெருமனைக் கிழத்திக்கு" (நம்பி. 80)

என்று சுட்டுகிறார் நம்பி. ஏனெனில் குருகுலக் கல்விNa பழங்காலத்தில் பண்பாட்டையும் இலக்கியr; செல்வத்தையும் கலை மாட்சியையும் அரசியல் ஒழுக்கங்களையும் ஆய்வியல் திறனையும் அறிவதற்கு வாய்ப்பளித்தது. அதற்கு இல்லற வாழ்க்கை இடையூறாக இருந்துவிட;f; கூடாது என்பதற்காகg; பிரிவு மேற்கொண்டிருக்கலாம். இந்த மூன்றாண்டு காலப் பிரிவில்,

"ஓதற் ககன்றோன் ஒழிந்திடை மீண்டு
போதற் கியையவும் புலம்பவும் பெறாஅன்" (நம்பி. 92)

தலைவியை விட்டு ஓதற்குப் பிரிந்த தலைவன் அவ்வோதலைத் தவிர்;து இடையிட்டு மீண்டு வருதலும், ஓதுகின்ற இடத்தில் தலைவியை நினை;துஇ; புலம்பலும் கூடாது என்கிறார். ஏனெனில் அக்காலத்தில் 'இளமையில் கல்' என்னும் உயர்நெறி சான்றோர் பெருமக்களால் வற்புறுத்தப்பட்டது. இளம் வயதில் கற்காதவன் மிகவும் இரங்கத் தக்கவனாவான். இது அரசர் முதல் அனைவருக்கும் உணர்த்திய அறவுரையாகும். அறியாமை என்னும் அவல நிலையிலிருந்து விடுபடக் கல்வி என்னும் கருவியைக் கையிலெடுக்க முனைந்தனர். ஆனால் தலைவியானவள்,

"பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை

வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றொருமையிற் கூறிய வொன்பது வகைய
கல்வி முதலா வெல்லாப் பிரிவும்'' (நம்பி. *209*)

என்பதில் *1.* கல்விக்குரிய பிரிவைத் தலைவனால் உணர்ந்த தோழி தலைவிக்கு உணர்த்தல் *2.* தலைவன் கல்விக்குப் பிரிந்தவிடத்துத் தலைவி கார்ப்பருவம் கண்டு புலம்பல் *3.* ஓதற்குத் தலைவன் பிரிந்த போது கார்ப்பருவம் கண்டு வருந்திய தலைவியைத் தோழி ஆற்றுவித்தல் எனத் தலைவி பல நிலைகளில் புலம்பிக் காலங் கடத்துவாள். ஏனெனில் அக்காலத்தில் பெண்கள் கல்விக்காகப் பிரிதல் என்பது இல்லை. கல்வியின் மேன்மையினை உணராமையினால் பல நிலையில் புலம்பக் கூடியவளாக இருந்திருக்கின்றாள். கல்லாதோரும் தகைசான்ற மனிதராய் வாழ்ந்த இப்பூமியில் கற்பது கைம்மண் அளவாயினும் 'செய்வன திருந்தச் செய்' என்னும் பழமொழிக்கேற்றவாறு அக்கல்வியை முழுமையாகக் கற்க முற்பட்டனர்.

தொல்காப்பிய காலந்தொட்டே கல்வி மையப் பாடம், விளிம்புநிலைப் பாடம் என இருவேறு நிலையில் இயங்கி வந்துள்ள நிலையை நம்பியகப்பொருளிலும் காண முடிகின்றது.

**முடிவுரை**

நம்பியகப்பொருளைக் கல்வியியல் நோக்கில் அணுகியதன் வாயிலாக அகத்திணைக் கல்வியின் முக்கியதுவத்தையும் வடமொழி சார்ந்த கல்வி தமிழகத்தில் மையங் கொண்டுள்ளமையும் தெரிந்து கொள்ள முடிந்தது. மையமாக விளங்கிய வடமொழி சார்ந்த கல்விக்கு இணையாகத் தமிழ்மரபு சார்ந்த கல்வி சங்கத் தமிழர்களின் வாழ்க்கை வீரம், காதல் என்ற பண்பாட்டுக; கூறுகளில் மட்டும் அமையாமல், அறம் தவறாமை, பெரியோரை மதித்தல், கற்றவரை வணங்குதல், ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்தல் போன்றவற்றின் கலவையாக அவர்களின் வாழ்வு வடமொழி சார்ந்த கல்விக்கு விளிம்பில் இயங்கி வந்ததை அறியலாம். இன்றைய கல்வியும் இவ்வாறுதான் செயல்படுகிறது. தாய்மொழிவழிக் கல்வி விளிம்பிலும், வேற்றுமொழிக் கல்வி அதாவது அந்நிய மொழிக் கல்வி மையத்திலும் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பது உண்மையே!

**துணைநூல்கள்**


- தொல்காப்பியம், கழக வெளியீடு.
- புறநானூறு, கழக வெளியீடு.
- நம்பியகப்பொருள், கழக வெளியீடு.

மதிப்பிடப்பெற்றது

# விசேட கல்வியின் முக்கியத்துவமும், வினைத்திறனான விசேட கல்வி வழங்குவதில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களும்



*Shandru Mariyadas (Lecturer- prob),*
*Faculty of Arts and Culture, Dept. of Education and Childcare,*
*Eastern University, Srilanka.* chandrumariyadas@yahoo.com

**ஆய்வுச்சுருக்கம் (Abstract)**

விசேட கல்வி என அழைக்கப்படுவது தற்போது உட்படுத்துகைக்கல்வி என பிரபல்யம் பெற்றுக் காணப்படுகின்றது. இக்கல்வி முறையானது குறைபாடுகளையுடைய விசேட தேவைகளை வேண்டி நிற்கும் மாற்றுத்திறனாளிகளது ஆற்றல்களை வளர்க்க உதவுகின்ற ஒரு கல்வி முறையாகும். அந்தவகையில் பிள்ளைகள் அனைவருமே ஏதாவது குறைபாடுகளைக் கொண்டிருப்பது வழமையானதாகும். இதனைப் போக்கியவாறு கல்வி வழங்க வேண்டியது கல்வித்துறையில் உள்ளவர்களினதும் பெற்றோர்களினதும் தலையாய கடமையாகும். இந்தக் குறைபாடுகளைக் கொண்டு பிள்ளைகளை ஒதுக்கிவிட முடியாது. எனவே இவர்களுக்குக் கல்வி வழங்குவதே விசேட கல்வியாகும். சாதாரண வகுப்பறைச் செயற்பாடுகளூடாகத் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதவர்கள் அல்லது அவ்வாறு மேற்கொள்வதில் இடர்பாடுகளை எதிர்கொள்பவர்கள் விஷேட தேவையுடைய சிறார்களாகக் கருதப்படுவர். இவர்கள் சாதாரண பிள்ளைகளிலும் பார்க்க உடல், மனவெழுச்சிப் பண்புகளில் அதிக வேறுபாடு கொண்டவர்களாகக் காணப்படுவர். இவர்களுக்கு மேலைநாடுகளில் விசேடமான பாடசாலைகள் அல்லது விசேடமான வகுப்புகள் உள்ளன. எனினும் இலங்கை நாட்டில் சாதாரண வகுப்பறைகளிலேயே அவர்கள் வைக்கப்படுகின்றனர். இவர்கள் மாறுபட்ட நடத்தைக் கோலத்தை வெளிக்காட்டுபவர்களாக காணப்படுவதால் இவர்களைச் சாதாரண மாணவர்களுக்குக் கற்பித்தலை மேற்கொள்வது போன்று கற்பித்தலுக்கு உட்படுத்த முடியாது. இவர்கள் உடல், உள ரீதியாகப் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர். இவர்களது விசேட கல்வி தொடர்பாக தற்போது உலகளாவிய ரீதியில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மாற்றுத்திறன்களையுடைய மாணவர்களுக்கான கல்வி மட்டுமன்றி ஆசிரியர்களுக்கான பயிற்சிகளையும், இம்மாணவர்களது சூழல் மற்றும் சுகாதார வசதிகளையும் மேம்படுத்தும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். தற்போது இலங்கையிலும் இது போன்று முக்கிய கவனம் செலுத்தப்படுவதோடு அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் வெளிநாட்டு நிதியுதவியுடன் பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றன. இந்தவகையில் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச பிரிவிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்குக் கல்வி வழங்கும் விசேட கல்வி நிறுவனங்கள் விசேட தேவையுடைய மாணவர்களுக்காக எத்தகைய கற்பித்தல் மற்றும் பராமரிப்பு முறைகளை மேற்கொள்கின்றன என்பதை ஆராய்ந்து வெளிப்படுத்தும் பொருட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள் :** வினைத்திறன், விசேட கல்வி, உட்படுத்துகைக் கல்வி, விசேட கல்வி நிறுவனங்கள்.

## 1.அறிமுகம் (Introduction)

நவீன உலகில் மாறி வருகின்ற சமூக மாற்றங்களுக்கேற்பவும், சமகாலத் தேவைகளுக்கேற்பவும், போட்டிச் சந்தை நிலைமைகளுக்கேற்பவும் சமூகத்தின் சகல பிரிவினர்களுக்கும் சமமான கல்வி வழங்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. உலகக் கல்விச் சிந்தனையாக அறிவதற்குக் கற்றல், ஆக்குவதற்குக் கற்றல், ஆவதற்குக் கற்றல், கற்றலுக்காகக் கற்றல் போன்ற எண்ணக்கருக்கள் தோற்றம் பெற்றுக் கல்வி இலக்குகள் மாற்றம் பெற்று வருகின்றன (Unesco,2002). இந்த வகையிலேயே மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வியின் அவசியமும் முக்கியத்துவமும் இன்று கல்விப்புலத்தில் முதன்மை பெறுகின்றது. உலகெங்கும் கல்வி துரிதகதியில் மிகப் பரவலாக மாற்றமடைந்தும் வளர்ச்சியடைந்தும் வருகின்றது. இக்காலகட்டத்தில் கல்வியின் முக்கியத்துவம் பெருகி வருகின்றது. எனவே மாணவர்கள் தொடர்ந்து கற்றல் அறிவு, திறன், மனப்பாங்கில் வளர்ச்சி பெறவும், சமூகத்தில் நல்மனிதனாகவும், தானும் சமூகத்தில் ஓர் அங்கத்தவன் எனும் உணர்வுடன் வாழவும் செவிப்புலனற்றோர், விழிப்புலனற்றோர், மந்தப் புத்தியுடையோர், உடல்

ஊனமுற்றோர் போன்ற மாற்றத்திறனுடையோர் கல்வி பெற வேண்டியது அவசியமானதுடன் அதற்கான வாய்ப்புக்களைக் கல்விச் சமூகம் மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகின்றது. (நிகம் கல்விமாணிப் பட்டக் கற்கைநெறி, சிறப்புமலர் 2002 - 2004) சகலரும் கல்வியைப் பெறும் உரிமை உள்ளவர்களே. ஆகவே மாற்றுத்திறன் கொண்ட நபர் தனது திறமைகளையும் அபிலாசைகளையும் அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குக் கல்வி, பயிற்சி, புனர்வாழ்வு மற்றும் போதனைகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும் உரியுடையோராவர். செவிப்புலன் அற்றோர், விழிப்புலனற்றோர், உடல் குறைபாடுடையோர் பொது வாழ்க்கைக்கும் தொழில் நிலையங்களுக்கும் ஒன்றிணைவதை இலக்காகக் கொண்டு சகல கல்வி, பயிற்சி மற்றும் கலாச்சார வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்தல் வேண்டும். அவ்வாறு ஒன்றிணைத்தல் மிகவும் ஆரம்ப நிலையிலேயே இடம்பெற வேண்டும். ஒவ்வொரு தனிநபரினதும் தனிப்பட்ட சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு கல்வி மற்றும் தொழில் பயிற்சி வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் வேண்டும்.

மாற்றுத் திறனுடைய மாணவர்களைச் சாதாரண மாணவர்களுடன் பாடசாலைகளில் இணைத்துக் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுத்தல் என்பது மாற்றுத்திறனுடைய மாணவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களின் மீதான கவனிப்பு மிகக் குறைவாகவே இருக்கும். மாற்றுத்திறனுடைய மாணவர்கள் ஏனைய சாதாரண மாணவர்களை விட மாறுபட்ட செயற்பாட்டை வெளிக் காட்டுபவர்களாகவே காணப்படுவர். விசேடமாக கவனித்து அவர்களை பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களது தேவைகளை கண்டறிந்து அவர்களுக்கு ஏற்ப கல்வியை வழங்குவதோடு புனர்வாழ்வு, தொழில் பயிற்சி போன்றவற்றையும் வழங்க வேண்டியுள்ளது. இவ்வாறான கல்வியை சாதாரண மாணவர்களுடன் வைத்து வழங்குவது என்பது சாத்தியமான விடயமல்ல. மேலும் மாற்றுத்திறனுடைய மாணவர்கள் பொதுவாக தங்கியிருந்து கற்றலை மேற்கொள்வது சிறந்ததாக கருதப்படுகிறது. மேலும்; மாற்றத்திறனுடையோருக்கு கற்பிக்கின்ற ஆசிரியர்கள் விசேட கல்வி தொடர்பான பூரண அறிவுடையோர்களாகவும் இருக்க வேண்டும். (சிவகுமார், 2007) ஒரு மாணவன் ஆரம்பக் கல்வியைக் கட்டாயம் கற்க வேண்டும் என்பது ஐக்கிய நாடுகள் சிறுவர் சாசனத்தின் யாப்புரையில் கூறப்பட்டுள்ளதுடன் இது சிறுவர்களின் உரிமையுமாகும். இதனடிப்படையிலே இலங்கையில் 5-14 வயது வரையான சிறுவர்கட்குக் கட்டாயக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (Unesco:1999) சாதாரண மாணவர்களுடன் மாற்றுத்திறனுடைய பிள்ளைகள் சேர்ந்து கற்றலை மேற்கொள்ளும்போது அக்கற்றல் செயற்பாட்டுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவர்கள் கற்றல் செயற்பாட்டிலிருந்து ஓரங்கட்டப்பட்டு ஒதுங்கிக் கொள்ளும் நிலையும் உருவாகலாம்.

**2. ஆய்வுப் பின்னணியும் நியாயப்பாடும்**

மேற்படி விசேட கல்வி வழங்கும் நிறுவனங்கள் மாற்றுத்திறனுடையோரின் கல்வியில் செலுத்தும் பங்களிப்புப் பற்றியதான இவ்வாய்வு விசேட கல்வியை வேண்டி நிற்கின்ற மாணவர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ளது. அதாவது மட்டக்களப்பு மாவட்டத்தில் 5914 விசேட தேவையுடைய பிள்ளைகள் இருப்பதாக மாவட்டக் காரியாலய புள்ளிவிவர அறிக்கை குறிப்பிட்டுக் காட்டுகின்றது. ஆனால் 5914 மாணவர்களும் கல்வியைப் பெறவும் இல்லை, அதற்கான வசதிவாய்ப்புக்கள் கிடைக்கவும் இல்லை. இதற்கான காரணம் சமூகத்தில் விசேட கல்வி தொடர்பான அறிவு இன்மையேயாகும். எனவே இவ்வாய்வின் ஊடாக விசேட கல்வி என்றால் என்ன என்பதை ஓரளவுக்கேனும் எடுத்துக் கூறி விசேட தேவையுடைய பிள்ளைகளுக்குக் கல்வியை பெற்றுக் கொடுக்கப் பெற்றோரை விழிப்பூட்டலாம். மேலும் இம்மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் விசேட கல்வி தொடர்பாக இதுவரை பெரும்பாலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆதலால் இவ்வாறான புதிய ஆய்வுகளைச் செய்வதனால் சமூகம் பல நன்மைகளை அடையக் கூடியதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலும் இவ்வாய்வு செய்யப்படுகின்றது.

**3. ஆய்வு நோக்கம் (Objectives)**

1. பிரதேசத்திலுள்ள விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களை இனங்காண்பதுடன் அவை மாற்றுத்திறன் உடையோருக்கு எவ்வகையான கல்வி வழங்குகின்றன என்பதை அறிதல்.

2. குறைபாடுகளுக்கேற்ப, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பொருத்தமான ஆசிரியர்களாலும் பொருத்தமான சாதனங்கள் மூலமாகவும் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை அறிதல்.

3. விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இடையே காணப்படும் இடையூடாட்டத்தையும் அந்நிறுவனங்களுக்குச் சமூகத்தால் வழங்கப்படும் ஒத்துழைப்புக்களையும் இனங்காணல்.

4. நிறுவனங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றுக்கான காரணங்களையும் கண்டறிதல்.

**4. ஆய்வுப் பிரச்சினைகள் (Research Problems)**

1. ஆய்வுப் பிரதேசத்தில் மாற்றுத்திறன் கொண்ட பிள்ளைகள் அதிகமாகக் காணப்படுகின்றனர். ஆனால் அவர்களுக்கான விசேட கல்வியை வழங்கும் நிறுவனங்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

2. விசேட தேவையுடைய பிள்ளைகளின் பெற்றோருக்குத் தமது பிள்ளைகளுக்குக் கல்வி வழங்க வேண்டும் என்ற அக்கறையின்மை.

3. பெற்றோருக்கு விசேட கல்வி தொடர்பான புரிதலின்மை.

4. பெற்றோருக்குப் பிள்ளைகளின் குறைபாடுகளை வெளிப்படுத்தி விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களுக்குத் தமது பிள்ளைகளை அனுப்ப விருப்பமின்மை.

5. அனைவருக்கும் கல்வி, கட்டாயக் கல்வி என்ற கல்விக் கொள்கைகளைப் பெற்றோர் ஏற்று நடக்காமை.

6. விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களுக்குப் போதிய வளங்கள், ஒத்துழைப்புக் கிடையாமை.

**5. ஆய்வு முறையியல் (Methodology)**

இவ்வாய்வானது நிகழ்கால உண்மை நிலைமைகளை ஆராய்ந்து சரியான தகவல்களை அளிக்கும் விமர்சன முறையாக உள்ளமையால் அளவைநிலை ஆய்வாக உள்ளது. அந்தவகையில் மண்முனை வடக்குப் பிரதேசத்தில் விசேட கல்வியை வழங்கும் நிறுவனங்கள் மாற்றுத்திறனுடைய பிள்ளைகளின் கல்வியில் எவ்வாறான பங்களிப்புகளை வழங்குகின்றன போன்ற நிகழ்கால உண்மை நிலைகளை ஆராய்ந்து அவை தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தும் ஆய்வாக உள்ளது. மேலும் மட்டக்களப்பு மாவட்ட மண்முனை வடக்குப் பிரதேசத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்குக் கல்வி வழங்கும் நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் கல்வி நடவடிக்கைகளைத் தனித்தனியாக நோக்கி, உண்மை நிலைகளை வெளிப்படுத்துவதோடு அனைத்து நிறுவனங்களையும் பொதுவான ஒரு நோக்குடன் நோக்கி உண்மையை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. ஆய்வுக்குத் தேவையான தகவல்கள் நிறுவன பொறுப்பதிகாரிகள், ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து வினாக்கொத்துகள், பேட்டிகாணல் மூலமாகவும் மாணவர்களிடமிருந்து அவதானம், பேட்டிகாணல் மூலமாகவும் மற்றும் பெற்றோரிடமிருந்து பேட்டி காணல் மூலமாகவும் தகவல்கள் பெறப்பட்டன. மேலும் கலந்துரையாடல், ஆவணங்கள் மூலமாகவும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறப்பட்ட முடிவு பொதுமையாக்கம் செய்யப்பட்டு உண்மை நிலைமைகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

**6. ஆய்வு மாதிரியெடுப்பு (Sampling)**

மட்டக்களப்பு பிரதேச பிரிவிலுள்ள விசேட கல்வி வழங்கும் நிறுவனங்கள் மொத்தமாக ஐந்து காணப்படுகின்றன. அவை,

**6.1 மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி வழங்கும் நிறுவனங்கள்**

| குறியீடு | நிறுவனத்தின் பெயர் | அமைவிடம் | மாற்றுத்திறன் வகை |
|---|---|---|---|
| A | YMCA வாழ்வோசை | தாண்டவன்வெளி | பேச்சுத்திறன், செவிப்புலன் அற்றோர் |
| B | தரிசனம் | கல்லடி | விழிப்புலன் அற்றோர் |
| C | ஒசானம் | சத்துருக்கொண்டான் | மூளைவளர்ச்சி குன்றியோர் |
| D | புகலிடம் | செங்கலடி | மனவளர்ச்சி குன்றியோர் |
| E | மென்கஃப் | ஊறணி | உடல், உள, மனவெழுச்சி குன்றியோர் |

அட்டவணை 1

மேற்குறிப்பிடப்பட்ட 5 நிறுவனங்களும் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 6.2 குடித்தொகை மாதியெடுப்பு


| குறியீடு | மாணவர்களின் எண்ணிக்கை | | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| A | 30 | 41 | 11 |
| B | 11 | 12 | 06 |
| C | 07 | 17 | 04 |
| D | 12 | 07 | 02 |
| E | 19 | 26 | 04 |
| **மொத்தம்** | **79** | **103** | **27** |

**அட்டவணை 2**

மண்முனை வடக்குப் பிரதேச பிரிவிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்குக் கல்வி வழங்கும் விசேட கல்வி நிறுவனங்களில் உள்ள அனைத்து பொறுப்பதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்களும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். மாணவர்களின் பெற்றோரில் ஆய்வாளரின் வசதி கருதி விசேட கல்வி நிறுவனங்களுக்கு அண்மையிலுள்ள பெற்றோர் மாத்திரம் ஆய்வு செய்யப்பட்டுள்ளனர். அந்தவகையில் ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் 10 பெற்றோர்கள் தெரிவுசெய்யப்பட்டு மொத்தமாக 50 பெற்றோர் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### 7. தரவுகளின் பகுப்பாய்வு

வினாக்கொத்துகள் மூலமும் பேட்டி கண்டதன் அடிப்படையிலும் மேலும் அவதானத்தின் மூலமும் பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகளுக்குக் கல்வி வழங்கும் விசேட கல்வி நிறுவனங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் கல்வித்தகைமைகளை நோக்குகையில்,




**வரைபடம் 1**

இங்குக் கற்பித்தல் பணியை மேற்கொள்ளும் ஆசிரியர்களுள் 13% ஆனோர் விசேட கல்வியில் பட்டம் பெற்றவர்களாக உள்ளனர். அத்துடன் 61% ஆனோர் டிப்ளோமா பெற்றவர்களாகவும் உள்ளனர். ஏனையோர் க.பொ.த உயர்தரம் மற்றும் க.பொ.த சாதாரண தரம் பயின்றவர்களாக உள்ளனர்.

### 7.2 குறைபாடுகளுக்கேற்ப கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுத்தல்

ஐந்து நிறுவனங்களும் வேறுபட்ட குறைபாடுகளைக் கொண்ட பிள்ளைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளமையால் ஒவ்வொரு நிறுவனத்திலும் மேற்கொள்ளப்படும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டைத் தனித்தனியாக நோக்க வேண்டியுள்ளது.

**நிறுவனம் : 01 - YMCA "வாழ்வோசை":**

- சைகை மொழி, ஒலி கேட்டல், ஒலி நயம், பேச்சு என்பனவற்றின் அடிப்படையில் கற்பித்தல் இடம்பெறுகின்றது, உதட்டசைவுக் கற்பித்தல், மூச்சுப் பயிற்சி, நாக்குப்பயிற்சி, எழுத்துப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி என்பன இடம்பெறுகின்றன, கணனி முறைக் கற்பித்தல், சொல்லட்டைகள், வசன அட்டைகள், பட அட்டைகள், கணனி மூலமான காட்சிப்படுத்தல், நடித்துக்காட்டல், களப்பயணம் மூலம் சூழலுடன் இணைந்த கற்பித்தல் முறை.

**நிறுவனம் : 02 - *Darisanam* "தரிசனம்"**

- குற்றெழுத்துப் பயிற்சி, ஒலி முறையுடன் கூடிய கணினி முறைக் கற்பித்தல், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மூலமான கற்பித்தல், மாணவர்களுக்கு இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய முறையில் மொழியாட்சியைக் கையாண்டு விளக்கும் முறை, சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைக் கற்பித்தல்

**நிறுவனம் : 03, 04, 05 - "ஓசானம்" "புகலிடம்" "மென்கஃப்" - (*mencafe*)**

இங்குக் காணப்படும் பிள்ளைகளுக்கு அவர்களது குறைபாடுகளுக்கேற்ப கற்பித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

1. மொங்கோலிசம்: தொழிற்பயிற்சி மாத்திரம்
2. ஓட்டிசம் : யோகா பயிற்சி, பாட்டு, கைவேலை
3. மைல்ட்: நேரசூசியிலுள்ள செயற்பாடுகள் மாத்திரம்
4. பார்வைக் குறைபாடு: மொழிப் பிரயோகத்தில் மாத்திரம் கற்பித்தல்
5. பேச்சுக் குறைபாடு: பேச்சுப்பயிற்சி, உதட்டசைவுப் பயிற்சி
6. உடல் அங்கவீனம்: கைகளுக்குப் பயிற்சி, நடக்கப் பயிற்சி


**7.3 ஆசிரியர், மாணவர், பெற்றோர் தொடர்பு**

மாற்றுத்திறனாளிகளுக்குக் கல்வி வழங்கும் நிறுவனங்களில் உள்ள ஆசிரியர் மாணவர்களிடம் காணப்படும் தொடர்பானது 100% திருப்திகரமானதாக உள்ளது. இதனை ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களிலிருந்து அறிய முடிகின்றது. இங்குக் கடமையாற்றும் ஆசிரியர்கள் சம்பளத்தை எதிர்பாராது ஒரு சமூக சேவையயாகக் கருதியே கடமையாற்றுகின்றனர்.

இக்கல்வி நிறுவனங்களுடனான பெற்றோரின் தொடர்பானது குறைவான நிலையிலேயே காணப்படுகின்றது. மாணவர்களின் கற்றல்சார் நடவடிக்கைகளில் பெற்றோரின் பங்களிப்பு எவ்வாறுள்ளது என ஆசிரியர்களிடம் வினவியபோது குறைவான பங்காற்றுதலே உள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். 53% பெற்றோரின் பங்காற்றுதலே திருப்திகரமானதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**7.4 மாற்றுத்திறனாளிகளுக்குக் கல்வி வழங்கும் விசேட கல்வி நிறுவனங்களும் சமூகத்தின் ஒத்துழைப்பும்**

இந்நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகளிடம் தங்களது நிறுவனத்திற்குச் சமூகத்தால் கிடைக்கும் ஒத்துழைப்பு எத்தகையது என்ற வினாவுக்குக் கிடைத்த தகவலின் பகுப்பாய்வு பின்வருமாறு அமைகின்றது. சமூகத்தின் ஒத்துழைப்பானது தங்களுக்குப் பூரணமாகக் கிடைக்கின்றது. நிறுவனங்களுக்குத் தேவையான வளங்கள் (நிதி, பௌதீகம்) கிடைக்கும் முறைகளைப் பின்வரும் வரைபடம் விளக்குகின்றது.




வரைபடம் 2

இந்நிறுவனங்களுக்கு பெரும்பாலான உதவிகள் வெளிநாட்டு நன்கொடைகள் மூலமாகவும், சமய நிறுவனங்கள் மூலமாகவும், சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவும் கிடைக்கின்றன.

**7.5 விசேட கல்வி வழங்கும் நிறுவனங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்**

- பெற்றோர் கூட்டங்களுக்கு சமூகம் வராமை
- பெற்றோர் பங்காற்றுதல் குறைவு
- விசேட கல்வி தொடர்பாகப் பெற்றோருக்குப் புரிதலின்மை

- மேலதிக இணைப்பாட விதான செயற்பாடுகளைச் செய்வதற்கு வளங்கள் குறைவு
- சாதாரண பாடசாலை ஆசிரியர்களின் ஒத்துழைப்புக் குறைவு
- பொதுத்தேர்வின்போது விசேட தேவையுடைய மாணர்களுக்கு விசேட வினாப்பத்திரம் தயாரிக்காமை
- நிதிப் பற்றாக்குறை, மேலும் மாணவர்களை உள்வாங்கிக் கொள்ள வளங்கள் போதாமை
- பெற்றோர் பிள்ளைகளில் அக்கறையின்மை,பயிற்றுவிக்கப்படும் ஆசிரியர்கள் குறைவு
- ஆசிரியர்களுக்குப் போதிய சம்பளம் இல்லாமை, வயது அடிப்படையில் அல்லாமல் தரங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் வகுப்பாக்கப்பட்டுள்ளனர்
- விசேட தேவையுடைய மாணவர்களைச் சாதாரண மாணவர்களுடன் இணைத்துக் கல்வி வழங்கும் போது பல தடைகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

### 8.கண்டறிந்தவை (*Findings*)

- பெற்றோருக்கு விசேட கல்வி தொடர்பான போதிய அறிவும் விளக்கமும் இல்லை.
- சமூகமானது மாற்றுத்திறனுடைய பிள்ளைகளில் அதிக நாட்டம் கொண்டு உதவி செய்யவில்லை.
- மேலதிக மாணவர்களை உள்வாங்கிக் கல்வி வழங்க வளங்கள் போதாமை.
- மண்முனை வடக்கில் காணப்படும் மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் விசேட கல்வி சென்றடையவில்லை.
- இந்நிறுவனங்களில் இருக்கின்ற மாணவர்களுக்குத் திருப்திகரமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.
- விசேட தேவையுடைய மாணவர்களைச் சாதாரண மாணவர்களுடன் இணைத்து கல்வி வழங்கும் போது பல தடைகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

### 9. முடிவுகள்

இவ்வாய்வானது மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விசேட கல்வி வழங்கும் நிறுவனங்கள் மாற்றுத்திறனுடையோரின் கல்வியில் செலுத்தும் பங்களிப்புப் பற்றியதாகவே அமைந்துள்ளது. இதனால் இவ்வாய்வு இப்பிரதேசத்தில் உள்ள விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களை மையப்படுத்தியதாகவே ஆய்வு முடிவுகள் அமைந்திருந்திருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 5914 விசேட தேவையுள்ள மாற்றுத் திறனுடையோர் காணப்படுகின்றனர். இவ்வாறு இருப்பினும் மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் 5 விசேட கல்வி வழங்கும் நிறுவனங்கள் மிகவும் கணிசமான மாணவர்களையே கொண்டு கல்வியை வழங்கி வருகின்றன. இந்நிலையில் இவ்விசேட கல்வி வழங்கும் நிறுவனங்கள் மாற்றுத்திறனுடையோரின் கல்வியில் பெரும் பங்காற்றி வருகின்றன.

எனவே, தொகுத்து நோக்கும்போது விசேட தேவையுடைய மாணவர்கட்கு விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களால் அல்லது பாடசாலைகளால் மட்டுமே அவர்கட்கு ஏற்ற சிறந்த கல்வியை வழங்க முடியும். எனவே ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஐந்து விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களும் மாற்றுத்திறனுடையோரின் கல்வியில் சிறப்பான பங்களிப்பினை வழங்கி, அவர்களது வாழ்வில் ஒளியேற்றியுள்ளன என்ற முடிவுக்கு வரலாம். உண்மையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களில் விசேட கல்வி தொடர்பாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவானவர்களே கல்வி கற்பிக்கின்றனர். இருப்பினும் சைகை மொழியில் தேர்ச்சி பெற்ற, பிரைய்லி எழுத்துமுறை கற்பிக்கத் தெரிந்த ஆசிரியர்கள் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்குத் தேவையான கற்றல் - கற்பித்தல் சாதனங்களின் உதவியுடன் சிறந்த கற்பித்தல் செயற்பாட்டைச் செய்கின்றனர். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே சிறப்பான உறவுமுறை பேணப்படுகின்றது.

### 10. தீர்வாலோசனைகளும் விதப்புரைகளும் (*Conclusions*)

1. இவ்விசேட கல்வி வழங்கும் நிறுவனங்கள் அரச பாடசாலைகள் போல் சகல வசதிகளுடனும் சிறப்பாகச் செயற்படத் தேவையான வசதிவாய்ப்புக்களை இந்நிறுவனங்களுக்கு அரசாங்கம் செய்து கொடுக்கலாம்.

2. ஆசிரிய நியமனம் வழங்கும்போது இவ்விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களுக்கும் ஆசிரியர்களை நியமனம் செய்து அவர்களுக்கு விசேட கல்வி தொடர்பான பயிற்சிகளையும், கற்கை நெறிகளையும் முன்னெடுக்க வேண்டும்.

3. விசேட கல்வி தொடர்பான ஆசிரிய ஆலோசகர்களை அத்துறைசார் பரீட்சயமானவர்களை நியமித்து அவர்கள் ஊடாக இவ்விசேட கல்வி வழங்கும் நிறுவனங்கள் மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.

4. மாற்றுத்திறனுடைய மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

5. விசேட தேவையுடைய மாற்றுத்திறனுடைய பிள்ளைகளின் கல்வி தொடர்பாக போதியளவு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

6. உடல், உளக் குறைபாடுடைய பிள்ளைகள் பிறப்பதற்கான காரணங்களையும் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் சமூகத்துக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் ஊடாகத் தெளிவுபடுத்த வேண்டும்.

7. இவர்களுக்குச் சிறந்த உளவளத்துணை நிபுணர்கள் மூலம் ஆலோசனை வழிகாட்டடல் சேவைகளை வழங்கி உரிய கல்வியைப் பெற வழிசமைக்க வேண்டும்.

8. மாற்றுத்திறனுடைய மாணவர்களைப் பொறுத்தவரையில் தொழிற்பயிற்சி அதிக முக்கியம் பெறுகின்றது. இவ்வாறான தொழிற்பயிற்சிகளை விசேடகல்வி வழங்கும் நிறுவனங்கள் சிறப்பாக வழங்கி வருகின்றன. எனினும் அந்நிறுவன மாணவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்ற சந்தை வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அதனூடாக அவர்கள் வருமானம் பெற்றுச் சுயமாக வாழ வழிசமைக்க வேண்டும்.

**உசாத்துணை நூற்பட்டியல் (*Bibliographies*)**


- அரசரத்தினம்,பூ.க. (2007) "பிள்ளைகளை எப்படி அணுகவேண்டும்," அகவிழி.
- அருள்மொழி,செ. (2008) "கல்வி ஆய்வு முறைகள்," எவக்கிறீன் பிரிண்டர்ஸ், மட்டக்களப்பு.
- சந்திரசேகரம்,ப. (2004) "செவித்திறன் குறைவானோருக்குக் கற்பித்தல்" அகவிழி.
- சின்னத்தம்பி,மா. (2008) "பாடசாலையும் சமூகமும்;" குமரன் புத்தக இல்லம்.
- செல்வநாயகம்,இ உம் இரவீந்திரன்,ஆ. (2007) "சீரிய சிந்தனை விசேட கல்வி அடிப்படைகள்" திருவள்ளுவர் அச்சகம்.
- பரமானந்தம்,சு. (2007) "கற்றலில் சிரமங்கள்" அகவிழி.
- பார்த்தீபன்,ந. (2008) "மொழித்திறன் குறைபாடுகளும் அதற்கான பரிகாரங்களும்," அகவிழி.
- மகேசன்,ஏ. (2010) "விசேட கல்வியும் வழிகாட்டடல் ஆலோசனைச் சேவையும்," எவக்கிறீன் பிரிண்டர்ஸ், மட்டக்களப்பு.
- ஜெயராசா,சபா. (2004) "ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர்," அகவிழி.
- ஜெயராசா,சபா. (2007). "கடினமான வகுப்பறைகளும் பாடசாலைகளும் சமகால கருத்து வெளிப்பாடுகள்," அகவிழி.
- http://www.ernweb.com/reference/article/specialneeds/
- https://en.wikipedia.org/wiki/special-education.
- http://www.papermasters.com/education-of-special-needs-students.html.
- http://www.ultis.com/ultius-blog/reaserch-paper-on-special-education.html

மதிப்பிடப்பெற்றது

# பாலை நிலத்தில் அஃறிணை உயிர்களின்வழி அன்புப் புலப்பாடு

கா.அறிவரசு
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத் துறை, பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 17.

**முன்னுரை**

கொடுமையும் துயரமும் நிறைந்தது பாலை. இப்பாலைநிலத்தில் வாழும் அஃறிணை உயிர்களின் வழியே புலவர்கள் மனித வாழ்வின் இன்றியமையாக் கூறான அன்பை உளவியல் நோக்கில் சித்திரித்துக் காட்டியுள்ளனர். அத்தகைய அன்பு தலைவன் தலைவியர் வாழ்வில் எவ்விதம் பொருந்தி உள்ளது என்பதை இக்கட்டுரை விளக்க முற்படுகிறது. யானை, அணில், மான், புறா, பல்லி முதலான அஃறிணை உயிர்கள்வழி அன்புறு காட்சிகள் காட்சிப்படுத்தப் பெற்றாலும் பல்லி என்ற அஃறிணை உயிரே இக்கட்டுரையில் பெரிதும் பேசப்படுகிறது.

**வினை முற்றியதைப் பல்லி அறிவிக்குமோ என நெஞ்சுக்குக் கூறியது**

*முன்னியது முடித்தனம் ஆயின் நன்னுதல்*
*வருவம் என்னும் பருவரல் தீர*
*பழூம்கொல் வாழி நெடுஞ்சுவர்ப் பல்லி* (நற்.169)

தலைவன் தலைவியை விட்டு வினைவயிற் பிரிந்து சென்றபோது, எப்போது வருவீர் எனத் தலைவி வினவினாள். தான் சென்று நினைத்ததை முடித்த அன்றே திரும்பி வருவதாகத் தலைவன் கூறியவுடன் அவள் பெரிதும் துன்புற்றாள். தலைவன் சென்ற வழியானது சிற்றூர்கள் நிறைந்த பாலை நிலத்தில் கிச்சிலிப் பறவையின் தலையைப் போலக் கள்ளிகள் வளர்ந்துள்ளன. அவற்றின் மேலே படர்ந்த முல்லையில் மலர்கள் பூத்துள்ளன. ஆடும் தலையை உடைய ஆட்டு மந்தையை மேய்க்கச் செல்லும் வலிய கையுடைய இடையன் முல்லை மலரையும் பனங்குருத்தின் நறுக்குகளையும் சேர்த்துக் கட்டிய மாலையை அணிந்து செல்லும்போது மாலையின் நறுமணம் தெருவெங்கும் கமழ்கிறது. மாலைப் பொழுதில் சிறுகுடிகள் நிறைந்த பக்கத்திலுள்ள பெரும் மாளிகைச் சுவரில் இருக்கும் பல்லி அப்போது ஒலியெழுப்பியது. உடனே ஒரு வேளை தலைவனின் வருகையைத் தனக்கு அறிவிப்பதாக ஒலியெழுப்புகிறதோ என எண்ணினாள் தலைவி. பல்லி எழுப்பும் ஓசையைச் சகுனமாகக் கருதும் நம்பிக்கை இதனால் தெரிய வருகிறது.

**இல்லத்தில் பல்லி ஒலித்தது**

வினையின் காரணமாகப் பிரிந்து சென்ற தலைவன் வீட்டிற்கு விரைந்து வருவான் என்பதைத் தோழி தலைவிக்குச் சொல்லுகின்றாள். அவள் சொல்லியதற்கு ஏற்ப, மனையிடத்துப் பல்லி நல்ல இடத்தில் ஒலித்ததையும் தனது இடது கண் துடித்ததையும் கூறுகின்றாள். இந்நிகழ்ச்சியைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ,

*இனைநல முடைய கானஞ் சென்றோர்*
*புனைநலம் வாட்டுநர் அல்லர் மனையின்*
*பல்லியும் பாங்கொத் திசைத்தன*
*நல்எழில் உண்கணும் ஆடுமால் இடனே* (கலி.11)

என்ற பாடல்வழி விளக்குகிறார். சில வீடுகளில் சிறிய இடங்களில் இன்ன மூலையில் பல்லி ஒலித்தால் இன்ன இன்ன பலன் உண்டாகும் என்பதை வழிவழியாக அறிந்து கூறுவது உண்டு. அம்முறையே விருந்தினர் வருகையை உணர்த்தும் இடத்தில் பல்லி ஒலியெழுப்பியது. எனவே பல்லியும் பாங்கொத்திசைத்தன என்றாள். தலைவியைப் பிரிந்து செல்லும் ஒரு தலைவன் இல்லத்தில் இருக்கும் மனைவியை நினைத்து நெஞ்சிற்குச் சொல்கின்றவன் மாலைக்காலத்தில் பல்லி ஒலிக்குந்தோறும் அதனை

எண்ணி நல்ல வாக்கு காலத்தில் ஏற்படும் துன்பத்தோடு தலைவி போராடிக் கொண்டு இருப்பாளோ என்ற கருத்தமைய,

*பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி*

*நல்ல கூறென நடுங்கி*

*புல்லென் மாலையொடு பொரும்கொல் தானே* (அகம்.289)

எனக் கூறுகின்றதாக எயினந்தை மகன் இளங்கீரனார் கூறுகின்றார். இதனால் பல்லியின் வாய் பிளந்ததைப் போன்று இருக்கும் என்பதும் அறியலாகிறது. மற்றொரு பாடலில் வினைமுற்றி மனைக்குத் திரும்பும் தலைவன் தலைவியின் நிலையை மனக்கண்ணால் கண்டு,

*வருந்துதோட் பூசல் களையும் மருந்தென*

*உள்ளுதொறு படூஉம் பல்லி*

*புள்ளுத் தொழுதுஉறைவி செவிமுத லானே?* (அகம்.351)

என்று கூறுகின்றாள். தலைவி தன்னை நினைக்குந்தோறும் பிரிவால் வருந்திய அவள் தோளின் துன்பத்தை நீக்கும் மருந்தாகவும் தன் வரகைச் சொல்லும் பல்லி நிமித்தத்தைத் தொழுது கொண்டு தங்கியிருப்பவள் என்பது பொருள்.

**பசுவின் தனிமைத் துயர் வெளிப்படுத்தும் தலைவியின் மனநிலை**

மீளிப் பெரும்பதுமனார் என்னும் புலவர் பாலை நிலத்தில் பிரிவால் இருக்கும் தலைவி கூறிய கூற்றில்,

*ஒன்றுதும் என்ற தொன்றுபடு நட்பின்*

*காதலர் அகன்றெனக் கலங்கிப் பேதுற்று*

*அன்ன வோஇந் நன்னுதல் நிலைஎன*

*...இம்மென*

*இரைக்கும் வாடை இருள்கூர் பொழுதில்*

*துளியுடைத் தொழுவின் துணிதல் அற்றத்து*

*உச்சிக் கட்டிய கூழை ஆவின்*

*உலமர கழியும் இப்பகல்மடி பொழுதே!* (நற்.109)

பழமையான நட்பையுடைய நம் காதலர் உன்னைப் பிரியாமல் எப்போதும் சேர்ந்திருப்பேன் என்று கூறிப் பிரிந்து விட்டார். அதனால் கலங்கும் மயங்கிய நல்ல நெற்றியை உடைய இவளின் நிலைமை என்னவாகுமோ என வினவுகின்ற அணிகளை அணிந்தவளே! நான் கூறுவதைக் கேட்பாயாக என்று கூறி, வாடைக் காற்று வீசுகின்றது, வாடைக்காற்று ஏற்கனவே தலைவிக்குச் சோகத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. பசுவானது கட்டப்பட வேண்டிய இடத்தில் கட்டப்படாமலும் அது அமர வேண்டிய இடத்தில் அமராமலும் அலைக்கழிக்கப்படுகிறது. அதாவது தலைவியைத் தலைவன் நினைந்து நிலை கொள்ளாமல் தடுமாறி உள்ள சூழல் இப்பாடல்வழி விளக்கப்படுகிறது. தன் தலைவன் அருகில் இல்லாததால் மனம் அலைக்கழிக்கப்படுவதாக உரைக்கும் தலைவியின் கூற்றில் இருந்து பிரிவின் பின்புலமாகப் பசுவும் காற்றும் இப்பாடலில் குறிப்பிடப்படுகிறது.

**அழைப்பொலி - பல்லி**

பெருங்கடுங்கோ பாலை பாடல் ஒன்றில் பிரிந்த தலைமகனை எண்ணி ஆற்றாத தலைவியைக் கண்டு தோழி கூறும் விதமாக அமைவது பின்வரும் பாடல்.

*உள்ளார் கொல்லோ தோழீ! கள்வர்*

*பொன்புனை பகழி செப்பம் கொண்மார்*

*உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்*

*செங்காற் பல்லி தன்துணை பயிரும்*

*அங்காற் கள்ளிஅம் காடுஇறந் தோரே!* (குறுந். 16)

காட்டைக் கடந்து செல்லும் கள்வர்கள் தங்கள் நகங்களால் வில்லில் உள்ள அம்பின் நுனியை நெருடி பார்க்கிறார்கள். அப்போது எழும் ஓசைபோல் ஆண் பல்லி ஒலியெழுப்பிக் கொண்டு தன் துணையை நோக்கி ஓடியது. இதைப் பார்த்த தலைவனும் தன் தலைவியை அடைய வேண்டும் என்ற

நோக்கோடு விரைந்து வருவான் என்பது இதன் உட்பொருளாகும். சுருங்கக் கூறின் பிரிந்து சென்ற தலைவன் அன்பின் மிகுதியால் எழுகின்றபோது தலைவியும் வரவேற்பாள் என்பது இப்பாடலின் மறுதலை. இவ்வாறு இக்கருத்தை உள்வாங்கிய தோழி தலைவியை ஆற்றுப்படுத்தினாள். இவ்வாறு பல்லியின் ஓசை தலைவன் தலைவியது வாழ்வில் உளவியல் பூர்வமாக அவர்கள் தம் அன்பை வெளிப்படுத்துவதாகப் படைக்கப் பெற்றுள்ளது.

**தலைவி நலன் அழிதல்**

பிரிதல் தன் நலம் அழிந்த தலைவி வெம்மைமிக்க சுரத்தில் செல்லும் தலைவனை நினைத்தபடி இருப்பாள். அவள் உள்ளத்தே தோன்றும் துயரினை நினைக்க வேண்டி நெஞ்சிடம் கூறினான் தலைவன். வெம்மை மிகுந்த இப்பாலை வழியைக் கடந்து தலைவி சென்றாலும் வந்தாலும் இனி தலைவியைப் பிரிந்து மீளவும் செல்லச் செலுத்தும் நினைவைத் தன் நெஞ்சை விட்டு அகல வேண்டுவதாக் கூறினான். இதனை,

*வெந்துக ளாகிய வெயிற்கடம் நீந்தி*
*வந்தனம் ஆயினும் ஒழிகஇனிச் செலவே!*
*அழுத கண்ணள் ஆய்நலம் சிதையக்*
*கதிர்தெறு வஞ்சுரம் நினைக்கும்*
*அவிர்கொல் ஆய்தொடி உள்ளத்துப் படரே* (ஐங். 330)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. பாலைநிலக் கொடுமையைக் காட்டிலும் தலைவியின் வருத்தம் மிகுதி என்பதை இப்பாடலை எழுதிய புலவர் அறியச் செய்துள்ளார். தலைவனின் பிரிவை நினைந்து ஏங்கும் ஏக்கம் கொண்ட மகளிர்க்குரியதாக இப்பாடல்களைக் கொள்ள முடியும். ஆடவர்க்குத் துணிவு மிகுதியும் வினைமேற் செல்லும் உணர்வு மிகுதியும் உளவாலின் அவர்தம் உளக்காதலைப் புறத்தே காட்டாதவாறு அடக்கி வினைமேற் பிரிதலையே நாடுவர் என்னும் உண்மையை இதன்வழி அறிய முடிகின்றது.

**முடிவுரை**

இவ்வாறாக அஃறிணை உயிரான பல்லியின் ஓசை அகம் பாடிய சங்கப் புலவர்களால் எடுத்தாளப்பட்டு, மானுட வாழ்வின் அடிப்படைக் கூறான அன்பைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. இவையே அன்றி வேறு பல உயிர்களும் அன்பைப் புலப்படுத்தும் காரணிகளாக அமைகின்றமையைச் சங்கப் பாடல்கள்வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

**துணைநின்றவை**


- சுப்பிரமணியன் ச.வே. (பதி.), 2008, சங்க இலக்கியம் மூலம் முழுவதும், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
- சுப்பிரமணியன் நா., 2004, சங்க கால வாழ்வியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- மாதையன் பெ., 2004, சங்க இலக்கியத்தில் குடும்பம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

# கணினி நச்சுநிரல்களும் (Computer Virus) அவற்றால் ஏற்படும் பாதிப்புக்களும்






**திரவியராசா நிரஞ்சினி**
உதவி விரிவுரையாளர்
(தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள்துறை)
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. nironiru03@gmail.com

**வினாயகமூர்த்தி - வசந்தா**
கலைமாணி மாணவி, பொருளியல் துறை
கலை கலாசார பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம்,
இலங்கை. nirovasa2919@gmail.com


### *1.1 ஆய்வு அறிமுகம்*

மனித மூளையின் வெற்றி நிறைந்த உருவாக்கப் படைப்புகளில் கணினியும் ஒன்றாகும். கணினியைப் பயன்படுத்தும் ஒவ்வொரு பயனாளியும் கணினி நச்சுநிரல்களைப் (Computer Virus)) பற்றி அறியாமல் இருக்க முடியாது. கணினி நச்சுநிரல் என்பது மனிதனால் உருவாக்கப்படும் மென்பொருளாகும். இவை சாதாரணமாக இயங்கிக் கொண்டிருக்கும் கணினியின் செயற்பாடுகளில் இடையூறு விளைவித்துக் கணினியின் செயற்பாட்டினை முழுமையாகவோ, பகுதியாகவோ பாதிக்கக்கூடிய நிகழ்வாகும். அதாவது கணினியைப் பயன்படுத்தும் பயனாளர்களின் செயற்பாடுகளுக்குத் தடங்கலாக அமைகின்ற விடயங்களில் கணினி நச்சுநிரல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவை கணினிப் பயன்பாட்டின்போது பல சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றது. இதனால் தீங்கு பயக்கும் நச்சுநிரல்கள் பற்றிய சிந்தனையுடன் கணினி சார்ந்த சமூகம் உலாவிக் கொண்டிருக்கிறது.

### *1.2 கணினி நச்சு நிரல்களும், பரவும் விதங்களும்*

கணினி பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் பயனாளர்களின் அனுமதியின்றி தானாகவே நகலெடுக்கும் இயங்கிகளையும், ஏனைய கோப்புகளையும் பாதிக்கும் ஒரு செயற்பாடாகக் கணினி நச்சுநிரல் விளங்குகிறது. இன்றைய உலகில் கணினி நச்சுநிரல்கள் வேடிக்கை, பொழுதுபோக்கு, சுயலாபம், அரசியல், போட்டி நிறுவனங்களை வீழ்த்துதல், Anti-Virusகளை விற்பனை செய்தல், புதுமையினை நிகழ்த்துதல் முதலிய காரணங்களைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்படுகிறது. உலகளாவிய வலையமைப்பு, மின்னஞ்சல், கோப்புக்களைப் பகிரும் வலையமைப்புகளுக்கு ஊடாக ஒரு கணினியில் இருந்து பல்வேறு ஊடகங்கள் வழியாகத் தொடர்சங்கிலியால் கணினி நச்சுநிரல்கள் பரிமாற்றம் அடைகின்றன.

உதாரணம் Floppy Disk, CD முதலியவற்றைப் பயன்படுத்துகையில் வலையமைப்புக்களின் மூலம் ஒரு கணினியில் இருந்து வேறு கணினிக்கு மாற்றும் போது அதன் வழியே நச்சுநிரல்கள் பரவுகின்றன.

இதனைக் கணினியில் நிகழும் மாற்றங்களைக் கொண்டே (Symptoms of Virus Attack) அறிந்து கொள்ளலாம். கணினி நச்சுநிரல்களைக் கணினியில் தொடர விடுவதனால் கணினியில் உள்ள தரவுகள், தகவல்கள், மென்பொருட்கள் முதலியவைகளை அழித்துவிடுகின்றன. இந்நிலைப்பாடு கணினிப் பயனாளர்களுக்குப் பாரிய இழப்பாக இருக்கும்.

### *1.3 கணினி நச்சு நிரல்களின் வகைப்பாடுகள்*

கணினித் துறையில் பல்வேறுபட்ட தீங்கிளைக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் MALWARE என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. மால்வேர் (MALWARE) என்பது MALICIOUS

*SOFTWARE* என்ற சொற்களின் சுருக்கமாகும். இது தீங்கு விளைவிப்பதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகிறது. இதனுள்ளே கணினி நச்சு நிரல்களையும் (கணினி வைரஸ்) உள்ளடக்கலாம். கணினி நச்சு நிரல்களின் செயற்பாடுகளுக்கு ஏற்ப *COMPUTER WARM, RAAN SOMEWARE, TROJAN HORSE, BROWSER HIJACKER, BACKDOOR SANTA, ROOT KIT, SPYWARE, BLENDED THREAT, ADWARE COOKIES, KEYLOGGERS, WORM, MALICIOUS MOBILE CODE, BROWSER HELPER OBJECT, DIALERS* என வகைப்படுத்தலாம்.

***MALWARE*** நச்சு நிரலின் வகைகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

***1.COMPUTER WARM:*** இக்கணினி நச்சு நிரல் இணையம் வழியாகப் பரவிப் பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. கணினிப் பயனாளர்கள் இயக்காமலே தாமாகவே இயங்கும் தன்மையைக் கொண்டதாக விளங்கும் *Warm Malware* நான்கு பிரிவுகளைக் கொண்டது. *Penetration Tool* எனும் பிரிவு கணினியில் பயன்படுத்தப்படும் *Programme*கள் ஊடாகப் பலமற்ற இடத்தினூடாக இலகுவாக நுழைந்து செயற்பாடுகளை மேற்கொள்ளும். *Installer* எனும் அடுத்த பிரிவு *Computer*இல் *Warm* நுழைந்தவுடன் கெடுதல் விளைவிக்கும் *Malware* பிரிவினை வேகமாக கணினியில் பதிக்கின்றது. ஈமெயில் முகவரிகள், இணையம் மூலம் மேற்கொள்ளுகின்ற அனைத்துச் செயற்பாடுகளும் இப்பிரிவினுள் அடங்கும். *Scanner* எனும் அடுத்த பிரிவு புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கணினிகளின் *Warm programme*இன் நோக்கத்தைச் செயற்படுத்த உதவும். இது பாதிக்கப்பட்ட கணினிகளில் இருந்து கொண்டே பல்வேறு வகைகளிலும் கெடுதல்களை ஏற்படுத்துகிறது. இந்த வகை *Warm*கள் இன்றைய உலகில் அதிகமாக உள்ளன.

***2.RAAN SOMEWARE:*** கணினிகளில் உள்ள கோப்புக்களைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு அதனை மீண்டும் பயன்படுத்த முடியாத வகையில் மாற்றியமைத்து தான் கேட்கும் தொகையினைச் செலுத்தும் வரை கணினியில் உள்ள கோப்புக்களைப் பூட்டி (*Encrypt*)) வைத்துக்கொள்ளும் தீங்கான வைரஸ் இதுவாகும். இந்த மென்பொருள் மின்னஞ்சல்களில் வரும் இணைப்புகள், இணைப்புக் கோப்புக்களுடன் மறைமுகமாக இருக்கும். அதனைப் பதிவிறக்கும் கணினியினை இது பாதிப்பிற்கு உள்ளாக்கும்.

உதாரணம்: அலுவலக கோப்புக்கள் : *PPt, .doc, .docx, .xlsx, .sxi*

நாடுகளில் பயன்படுத்தப்படும் கோப்புக்கள் : *.sxw, .odt, .hwp*

காப்பகம், வீடியோக் கோப்புக்கள் : *.zip, .rar, .tar, .bz2*

ஈமெயில் தரவு கோப்புகள் : *.eml, .msg, .ost*

தகவல் தரவுக் கோப்புகள் : *.sql, .accdb, .mdb*

***3.TROJAN HORSE:*** தீங்கு பயக்கும் மென்பொருளாகிய இது பயனாளர்கள் அறியாமலேயே கணினித் தொகுதியுடன் தொடர்புபடுகின்றது. அதாவது தேவையற்ற விதத்தில் திறக்கும் கணினி சாளரங்களையும் மாற்றும் மேசைத் தளங்களையும் (*Desktop*) ஏற்படுத்திக் கொண்டு, பதிவேடுகளை அழித்துக் கொண்டும் பயனாளர்களை அசௌகரியத்திற்கு உட்படுத்துகிறது. மேலும் இது ஏனைய தீங்கு பயக்கும் மென்பொருட்கள் கணினிக்குள் உள்நுழைவதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கிறது. மேலும் மின்னஞ்சலைத் திறப்பதன் மூலம் இணையத்தினூடாக பதிவிறக்கம் செய்யப்படும் கோப்புக்களுடன் கணினியின் உள்நுழையும் *TROJAN HORSE* கணினி நச்சு நிரல்கள் *Warm* போன்று பரவுவதில்லை. ஆனாலும் இவை கணினியை ஒரு ஹேக்கர், தொலைநிலை அணுகல் மூலம் (*Remote Access*) கட்டுப்படுத்தக் கூடியதாகவும் மாற்றுகிறது.

***4.BROWSER HIJACKER:*** உலாவிகள் மூலம் இணைய தளங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் பயனாளர்களைத் திசைதிருப்பி ஏனைய இணையதளங்களுக்கு அழைத்துச் செல்லும் தீங்கு பயக்கும் நச்சு நிரல் இதுவாகும். இதனால் பயனாளர்கள் மீண்டும் தாம்

இயங்கிய இணைய தளங்களுக்குச் செல்வது கடினம். அதுமட்டுமன்றி இது உலாவியின் அமைப்புக்களையும், முகப்புப் பக்கத்தினையும் மாற்றிவிடும் வல்லமையுடையதாகவும் விளங்குகிறது.

**5.BACKDOOR SANTA**: கணினிப் பயனாளர்களை ஏமாற்றி அவர்கள் பயன்படுத்தும் *programme*களை அவர்களின் அனுமதியுடன் *Install* செய்து கணினியின் செயற்பாட்டை முடக்குவது இந்நச்சுநிரலின் நோக்கமாகும். இணையத்தில் கிடைக்கும் நிகழ்ச்சிநிரல்களின் பயன்களை விரும்பி அதனைத் தரவிறக்கம் செய்து பயன்படுத்துகின்றபோது பயனாளர்களை அறியாமலே கணினியின் பயன்பாடு, இணைய தளங்கள், இணையத்தளத்தில் வாங்கும் பொருட்கள் போன்ற தகவல்களை இந்நச்சுநிரல் திருடும் தன்மையுடையதாக விளங்குகிறது. உதாரணம் *ALEXA, HOTBAR*

**6.ROOT KIT**: கணினியில் மறைந்திருந்து தாக்குதல்களை மேற்கொள்ளும் ஒருவகையான நச்சுநிரல் இதுவாகும். *Rootkit* நச்சு நிரலைக் கணினியில் நிறுவுவதனால் கணினியின் முழுக்கட்டுப்பாட்டையும் இது தம்வசம் வைத்துக் கொள்வதோடு கணினியில் உள்ள தகவல்கள், கடவுச்சீட்டு இலக்கங்கள், விபரங்கள், வங்கிக் கணக்கு விபரங்கள் என்றவாறு அனைத்தையும் களவாடும் தன்மையுடையதாகவும் விளங்குகிறது. அத்துடன் நச்சுநிரல் இயங்கு முறையின் அடித்தளத்தில் இயங்குவதால் இதனைக் கண்டறிவது, அழிப்பது என்பது கடினமான செயல். ஆனாலும் சில கேர்ணல் அமைப்பில் இயங்கும் *Root kit* நச்சுநிரலை அழிக்கலாம். இதிலிருந்து மீண்டும் இயங்கு முறையை நிறுவிக் கொள்ளலாம். இதனைக் கண்டறிவதற்குப் பல *programme*களை *Antivirus* நிறுவனங்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**7.SPYWARE**: இணையம் மூலமாகக் கணினியை வந்தடையும் இந்த நச்சுநிரலின் நோக்கம் கணினியில் இருந்து தகவல்களைத் திருடுவதாகும். அதாவது இரகசிய இலக்கங்கள், வங்கித் தகவல்கள் போன்றவை இந்த வைரஸ் மூலம் திருடப்படுகிறது. மேலும் இணையத்தளங்களின் முகவரிகள், புகைப்படங்கள், கணினியில் நாம் மேற்கொள்ளுகின்ற செயற்பாடுகள், மடிக்கணினியின் புகைப்படக்கருவி போன்றவற்றைச் சுயாதீனமாக இயக்கம் செய்து அதிலிருக்கும் தகவல்களையும், வீடியோ காட்சிகளையும் இந்த நச்சுநிரல் திருடுவதன் மூலம் பாரிய பாதிப்புக்களைக் கணினிப் பயனாளர்களுக்கு ஏற்படுத்துகிறது.

**8.BLENED THREAT**: கணினியில் *Install* செய்யப்பட்ட *Programme*இன் பலவீனமான இடத்தின் வழியாக உள்நுழைந்து தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த நச்சு நிரல் மின்னஞ்சல் வழியே வைரஸை பரப்பும் தன்மையுடையது. இதுவே கணினிகளில் வேகமாகப் வைரஸ்களை பரப்பிவிடும். கணினியில் இந்த நச்சு நிரல் ஏற்படுத்தும் விளைவு பாரதூரமானதாகும்.

**9.ADWARE COOKIES**: இணைய தளங்களினூடாக கணினியில் பதியப்படும் சிறிய கோப்பு நச்சுநிரல் இதுவாகும். கணினியில் குறித்த தகவல்களை இணைய தளத்தில் அனுப்புவதற்காகப் பதியப்படுபவையாகும். சில இணையத்தளங்கள் இதனை *Adware Tracking Cookies*இல் பதித்துவிடும். பின்னர் இணையத்தில் மேற்கொள்ளும் பணிகள் குறித்த தகவல்கள் முதலியவைகளை அவர்களுக்கு அனுப்பும். இதனால் கணினியின் செயல்பாடு மந்தநிலையை அடையும்.

**10.KEYLOGGERS:** கணினியில் - விசைப்பலகையில் அழுத்தும் போது அவை எந்த விசைகள் என்று ஏனையவர்களுக்குத் தெரியப்படுத்துதல் இதன் நோக்கமாகும். குழந்தைகள் கணினியில் என்ன வகை மென்பொருட்களை இயக்குகிறார்கள், எந்தத் தளங்களுக்குச் செல்கிறார்கள் என்பதனைக் கண்டறிய இதனை நாம் பயன்படுத்தலாம். நிறுவனங்களில் தங்கள் ஊழியர்கள் கணினியில் மேற்கொள்ளும் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கும் இந்த நச்சுநிரல் பயன்படுத்தப்படுகின்றது.

***11.WORM:*** இந்தக் கணினி நச்சுநிரல் ஒரு நிகழ்ச்சி நிரலைப் பிரதி செய்யும்போது அதே பெயரில் மற்றொரு நிகழ்ச்சி நிரலை உருவாக்கும் தன்மையுடையது. இந்த இரண்டு நிகழ்ச்சி நிரல்களின் அளவும் ஒரே அளவாகக் காட்டப்படும். இந்நிலையில் ஒரு நிகழ்ச்சி நிரலை அழிக்க நினைத்து நாம் முயலும் போது அது ஏனைய நிகழ்ச்சி நிரல்களையும் அழித்துவிடும். இதனால் இரண்டு நிகழ்ச்சி நிரல்களும் இதிலிருந்து முற்றாக அழிக்கப்பட்டுவிடும்.

***12.MALICIOUS MOBILE CODE***: *Malware Programme*ஐ கணினியில் பதிய வைக்கும் நோக்குடன் இந்தக் கணினி நச்சுநிரல் பயன்படுத்தப்படுகிறது. இணையத்தினூடாக கணினிகளுக்குள் உள்நுழைந்து *Install* செய்யப்பட்ட பின்னர் தனது செயற்பாடுகளினை இது தொடங்கி, கணினிப் பயனாளர்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

***13.BROWSER HELPER OBJECT***: கணினிப் பயனாளர்கள் கணினியின் உலாவிகளுக்குள் நுழைந்ததும் (*Browsers*) இந்த நச்சுநிரல் இயங்கத் தொடங்கும். இது இணையப் பயனாளர்களைத் திசைதிருப்பிப் பாலியல் வலைத்தளங்களுக்குக் கொண்டு செல்வதோடு, கணினி மெதுவாக இயங்குவதற்கும் காரணமாகிறது.

***14.DIALERS:*** கணினிப் பயனாளர்களின் அனுமதியின்றி *Modem* மூலமாக தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தி அவற்றின் மூலம் சில பாலியல் இணையத் தளங்களுக்குக் கொண்டு செல்லும் தன்மையுடையது. தொலைபேசி வழியாக இணைய இணைப்பு உள்ளவர்களுக்கு மட்டுமே இதனால் பாரியளவில் தாக்கங்கள் ஏற்படுகின்றது.

### 1.4 கணினி நச்சுநிரல்கள் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்

மனித மூளையின் பல்லாயிரக்கணக்கான நுண்ணறிவின் தொகுதியாகக் கட்டியெழுப்பப்பட்ட கணினி எனும் சாதனத்தை நம்பி மனிதர்கள் வாழ்கின்றனர். மனிதன் பொய்யுரைத்தாலும் கணினி பொய்யுரைக்காது என்று உலகம் நம்பிக்கொண்டிருக்கிறது. இத்தகைய நிலையில் கணினி நச்சுநிரல்களினால் (கணினி வைரஸ்கள்) ஏற்படும் எதிர்பாராத தாக்கங்கள் மனிதனைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிலைதடுமாற வைக்கின்றன. கணினியில் வைரஸ் தாக்கத்தினால் நிகழுகின்ற பிரச்சினைகள் தொடர்நிலையில் பல்வேறு வழிகளிலும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றன. அலுவலகப் பணியாளர்கள் தொடங்கிப் புகைப்படக் கலைஞர்கள் வரை கணினியை உபயோகிக்கும் ஒவ்வொரு நபர்களும் கணினி வைரசின் தாக்கத்தினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

கணினி நச்சுநிரல்கள் கணினியில் இருந்து ஒருவரினுடைய பிரத்தியேகமான தரவுகளைக் களவாடக்கூடிய வகையில் வடிவமைக்கப்படுகின்றன. இதனால் கணினிப் பயனாளர்களுக்குத் தெரியாமல் கணினித் தொகுதிக்குள் அனுமதியின்றி பிரவேசித்து வங்கிக் கணக்கு இலக்கங்கள், கடன் அட்டை இலக்கங்கள், இரகசிய இலக்கங்கள், கணினி செய்நிரல்களை அழித்தல், செயற்றிட்ட கோப்புக்கள், சான்றிதழ்கள், தகவல் தரவுக் கோப்புக்கள் என்றவாறாக கணினியில் சேமித்து வைத்திருக்கின்ற அனைத்து விடயங்களையும் திருடுதல், அழித்தல் முதலிய செயற்பாடுகளைக் கணினி வைரஸ்கள் ஏற்படுத்திவருகின்றன.

இணையப் பயனாளர்களின் இணையப் பயன்பாட்டைப் பாதிக்கும் வகையில் வைரஸ் மூலம் சமூக வலைத்தளங்களுக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. *Facebook Application, Facebook Invitation* முதலியனவற்றினூடாக வைரஸ்கள் கணினியை வந்தடைகின்றன. இந்தக் குறுக்கீடுகள் கணினியை (*Re-Start*) மீள்இயக்கும் வகையில் செயற்பட வைக்கின்றது.

கணினியில் நச்சுநிரல்கள் அனுமதியின்றி உள்நுழைந்து இரகசியமான முறையில் ஒருவரின் சுயவிருப்பின்றித் தகவல்களைக் களவாடுதல், அழித்தல் முதலான செயற்பாடுகளால் கணினிப் பயனாளர்கள் உளவியல் ரீதியிலான தாக்கங்களுக்கு உட்படுகின்றனர். இதனால் கணினி வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட நபர் கணினியைத் தன்னால் சரிவர இயக்க முடியாது என்ற மனநிலைக்கு ஆளாகின்றனர்.

கணினிப் பயனாளர்கள் கணினியினைப் பயன்படுத்தும்போது தமது வேலை தொடர்பில் ஒழுங்காக செயற்பட முடிந்தாலும் கணினி வைரஸ் தாக்கியதன் பின்னர் அதிலிருந்து மீள்வது என்பது தொடர்பில் தனது அடுத்தகட்ட செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான அறிவு அவர்களிடத்தில் காணப்படாதபோது தனது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்காக அவர்கள் பிறிதொரு நபருடைய உதவியை நாடவேண்டிய தேவை உருவாகும். இல்லாவிடின் பணத்தினை விரயம் செய்ய வேண்டி வரும். பொருளாதார ரீதியில் ஒரு நபரிடத்தில் மந்தநிலை ஏற்பட்டால் தனது பிரச்சினையை உடனடியாகச் சரிசெய்ய முடியாத நிலை ஏற்படும். இதனால் கணினியில் ஏற்பட்ட பிரச்சினையைச் சரிசெய்வது தொடர்பாக அவர் சிந்தித்துக் கொள்ளுவார். இதனால் தனது முக்கியமான வேலைகளைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் அவர்களால் சரிவரச் செய்ய முடியாத நிலை ஏற்படும். இதனால் கணினி சார்ந்த முக்கியமான வேலைகளில் தாமதங்கள் ஏற்படும்.

கல்வி கற்கும் மாணவர்களின் கல்விசார் செயற்பாடுகளுக்குக் கணினி வைரஸ்களால் தடை ஏற்படுகிறது. குறிப்பிட்ட, காலத்தில் அவர்களால் தங்களது செயற்றிட்டங்களைச் சமர்ப்பிக்க முடியாத நிலை ஏற்படும். சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் கணினி வைரஸ்களைத் தவறான வலைத்தளங்களுக்குக் கொண்டு செல்வதனால் துஸ்பிரயோக, நாசகாரிய செயல்களில் ஈடுபடக் கூடியவராகவும் மாறுகின்றனர். இதனால் மாணவர்கள் தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகப் போகும் நிலையும் உருவாகலாம். அத்துடன் போட்டி அடிப்படையில் தகவல்கள் திருடப்பட்டு அழிக்கப்படுவதனால் போட்டி நிறுவனங்களுக்கு இடையில் முறுகல் நிலை உருவாகும். இதனால் பல்வேறு வழிகளிலும் மேலும் பிரச்சினைகள் வளரத் தொடங்கி, பாரிய தீங்கு விளைவுகளைப் பொருளாதாரத்திலும் ஏற்படுத்தும்.

அரசியல் துறையில் பல்வேறு சிக்கல் நிலைகளைக் கணினி வைரஸ் உருவாக்குகிறது. போட்டி நாடுகள் தங்களை முதன்மைப்படுத்தும் நோக்கில் எதிரி நாடுகளுக்குக் கணினி வைரஸ்களை அனுப்பித் தாக்குதல்களை மேற்கொள்ளுகிறது. இதனால் குறிப்பிட்ட நாட்டின் மக்கள் பல்வேறு ரீதியிலும் பாதிக்கப்படுகின்றனர். கணினி நச்சுநிரல்களால் கணினிகள் சீராக தொழிற்படாமையினால் கணினிசார் விற்பனையும் பாதிக்கப்படுகிறது. இதனால் கணினி சார்ந்த உற்பத்தியாளர்களது படைப்புக்களின் உண்மைத் தன்மைக்கு தக்க வரவேற்புக் கிடைக்காமல் போகும் நிலையும் உருவாகலாம். இவ்வாறான பல்வேறுபட்ட பாதிப்புக்களைக் கணினி நச்சுநிரல்கள் ஏற்படுத்துகின்றன.

### 1.5 பரிந்துரைகள்

- சாதாரண பயன்பாட்டிற்காகக் கணினி நிர்வகிக்கும் கணக்கிற்குப் (Administrator Account) பதிலாகச் சாதாரண பயனர் கணக்கைப் (User Account) பயன்படுத்தல்
- Microsoft பாதுகாப்பு அறிவிப்பு பரிந்துரைத்த Ms17-010 வின்டோஸ் கணினிகளுக்கான இணைப்புக்களைப் பயன்படுத்துதல்
- கணினியின் பாதுகாப்புக் கருதி (Antivirus)) மென்பொருளை நிறுவுதல்
- சட்டரீதியான மென்பொருளைக் கணினியில் நிறுவுதல்
- USB நினைவகங்களைக் கணினியுடன் தொடுக்கும் தொடர்பில் கவனம் செலுத்துதல்
- இணையப் பயன்பாட்டின்போது பாதுகாப்பான வலைத்தளங்களைப் பயன்படுத்தல்
- பதிவிறக்கங்களை மேற்கொள்ளும்போது கவனமாக இருத்தல்
- மின்னஞ்சல் அமைப்புக்களைச் சரிபார்க்கும் அமைப்புக்களை நிறுவுதல்
- மின்னஞ்சலில் அனுப்பப்படும் சந்தேகத்திற்கு இடமான கோப்புக்களைத் திறக்காதிருத்தல்.
- பிற வெளித்தேக்கங்களில் முக்கியமான தகவலைச் சேகரித்து வைத்தல்

- பிறரிடம் இருந்து வாங்கிப் பயன்படுத்தும் Floppy Disk, CD போன்றவைகளை முறையாகச் சோதித்த பின்னரே உபயோகித்தல்

### 1.6 முடிவுரை

இன்றைய தொழில்நுட்பச் சந்தையில் நன்மை சார்ந்த மென்பொருட்கள் எந்தளவு அதிகரிக்கின்றனவோ அந்தளவு கணினி நச்சுநிரல் சார்ந்த மென்பொருட்களும் அதிகரித்த வண்ணமே உள்ளன. இதனால் புதிய நன்மை குறித்த ஆக்கம் ஒன்றின் உருவாக்கமானது உயர்அறிவு கொண்டதாக விளங்கும். அதேவேளை அதன் அழிவு குறித்த உருவாக்கமானது நன்மை குறித்த ஆக்கத்தின் அறிவை விஞ்சிவிடும் தன்மை கொண்டதாக விளங்குகின்றது என்பதற்கிணங்க கணினி நச்சுநிரல்கள் கணினிப் பயனாளர்களுக்குப் பல்வேறு வழிகளிலும் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

#### உசாவியவை


- ❖ *Filiol, Eric., 2005,"**Computer viruses: Theory to Applications**" Springer.*
- ❖ *Stallings William., 2012, "**Computer security**", principles and practice. Boston: Pearson.*
- ❖ *https://en.wikipedia.org/wiki/Computer_virus*
- ❖ *http://tamizhanaeroking.blogspot.2013/03/blog-post_8533.html?m=1*
- ❖ *http://srionlyforu.blogspot.com/2014/05/blog-post_11.html?m=1*
- ❖ *http://www.google.lk/amp/www.dailythanthi.com/amp/News/TopNews/2017/05/16171312/WannaCry-ransomware-attack-Fllow-these-steps-and.vpf*
- ❖ *http://archives.thinakaran.lk/2010/07/19/_art.asp?fn=f1007192*
- ❖ *http://www.panippulam.com/index.php?option=com_content&view=a05-27-03-24-46&catid=99:2010-10-03-03-49-37&Itemid=508*
- ❖ *http://safetricksintamil.blogspot.com/2015/04/command-prompt-format.html?m=1*
- ❖ *http://mohamedabduljameel.blogsp/2013/11/blog-post_3105.html?m=1*

மதிப்பிடப்பெற்றது

# சுந்தரத்தம்மையாரின் 'பெண்மாட்சி'யில் வெளிப்படும் பெண்மொழி



முனைவர் **பா.சத்யா தேவி**
விரிவுரையாளர், தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி, மதுரை-09.

**முன்னுரை**

தமிழ் இலக்கியக் களத்தில் காலூன்றிய பெரும்பாலான பெண்கவிஞர்கள் இலக்கியத்தின் வழியாகப் பெண்நிலை சார்ந்த கூறுகளை வெளிப்படுத்தியுள்ளனர். அவ்வாறு வெளிப்பட்ட பெண்நிலை சார்ந்த கூறுகள் சமூகத்தில் எதிர் சிந்தனையையோ அல்லது மாற்றுச் சிந்தனையையோ ஏற்படுத்தி வைத்திருக்கின்றன. அந்தந்தக் காலக்கட்டத்தில் சாத்தியப்பட்ட களத்தில் தன் குரலைப் பதிவு செய்யும் முயற்சிகள் பெண்கவிஞர்களிடம் இருந்துள்ளன. அந்த வகையில் சுந்தரத்தம்மையார் குரலும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தன் கவிதைகளைப் பாட அம்மையார் தேர்ந்தெடுத்தது பக்திக்களம் ஆகும். ஆனால் பிற பெண் கவிஞர்களைப் போல் பக்திநிலையில் நின்று பாடாது, புராணக் கதைகளை முன்னிறுத்தித் தன் கவிதைகளைப் படைத்துள்ளார். புராணக் கதைகளின் வழிநின்று பெண் நிலை சார்ந்த கூறுகளைப் பாடிய முதல் பெண் கவிஞர் சுந்தரத்தம்மையார் ஆவார். இவர் எழுதிய கவிதைகள் பலவாகும். ஆனால் அதில் ''பெண் மாட்சி'' எனும் தலைப்பில் எழுதிய நூல் மட்டுமே கிடைக்கிறது. பிற நூல்கள் கிடைக்கவில்லை. இவர் பற்றிய குறிப்புகள் எந்த இலக்கிய வரலாற்று நூலிலும் கிடைக்கப்பெறவில்லை. பேராசிரியர் தாயம்மாள் அறவாணன் எழுதிய ''பெண்ணின் பெருந்தக்கது இல்'' எனும் நூலில் அம்மையாரின் நூலான பெண் மாட்சி முழுமையும் அது குறித்த சில தகவல்களும் வெளிவந்துள்ளன.

புராணக் கதைகளின் வழிநின்று ஆணின் ஒழுக்கமின்மையையும் பெண்ணின் கற்பு மேம்பாட்டினையும் பாடியுள்ளார்.

இவர் தமிழ்நாட்டின் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவரது கணவர் சங்கரலிங்கம் ஆவார். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், திருப்புகழ் சுவாமிகள், முருகதாச சுவாமிகள் போன்ற பல பெயர்களாலும் சங்கரலிங்கம் அழைக்கப்படுகிறார். சுந்தரத்தம்மையார் விழுப்புரம் வட்டாரம் திருவாமாத்தூர் என்ற ஊரில் உள்ள கௌமார மடத்து ஆலய வளாகத்தில் தன் கணவருடன் வசித்து வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. தன் கணவரையே ஆசிரியராகவும், ஞான குருவாகவும் கொண்டிருந்தவர். அதனால் கணவரிடமே இலக்கிய இலக்கணங்களைக் கேட்டும் அவரின் கவிதைகளைப் படித்து உணர்ந்தும் இருந்தவர் அம்மையார்.

''அம்மையார் எழுதிய அனைத்து நூல்களும் கிடைக்கவில்லை. 'பெண் மாட்சி' என்ற நூல் மட்டும் கிடைத்துள்ளது. பெண்ணின் மாண்புகளை உரைப்பதற்காக எழுதப்பெற்றுள்ளது. கணவரின் அன்பு ஆணைப்படியே அந்நூலை அம்மையார் இயற்றினார். கணவரோடும், உடன் இருந்த புலவர்களோடும் நூலின் சிறப்பு எடுத்துரைக்கப்பட்ட பின்னரே 'பெண் மாட்சி' நூலாயிற்று என்பர்''[1] இந்நூல் 82 கண்ணிகளால் ஆனது. கலி வெண்பாவால் கவிதைகள் இயற்றப்பட்டுள்ளன. பெண்ணின் மேன்மையைக் கூறுவதற்குப் பாடப்பெற்ற நூல் இதுவாகும். புராணக்கதைகளின் வழிநின்று ''சிவன், திருமால், பிரம்மன், விநாயகர், முருகன், இந்திரன் போன்ற தெய்வங்களின் பெண்மோகத்தை ஒவ்வொரு நிகழ்ச்சிகளின்வழி விளக்கிச் செல்கிறது பெண்மாட்சி. பெண்ணினத்தை இழிவுபடுத்தும் சிலருக்காகப் பெண்ணுயர்வைக் காட்ட எழுதப்பெற்ற நூல் இது. நூலின் முற்பகுதி ஆண்களின் லீலைகளும் பிற்பகுதியாகப் பெண்ணின் பெருமைகளும் விளக்கம் பெறுகின்றன''[2]

இந்நூலுக்குத் தண்டபாணி சுவாமிகள், இவரின் மாணாக்கராகிய இராமானந்த சுவாமியும் அவர் மாணாக்கர் பலரும் சாத்துகவி பாடியுள்ளனர். கிருபானந்த வாரியார் இந்நூலுக்குக் குறிப்புரை எழுதியுள்ளார். காப்புப் பாடலுடன் நூல் தொடங்குகிறது. சரஸ்வதி, விநாயகர், குரு போன்றோரின் மீது காப்புப் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. அவையடக்கப் பாடலாக ஒரு பாடல் பாடப்பெற்றுள்ளது.

சிவன், திருமால், பிரம்மன், விநாயகர், முருகன், இந்திரன், அக்னிதேவன் போன்றோரின் லீலைகளைப் புராண கதைகளின் வழிநின்று கூறியுள்ளார்.

**சிவன்**

தாருகாவனத்தில் இருந்த முனிவர்கள் தாம் செய்யும் கர்மாவே நமது வாழ்வைத் தீர்மானிக்கும் அதுவே பலன் தரும். அதனால் தெய்வத்தை வணங்கத் தேவையில்லை என்று எண்ணித் தன் மனைவியருடன் தனியாக அவ்வனத்தில் வசித்து வந்தனர். மேலும் தம் துணைவியர்களின் கற்புத்திறமே உயர்ந்தது மற்ற எதுவும் அதன்முன் உயர்வு இல்லை என்று கடவுளையும் இகழ்ந்தனர். இதனால் சிவனும் விஷ்ணுவும் வேறு உருக்கொண்டு அங்குச் சென்றனர். சிவன் பிக்ஷசாடன உருவமும் விஷ்ணு மோகினி உருவமும் கொண்டு சிவன் அம்முனிவர்களின் துணைவியரிடத்தும் விஷ்ணு அம்முனிவர்களிடத்தும் சென்றனர். மோகினி உருவத்தில் மயங்கி முனிவர்கள் விஷ்ணு பின்னால் சென்றனர். பிக்ஷசாடன உருவத்தைக் கண்டு அப்பெண்கள் அவர் மேல் மையல் கொண்டு, கர்ப்பிணியாக இருந்த பெண்கள் மனதால் அவரைத் தழுவியதால் அவ்விடமே குழந்தையைப் பெற்றுக் கற்பிழந்தனர். இதனால் முனிவர்கள் சிவனிடம் கோபித்து ஆபிசாரயாகமொன்று செய்து பூதப்படை பாம்பு, முயலகன், உடுக்கை, மழு, மான், வெண்டலை, புலி, அழல், அலகை, சூலம் போன்றவற்றை வரவைத்து ஏவினர். அவை சிவனை ஒன்றுஞ் செய்யவில்லை. பின், கடுங்கோபங் கொண்டு சாபமிட்டனர். அதுவும் ஒன்றும் செய்யவில்லை. இதனைக் கண்ட முனிவர்கள் நீங்கள் யாரெனக் கேட்க அதற்குச் சிவன் 'யாம் கைலையிலுள்ளோம்' எனக் கூறி மறைந்தார். அவர் சென்ற பின்பு முனிவர்கள் பல்வேறு நோய்களால் அவதிப்பட்டனர். அதன் காரணம் அறிய இந்திரனிடஞ் சென்றனர். அதற்கு இந்திரன் 'முதலானவரான சிவமூர்த்தி எதிரில் தரிசனம் தந்தும் அறியாமையால் இந்த நோய் உங்களை வருத்துகிறது' என்றனன். அதனால் முனிவர்கள் தாம் செய்த தவற்றை உணர்ந்து சிவபூசை செய்து நன்மைபெற்ற வனம் இதுவாகும். இப்புராணக் கதையை முன் வைத்தே

**"மூவாமுனிவர் புணர்**
**பாகியற் சொல்லாராற் பரிசழிந்தான் - வாகீசர்**
**விண்ட மொழிகொண்ட விறல் அரக்கன்றன்**
**மனையை கண்டு நற்கற்பின் கருத்தளித்தான்" (பெண்மாட்சி.4-5)**

எனப் பாடியுள்ளார். பெண்ணின் மேன்மை என்பது கற்பு ஒழுக்கம் தான் என ஆண் சமூகம் விதித்த கோட்பாடுகளுக்கு ஏற்ப வாழ்ந்த பெண்களின் கற்பு மேன்மையாகப் புகழப்பட்டது. இதனால் கடவுளின் கருணை வேண்டாது தாமே உயர்வாக வாழ்ந்தனர். இந்நிலையில் தம் கற்பின் மேன்மையைக் கொண்டே சிறப்புடன் வாழ்ந்த பெண்களின் நலனை அழித்தான் சிவன் எனப் பாடியுள்ளார். இதன்மூலம் ஆண்சமூகம் உருவாக்கிய கோட்பாட்டை அவ்வாண்சமூகமே தன் தேவைக்கேற்ப மாற்றி அமைக்கும். எந்நிலையிலும் பெண் மட்டுமே துன்ப நிலைக்கு ஆளாகி ஒடுக்கப்படுகிறாள் என்ற கருத்தே இதன் மூலம் காணக்கிடைக்கிறது. மேலும்

**"வல்லாள மன்னன் மருவு மனையாளாம்**
**நல்லாளைச் சேர்வான் போல் நண்ணினான்" (பெண்மாட்சி.6)**

என்பதையும் பாடியுள்ளார். விஜயநகரத்து அரசரில் ஒருவரான வல்லாளன் புத்திரப்பேறு வேண்டும் என்று சிவனடியாருக்குத் தானம் செய்து வந்தான். அச்சமயத்தில் சிவன் ஒரு சங்கமராய் வந்து பெண்போகம் வேண்டும் என்று தன் விருப்பத்தைத் தெரிவித்தார். அதை நிறைவேற்ற எண்ணி அரசன் தன் ஊரில் உள்ள தாசிகளை அழைத்து வர குறித்த ஒரு நாளில் ஏவல் செய்தான். ஏவலாளர் அதன் காரணமாக ஒவ்வொரு தாசி வீட்டுக்கும் சென்ற பொழுது ஒரு நாயகன் இருப்பதைக் கண்டனர். அதன்பின் அதை அரசனிடம் வந்து கூறினர். இதைக் கேட்ட அரசன் தன் துணைவியரில் ஒரு பெண்ணை இந்நிலை கூறிச் சம்மதிக்க வைத்துச் சங்கமரர் இருக்கும் அறைக்கு அனுப்பினான். அவள் சென்று உறங்கிக் கொண்டிருந்த சங்கமரை அணைத்தபொழுது அவர் குழந்தையாய் மாறினார். அரசன் விருப்பத்திற்கேற்ப அங்கேயே இருந்து அரசன் திருக்கயிலை அடையச் சிவன் அரசருக்குத் தாமே கர்மாதிகளைச் செய்தார் என்பர்.

இப்புராணக் கதையைக் கொண்டே அம்மையார், சிவன் அடுத்தவர் மனைவியை விரும்பியதாகப் பாடியுள்ளார். இங்கும் ஆண் சமூகம் உருவாக்கிய கோட்பாடான பிறரின் மனைவி மீது விருப்பம் கொள்ளக்கூடாது என்ற கட்டுப்பாடு மீறப்பட்டுள்ளது. ஆனால் அது கடவுள் என்கிற நிலையில் மீறலாக

இல்லாமல் அவரின் திருவிளையாடல்கள் எனப் பக்திநிலையில் இருத்திப் பார்க்கப்படுகிறது. இந்நிலையையே அம்மையார் சாடியுள்ளார்.

**திருமால்**

திருமாலின் பல்வேறு லீலைகளை அம்மையார் பாடியுள்ளார்.

- நெடிய திருமால் பூமியை ஓரடியால் அளந்து பூமாதேவியைத் தனக்குள் அடக்கிய ஆண் ஆளுமை உடையவன்.
- பூமகளைத் தன் மார்பிற் போகங்கொண்டு வைத்துள்ளவன் திருமால்.
- கோவர்த்தனகிரியைக் குடையாகக் கொண்டு கோபியரைக் காத்ததும் திருமாலின் லீலை எனக் கூறியுள்ளார்.
- பூமியைப் பெண்ணாகப் பாவித்து அதைத் தனக்குள் அடக்குமாறு செய்ததன் மூலம் ஆண் ஆளுமை மிக்கவன் என்பதும் பெண் என்றுமே அவனுள்ளேயே அடங்கி இருக்க வேண்டியவள் எனும் ஆதிக்க மனப்பான்மையைச் சுட்டுகிறது. மேலும் கோபியருடன் புரிந்த லீலைகளும் ஓர் ஆண் எத்தனைப் பெண்களுடன் இருந்தாலும் அது தவறாகக் கூறப்படாமல் தெய்வநிலையிலேயே வைத்துப் பார்க்கப்படுகிறது. இத்தகைய ஆதிக்க மனப்பான்மையையே அம்மையார் தம்பாடலில் வெளிப்படுத்தி உள்ளார்.

**“பொல்லாச் சலந்தரன்றன் பொற்கொடியாய் போய்க்கபட**
**சல்லாபம் செய்தவள்சொல் சாபமுற்றான், பல்லோர்**
**அறிய அவள்நீற்றும் அணியுடம் பின்வாசம்**
**செறிதுளவே மாலை யென்றும் சேர்த்தான்”** ***(பெண்மாட்சி.11-12)***

என பிருந்தையிடம் திருமால் செய்த லீலைகளைக் கூறியுள்ளார்.

- பிருந்தை முற்பிறவில் துளசி என்ற பெயரில் தர்மத்வசன், மாதவி ஆகியோருக்குப் பிறந்தாள். நூறுவருடம் கருக்கொண்டு பிறந்ததால் துளசி எனப் பெயரிட்டனர். இவள் நாராயணனைக் கணவனாக அடைய வேண்டி பதரிவனஞ் சென்று தவஞ் செய்தாள். பிரம்மன் இவள் முன் வந்து என்ன வரம் வேண்டும் எனக் கேட்க, தன் விருப்பத்தைக் கூறினாள். அதற்குப் பிரம்மன் இவளை நோக்கி ‘அம்மா கிருஷ்ணன் தேகத்தில் பிறந்த சுதர்மன் என்னும் கோபாலன் முன்னொருகால் உன்னைக் கண்டு மோகித்து அவ்வாசையை முடிக்காதவனாய் வருந்துகையில் ராதை அவளைப் பூமியில் பிறக்கச் சபித்தனள். அவன் பூமியில் சங்கசூடனாய்ப் பிறந்திருக்கிறான். நீ அவனை மணந்து பின் விருஸ்ரூபமாய்ப் பிருந்தாவனத்தில் பிருந்தாவாணி எனும் பெயருடன் கிருஷ்ணனுடனிருப்பாய்’ என்று கூறி மறைந்தார். பின் இவள் தன்னைத் தேடிவந்த சங்கசூடனை மணந்தாள். சங்கசூடன் சங்கரருடன் யுத்தஞ்செய்து மாண்டபின்பு விஷ்ணு சங்கசூடன் போலுருக்கொண்டு துளசியைப் புணர்ந்தார். காரணவேறுபாடு அறிந்த துளசி ‘நீ என் கற்பைக் கெடுத்ததால் கல்லாக வேண்டும்’ எனச் சபித்தாள். பின் தீப்புகுந்தாள். அந்தச் சாம்பலில் இருந்து தோன்றியது துளசி. பிருந்தை பெண்ணாக இருந்த போதும் அவளை விரும்பிய திருமால் அவள் துளசிச்செடியாகிய பின்பும் அதை மாலையாகத் தன் கழுத்தில் அணிந்துள்ளார். அவள் மீதுள்ள மையலால் அம்மாலையை அணிந்துள்ளார் என அம்மையார் பாடியுள்ளார்.

**“மறியணியும்**
**கையான் மயங்கவொரு காரிகையாய் வேடமெடுத்து**
**எய்யாமல் ஓர்மகவும் ஈன்றானே”** ***(பெண்மாட்சி.12-13)***

பாற்கடலில் கடைந்து எடுத்த அமுதத்தை அசுரர்களை உண்ணவிடாமல் தேவர்களுக்கு மட்டும் வழங்க வேண்டி திருமால் மோகினி உருக்கொண்டு வந்தார். அப்போது மோகினியைக் கண்டு சிவன் மயங்கியமையால் இருவரிடையே உறவு ஏற்பட்டு ஐயப்பன் எனும் ஒரு மகனைப் பெற்ற நிகழ்வை அம்மையார் பாடியுள்ளார்.

விஷ்ணு ஆணாக இருக்கும் போது பெண் மீது மையல் கொண்டு மயங்கினார். பெண்ணாக உருவம் மாறிய போது ஆண்களை மயக்குகிறார். ஓர் ஆண் எந்நிலையில் இருந்தாலும் தன் ஒழுக்கத்தைப் பேணுவதில்லை என்பதை அம்மையார் இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

**பிரம்மன்**

பிரம்மன் சரசுவதியை மனைவியாகக் கொண்டதல்லாமல் சாவித்திரி முதலாகப் பெண்டிர் மீது மையல் கொண்டு உழன்றான் என்பதை,

**"கற்றவரு மற்றுங் கணமாய சீவர்களும்**
**நற்றகைசால் வாக்கினொலி நண்ணிருமா(று) உற்றவளைத்**
**தன் மனையாய்ப் பெற்றுமெழிற் சாவித்திரி முதலாம்**
**பன்மடவா ராசையினிற் பட்டுழன்றான்" (பெண்மாட்சி.16-17)**

எனப் பாடியுள்ளார். மேலும்,

**"மன்மதன்றன்**
**சேனைத் தலைமைத்தி லோத்தமையைச் செய்தவள்பின்**
**மானத்தை விட்டோடி மாழ்கினான்" (பெண்மாட்சி.17-18)**

எனப் பாடியுள்ளார். பிரம்மன் திலோத்தமையைப் படைத்து அவள் அழகைக் கண்டு விரும்பியபோது அவள் பயந்து நான்கு திக்கிலும் ஓடினாள். ஓடிய அத்திக்குகளிலெல்லாம் பிரம்மன் ஒவ்வொரு முகம் கொண்டு பார்த்தார். அதனால் நான்கு முகங்களைக் கொண்ட நான்முகன் ஆனார் எனக் கூறுவர். இந்நிகழ்வைக் கொண்டே அம்மையார் பாடியுள்ளார். தான் படைத்த பெண்ணின் மீதே மையல் கொள்வது என்பது இழிவான செயல். எனவே தன்மானத்தையும் மறந்து அவள் அழகில் மயங்கினான் எனப் பாடியுள்ளார்.

பிரம்மன் சரஸ்வதி மீது மிகுந்த மையல்கொண்டு நூறு பெண்ணுருவாக மாறித் தன்னை மகிழ்விக்கக் கூறினான். சரஸ்வதியும் அதை ஏற்று நூறு பெண்ணுருவாக மாறினாள். அவர் அனைவரையும் உச்சிப்பகலில் கூடித் திரிந்த காரணத்தினால் திவாந்தகன் முதலிய அரக்கர்கள் அநேகரைப் பெற்றான். இந்நிகழ்வைக் கொண்டே அம்மையார்,

**"விழியார் அனேகரையோர் வெம்பகலிற் சேர்ந்து**
**பழியாயிரம் விளைத்துப் பாவம் பொழிமேகம்**
**அன்ன அசுரர் அனேகரைப் பெற்றான்" (பெண்மாட்சி.19-20)**

இவ்வாறு பாடியுள்ளார். அளவுக்கு அதிகமாக ஆண் ஆசைப்பட்டால் அது தீங்கில்தான் முடியும். மேலும் பல ஆயிரம் பழிச்சொல்லுக்கு ஆளாவர். அந்நிலையே பிரம்மனின் நிலையாகும். இதையே அம்மையார் பாடியுள்ளார்.

ஆண் எந்நிலையில் இருந்தாலும் பெண் மீது கொண்ட மையல் மாறாமல் பெண்ணைப் பல விதங்களில் தன் கட்டுக்குள்ளேயே வைக்க எண்ணுகிற ஆதிக்க நிலை, தெய்வநிலையில் வைத்துக் கூறப்பட்டுள்ள தன்மையை அம்மையார் சுட்டிக்காட்டியுள்ளார்.

**விநாயகர்**

சித்தி, புத்தி, வல்லபை, திருமாலின் மகள்களாகிய மோதை, பிரமோதை, அமகை, சுந்தரி, மனோரமை, மங்கலை, கேசின், காந்தை, சாருகாசை, நந்தினி, சுமந்திதிமை, காமதை முதலிய பன்னிரண்டு பெண்களையும் விநாயகர் மணந்தார். இதையே அம்மையார் தன் பாடலில் வெளிப்படுத்தியுள்ளார்.

**"வல்லபையைத் தன்மடியில் வைத்திருந்தும் - நல்லசித்தி**
**புத்தியெனுமிருவர் போகமுந் துய்த்தான் திருமால்**
**அத்தினத்திற் பெற்ற பெண்கள் ஆறிருவர் - நித்திக்**
**களிக்கூர கொண்டனைந் தான்" (பெண்மாட்சி.21,22,23)**

ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களை மணந்து பெண்ணின் மீது தன் அதிகாரத்தை நிலைநாட்டும் ஆணின் தன்மையை அம்மையார் இவ்விடத்தில் சாடியுள்ளார்.

**முருகன்**

தேவேந்திரன் மகளாகிய தெய்வயானையை மணந்து விண்ணகர் குடியேறித் திருப்பரங்குன்றத்தில் அமர்ந்த முருகனிடம், நாரதர் பூமியில் வாழும் வள்ளியின் அழகு முதலியவற்றைக் கூற, அதனைக் கேள்விப்பட்டுப் பூமிக்கு வேடர் போல வேற்று உருக்கொண்டு வந்து வள்ளியிடம் உரையாடிக்

கொண்டிருந்தார். அவ்வேளையில் வேடர்கள் வர, அதை உணர்ந்த முருகன் வேங்கை மரம் போல உருமாறி நின்றார். மீண்டும் அவர்கள் சென்ற பின்பு வேடன் போல மாறி வள்ளியிடம் உரையாடினார். மறுபடியும் வேடர்கள் வர, விருத்தசந்நியாசியாய் மாறி, வந்த வேடர்களை ஆசீர்வதித்தார். உடனே வேடர்கள் இந்த சந்நியாசியே நம் வள்ளிக்குக் காவலிருக்கட்டும் எனக் கூறிச் சென்றனர். அவ்வாறு முருகன் காவலிருக்கும் போது தாகமாக உள்ளது எனக் கூற, வள்ளியும் உடன் சென்று சுனையில் நீர் அருந்தச் சென்றனர். அவ்வேளையில் முருகன் விநாயகரை மனதார எண்ணி யானையாக வர வேண்டும் என வேண்டினார். அதற்கேற்ப விநாயகரும் யானையுருக் கொண்டு வந்தார். அதைக் கண்ட வள்ளி பயந்து முருகனைத் தழுவ அப்பொழுது முருகன் தன் உண்மையுருக்காட்டி வள்ளியை மணந்து சென்றார். இந்நிகழ்வையே அம்மையார் பாடியுள்ளார்.

**“வேடர்களுக்(கு) அஞ்சியொரு வேங்கை மரமாகி நின்று**
**தேடருஞ் சீர் அண்ணனொரு சிந்துரமாய் - காடதனில்**
**வந்துபயம் காட்ட வருத்தியும்அவ் வள்ளியின்பால்**
**ஐந்துவகை யின்பமடைந் தானே”** **(பெண்மாட்சி.27-28)**

ஒரு பெண்ணை மணம் முடித்த பின்பும் மீண்டும் வேறு ஒரு பெண்ணின் அழகில் மயங்கி அப்பெண்ணின் பின்னே செல்லும் ஆணின் குணத்தை அம்மையார் வசை பாடியுள்ளார்.

**இந்திரன்**

இந்திரன் இந்திராணி முதல் பல பெண்களை மணந்து இன்பமாக வாழ்ந்த போதிலும், அது போதாது எனக் கௌதம முனிவரின் மனைவியான அகலிகை மீதும் ஆசை கொண்டான். அதனால் உடம்பெல்லாம் ஆயிரம் பெண்குறி பெறச் சாபம் பெற்றான். இந்நிகழ்வையே அம்மையார் தம் பாடலில் கூறியுள்ளார்.

**“நச்சியிந் திராணி முதல் நாரியர்கள் - மெச்சிமகிழ்**
**போகம் அயின்றும் புவித்தலத்தோர் பெண்மயிலால்**
**ஆகமுற்றும் ஈனம் அடைந்தானே”** **(பெண்மாட்சி.33-34)**

பல பெண்களை மணந்ததோடு அல்லாமல் பிறர் மனைவியை நாடும் ஈனச் செயலைச் செய்யும் ஆணின் தவறான எண்ணத்தைச் சாடுகிறார் சுந்தரத்தம்மையார்.

**அக்னிதேவன்**

சத்த இருடிகள் எனும் முனிவர்கள் யாகஞ் செய்து கொண்டிருந்தனர். ஒரு கரும வசத்தால் யாகத்தைத் தொடர்ந்து செய்ய இயலாது போகவே, தங்கள் மனைவியரை ‘யாக அக்னி அவியாது வளருங்கள்’ எனக் கூறிச் சென்றுவிட்டனர். அப்பொழுது அக்னி தேவன் ஏழு பத்தினிப் பெண்களையும் கண்டு மையல் கொண்டு அதைத் தீர்க்க இயலாமல் வாடினான். இதை உணர்ந்த அக்னிதேவியின் மனைவியாகிய சுவாகதேவி அந்தப் பெண்களைப் போல தனித்தனி உருவமாக வந்து தன் கணவனை மகிழ்வித்தாள். அருந்ததி தவிர ஏனைய அறுவர் போல வந்து கணவனின் ஆசையை நிறைவேற்றினாள். இதை அம்மையார் தன் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**“எத்தேவர் கட்குந்தன் எச்சிலருள் அக்கினியும்**
**மெய்த்தேசால் ஏழுவியன் முனிவோர் - பத்தினிமார்ப்**
**புல்லினாற்போல் மகிழ்ந்து பொய்மை வெளியாய்த்தனது**
**மெல்லியலாள் கண்டுநக வெட்கினான்” (பெண்மாட்சி.35-36)**

பிறரின் மனைவியரைக் கொண்டு மையல் கொண்டதோடு அல்லாமல், அப்பெண்களைப் போல உருவம் கொண்டு வந்த மனைவியினை அப்பெண்களாகவே எண்ணி மகிழ்ந்த ஆணின் கீழ்மையான குணத்தைச் சாடியுள்ளார். மேலும், கடும் தவம் புரியும் முனிவர்களும் தன் சபலத்தால் தன் நிலை இழந்து விடும் தன்மையை விசுவாமித்திரரின் கதை மூலம் கூறியுள்ளார்.

விசுவாமித்திரர் கடும் தவம் புரிகையில் அவரின் தவத்தைக் கெடுக்க எண்ணிய இந்திரன் மேனகை எனும் பெண்ணை அனுப்புகிறான். அங்குச் சென்ற மேனகை தவம் புரியும் விசுவாமித்திரர் முன்பு நடனமாடல் போன்ற பல செயல்களைச் செய்கிறாள். அதைக் கண்டு அவள் அழகில் மயங்கிய

விசுவாமித்திரர் மேனகையுடன் கூடிக் களிக்கிறார். அதன் காரணமாக சகுந்தலை எனும் பெண்ணையும் பெறுகின்றனர். இதையே,

**"விசுவமெச்சும் சேணுலகின் மீன்கள் - கொசுகனைய**
**ஆகப்பெயர்த் தெறிந்த ஆண்மையுறு கோசிகன்றான்**
**தாகமுற்று மேனகையின் தன்னுறவால் - கோகனத்**
**தையலனைய சகுந்தலையைப் பெற்றதுவும்" (பெண்மாட்சி.41,42,43)**

எனக் கூறியுள்ளார். ஐம்புலனை அடக்கித் தவம் புரியும் முனிவரும் ஒரு பெண்ணைக் கொண்டு மையல் கொண்டு தன் நிலை மறந்த தன்மையைக் குறிப்பிட்டுள்ளார். இங்கு ஆண் தன்னுடைய தேவைக்காகப் பெண்ணைப் பயன்படுத்திக் கொள்ளும் நிலையையும் அவளை ஒர் உயிராக மதிக்காமல் உடலாகக் காணும் ஆதிக்கச் சமூக மனோபாவத்தையும் அன்றே அம்மையார் இழிவு எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு பல நிலைகளிலும் ஆண்களே தங்கள் நிலை விடுத்து அல்லது மறந்து தவறு செய்கின்றனர். ஆனால் பெண்ணின் மீதே குற்றம் சுமத்துகின்றனர். பெண்களின் பெருமைகளைச் சற்றும் உணராதவர் ஏதேதோ பேசுகின்றனர். பெண்ணைப் பழித்துப் பெண் அங்குசம் என்று இழிவாகக் கூறுகின்றனர்.

**"திண்டு மிண்டு**
**பேசுமவர் நாமுழுதும் பெண்ணங்குச மென ஏன்**
**கூசுகிலரோ வுணருங் கூர்ப்பிலரோ" (பெண்மாட்சி.47,48)**

பெண்ணின் மேன்மையை உணராது பேசுபவர்கள் உண்மை நிலையை உணராதவர்கள் என அம்மையார் கூறியுள்ளார்.

பெண்ணின் மேன்மை அறிந்து ஈசனும் தன் உடம்பில் பாதியைத் தந்துள்ளான். ஆனால் கௌரவர்களாகிய துரியோதனாதியர் பெண் என்று எண்ணாமல் பெருஞ்சபையில் வைத்துப் பாஞ்சாலியின் துகிலை உரிக்கும் தீங்கினைச் செய்தனர். இதுபோன்ற பல்வேறு தீங்குகளைப் பெண்களுக்கு ஆண்கள் செய்துள்ளனர். இவற்றையெல்லாம் தொகுத்து ஒரு பெண்மாலையாக அதாவது கவிதையாக யாராவது எழுதியதுண்டா? என அம்மையார் கேள்வியெழுப்புகிறார். மேலும் ஔவையார் குறித்தும் தன் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**"ஞால முற்றமும்**
**மாதாவென் றென்றும் வழுத்துபுகழ் ஔவையைப்போல்**
**மீதாம்புலமை பெற்றோர் வேறுண்டோ - ஏதாலோ**
**அன்னவளும் பெண்கட்(கு) அடக்கம் பகர்ந்ததன்றித்**
**துன்னும் அகங்கார முறச்சொல்ல வில்லை" (பெண்மாட்சி.52,53,54)**

உலகம் போற்றும் ஔவையும் பெண்களுக்கு அடக்கத்தை மட்டுமே கூறினார். அகங்காரம் கூறவில்லை என்னும் செய்தியை அம்மையார் இங்குப் பதிவு செய்துள்ளார். மேலும் பல பெண்களின் மேன்மையைப் பாடியுள்ளார். சுந்தரத்தம்மையார் வாழ்ந்த காலச் சூழலின் மாண்பாகவும் பெண்ணின் பெருமையாகக் கருதப்பட்டது கற்பு ஆகும். எனவே அம்மையார் கற்பில் மேம்பட்ட பெண்களாகிய அநுசூயை, நளாயினி, வாசுகி, கௌரி, மங்கையர்க்கரசி, திரௌபதி, புனிதவதி, இரத்தினாவதி போன்ற பெண்களின் மேன்மையைப் பாடியுள்ளார்.

**நளாயினி**

மௌத்கல்யருஷி என்னும் முதியவர் நளாயினி அழகில் மயங்கி அவளை மணம் முடிக்க வேண்டி அழகான வாலிபன் போல் தோற்றம் கொண்டார். மணப்பதற்கு நளாயினியிடம் சம்மதமும் வேண்டி வாங்கினார். சம்மதம் பெற்ற பின்பு தன் உண்மை உருவைக் காண்பித்தார். இருப்பினும் நளாயினி தான் கொடுத்த வாக்குத் தவறக் கூடாது என எண்ணி வயதான முதியவரை மணந்தாள். மணந்த பின்பு நளாயினியைப் பலவிதமாக அம்முதியவர் சோதித்தார். அவற்றில் எல்லாம் அவள் மிகவும் பொறுமையுடனும் பொறுப்புடனும் நடந்து கொண்டாள். மேலும் அவளைச் சோதிக்க எண்ணிக் குட்ட நோய் வந்த பின்பும் அத்துடன் தீர்த்தயாத்திரை செய்ய வேண்டுமெனக் கூறினார். அதற்கு மறுப்புத் தெரிவிக்காமல் நளாயினி தன் கணவரைக் கூடையில் அமர வைத்துக் கோயில்கள்தோறும் தூக்கிச் சுமந்து

சென்றாள். இந்நிலையில் அவர் ஒரு தாசி வேண்டுமெனக் கேட்க, அதன்பொருட்டு இவள் தாசிக்குப் பல பணிவிடைகள் செய்து தாசியைச் சம்மதிக்க வைத்து, அவர் விருப்பப்படித் தாசி வீட்டுக்கும் கூடையில் அமரவைத்துத் தலையில் சுமந்து சென்றாள். இருளில் செல்லும் வழியில், முற்பிறவியின் பயனால் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த மாண்டவ்யர் என்ற ரிஷியின் காலில் அவள் சுமந்து சென்ற கூடை இடித்துவிட்டது. மிகுந்த கோபமடைந்த ரிஷி இவள் பெண் என்பதை அறிந்து 'சூரியன் உதயமாகும் போது நீ மங்கலம் இழப்பாய்' எனச் சாபமிட்டார். 'சூரியன் உதித்தால் தானே நான் கணவனை இழக்க வேண்டிவரும். சூரியனே எழாமல் செய்கிறேன்' என்று கூறிச் சூரிய உதயத்தையே நளாயினி தடுத்துவிட்டாள். இந்நிகழ்வை அம்மையார்,

**"மங்கலத்தின்**
**தந்திறு மென்றஞ்சியொரு தையலாள் - அந்த**
**முனிவன்வாய் சொன்னபடி முற்றாமை யெண்ணித்**
**தனியிரவே நீட சபித்தாள்"** (பெண்மாட்சி.61-62)

எனப் பாடியுள்ளார். தன் கற்பின் திறத்தால் சூரியனையே நிறுத்தி வைக்கும் பெண்ணின் மேன்மையைக் கூறியுள்ளார். ஆண் எந்நிலையில் இருந்து பெண்ணைச் சோதித்தாலும் அதை எதிர்க்காமல் சொற்படிக் கேட்டு நடத்தலே சிறந்த கற்பு எனக் கூறப்பட்டுள்ளது. கணவன் எந்நிலையில் இருந்தாலும் மனைவி அவனுக்குக் கீழே அடங்கி இருத்தலே சிறந்த கற்பாகப் போற்றப்பட்டது. இயற்கையைக் கூட தன் கட்டுக்குள் வைக்க முடியும் என்று போதிக்கப்பட்டது. தன் சுயம் உணராமல் ஆணின் ஆதிக்கத்திற்குள்ளேயே பெண் இருக்க வேண்டும் என்பதற்கான மூளைச் சலவையாகவே இக்கதை கூறப்படுகிறது. அக்காலச் சூழலில் வாழ்ந்த அம்மையாரும் அதைப் பெருமையாக ஏற்று இவ்விடத்தில் பாடியுள்ள தன்மை பெண்ணை உடலாக மட்டுமே காணும் ஆதிக்க சமூக மனோபாவத்திற்கு உட்பட்டதாகவே அமைந்துள்ளது.

**அநுசுயை**

இவர் பஞ்சகன்னியரில் ஒருவர். நளாயினி தனி இரவே நீட சபித்தபோது தேவர்கள் அஞ்சி, உலகஇயக்கம் தடைபெறாமல் நடைபெற வேண்டுமென்று அநுசுயையிடம் சென்று வேண்டினர். அதற்கேற்ப நளாயினியிடம் சென்று வேண்டிப் பொழுது விடியச் செய்தார் அநுசுயை. அதோடு தன் கற்பின் திறத்தால் நளாயினியின் கணவரின் நோய் தீர்த்து வைத்து எழச் செய்தார். இதனால் தேவர்கள் அநுசுயைக்குத் திருமூர்த்திகளும் புத்திரராகப் பிறப்பர் என வரமளித்தனர். அதற்கேற்ப துருபாசர், தத்தாத்திரேயர், சோமர் என மும்மூர்த்திகளையும் புத்திரராகப் பெற்றார். இந்நிகழ்வை அம்மையார் தன் பாடலில் பாடியுள்ளார்.

**"மூவரையோர் மெல்லியலாள் - வாதுவிண்டு**
**வந்தபடிபோய் மகிழவிடா மற்சிசுவாய்**
**நொந்தழு மாறோர்சொல் நுவன்றிட்டாள்"** (பெண்மாட்சி.60-61)

இதில் கற்பின் மேன்மையால் ஒரு பெண் மும்மூர்த்திகளையும் தன் புத்திரராகப் பெறலாம் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

ஆணாதிக்கச் சமூகத்தில் ஆண்குழந்தையே முதன்மை படுத்தப்பட்டது. ஆண் குழந்தை பெறவேண்டுமெனில் அதிலும் நல்ல உயர்வான ஆண்குழந்தை வேண்டுமெனில் பெண் தன் கற்பினைக் கட்டிக்காத்தால் மட்டுமே அவ்வுயர்வினைப் பெற இயலும் என்ற கற்புக் கோட்பாட்டினைப் பெண்ணின் மனதில் சமூகம் அழுத்தமாக இக்கதையின் வாயிலாகப் பதிவுசெய்கிறது.

**வாசுகி**

மராக்க சகாயன் என்பவரின் மகள் வாசுகியைத் திருமணம் முடிக்கும் முன்பு வள்ளுவர் மணலைக் கொடுத்துச் சமைத்துத் தருமாறு கூறினார். அதற்கேற்ப அவ்வண்ணமே செய்து தந்தவர். திருமணமான பின்பு வாசுகி கிணற்றில் நீர் இறைக்கும்போது வள்ளுவர் அழைக்க, உடனே அப்பாத்திரத்தைக் கிணற்றின் இடையிலேயே விட்டு வந்தார். இருப்பினும் அப்பாத்திரம் வாசுகி விட்ட வண்ணமே நின்றது என்பர். வள்ளுவர் பகலில் நூல் நூற்கும்போது நாழி கீழே விழுந்துவிட்டது. அதைத் தேடி எடுக்க 'விளகேற்றி வருக' எனக் கூற அவ்வாறே செய்தவர் பழைய அன்னம் சுடுகிறது என அவர் கூற, அதன் சூட்டை ஆற்ற விசிறிக்கொண்டு வீசியவள்.

கொங்கணத் தேவர் தவத்திலிருக்கையில் கொக்கொன்று அவர் மீது எச்சமிட அதை அவர் பார்க்க அது எரிந்து சாம்பலானது. கொங்கணர் தவம் விட்டு நீங்கித் திருவள்ளுவர் இருக்கும் இடத்தில் பிச்சைக்கு வந்தார். அப்பொழுது திருவள்ளுவர் வாசுகியை அழைத்து வேலை கூறியதால், வாசுகி பிச்சையிடத் தாமதமானது. இதனால் சித்தர் வாசுகியைக் கோபித்துப் பார்த்தபோது வாசுகி 'கொக்கென் றெண்ணினையோ கொங்கணவா' எனக் கூற அதைக்கேட்ட சித்தர் தம் தவவலிமையைவிட இப்பெண்ணின் கற்பு மேன்மையுடையது என எண்ணி வெட்கிச் சென்றார். இப்பெண் குறித்தும் தம் பாடலில் பாடியுள்ளார் அம்மையார்.

**"ஆதாரமான முப்பால் அன்றுரைத்த வள்ளுவர் தம்**
**மாதான வாசுகிசெய் வண்மையால் - மீதான**
**வானிடத்துத் தேவர் மனநாணிச் சென்றவுண்மை**
**நானிலத்தோர் பேசாத நாளுண்டோ" (பெண்மாட்சி.69-70)**

எனவும்,

**"தேவர்களு மெச்சவளர் சித்தர்குழாத்திற் சிறந்த**
**கோவனையனா விளக்குங் கொங்கணனைப் - பூவை**
**ஒருத்தியெளிய கொக்கென் றென்னியென் மேற்பார்வை**
**உறுத்துகின்றாயோ என்றுரைத் தாள்" (பெண்மாட்சி.64-65)**

என்பதையும் பாடியுள்ளார். கணவனின் எண்ணத்திற்கும், சொல்லுக்கும் எதிர்பேசாமல் கேள்வி கேட்காமல் சொன்னதைச் சொன்ன வண்ணம் செய்தலே சிறந்த கற்பு எனப் பாடப்பட்டுள்ளது. அறிவும் திறமையும் உள்ள பெண்ணாக இருந்தாலும் கணவனின் முன்பு அதை வெளிப்படுத்தாமல் அறியாமையுடன் இருத்தலே கற்பு எனப் போற்றப்பட்டுள்ளது. ஒரு பெண் எந்நிலையிலும் தன் கணவனை மீறி, செயல்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே இக்கதையினை இப்பொழுது வரை சமூகம் பெண்ணுக்கு வலியுறுத்திக் கூறிவருகிறது.

ஒரு பெண் கற்பில் மேம்பட்டவள் என்பது மட்டுமல்லாமல் தவவலிமை மிக்க சித்தரை விட அறிவிற் சிறந்த பெண் என்பதனையும் கூறவே அம்மையார் இக்கதையினைப் பாடியுள்ளார் எனலாம். மேலும் பெண் தவவலிமை உடையவளாக இருப்பினும் அவளின் அறிவோ தவவலிமையோ போற்றப்படாமல் மாறாக உடலை மையப்படுத்திக் கூறும் கற்பின் திறமே இன்றளவும் போற்றப்படுகிறது.

**கங்கை**

கங்கைக் குறித்துக் கூறுகையில்,

**"மாலும் பிரமாவும் வந்துதன்பால் மாட்சிமிகச்**
**சாலும் உருக்கொள்ள வொருதையலாள் - பாலனைய**
**கண்டகைப் பேர்மாநதியாய்க் காசினியோர் கண்காண**
**விண்டலத்துக் கங்கைஒல்கும் வீறுற்றாள்" (பெண்மாட்சி.67-68)**

எனப் பாடியுள்ளார்.

பகீரதன் தன் முன்னோர் பொருட்டு அநேக ஆண்டுகள் கங்கையையும், மும்மூர்த்திகளையும் எண்ணித் தவமேற்கொண்டு வந்தான். அத்தவத்திற்கிறங்கிக் கங்கை பூமிக்கு வந்து செழிப்படையச் செய்தாள் என்ற கதை கூறப்பட்டு வருகிறது.

கங்கை ஆகாயத்தில் சிறப்புடன் திகழ்ந்தவள். உயர்நிலை கொண்ட கங்கை மானிட வேண்டுதலுக்கு இறங்கி அவர்களின் பாவங்களைப் போக்குகிறாள். ஒரு பெண் தான் உயர்ந்த நிலையில் இருந்தாலும் தன்னிடம் மனம் உருகி வேண்டுபவர்க்காகத் தன் நிலையிலிருந்து இறங்கி, பாவம் நிறைந்த இடத்தை வந்து சேர்கிறாள். இங்குப் பெண்ணின் இரக்க உணர்வையும், தாய்மை உணர்வையும் அம்மையார் சுட்டிக் காட்டியுள்ளார். பெண் தன்னுடைய சுயம் உணர்ந்து தனக்கான வெளியை அடைய முயலுகையில் அதை மாற்ற ஆண் ஆதிக்கச் சமூகம் பெண்களிடம் உபயோகிக்கும் ஆயுதம் தாய்மைக் குணமும் அதனால் ஏற்படும் இரக்க உணர்வும் ஆகும். ஆணின் ஆதிக்க மனோபாவத்தைத் தன்னுள் ஏற்று நடந்த பெண்ணின் மேன்மையையே அம்மையார் ஏற்றுப் பாடியுள்ள தன்மையை நோக்குகையில் அம்மையாரின் மனதிலும் ஆணாதிக்கச் சமூகத்தின் தாக்கம் இருந்ததை உணரமுடிகிறது.

**மங்கையர்க்கரசி**

சோழராசனின் மகள், நின்றசீர் நெடுமாறனின் மனைவி, பாண்டிய மன்னன் சமண சமயத்தைச் சார்ந்திருந்தார். அதினின்று அவரை மாற்றிச் சைவ சமயத்தில் சேர்க்க வேண்டும் என்று மங்கையர்க்கரசி எண்ணினார். அதன்பொருட்டுத் திருஞானசம்பந்தரைத் தன் ஊரான மதுரைக்கு வரவழைத்துத் தங்க வைத்தார். அப்பொழுது சமணர்கள் சிலர் சம்பந்தர் தங்கி இருந்த இடத்திற்கு நெருப்பு மூட்டினர். அதிலிருந்து தப்பித்த சம்பந்தர், அந்நெருப்பிடம் 'பையவே சென்று பாண்டியனைப் பற்றுக' எனக் கூறினார். அதன் காரணமாக அப்பெரிய நெருப்பு பையச் சென்று பாண்டியன் உடம்பில் சுரமாக மாறியது. அச்சுரத்திற்குச் சமணர்கள் பல மருந்துகள் கொடுத்தும் அது குணமாகவில்லை. பின் சம்பந்தர் வந்து தன் திருநீற்றின் மகிமையால் பாண்டியரைக் குணமடையச் செய்தார். இதனால் பாண்டியன் சைவ சமயத்தைத் தழுவினான்.

**"செந்தமிழ்ச் சீர் மேவுந்திரு மதுரை மாநகரில்**
**வந்த சமணர் மறங்களைந்து - சுந்தரனார்**
**கோயிற் சிறப்பமைத்துக் கொற்றவன் கூன்றிடுத்தல்**
**சேயிழை மின்னா ளொருத்தி செய்கையன்றோ" (பெண்மாட்சி.71-72)**

என மங்கையர்க்கரசியின் பெருமையைப் பாடியுள்ளார். மன்னனான தன் கணவன் மக்களை நல்வழியில் நடத்த வேண்டியவன். ஆனால் மன்னனே வழிமாறிச் செல்லுதலை எண்ணி வருந்தி உட்காராமல் அதை மாற்ற, தனி ஒரு பெண்ணாக முயற்சி மேற்கொண்டு சம்பந்தர் மூலம் அதை நடத்தியவள். தனி ஒரு பெண்ணாக மற்றொரு சமயத்தின் ஆதிக்கத்தை ஏற்காமல் தான் கொண்ட கருத்தில் நிலையாக நின்று அதை நிறைவேற்றிய பெண்ணின் மனத்தின்மையை அம்மையார் இங்குப் பாடியுள்ளார்.

**திரௌபதி**

திரௌபதன் குமாரியாகக் குண்டத்தில் தோன்றியவள். சுயம்வரத்தில் அருச்சுனனால் கொண்டு வரப்பட்டுக் குந்தியின் கட்டளைப்படி ஐவரையும் மணந்தவள். தன் கணவர்கள் மாய சூதாடி அடிமைப்பட்டபோது துரியோதனன் சொற்படித் துச்சாதனன் துகில் உரியும் வேளையில் கண்ணனை வேண்டி மாளாத்துகில் பெற்றவள். இவருடன் சேர்ந்து கொழுஞ் சபதங்கள் செய்து ஆரணஞ்சென்றவள் இளம் பஞ்சபாண்டவர்களைப் பெற்றவள். தருமனுக்குப் பிரதி விந்தனையும், பீமனுக்குச் சுருத சோமனையும் அருச்சுனனுக்குச் சுருத கீர்த்தியையும் நகுலனுக்குச் சாதநீகனையும், சகாதேவனுக்குச் சுருத சேரனையும் பெற்றவள். போரில் துரியோதனன் இறந்த பின்பு தான் செய்த சபதப்படி கூந்தலை அள்ளி முடித்தவள். கலியுகம் பிறந்து பாண்டவர் தமது ராச்சியத்தை விட்டுத் தவமேற்கொண்டு இமயமலை செல்கையில் தானும் சென்றவள். அவர்களுடன் முழுவதும் இல்லாமல் இடையிலேயே இறந்தவள்.

**"ஐவர்களைச் சேர்ந்தும் அரியகற்பிற் சோராது**
**தெய்மென நின்றாளோர் சேயிழையாள்" (பெண்மாட்சி.76)**

ஐந்து பேரையும் மணந்து துன்ப வேளைகளில் ஐவருக்கும் துணையிருந்து துன்பத்தைப் போக்கியவள், எதிரிகளை எதிர்க்கும் துணிவும் மனத்தின்மையும் மிக்கவள் என்று சுந்தரத்தமையார் திரௌபதி குறித்துப் பாடியுள்ளார்.

**காரைக்கால் அம்மையார்**

நாயன்மார்களில் ஒருவர். சிவபக்தி மிக்கவர். எனினும் திருமணத்திற்குப் பின்பு கணவனுக்குச் செய்யும் தொண்டையே இறைவனுக்குச் செய்யும் தொண்டு என எண்ணி வாழ்ந்தவர். இவரின் தெய்வத் தன்மை உணர்ந்து கணவன் இவரை விட்டு நீங்கிச் செல்கையில் தன் அழகை விடுத்துப் பேயுருவைப் பெற்றவள். சிவனின் தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்து பாடல் பாடியவர். இறைவனாலேயே அம்மையே என அழைக்கப்பட்ட சிறப்பை உடையவர்.

**"மைவனப்புக்**
**கண்டத்தான் அம்மையெனக் கான்முளை யொத்தேயழைப்ப**
**மண்டலத்தோர் பாவை வரம் பெற்றாள்" (பெண்மாட்சி.76-77)**

தெய்வபக்தி கொண்டபோதும் கணவனுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவள். அக்கணவனே தன்னை விடுத்துச் சென்ற நிலையில் தெய்வமே கதி என எண்ணிச் சரணடைந்தவள். எந்நிலையிலும் தனக்கென வாழாமல் பிறருக்காக வாழும் பெண்ணின் பெருந்தன்மையைச் சுந்தரத்தம்மை பாடியுள்ளார். பெண் என்றுமே தனக்காவும் தன் தேவை உணர்ந்தும் வாழாமல் பிறருக்காக வாழ்தலே மேன்மை என்று ஆதிக்கச் சமூகம் பெண்ணின் மனதில் ஆழப் பதிய வைத்துள்ளது. அவ்வாறு வாழ்ந்த காரைக்கால் அம்மையாரின் வாழ்வைச் சுந்தரத்தமையார் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

இவ்வுலகில் பெண் இல்லாமல் ஆணுக்கு இன்பம் இல்லை. ஆண் இல்லாமல் பெண்ணுக்கு மகிழ்ச்சி இல்லை. பெண், ஆண் இருவரின் பிறப்பிற்கும் ஈடு இணை என்பதே இல்லை. இருவரும் சமம் என்ற நிலையினையே காண வேண்டும் என அம்மையார் பாடியுள்ளார். கற்பாலே உயிர் துறந்த பெண்கள் பலர் உண்டு. ஆனால் ஆண்கள் இல்லை. பாவலரும் மாதவம் பெற்ற முனிவரும் உலகை ஆண்ட மன்னர்களும் பெண் மீது ஆசைகொண்டு துய்த்த நலமும் துயரும் துணிந்து உரைக்க முடியாது. அவ்வளவு பெரியது எனவும் பாடியுள்ளார்.

ஆண்கள் எந்நிலையில் இருந்தாலும் அவர்கள் ஒழுக்கமின்றியே இருந்தனர். ஆனால் பெண்கள் எந்நிலையிலும் தன் ஒழுக்கம் எனக் கூறப்பட்ட கற்பைப் போற்றினர் என்னும் கருத்தையே அம்மையார் இந்நூலில் பாடியுள்ளார்.

மும்மூர்த்திகள், விநாயகர், முருகன், இந்திரன், அக்னிதேவன் முதலான பல தெய்வங்களும் தவமேற்கொண்ட புலவர்களும் பெண்களிடம் கொண்ட மையல் காரணமாகத் தம் பெருமையை இழந்தனர் என்பதையும், புராணப் பெண்கள் தெய்வப்பெண்கள் ஆகியோர் கற்பின் மேம்பாட்டால் சிறப்புப் பெற்ற நிலையினையும் அம்மையார் பாடியுள்ளார். மேன்மை நிலையாகக் கூறப்பட்ட தெய்வநிலையிலும் முனிவர் என்கிற நிலையிலும் ஆண்கள் செய்த தவறு பக்திச்சாயம் பூசப்பட்ட போதும் அதை ஏற்காமல் அம்மையார் கடுமையாகச் சாடியுள்ளார்.

ஆனால் பெண்ணின் மேன்மை கூறுமிடத்து ஆதிக்கச் சமூகம் விதித்த கட்டுக்குள் வழுவாமல் வாழும் பெண்களின் மேன்மையைப் போற்றிப் பாடியுள்ளார். பெண்ணை உடலாக மட்டுமே காணும் ஆணாதிக்கச் சமூகம் அவளுக்குக் கற்பு எனும் கோட்பாட்டையே உயர்வு என வலியுறுத்தியது. அதையே அம்மையாரும் தன் படைப்புகளில் உயர்வாகப் பாடியுள்ளார். இந்நிலையில் ஆணாதிக்கச் சமூகத்தின் தாக்கம் அம்மையாரின் பாடல்களில் பெரும்பான்மை வெளிப்பட்டுள்ளது.

**முடிவுரை**

- பக்தி இலக்கியக்காலம் பெரும் இடைவெளிக்குப் பின்பு சிற்றிலக்கியக் காலத்திலும் சிறுபான்மையான பெண்கவிஞர்கள் கவிதைகள் இயற்றியுள்ளனர். ஆனால் அவை இலக்கிய வரலாறுகளில் அடையாளப்படுத்தப் படவில்லை.
- சுந்தரத்தமையார் புராணக்கதைகளின் வாயிலாக ஆண்களின் ஒழுக்கக் கேடுகளையும் பெண்களின் மேன்மையையும் பாடியுள்ளார்.
- கடவுளாகவும், தவம் மேற்கொள்ளும் முனிவராகவும், மன்னராகவும், புலவராகவும் என எந்நிலையில் இருந்தாலும் ஆண், பெண் மீது கொண்ட மையல் காரணமாகத் தன் நிலை மறந்து கீழ்நிலை அடைகிறான் என்பதைத் தன் கவிதைகளில் பாடியுள்ளார்.
- தெய்வ நிலையில் இருந்தாலும் மானிட பெண் என்ற நிலையிலும் பெண் என்பவள் ஆணுக்கு அடங்கி நடந்து தன் கற்பின் நிலையை மேம்படுத்தி உள்ளாள் என்பதையும் பாடியுள்ளார்.
- எந்நிலையில் இருந்தாலும் ஆண் தன் கட்டுக்குள்ளே பெண்ணை வைக்க எண்ணும் ஆதிக்க மனோநிலை புராணக் கதைகளில் வெளிப்பட்டுள்ளது.
- ஆண்கள் செய்யும் தவறுகள் பலவும் கண்டிக்கத்தக்கவையாக அல்லாமல் மாறாகப் பக்திச்சாயம் பூசப்பட்டு, லீலையாகவோ திருவிளையாடல்களாகவோ சுட்டப்படும் தன்மையை அம்மையார் சாடியுள்ளார்.
- ஆண் ஆதிக்கச் சமூகம் பெண்ணின் உடலை மையப்படுத்திக் கற்பு ஒழுக்கம் எனும் கட்டுக்குள் அடக்கி வைத்து உள்ளது. ஆனால் அந்நிலை மிகவும் மேம்பட்ட தன்மை எனப் பெண்களை மூளைச்சலவை செய்துள்ளது. இதையே அம்மையாரும் சில கதைகளைக் கவிதைகளின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

- சில இடங்களில் ஆண்களைச் சாடினாலும் மற்ற இடங்களில் ஆணாதிக்கச் சமூகத்தின் தாக்கம் அம்மையாரின் பாடல்களில் வெளிப்பட்டுள்ளது.

**குறிப்புகள்**

1.தாயம்மாள் அறவாணன்., பெண்ணின் பெருந்தக்கது இல், ப.132

2.மேலது., ப.133.

**துணைநூற்பட்டியல்**


- சிங்கார வேலு முதலியார்(பதி.), 1980, அபிதான சிந்தாமணி, ஏசியன் எஜிகேசனல் சர்வீஸ், புதுதில்லி.
- சுந்தரத்தமையார், 1955, பெண்மாட்சி, கௌமார சபை, திருவாமாத்தூர்.
- தாயம்மாள் அறவாணன், 2011, பெண்ணிண் பெருந்தக்கது இல், தமிழ்க் கோட்டம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

# இந்து தேசத்தாரின் அறிவியல் சிந்தனையில் இரசாயனவியல்

*ரவீந்திரராசா யரனியா*

*உதவி விரிவுரையாளர்*

*(இந்து நாகரிக கற்கைகள் துறை)*

*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*

*yaraniyaraniya@gmail.com*

***முன்னுரை***

*இன்றைய காலகட்டத்தில் எத்துறை சார்ந்த அறிவும் விஞ்ஞானப்பூர்வமான அணுகு முறையினையும், அறிவியற் கருத்துக்களின் செழுமையினையும் கொண்டமைய வேண்டியது அவசியமாகின்றது. தொழில்நுட்பவியல்சார் உயர்கருவிகள் கண்டுபிடிக்கும் முன்னரே பௌதீகவியல் சார்ந்த உண்மைகளை இந்து ஞானிகள் தங்களுடைய அகஉணர்வினாலும், பரிசோதனைகளினாலும், இயற்கை நடைமுறைகளினாலும் கண்டறிந்துள்ளனர். இவ்வாறு கண்டறிந்த அறிவியலில் வானியல், இரசாயனவியல், மெய்யியல், மருத்துவம், சோதிடம், கணிதவியல், தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவை அடங்கும். அந்தவகையில் பண்டைத் தமிழரின் அறிவியலில் முக்கிய பங்கினைப் பெற்றிருக்கும் இரசவாதக் கலையே நவீன யுகத்தில் இரசாயனவியலாக மாற்றமடைந்து வளர்ச்சி பெற்றுள்ளமை பெரும்பாலானோர் அறியாத விடயமாக உள்ளது. பண்டைத் தமிழரின் இவ்வாறான இரசாயன அறிவியல் சிந்தனைகள், சித்த மருத்துவத்தில் இரசவாதத்தின் பயன்பாடு, அதன் முக்கியத்துவம், தாதுப்பொருட்களைச் சுத்திகரிக்கும் முறை போன்ற அறிவியல் சார்ந்த விடயங்கள், அதன் முக்கியத்துவம் போன்றன வெளிவராது அரும்பெரும் பொக்கிசங்களாக மறைந்து காணப்படுகின்றன. அவற்றை வெளிக்கொண்டுவரின் தமிழர்களின் தனித்துவம் மேலோங்குவதுடன் உலக அரங்கில் தமிழரை வியந்து பார்க்கும் நிலை ஏற்படும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.*

*இரசவாதக் கலையானது இந்தியாவிலிருந்தே பிற தேசங்களுக்குப் பரவலாக்கம் பெற்றது. குறிப்பாக அரபு, சீனம், பாரசீகம் என்பவற்றைக் கூறலாம். ஆனால் இரசவாதக் கலையானது அரேபியர்களிடமிருந்து திரிபடைந்து இந்தியாவிற்கு வந்ததாகத் தற்காலத்தில் கூறப்படுகின்றது. எனவே இக்கலையானது நமது முன்னோர்களுக்கே உரித்துடையது என்பதனை நாம் அறிந்து அதனைப் பேணுவது சிறப்பு. மக்கள் மத்தியில் இரசவாதக் கலையானது செல்வாக்கிழந்து காணப்படுவதோடு தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகின்றது. இக்கருத்தினை மாற்றியமைத்து அதன் உண்மை நிலையினை எடுத்துரைப்பது காலத்தின் கட்டாயம் ஆகின்றது.*

*தற்காலத்தில் இரசாயனவியல் விஞ்ஞானமாக வளர்ச்சியடைந்த இரசவாதக் கலையானது, உலோகவியல், சித்த மருத்துவத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றியுள்ளது. ஆனால் தற்காலத்தில் இரசவாதக் கலையானது மக்கள் மத்தியில் கண்கட்டு வித்தை, மாயாஜால வித்தை, ஏமாற்று வேலை என்ற நிலையிலேயே பார்க்கப்படுகின்றது. மக்கள் சமூகத்தில் இது பற்றிய சரியான புரிந்துணர்வும், தெளிவின்மையுமே இதற்குக் காரணம் எனலாம். மேலும் இவை பற்றிய தகவல்கள் இன்றும் பெரியளவில் வெளிவராமையும் இதனை மேற்கொள்வோர் இரசவாத வித்தையினை இரகசியமாகப் பேணுவதும்; இது பற்றிக் கூறுகின்ற இலக்கியங்களில் இவ்விடையங்கள் குறியீட்டு மொழி, வேறு பெயர்கள் என்பவற்றை பயன்படுத்துவதுடன், இவை மேலோட்டமாக ஒரு கருத்தினையும் ஆழ்ந்த*

சிந்தனையில் இன்னுமோர் கருத்தினைப் புலப்படுத்தும் வகையிலும் அமைந்து காணப்படுகின்றமை இதற்குக் காரணமாகும்.

இரசவாதத்தில் பேசப்படுகின்ற உலோகவியல், சித்த மருத்துவம் ஆகியன பற்றிப் பல நூல்கள் பேசுகின்றபோதும் வடஇந்தியாவில் கி.பி.12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'இராசரெட்ண சமுக்சயம்' எனும் இலக்கியமும் தென்னிந்தியாவில் 'சித்தர்களின் இரசவாதக் கலை' எனும் இலக்கியமும் சிறப்பிடம் பெறுகின்றன.

**இரசவாதம்**

உலகின்கண் இன்று வளர்ந்து வரும் மகத்தான விஞ்ஞானம், மருத்துவம், கணிதம், கலை, இலக்கியம் போன்றவை பாரதநாட்டின் வேதங்கள், அரிய நூல்களின் உதவியினாலேயே உயர் நிலையை அடைந்துவந்துள்ளன. அவ்வகையில் இரசவாதக் கலைக்குச் சித்த புருடர்கள் ஆற்றிய பங்களிப்பு மகத்தான ஒன்றாகக் காணப்படுகின்றது. சித்தர்கள் தங்கள் இறைஞானத்தால் கண்டறிந்த அரிய கலைகளில் இரசவாதமும் ஒன்றாகும். இது 64 கலைகளில் ஒன்றாகவும் காணப்படுகின்றது.

இரசவாதம் என்பது ஓர் உலோகத்தை மற்றுமோர் உலோகமாக மாற்றும் கலையாகும். அதாவது இரும்பு, செம்பு, வெள்ளி போன்ற தாழ்ந்த கனிமங்களை உயர்ந்த உலோகமான தங்கமாக மாற்றும் கலையாகும். இரசவாதம் என்னும் சொல்லுக்கு இரசத்தை வேதித்தல் எனவும் பொருள் கொள்ளலாம். மேலும் இரசவாதம் என்பது இரசத்தின் மாறுதல்களை அறிவது எனப்படுகின்றது. இரசவாத சிந்தாமணி எனும் நூல் 'இரசவாதம் என்பது பொருட்களின் சாரங்களை வாதிக்கும் வித்தை' என வரையறை தருகின்றது. அதாவது (இரசம் - சாரம், வாதம் - வாதித்தல்) ஆகையால் பொருட்களின் சாரங்களை (தத்துவங்களை) ஒன்றை மற்றொன்றோடு கலந்தும், ஒன்றை மற்றொன்றாக மாறுபடுத்தியும், தாழ்ந்ததை உயர்ந்ததாகவும், சிற்சில குணங்கள் உள்ளவற்றைப் பற்பல குணங்கள் உள்ளவையாகவும் செய்யும் வகைகளைச் சொல்வதே இரசவாதம் என்கிறது இரசவாத சிந்தாமணி.

மருத்துவ முறையில் வரும் மிக முக்கியமான அம்சம் வாதமாகும். வாதம் என்பதற்கு மாறுபடுதல் என்பது பொருள். வேதித்தல் என்னும் சொல்லின் திரிபே வாதம். நம்மைச் சுற்றிலும் உள்ள இயற்கைப் பொருட்கள் ஒவ்வொன்றும் மாறிக்கொண்டே இருக்கின்றன. இந்த மாற்றங்கள் எப்படி உருவாகின்றன என ஆராய்வதே வாதம். இச்செயற்பாட்டினையே தற்கால இரசாயனவியலும் மேற்கொள்கின்றது. ஒவ்வொரு பொருளின் பண்புகளையும் ஆராய்வதே வாதம். நம் நாட்டுச் சித்தர்கள் கண்ட இரசவாதம் பண்டங்களைப் பற்றிய ஆராய்ச்சி என்கிறார் சாமி சிதம்பரனார்.

மேலும் பொருட்கள் என்னென்ன பத குணங்களால் உண்டாக்கப்பட்டிருக்கின்றன? அவை மாறுபடக் காரணம் என்ன? மேற்கண்ட மாறுபாடுகளை எவ்விதத்தில் தவிர்க்க முடியும்? என்பன போன்றவற்றை ஆராய்ந்து நிச்சயிப்பதையே இரசவாதம் என்பர். இரசவாதத்தின் தொழிற்பாடானது இரண்டு விதமாகக் காணப்படுகின்றது. அவை வருமாறு,

- அடிப்படை உலோகங்களை தங்கமாக மாற்றுவது
- மனிதச் செயற்பாட்டை இளமையாகப் பேணுவது

இதற்காகப் பல உலோகங்களும், உலோக உப்புக்களும், பாசணங்களும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இவை தகுந்த சுத்திகரிப்பு முறை இன்றிப் பயன்படுத்தினாலோ அல்லது உட்கொண்டாலோ பல்வேறு கொடிய வியாதிகளையும், மரணத்தையும் ஏற்படுத்தவல்லவை. இதற்குப் பயன்படுத்தப்படும் தாதுப்பொருட்கள் குணவாடத்தின்படி பிரதானமாக நான்கு வகைப்படுகின்றன. அவை,

- உலோகங்கள் - தங்கம், வெள்ளி, ஈயம் முதலான 8 உலோகங்கள்.
- உப்புக்கள் - இயற்கை உப்பு 10, செயற்கை உப்பு 15
- பாசணங்கள் - இயற்கைப் பாசணங்கள் 32, செயற்கைப் பாசணங்கள் 32
- உபசாரங்கள் - நூற்றியிரண்டு

என்பனவாகும்.

இந்தியாவில் மட்டுமின்றி மேலைத்தேசத்தவர்களாலும் மதித்துப் போற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். டேவிட் கோர்டன் வைட் (David Gordon White's) என்பவர் 'இந்தியாவில் அறிவியல் சார்ந்த அதிகூடிய படிப்பு இரசவாதத்தை அடிப்படையாக் கொண்டது' என்கிறார். இவர் எழுதிய 'The Alchemical Body' எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு 1996இல் அமெரிக்காவின் சிக்காகோ நகரில் சித்த கலாசாரமான '*Medieval India*' என்பது நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய இரசவாதக் கலை பற்றிய பெரும்பான்மையான கட்டுரைகள் *Arioe Rosy* என்பவரால் எழுதப்பட்டுள்ளன. அத்தோடு வரலாறு பற்றி *G.Jaemeulee beebelds* என்பவர் எழுதிய 'A History of Indiae; Med,calliterature Vol-5 என்பது *Groepng* என்பவரால் 1999-2003 ஆண்டு காலப்பகுதியில் நெதர்லாந்தில் பெறப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய இரசவாதமானது மிகவும் திறமையான வரலாற்றுப் பாடமாக இந்தியாவில் உள்ளது என *Satya Prakashs* என்பவரால் 'zPracbz Blaram Mez Rasayaz Kavblas' எனும் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் (*All a labadIndia* 1960) *Siddhbnandam Misra|s Ayuravediya, Rasasasstra, Jaikrbshadas, Ayurveda* தொடர் இல 35, *Banaras, India* 198 எனும் இலக்கியங்களிலும் இரசவாதம் பற்றிய விடையங்கள் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**இரசாயனவியல்**

இரசாயனவியல் என்பது பூமண்டலத்திலுள்ள எல்லாப் பொருட்களின் அமைப்பையும், குணங்களையும் ஆராய்வதும், காலப்போக்கில் அவை அடையும் எண்ணற்ற மாறுதல்களையும், அம்மாறுதல்களினால் ஏற்படும் புதிய பொருட்களின் குணச்சிறப்புக்களையும் விளக்குவதாகும். இது சேதன அசேதனக் கூறுகளைக் கொண்டமைந்தது. ஒரு பொருள் எந்த மூலக்கூறுகளினால் ஆனது? சூழலில் அவை அடையும் மாற்றங்கள், அவற்றால் சூழலில் ஏற்படும் தாக்கம், மாற்றம், புதிய பொருட்களின் தோற்றம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. இரசாயனவியல் என்பது ஒட்சிசன், ஐதரசன், காபனீர்ரொட்சைட், கீலியம், ஆகன், லித்தியம், வெர்லியம் காபன்... போன்ற வாயுக்களின் மூலக்கூறுகள், சேர்வைகள் என்பவற்றையும் உள்ளடக்கியது.

சித்தர்களின் மருத்துவ நூல்கள் இதளினால் (பாதரசத்தினால்) தாழ்ந்த கனியங்களை (உலோகங்களை) உயர்ந்த உலோகமான தங்கமாக மாற்றியமைக்கும் இதள் மாற்றியத்தினை மேற்கொண்டதாகக் கூறுகின்றன. இவ்விதள் மாற்றியம் வட மொழியில் 'இரசவாதம்' எனப்படுகிறது. இக்கலையைக் குறிக்கும் அல்ச்செமி (*Alclemy*) எனும் சொல்லிலிருந்தே கெமஸ்றி (*clemistry*) எனும் சொல் தோன்றியது. இக்கெமிய நூலே இரசாயனம் எனப்படுகின்றது. இம்முறையில் இதனை தமிழில் 'இதளியம்' என்கின்றனர். இப்பொன்னாக்கம் அரபியில் (*al - kbmia*) என அழைக்கப்பட்டது. இதில் வரும் அல் என்பது 'அந்த' என்று பொருள்படும் சுட்டுச்சொல் என்றும் கிமிய என்பது எகிப்து நாட்டின் பெயர் எனவும் *OxfordDbctionary* கூறுகின்றது.

தாவர வகைகள், கனிய, உலோக வகைகள், விலங்கின் வகைகள் (மூல, தாது, ஜீவ வர்க்கம்) ஆகிய அடிப்படையில் இயற்கையை ஆராய்ந்து அதன் தன்மைகளைத் தெரிந்து மூன்று வகைப்பட்ட மருத்துவ வழிமுறைகளையும் முன்னோர் கண்டறிந்தனர். இச்செயற்பாட்டினையே அசேதன இரசாயனவியல் மேற்கொண்டு வருகின்றது. இயற்கைப் பொருட்களை அறிவதும், அவற்றை மனிததேவைக்குரிய வகையில் மாற்றியமைப்பதும் திட்டவட்டமான அறிவியலாக சித்தர்களால் வளர்க்கப்பட்டது. இவ்வறிவியலே தற்காலத்தில் இரசாயனவியலாக மாற்றமடைந்துள்ளது. தற்கால இரசாயனவியலானது சேதன இரசாயனவியல், அசேதன இரசாயனவியல், கைத்தொழில் இரசாயனவியல்

என வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஆரம்ப காலத்தில் தமிழர்கள் இவை அனைத்தையும் இரசவாதத்தில் ஒன்றாகவே மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வடஇந்தியா**

சிந்துவெளிக்கால மக்கள் செங்கட்டிகள், தண்ணீர்க் குவளைகள், பாத்திரங்கள், அணிகலன்கள் எல்லாவற்றிலும் நுட்பமான முறையில் இரசாயனவியலைக் கையாண்டுள்ளமையினை அறியமுடிகின்றது. மணல் உருவங்களை குவாட்ஸ் கல்லையும் களிமண்ணையும் சேர்த்து அமைத்துள்ளனர். பூச்சுக்களுக்கு ஜிப்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்காலத்தில் சிமெந்து தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருட்களில் ஜிப்சமும் ஒன்றாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இக்கால மக்கள் செம்பு, வெண்கலம் என்பவற்றினையும் பயன்படுத்தியுள்ளனர். இவற்றினை அலங்காரப் பொருட்கள் மற்றும் வீட்டுப் பாவனைக்குரிய உபகரணங்கள், கூரிய ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கும் பயன்படுத்தியுள்ளமையினை அகழ்வாய்வுகளின் மூலம் அறியமுடிகின்றது. இக்கால மக்கள் இரும்புக் குழல்களை வடிவமைத்து அவற்றினைக் கழிவு நீர்களை வெளியேற்றும் வடிகான்களாகப் பயன்னடுத்தியமையும் இக்கால மக்கள் நுட்பமான முறையில் இரசாயனவிலைக் கையாண்டுள்ளமையினை அறியமுடிகின்றது.

அதுமட்டுமல்லாது, செப்பைப் பிரித்தெடுப்பதற்கு களிமண்ணால் உருவாக்கப்பட்ட தொட்டிகளில் மரச் சாம்பலை விட்டு எரித்து, அதிலிருந்து செப்பைத் தனியாகப் பிரித்தெடுத்துள்ளனர். பருத்தியைச் சாயமூட்டுவதற்கு 'மக்நட்' என்ற கனிப்பொருளைப் பயன்படுத்தியுள்ளனர். வெண்மையான ஈயத்தினைக் கொண்டு கூந்தலைக் கழுவியுள்ளனர். கண்ணாடிப் பொருட்களுக்கும், கை வேலைப்பாடுகளுக்கும் நிறமூட்டுவதற்காகச் செப்பு ஒட்சைட், இரும்புத் தாதுக்களும், இரும்பு ஒட்சையிட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனூடாக சிந்துவெளிக் காலத்திலும் நுட்பமான முறையில் இரசாயனவியல் இந்தியர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினை அறியலாம்.

வேதகாலத்திலும் நுட்பமான முறையில் இரசாயனவியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கால மக்களது வாழ்வியலில் முக்கியமான ஒன்றான சோமபானத் தயாரிப்பில் இரசாயனத் தொழிற்பாட்டை அவதானிக்க முடிகின்றது. வார்லித் தாவரத்தினையும், தயிரையும் சேர்த்து வெப்பமூட்டல் மூலம் சோமபானம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதர்வ வேதத்தில் நீண்ட ஆயுளுக்கு உதவும் 'தங்க பஸ்பத்தின்'பயன்பாடு பற்றிக் கூறப்பட்டுள்ளது. வெப்பத்தினால் ஏற்படும் இரசாயன மாற்றங்கள் பற்றிய அறிவைப் பிந்திய வேதகால மக்கள் அறிந்திருந்தனர். வாக்ஸாயனரின் குறிப்பின்படி இரசாயன மாற்றங்களுக்கு வெப்பம் புறக்காரணியாகவோ, அகக்காரணியாகவோ தொழிற்படுகின்றது எனக் குறிப்பிடுகின்றார். வேத இலக்கியங்களில் இரும்பின் பயன்பாடு பற்றியும் அறியமுடிகிறது.

சரஹ சம்ஹிதையிலும், சுஸ்சுருத சம்ஹிதையிலும் செப்பு சல்பேற், அயன் சல்பேற், பெரஸ் ஒக்சைட் போன்ற கனிமப் பொருட்களை மருந்துகளாகப் பயன்படுத்தும் முறை பற்றிக் கூறப்பட்டுள்ளது. கந்தகத்தினையும் இரும்பினையும் வெப்பமேற்றி அயன் சல்பேற்றைப் பெற்றுள்ளனர். அதுமட்டுமின்றி அயஸ்கிருதி'முறை மூலம் உலோகங்களுடன் சோடியம் குளொரைட், சல்பர், மக்னீசியம் சல்பைட் போன்றவற்றை வறுத்து மருந்துகளைத் தயாரித்துள்ளனர். சரகரும் சுஸ்சுருதரும் மருத்துவத் துறையில் இரசாயனவியலைச் சரளமாகக் கையாண்டுள்ளனர். இருவரும் சத்திர சிகிச்சையின்போது நோயாளிகளை நினைவிழக்கச் செய்வதற்கு மதுசாரத்தைப் (அற்ககோலை) பயன்படுத்தியுள்ளனர். மேலும் சுஸ்சுருத சம்ஹிதையில் அறுவைச் சிகிச்சைக்கு உருக்கினால் செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தியமை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வுபகரணங்களை ஹைதராபாத், மைசூர் தொல்பொருள் ஆராய்ச்சியின்போது கண்டெடுத்துள்ளனர். அத்தோடு சுஸ்சுருதர் நச்சுத்தன்மை பொருந்திய 'வைட் ஆசனிக்' என்பது பற்றி அறிந்திருந்தமையை சுஸ்சுருத சம்ஹிதையினூடாக அறியமுடிகிறது. மேலும் இவர்களால் நிறுவப்பட்ட மருத்துவப் பள்ளிகளில் வீழ்படிவாக்கம், காய்ச்சி வடித்தல், பதங்கமாதல் (நப்தலீன்) ஆவியாக்கல் போன்ற இரசாயன வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவர்கள் தாவரம், விலங்கு எனச் சேதனப் பொருட்களை வகைப்படுத்தியுள்ளனர். அதேபோல் சுஸ்சுருதர் விஷங்களைத்

தாவர விஷம், விலங்கு விஷம் எனப் பாகுபடுத்தியுள்ளார். அதனுடன் பெரும்பாலான கனிமப் பொருட்கள், தாவர வகைக்குரிய விஷங்கள் எனச்சுட்டிக்காட்டியுள்ளார்.

அர்த்தசாஸ்திரத்தில் இரசாயனவியல் தொடர்பான குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. அதில் பொன், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு, தகரம் ஆகியவற்றைத் தாதுக்களிலிருந்து பிரித்தெடுப்பது பற்றியும், அவற்றை ஒன்றோடு ஒன்று சேர்த்து கலப்புலோகங்களை அமைப்பது பற்றியும் கூறப்பட்டுள்ளதுடன் மண்ணிலிருந்து பெறும் பெறுமதியான கனிய வளம் பற்றியும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கருட புராணத்தில் வைரங்களின் விஷட குணங்கள், அவற்றின் தரத்தினை இனம்காணும் முறை, பட்டை தீட்டும் முறை என்பன விவரமாகக் கூறப்பட்டுள்ளன. 10ஆம் 11ஆம் நூற்றாண்டில் உதயனர் எழுதிய கிரனாவலி' என்ற நூலில் பூமியில் நிகழும் எல்லாவித இரசாயன மாற்றங்களுக்கும் ஓர் அடிப்படைக் காரணியாக வெப்பம் உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில் ஒளித்தொகுப்பிற்கும், தாவரங்களின் நிற மாற்றத்திற்கும், மாம்பழங்கள் பழுப்பதற்கும், உலோகங்கள் துருப்பிடிப்பதற்கும், உணவு குருதியாக மாறுவதற்கும் வெப்பம் ஒரு காரணியாக உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

துணிக்குச் சாயம் இடுவதற்கும் ஓவியங்களுக்கு வர்ணம் பூசுவதற்கான வர்ணக் கலப்புக்களுக்கும், அலுமினியம் சல்பேட், இரும்பு சல்பேட் என்பவற்றையும் பயன்படுத்தியுள்ளனர். சான்றாக அஜந்தா ஓவியங்களைக் குறிப்பிடலாம். சித்திர சூத்திரத்தின் 40வது அத்தியாயத்தில் ஓவியத்திற்கான ஊடகத் தயாரிப்பில் தங்கம், வெள்ளி, செம்பு, மைக்கா, கந்தகம், சிவப்பு ஈயம், சுண்ணாம்பு என்பவற்றைக் கொண்டும் வர்ணங்கள் தயாரிக்கலாம் எனக் கூறுகின்றது. இதனூடாக உலோகப் பிரித்தெடுப்பு என்பன இந்துக்களால் கையாளப்பட்டுள்ளமையினை அறியலாம்.

கண்ணாடி உற்பத்தியும் இந்தியர்களால் நுட்பமான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கி.மு, 6ஆம் நூற்றாண்டிலிருந்தே கண்ணாடிப் பொருட்களுக்கு நிறமூட்டல், கண்ணாடிப் பொருட்களை உருக்கிச் சுத்திகரித்தல், கண்ணாடிகளில் ஓவியங்கள் வரைதல் போன்ற இரசாயனவியல் தொழிற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. இதற்கு தக்கசீலத்திலும் பீகாரிலும் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பண்டைய கண்ணாடித் தொழிற்சாலையின் அழிபாடு சான்று பகர்கின்றது. இங்கு சிலிக்கேற்றிலிருந்து கனிமப் பொருட்கள் பிரித்தெடுத்து கண்ணாடி உற்பத்தி இடம்பெற்றுள்ளது. இவற்றினைவிடவும் கி.மு, 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கண்ணாடிப் பொருட்கள் சில தாக்சில்லாலில் கிடைக்கப்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கவையாகும். அதேசமயம் சதபத பிராமணத்தில் காணப்படும் சில குறிப்புக்கள் அதற்கு முன்னரே கண்ணாடிப் பொருட்களை மக்கள் அறிந்திருந்தனர் எனக் குறிப்பிடுகின்றது. பிலினி எனும் மேனாட்டு அறிஞர் தனது யேவரசயட ர்ளைவழசல என்ற நூலில் கண்ணாடிப் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றில் உலோக ஒட்சைட்டுக்களைக் கொண்டு நிறமூட்டி ஓவியங்களை வரையும் முறையினை பண்டைய இந்துக்கள் அறிந்திருந்தனர் என்றும், அவை உலகிலுள்ள கண்ணாடிப் பொருட்களில் உயர்ந்த தரத்திலானவை என்றும் குறிப்பிட்டுள்ளார். இதனூடாகவும் இந்துக்களின் இரசாயனவியல் நுட்பத்தினை அறியமுடிகிறது.

**தென்இந்தியா**

இரசாயனவியல் பற்றிய அறிவினைத் தமிழர்கள் நன்கு அறியப்பெற்றிருந்தனர். இருப்பினும் பழந்தமிழ் இலக்கியங்களில் இவை பற்றிய தகவல்கள் மிக அரிதாகவே இடம்பெற்றுள்ளன எனலாம். இரசவாதக் கலையானது தமிழகத்தில் அதிகளவாக சித்தர்களினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரசமணிகளைப் பயன்படுத்தி மட்டமான உலோகங்களைத் தங்கமாக மாற்றச் சித்தர்கள் தெரிந்திருந்தனர். இது ஐரோப்பிய சிந்தனையாளர்களது 'பிலாசபஸ் ஸ்டோனுக்கு' ஒப்பானது. ஒரு தனிமத்தின் அணுக்களின் மீது நியூதிரன் துகள்களைக் கண்டு இன்றைய அறிவியல் வெற்றி பெற்றுள்ளது. உதாரணமாக ஐதரசன் அணுக்களின்மீது நியூதிரன் துகள்களை மோதச் செய்து ஹீலியமாக மாற்றுகின்றனர். எனவே துகள்களைப் பயன்படுத்தி மட்டமான உலோகத்தைத் தங்கமாக மாற்றுவது சாத்தியம் என்பது சித்தர் கொள்கையின் உறுதிப்பாடாகும்.

தமிழர்கள் உலோகவியல்களை மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இரும்பின் யன்பாடு, இரும்புப் பட்டறைகள் பற்றிய செய்திகளைக் குறுந்தொகையில் வரும் 'உலைக்கல் அன்ன' பாறை எனும் பாடலடிகள் மூலம் அறியலாம். அதாவது கொல்லனது உலைக்களத்திலுள்ள பட்டடைக் கல்லைப் போன்ற வெம்மையான பாறையினையுடைய பாலை நிலம் என வர்ணிப்பதன் மூலம் தமிழர்கள் உலோகவியல் தொடர்புடைய இரசாயன அறிவினைப் பெற்றிருந்தமையை அறியலாம். மேலும் இலங்கையில் கிடைக்கப்பெற்ற தமிழக நாணயங்கள் சிலவற்றை ஆய்வு செய்த பிரித்தானியநாட்டு இரசாயனவியலாளர் றோஸ் என்பவர் இந்நாணயங்களில் நான்கு பங்கு ஈயம், ஒரு பங்கு செம்பு, மிகச் சிறிதளவில் சிலிக்கா, இரும்பு, நிக்கல் போன்ற உலோகங்கள் கலந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் சிலப்பதிகாரத்திலே மாதவி நீராடிய நீரில் 10 வகையான துவர், 5 வகை விரைகள், 32 வகையான ஓமாலிகைகள் ஆகிய 47 மருந்துப் பொருட்கள் ஊறிக் காய்ந்தது எனும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனூடாகப் பார்க்கின்றபோது தாவரவியல் இரசாயனப் பயன்பாடு தமிழர்களிடையே வழக்கிலிருந்துள்ளமையினை அறியலாம்.

சித்தர்கள் உலோகங்களால் மட்டுமின்றி மூலிகைகளிலும் 'கட்டுதல்' எனும் நுட்ப முறையினைப் பற்றி அறிந்திருந்தனர். இற்றைக்கும் பழனியில் அருள்பாலித்திருக்கும் மூலவர் தண்டாயுதபாணியின் திருமேனி நவபாசணங்களின் கட்டால் உருவாகியதே. நவபாசணம் என்பது சித்தர் மரபறிவியலாகும். நவம் என்றால் ஒன்பது. பாசணம் என்றால் விஷம். நவபாசணம் என்பது ஒன்பது வகையான விஷங்களை முறைப்படி சேர்த்தலாகும். இவ் 9 வகையான பாசணங்களுக்கும் தனித்தனியான வேதியல், இயற்பியல் பண்புண்டு. அதை சித்தரியல் முறைப்படி அணுக்களைப் பிரித்து மீண்டும் சேர்ப்பதை நவபாசணம் கட்டுதல் என்பர். அவ்வொன்பது பாசணங்களாவன சாதிலிங்கம், மனோசிலை, காந்தம், காரம், கந்தகம், பூரம், வெள்ளைப் பாசணம், கௌறி பாசணம், தொட்டிப் பாசணம் என்பனவாம். தமிழ்நாட்டில் மூன்று இடங்களில் நவபாசணச் சிலைகள் உள்ளன. பழனி முருகன் கோயில், கொடைக்கானல் அருகேயுள்ள பூம்பாறை குழந்தைவேலப்பர் கோயில், மற்றொன்று தேவிபட்டனத்தில் அமைந்துள்ளது. இதில் முதலிரண்டு சிலைகளும் போகரால் உருவாக்கப்பட்டவையாகும். இதனூடாகவும் தமிழர்களின் இரசாயனவியல் நுட்பத்தினை அறியமுடிகிறது. மேலும் தமிழர்களின் இரசாயன அறிவியலுக்கு அட்டபந்தனம் என்பதும் சான்று பகர்கின்றது. அட்டபந்தனம் என்பது ஆலயங்களில் சுவாமி சிலைகளைப் பீடத்தில் பொருத்தப் பயன்படும் ஒரு கலவையாகும். இது மூன்று வகைப்படுகின்றது.

1. ஸ்வர்ண பந்தனம் - தங்கத்தால் செய்வது.
2. ஏஜக பந்தனம் - வெள்ளி உலோகத்தால் செய்யப்படுவது.
3. அட்ட பந்தனம் - அரக்கு, சுக்காங்கல், குங்கிலியம், ஜாதிலிங்கம், செம்பஞ்சு, வெள்ளை மெழுகு, வெண்ணை. பச்சைக் கற்பூரம் ஆகிய எட்டுப் பொருட்கள் சேர்ந்து செய்யப்பட்ட ஒரு கலவையாகும்.

தமிழர்களது அறிவியலில் அணுக்கள், மரபணுக்கள் என்பது பற்றிய தெளிந்தறிவு வியக்கத்தக்கதாகும். மனித உடல் அணுக்களாலானது. இவ்வணுக்கள் அழியும் நிலை வரும்போது மூப்பு, பிணி, இறப்பு ஏற்படும். இதனைத் தடுக்க உடலைத் தூய்மையாகப் பேண வேண்டுமெனத் திருமூலர் வலியுறுத்துகின்றார். அணுக்களின் ஒரேமாதிரியான இயக்கம் காரணமாக அவை நாளடைவில் பழுதடையும் எனச் சித்தர்கள் கண்டறிந்தனர். ஆணின் உயிர்நீரும் (சுக்கிலம்), பெண்ணின் உயிர்நீரும் (சுரோணிதம்) கலந்து குழந்தை தோன்றுகிறது. சுக்கிலம் - பாதரசம், சுரோணிதம் - கந்தகம் இந்த உயிர்நீர் இரண்டும் பஞ்ச பூதங்களுக்குக் கட்டுப்பட்டவையாகும். இவ்வுயிரணுக்களின் சேர்க்கையினாலேயே மரபணுக்கள் தோன்றுகின்றன. 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே இவ் ஜீன்கள் பற்றிய ஆய்வு முன்னேறிவிட்டிருப்பினும் இவை பற்றிய நுணுக்கமான ஆய்வுகளைத் தொழில்நுட்பம் வளர்ச்சியடையாத காலத்திலேயே தமிழர்கள் பெற்றிருந்தமையினை அறியமுடிகிறது. இதனை 'நூலைப்போல சேலை தாயைப்போல பிள்ளை','அதனதன் செய்கை அதனதன் எச்சத்தால் அறியப்படும,'அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கு','விதை ஒன்று போட சுரை ஒன்று முளைக்குமா' என்பன போன்ற பழமொழிகள் வாயிலாக அறியலாம்.

மேலும் தாவரங்கள் எல்லா இடங்களிலும் பச்சையாகவே இருப்பதில்லை. இந்தப் பச்சையின் நிறம் வேறுபடும். சிலவிடங்களில் சிவப்பு நிறத் தாவரங்களைக்கூட காணமுடிகிறது. இந்த நிறத்தினை நிர்ணயிக்கும் நிறமிகளின் பின்னால் இருப்பது இந்தத் தாவரத்தில் மிகுந்திருக்கும் உலோக உப்புக்கள் என்பது தாவரவியலில் நிரூபிக்கப்பட்ட உண்மை. இதற்குக் குறிப்பிட்டதோர் உலோகம் அந்தச் செடியால் ஜீரணிக்கத்தக்க வகையில் உப்பாக இருப்பதே காரணம். அதனுடன் தாவரம் இருக்கும் மண்ணுமொரு காரணம் எனலாம். இதனூடாக நோக்குகின்றபோது இயற்கையாகவே உலோகம் உப்பாக உருமாறித் தாவரம் ஜீரணிக்கத்தக்க வகையில் மாற்றமடைந்துள்ளமையை உணரமுடிகிறது. இதுவே இரசாயனவியல் மாற்றமாகும். எனவே தென்னிந்தியர்கள் இது தொடர்பான இரசாயனத் தாக்கங்கள், அவற்றின் குணாதிசயங்கள் என்பவற்றை அறிந்து அவற்றை மருத்துவத் தேவைகளுக்கு மட்டுமின்றி பிற தேவைகளுக்கேற்றவாறும் அவற்றைக் கையாளும் முறையிளையும் அறிந்துள்ளனர் எனலாம்.

தன்வந்திரி அருளிய 'வைத்தியகாவியம்' எனும் நூலில் தங்கத்தைப் பற்பமாக்கும் முறை கூறப்பட்டுள்ளது. இம்மருந்தின் மூலம் 96 வகையான சிலேத்தும நோய்களும் காசநோய், சயம், ஈளை, சுவாசகாசம் முதலானவை நீங்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை

'……தங்கத்தின் காசு வாங்கி
நேரப்பா கருமத்தின் இலையரைத்து
நெகிழவே கவசித்து சீலை செய்து
சீராப்பு கசப்புடமே இட்டாயானால்…
தொண்பற்றாறும் அகன்று போம்
கூடுவிட்டு காச ரோகம்
வேர்க்கவே கபம், ஈளை, சுவாசங் காசம்… (வை. காவியம் பாடல் 35)

எனும் சித்தர் பாடல் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. அகத்தியர் பரிபூரணம்' எனும் நூலில் பித்தளையைத் தங்கமாக மாற்றும் முறை இடம் பெற்றுள்ளது. இதனை அகத்தியர்

'பதிவாக இன்னுமொரு கருமானங் கேள்
புதிவானி பிருதூவியை பழச்சாற்றிலே
கேதியாகத் தானரை மைந்தா கேழு கெணிதமுடன்
துருசு வெடிசாரங் கூட்டி மதியான சதுருகுடனே
பூரஞ் சேர்த்து மைந்தனே பழ்சாற்றால் அரைத்து உருட்டி…
விதியான பித்தளை தான் செம்பிய்ப் போச்சு…
செம்புதனைப் பதம் பண்ணி
புண்ணியனே வெள்ளிதனில்
நாளுக் கொன்று… (அ.பரி பாடல் 90)

எனும் பாடல் மூலம் விளக்குகிறார்.

சல்லி வேர், ஏகமூலி, உவருப்பு, வழலை, அண்டம், பிண்டம், அந்தம், மதிரவி, கேஜபீஜம், ரோமம், சவற்காரம், ஏரண்டம், சிப்பி, நத்தை, கும்பிடுக்கல், யானைக்கல், பச்சைமலம், அமுரி, நாதம், விந்து, தலை, பிண்டம், கத்தியுப்பு, கிவப்புப்பு, கோரை, கிளிங்சி, மகாமகரப்பூ கண்ணி, பழச்சாறு, கருங்கோழி, ஜோதி, சுரோணிதம், திழகப்பூச்சி, குருவண்டு, பூநீறு, கரியுப்பு என்பவற்றைக் கொண்டு இரசவாதம் மேற்கொண்டு, பாதரசத்தைக் கொண்டு தங்கம் வெள்ளி தவிர்ந்த பிற உலோகங்களைத் தங்கமாகவோ, வெள்ளியாகவோ மாற்றலாம். இதன் மூலம் இரசாயனவியல் பற்றிய அறிவினைத் தமிழக மக்கள் பெற்றிருந்தமையினை அறியலாம்.

'கண்ணாடியை அறுக்கும் போகரின் யால வித்தை' எனும் நூலில் கண்ணாடிப் பயன்பாடு பற்றி அறியமுடிகின்றது. அவ்வகையில் முடுக்கி இலைக்காற்றினை எடுத்து ஒரு கிண்ணத்தில் ஊற்றி வெள்ளி உண்டை நூலை அச்சாற்றில் ஒரு நாள் முழுவதும் ஊறவைத்து, பின் அந்நூலை நன்கு காய வைத்துக் கொண்டு கண்ணாடியை அறுத்தால் இரண்டு துண்டுகளாகிவிடும் என்கிறார் போகர். இதனை

கனத்த நல்ல கண்ணாடி யறுப்பதற்கு
கண்மணியே ரவையுமல்ல கல்லுமல்ல
வனத்திலே இருக்குமுடுக்கு சிலை தானப்பா
வண்ணமை யதினுடைய ரதத்தை வாங்கி
இணைத்துடனே வெள்ளைவண்டை நூலை வாங்கி
இண்டான ரசத்தினிலே நோய்துரர்த்தி
கனத்துடனே சனங்களுக்குக் காட்டி நூலாம்
கண்ணாடி தனையறுக்கத் துண்டாய்ப் போமே (போ. யா.வி. பாடல்-75)

எனும் பாடல் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

'*The famous historian eiphinstone in History of India*' எனும் நூலில் 'Tle arrow heads were probabily coated with iertian chemicals they knew how to prepare auds the scultics of copper zinc and the carbonates of lead and iron' மேற்குறிப்பிட்டுள்ள நூலில் இந்தியர்கள் அம்பிற்கு நரம்பினைக் கொண்ட இரசாயனச் சேர்க்கையைப் பயன்படுத்தியுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளதோடு இந்நூலில் அசிட் திராவகம் எவ்வாறு தயார் செய்வது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. செம்பு, தாமிரம், துந்தநாகம், இரும்பு காபனேற், இரும்பு, ஈயம் என்பவற்றைப் பயன்படுத்தியுள்ளனர் எனவும் கூறுகின்றது. இதனூடாக நோக்குகின்றபோது இரசாயணவியல் தொடர்பான அறிவை புராதன காலத்திலிருந்தே இந்தியர்கள் அறிந்திருந்தமையினையே வெளிப்படுத்துகின்றது. நீரில் கரையும் தன்மையுடைய பொருட்கள் நீரில் கரைந்து தம் தன்மையை இழப்பதுடன், நீரின் தன்மையினையும் மாற்றிவிடும் என்ற இரசாயனவியல் அறிவினைச் சாதாரண மக்களும் அறிந்திருந்தனர் எனலாம். இதனைப் பழந்தமிழ் இலக்கியம் 'செம்புலப் பெயல்நீர் போல என்ற பாடலடியினூடாக விளக்குகின்றது. அதாவது இப்பாடலாசிரியர் செந்நிலத்தில் பெய்த மழைநீர் அம்மண்ணுடன் இரண்டறக் கலந்து, அம்மண்ணின் நிறம், சுவையையும் பெற்று ஒன்றுபடும் தன்மையைக் காதலர் இருவர் அன்பால் ஒன்றுபட்டமைக்கு உவமித்துள்ளமை தெளிவுறுத்துகின்றது. இதனூடாக தமிழக மக்களது இரசாயன அறிவியல் நுட்பம் பற்றி அறிய முடிகின்றது.

**நிறைவுரை**

மேற்கூறிய விடயங்களினூடாகப் பார்க்கின்றபோது இரசவாதக் கலையே இரசாயனவியலாக வளர்ச்சி பெற்றுள்ளமையினையும் இது தமிழகத்திலிருந்தே பிற தேசங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளமையினையும் அறியமுடிகின்றது. அதுமட்டுமின்றி இந்து தேசத்தார் மிகவும் உயர்ந்த நுட்பமான முறையில் இரசாயனவியலைக் கையாண்டுள்ளமையினையும் அறியமுடிகிறது. மேலும் இரசவாதக் கலையானது நவீன மருத்துவ விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்துள்ளமையினையும் அவதானிக்க முடிகின்றது. அதுமட்டுமின்றி இவைபற்றிய சரியான தகவல்கள் இன்றுவரை மக்களைச் சென்றடையாமல் இருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது. இது கவலைக்குரிய விடயமாக இருப்பினும் அனைத்து விஞ்ஞானத் துறைகளுக்கும் இந்து தேசத்தார் காரணகர்த்தராக அமைந்ததுடன் அவற்றின் வளர்ச்சிக்கும் முன்னோடியாக அமைந்துள்ளமை பெருமைக்குரியதே.

**உசாத்துணைகள்**


- ❖ *ஆனந்தன் ஆர்., 2005, 'தமிழரின் மரபுச் செல்வங்கள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.*
- ❖ *சிதம்பரனார் சாமி., 2003, சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் - தத்துவம், தாமரை பப்ளிகேசன்ஸ், சென்னை.*
- ❖ *சுப்பிரமணியம் மே.சீ., 2012, 'சித்தர்களின் இரசவாதக் கலை, தாமரை நூலகம், வடபழனி, சென்னை.*
- ❖ *தேவநேயப் பாவாணர் ஞா., 2000, 'பண்டைத்தமிழ் நாகரிகமும் பண்பாடும், தமிழ்மண் பதிப்பகம், சென்னை.*
- ❖ *பத்மநாதன் சி., 'இந்து கலைக் களஞ்சியம், (தொகுதி சி - சௌ), இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.*
- ❖ *பாஷம் ஏ எல்., 2005, 'வியத்தகு இந்தியா, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை.*
- ❖ *புஸ்பரட்ணம் பரமு., 2003, 'தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, பவானி பதிப்பகம், இலங்கை.*
- ❖ *பேரின்பன் தேவ., 2011, 'தமிழர் வரலாறு - சிலகேள்விகளும் தேடல்களும், அலைகள் வெளியீட்டகம், சென்னை.*
- ❖ *முகுந்தன் ச., 2001, 'இந்துக் கணித வானியல் மரபு, குருசேத்திரா வெளியீடு, யாழ்ப்பாணம், இலங்கை.*
- ❖ *Aruz kumar biswas., 1987, Rasa -Ratna -Samuccaya and MbneralzProcessbng State -Of - Art bz the 13TIY Century A.DINDIYA|, Indiaz Institute of Teclnology, KazzPur - 208016.*

மதிப்பிடப்பெற்றது

# சர்வக்ஞர் : கன்னட அற இலக்கியத் தந்தை

சே.முனியசாமி
உதவிப் பேராசிரியர்
ஜெ.பீ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி
அகரக்கட்டு, தென்காசி 627852

பாரதம் முழுவதும் பக்திமார்க்கம் பன்னெடுங்காலமாக விளங்கி வருகிறது. மக்களிடையே பக்தியும் ஆன்மீகமும் இருபெருந் துருவங்களாகத் தலையெடுத்தன. அசாமில் சங்கரர், வங்காளத்தில் ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மகான் நிஜகுண சர்வயோகி, தொண்டாட சித்தலிங்கேஷ்வரர், கர்நாடகத்தில் புரந்தரதாசர் போன்றோர் ஆன்மீகத்தைத் துளிர்க்கச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இதேகாலத்தில் மனிதர்களிடையே வகுப்புவாதம், சாதி வேறுபாடு, தீண்டாமை, நம்பிக்கை அற்ற சடங்குகள், மூடநம்பிக்கைகள் போன்றவையும் காணலாயின. இந்நிகழ்வுகள் நடந்தவற்றைக் கண்கூடாகப் பார்த்து மக்களிடையே சிதறிக் கிடந்த அறியாமை, ஒழுக்கமின்மை போன்றவற்றினைப் போக்குவதற்காக ஊர்ஊராகச் சுற்றித் திரிந்தவர் சர்வக்ஞர். அவரின் வாழ்க்கை வரலாற்றை இக்கட்டுரை முன்வைக்கிறது.

## பிறப்பும் காலமும்

சர்வக்ஞரின் வாழ்வு குறித்த உண்மையான செய்திகள் இதுவரையும் புலப்படவில்லை. அவரின் பெற்றோர் பற்றியும் எந்தச் செய்தியும் கிடைக்கப் பெறவில்லை. இருப்பினும் 17 ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு அவரைப் பற்றிப் பேசிய கதைப்பாடல்கள் காணப்படுகின்றன. ஏறக்குறைய 14 பாடல்கள் சான்றுகளாகக் கிடைப்பதை வைத்து அவர் வாழ்க்கை முறை இவ்வாறு அமைந்து இருக்கும் எனக் கணிக்க முடிகின்றது. சமகாலத்தில் வாழ்ந்த பல்வேறு புலவர்களில் ஒருவர்கூட இவரைப் பற்றிக் கூறாதது கவனிக்கத்தக்கது. சர்வக்ஞர் பற்றிய குறிப்பு ஏன் குறிப்பிடவில்லை என்பது இன்றுவரை கேள்வியாகவே இருக்கின்றது. 'ஜனன நினைவுகள்' எனும் தலைப்பில் அவர் குறித்த சில செய்திகள் கிடைத்துள்ளன. அதில் தன்னுடைய பிறப்பு, பெற்றோர், இளம் பருவத்தில் வீட்டைவிட்டு ஊர் சுற்றியதற்கான காரண காரியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில் அவரின் பிறந்த ஊர் தார்வாட் மாவட்டத்தில் அம்பாளூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆராத்ய பிராமணர், மாலி என்பவர் இவரது பெற்றோர். பசவரசா என்பது இவரது பெயராக உள்ளது. குயவர் குலத்தைச் சேர்ந்தவர் என்று பிறப்பு பற்றிய கதையை விளக்குகின்றது.

தார்வாட் மாவட்டத்தில் ஹமரகரூர் அருகில் மாசூர் என்னும் ஊரில் பசவரசா பிறந்தார். அக்கமல்லமாளும் அவரும் இனிமையான குடும்ப வாழ்க்கையினை நடத்தி வந்தனர். இருப்பினும் அவர்களுக்குக் குழந்தையில்லாதது குறையாகக் காணப்பட்டது. தெய்வநம்பிக்கை உள்ளவராக இருந்ததால் தம் கணவரைக் காசிக்குச் சென்று விசுவநாதரின் அருள் பெற்று வரவேண்டுமெனப் பரிந்துரைத்தாள். மனைவியின் ஆசையை நிறைவேற்றக் காசிக்குச் சென்று வந்தார். ஊர் திரும்பி நெருங்கும் நேரத்தில் எதிர்பாராத நிலையில் மேகம் திரண்டது. அவரது பயணத்தைத் தொடர முடியவில்லை. அம்பளூர் எனும் ஊரில் அருகிலிருந்த ஒரு வீட்டில் தங்கும்படி சூழல் ஏற்பட்டது. அவ்வீடு குயவனின் வீடு என்பதால் பசியைப் போக்குவதற்கு உணவு சமைப்பதற்கு அவ்வீட்டிலுள்ள பெண்ணிடம் சில பாண்டங்களை வாங்கினார். அவ்வீட்டின் தலைவனின் பெயர் மாலன். அவனது மனைவியின் பெயர் மாலி. அன்றிரவு அங்கே தங்கும் சூழல் நேரிட்டது.

மாலியின் கணவன் தொலைதூரமாகச் சென்றிருந்ததால் மாலியே பசவரசாவுக்குப் பணிவிடை செய்யும் நிலை ஏற்பட்டது. பசவரசா பிராமணன் என்பதால் அவளும் மிகுந்த

மரியாதையுடனும் பரிவுடனும் பணிவிடை செய்தாள். அவளுடைய பக்தியும் வசீகரப் பண்பும் பசவரசாவைப் பெரிதும் கவர்ந்தன. அவ்வேளையில் மழை அதிகமாக வந்து வீடு ஒழுகியதால் அவரை எவ்விதக் குறையும் இன்றிக் கூடவே இருந்து கவனித்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. இதனால் இரவு ஒரே இடத்தில் இருவரும் தங்கும் நிலை ஏற்பட்டதால் அவர்களுக்குள் காதல் உணர்வு உண்டாகியது. நாள்கள் செல்லச் செல்ல மாலிக்குக் குழந்தை பிறந்தது. தம் கணவன் மாலன் தனக்குப் பிறந்ததாக எண்ணி மிக்க மகிழ்ச்சியடைந்தாள். குழந்தை வளர வளர அறிவுள்ளவனாகத் திகழ்ந்தது. பிராமணரான பசவரசாவால் கொடுக்கப்பட்ட காசி விசுவநாதனின் பிரசாத அருளால் பிறந்ததாகத் தாய் சொல்லச் சர்வக்ஞர் பின்னர் அறிந்து கொண்டார். சர்வக்ஞர் குழந்தையாக இருக்கும்போதே பசவரசா வீட்டுக்கு வந்து சென்றிருந்தார். இதனால் மாலிக்கும் பசவரசாவிற்கும் உள்ள கள்ளத் தொடர்பினை ஊர் மக்கள் ஏளனம் செய்து பேசினர். இதன் விளைவாக அறிவார்ந்த குழந்தையான சர்வக்ஞரது மனம் வேதனைக்குள்ளாகியிருக்கலாம். இருப்பினும் சிறுபிள்ளையாக இருந்தாலும் துணிச்சல்காரராகவும் ஒளிவு மறைவு அற்றவராகவும் அவர் திகழ்ந்தார். தம் தாய்மீது மிகுந்த அன்பும் அளவற்ற பாசமும் கொண்டிருந்தார். அவருடை பண்பும் குணமும் உயரிய விதமாகக் காணப்பட்டதால் அவற்றை எண்ணி வியப்படைந்து தனக்கு அப்பண்பின் தோற்றம் வெளிப்படுவதில் மிகுந்த அளவிற்குப் பெருமை கொண்டார். சில நாள்களில் எதிர்பாராத காரணங்களினால் மாலி தன் கணவனுக்கு இழைத்த துரோகத்தை எண்ணி அஞ்சினாள். இதனால் கணவனுக்குத் தெரிந்துவிடுமென எண்ணிச் சர்வக்ஞரைத் திட்டி வெளியே துரத்திவிடுகின்றனர். இவ்வாழ்க்கை வரலாற்றைப் பதினான்கு பாடல்களால் (பாடல்1-14) அறிய முடிகின்றது.

## புராணப் புனைவு

பெற்றோரால் துரத்தப்பட்ட சர்வக்ஞரின் வாழ்வு இவ்வாறு எப்படி அமைந்தது என்பதற்குச் சரியான விளக்கங்கள் எதுவும் இல்லை. தவசால சர்வக்ஞர் என அழைக்கப்பட்டார். முந்திய பிறவியில் 'வரருசி' எனும் வடமொழிக் கவிஞராக இருந்தாரென்றும் அதற்கு முந்திக் கைலாசத்தில் புஷ்பதுத்தர் என்ற பெயருடையவராக இருந்தவரென்றும் கூறப்படுகின்றது. இது பின்பு புராணப் புனைவாக மாறிவிடுகிறது.

## பள்ளிப் படிப்பு

பெற்றோரால் துரத்தப்பட்ட சர்வக்ஞர் வீட்டைவிட்டு வெகுதூரம் செல்லும் நிலை ஏற்பட்டது. மனம்போன போக்கிலும் கால்போன போக்கிலும் அங்கங்கு அலைந்து திரிந்துள்ளார். வறுமை வாட்டியெடுத்துப் பசி ஏற்பட்டுள்ளது. பசிக்கு உணவிட்டவர்கள் இவர் என்ன சாதி என்பதை அறிந்து கொள்வதில் முனைப்பு காட்டினர். பல இடங்களில் இந்நிலை தொடர வாழ்க்கையினை வெறுத்தார்.

உலகத்தோடு உலா வருவதன் மூலம் மக்களின் நிலையினைத் தெளிவாகப் புரிந்துகொள்ளும் தன்மை பெற்றிருந்தார். அவருக்கு உலகம் பள்ளியாகவும் வாழ்க்கை பாடப் புத்தகமாகவும் அனுபவம் ஆசிரியனாகவும் விளங்கின.

தன் அனுபவத்தைக் கொண்டு இளமைக் காலத்தில் ஊர் ஊராக அலைந்து வந்தபோது அவரைக் கண்ட யாரோ ஒருவர் தாயன்புடன் அவரை அரவணைத்து அவரைப் பள்ளியில் படிக்க வைத்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு வடமொழி கற்று நூல்களை ஆழ்ந்து படிக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கலாம் எனவும் கருதலாம்.

## இல்லற வாழ்க்கை

சர்வக்ஞர் மணம் செய்து இல்லற வாழ்வினை நடத்தியிருக்கலாம் என்பது கே.பி. பிரபு பிரசாத் கருத்து. சிதறிக் கிடந்த பாடல் அடிகளில் கண்ட குறிப்பினை வைத்து இவ்வாறாகக் கூறியுள்ளார். இருப்பினும் இவை ஏற்றுக் கொள்ள முடியாதது என்பது மக்களின் நம்பிக்கையாகும். மேலும் தொடக்கக் காலத்தில் மணம் முடித்த பின்ப வாழ்க்கைமீது வெறுப்பு

ஏற்பட்டு வறுமை, துன்பம் போன்றவற்றால் மனைவிக்கும் இவருக்கும் முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கலாம். ஒருவேளை மனைவி அவரைப் புரிந்து கொள்ளாதவளாகவும் இருந்திருக்கலாம். மனைவிக்குத் தேவைப்பட்ட பணத்தைத் தன்னால் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டு இருக்கலாம். இவற்றை மையமாக வைத்து

**“இதம் தரும் மனை ஏராளமாய்ப் பணம்**
**மனத்துக்குகந்த மனைவி சர்வக்ஞா இவை உனக்கு கிட்டுமாயின்**
**எங்கோ இருக்கும் சொர்க்கத்தை எரிமூட்டி கொளுத்திடுவாய்”**

இப்பாடல் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## சர்வக்ஞர் — பெயர் விளக்கம்

இவர் ஊர் பேரில்லாதவர் எனக் கூறினாலும் மக்கள் அவரது ஞான வாழ்விற்கு ஏற்ப அனைவரும் புரிந்துகொண்ட விதமாக அவருக்கு ஒரு பெயரையும் வழங்கி உள்ளனர். ஆனால் அப்பெயர் யாரால் வழங்கப்பட்டது எனச் சான்றுகள் இல்லை. இருப்பினும் அவருடைய ஆழ்ந்த ஞானத்தால் அவரின் அரிய பேச்சுக்களின் சொற்களால் கவர்ந்த எவரோ ஒருவர்தான் இப்பெயரை வைத்திருப்பர் எனக் கூறமுடிகின்றது. சர்வக்ஞர் என்பதற்குச் சகலமும் அறிந்த ஞானி, முற்றறிஞன், முற்றுமுணர்ந்தோன், எல்லாமறிந்தவன், வாலறிவன், முழுஞானி எனப் பல்வேறு பொருளைக் கொண்டுள்ளது.

## சர்வக்ஞரின் சிறப்புப் பெயர்

வள்ளுவனைப் போலச் சர்வக்ஞருக்கும் பல சிறப்புப் பெயர்கள் வழங்கப்பட்டு உள்ளன. அவை திரிபதிய திரிவிக்ரமன், சகலமும் அறிந்த ஞானி, புரட்சிக் கவி சர்வக்ஞர், உலகக் குடிமகன், பிறவிக்கவிஞர், ஊர் சுற்றும் ஞானி, பிணி போக்க வந்த மருத்துவர், அறநெறியாளர், சீர்திருத்தவாதி, முக்காலமும்ள உணர்ந்த யோகி, மானிடம் பாடும் வானம்பாடிள, ஞானத்துறவி போல்வன.

உலக வாழ்க்கையில் மக்கள் நடுவில் ஓர் அடையாளத்தினை ஏற்கும் முகமாக ஒரு பெயர் தேவைப்பட்டது. அதுவே சர்வக்ஞராகத் திகழ்ந்தது என்பதாகக் கூறப் படுகிறது. பலரும் இப்பெயரின் பொருத்தத்தைச் சுட்டிக்காட்டியுள்ளனர். ‘ஐயா எல்லாம் அறிந்த ஞானாசிரியரான நீங்கள் சர்வக்ஞரே’ எனவும் நேரிடையாகவே அவரிடம் கூறி மகிழ்ந்தனர். இதைக் கேட்ட சர்வக்ஞர் இந்த அறிவு எனக்கு எதனால் கிட்டுகிறது என்பதை நீங்களே அறிவீர்கள் என்று கூறுவதை

**“ஆணவத்தின் விளைவோ நினதறிவு சர்வக்ஞா**
**அவரிடமும் இவரிடமும் ஆர்வத்துடன் கேட்டு**
**இவன் ஞான மலையானான் சர்வக்ஞா”**

இப்பாடல் விளக்குகின்றது. இதன் மூலம் அவரின் பணிவான குணம் நமக்குப் புலப் படுகிறது.

## சர்வக்ஞரின் காலம்

சர்வக்ஞரின் காலம் அறுதியிட்டுக் கூறமுடியாதது. அவரது காலத்தை ஆணித் தரமாகக் கூறுவதற்கு அவரது பாடல்களோ அவரது வரலாற்றுக் குறிப்புகளோ கிடைக்காததால் காலத்தைச் சரியாகக் கூறச் சிக்கல் ஏற்படுகிறது. பல்வேறு அறிஞர்களின் கூற்றுப்படி 15 ஆம் நூற்றாண்டிற்கும் 18 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்கக்கூடும் எனத் தெரிய வருகிறது. கி.பி.ரைஸ், எப்.டாக்டாட், ஆர்.எஸ்.முகளி, ஆர்.நரசிம்மாச்சாரி, ஜி.எம்.உமாபதி சாஸ்திரி, சென்னப்ப உத்தாங்கி, டாக்டர் எ.பசவராஜு, சித்தைய்யா புராணிக், எஸ்.சிவண்ணா போன்ற ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி சர்வக்ஞர் 16 ஆம் நூற்றாண்டின் முதல் அரை நூற்றாண்டுக் காலத்தில் வாழ்ந்திருக்கலாம் என அறுதி செய்ய முடிகிறது. ‘விரக்த்

INTERNATIONAL E-JOURNAL OF TAMIL STUDIES

தொண்டாத்திரியர்' தொகுத்த அனாதி வீர சைவ சங்கரஹம்' எனும் நூல் அவரது பாடல்களே முதன்முதலராகப் பேசும் நூலாகும். இவர் கி.பி. 1560 ஆம் ஆண்டில் வாழ்ந்தவர். 1504 ஆம் ஆண்டைச் சார்ந்த விராட மகாலிங்கர் என்பவர் இயற்றிய கவிதை நூலான 'போதாம்ருதா' சர்வக்ஞரின் கவிதை ஞான தாக்கத்தோடு உள்ளாகிய படைப்பு என்பது தெளிவுபடுகின்றது. இவர் சர்வக்ஞர் காலத்தில் வாழ்ந்த மூத்த ஞானியர். இவர் சர்வக்ஞரின் குருவாகவும் இருந்திருக்கக்கூடும் எனும் கருத்தும் ஒன்று உண்டு. இது குரு போதாம்ருதத்தில் காணப்படுகின்றது.

## சமுதாய நிலை

மக்களின் வாழ்வு பொருளற்ற, குறிக்கோளில்லாத வாழ்க்கையாக இருந்த காலம். வகுப்புவாதம், சாதிவெறி, தீண்டாமை, பிறரை ஏமாற்றும்ள செயல், பேராசை கொண்ட மனிதர்களும் பூசாரிகளும் போலிச் சாமியார்களும் காணலாகினர். மனிதனை மனிதன் அழிக்கும் எண்ணம் சமூகத்திலே பரவிக் காணப்பட்டது. பணம் மட்டும் இருந்தால் எதையும் செய்துவிடலாம் என்ற அதிகாரமும் தான் மட்டுமே அனைத்தும் அனுபவிக்க வேண்டுமென்ற தன்னலமுள்ள வாழ்க்கையும் பரவியும் விரவியும் காணப் பட்ட காலம். அரசியல், பதவி, அதிகாரம், ஆளுமை எனப் பல்வேறு கோணங்களில் வெறிபிடித்தவர்களாகவும் பழி பாவங்களுக்கு அஞ்சாமல் ஈவு இரக்கமின்றி வாழ்ந்து வந்தனர். சுய சிந்தையை முற்றிலும் ஒழிக்கப்பட்ட நிலை. அரசர்களும் படைத் தலைவர்களும் அதிகார வெறியும் பதவி வெறியும் பிடித்தவர்கள் வாழ்ந்த காலம். உயர் மட்டத்திலிருந்து அடி மட்டம் வரை அதிகாரிகள் ஊழலில் ஈடுபட்டனர். ஏழை மக்கள் குறிப்பாகப் பெண்களும் இவ்விதச் சமூகத்தால் இரையாயினர். பசி, வறுமை, அச்சம், காமம், வன்முறை போன்ற கீழ்த்தரமான ஈனசுகங்கள் வாழ்ந்த காலம். இப்படிப்பட்ட மக்களின் வாழ்வினைச் சீர்படுத்த வேண்டும் எனும் நெறியினை அதிரடி நம்பிக்கை கொண்டவராகவும் சமுதாயப் பிணி நீக்குபவராக வந்தவர்தான் சர்வக்ஞர்.

## சமுதாயத் தொண்டு

பிறந்த அனைவராலும் சமூகத்தைப் பற்றியோ சமுதாய மக்களைப் பற்றியோ அக்கறையுள்ளவர்களாக இருப்பது குறைவு. அவ்வாறு அக்கறையுள்ளவர்கள் தன் நலமில்லாமல் பொது நலனுள்ளவர்களாய்க் காண்பர். சர்வக்ஞர் ஒரு சமூகத் தொண்டு ஆர்வலராக விளங்கியுள்ளார். மனிதகுலம் முழுவதற்கும் பொதுமையான குறிக்கோள்களையும் இரக்கக் குணத்தையும் கொண்டிருந்தார். தமது வாழ்வின் குறிக்கோளாகச் சமுதாயத் தொண்டே என்ற கருத்தியல் உடையவராகத் திகழ்ந்து உள்ளார்.

## சர்வக்ஞர் பற்றிய குறிப்பும் அவர்தம் படைப்பும்

கி.பி.1560 ஆம் ஆண்டில் வாழ்ந்த விரக்த தொண்டாத்திரியர் என்பவர் தொகுத்த அனாதி வீரசைவ சங்கராஹம் எனும் நூல் சர்வக்ஞர் எழுதிய பாடல்களைப் பற்றிக் குறிப்பிடப்படும் முதனூலாகும். கி.பி.1868 ஆம் ஆண்டில் ஜெர்மனியைச் சார்ந்த 'வர்த்' என்பவர் சர்வக்ஞர் இயற்றிய 300 பாடல்களைத் தொகுத்து வெளியிட்டார். அவருக்குப் பின் 1924 ஆம் ஆண்டு சர்வக்ஞர் படைப்புகள் அனைத்தையும் தொகுத்து உத்தங்கி சென்னப்பா வெளியிட்டார்.

உத்தங்கி சென்னப்பா ஓலைச்சுவடிகளில் மறைந்திருந்த சர்வக்ஞர் பாடல்களைத் தொகுத்துள்ளார். கண்ட இடங்களிலெல்லாம் கடைத்தெரு, பதிப்புகளாகவும் தூசி பரந்த இருண்ட முனைகளிலும் சிதறிக் கிடந்த ஓலைகளைச் சேகரித்து வெளியிட்டுள்ளார். இந்நூலுக்குச் சென்னப்பா சிறந்த ஆய்வுரை எழுதி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலில் ஏறக்குறைய 2100 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதன்மூலம் சர்வக்ஞரின் இலக்கிய ஆளுமை வெளிப்படுகின்றது. இந்தச் சென்னப்பா பதிப்பே ஆதாரபூர்வமானது. இது 'பரமார்த்தர்' என்ற பெயரில் அவர்தம் அனைத்துப் பொன்மொழிகளும் பல்கலைக்கழகம் வசம் இருந்துள்ளது. மேலும் பனை ஓலைச்சுவடிகளிலிருந்து கையாண்டு பதிப்பிக்கப்படும் வரை ஏற்றுக்

கொள்ளப்பட்டிருந்தது. இப்பதிப்பினைக் கன்னடப் பேராசிரியராகவும் ஆராய்ச்சியாளராகவும் திகழ்ந்த பசவராசு என்பவரால் பதிப்பிக்கப்பெற்றது. இவர் குறிப்பிடத்தக்க பல ஆராய்ச்சி நூல்களின் ஆசிரியராகவும் விளங்கினார். *1980* ஆம் ஆண்டு சர்வக்ஞர் படைப்புகள் அனைத்தையும் தொகுத்து ஆய்வுரையுடன் வெளியிட்டார். அந்நூலில் சிறப்பு யாதெனில் சர்வக்ஞர் இயற்றியதாகக் கருதப் படுகின்ற இடைச்செருகல்களாக அமைந்த பாடல்களையும் பாட வேறுபாடுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார் என்பதாகும்.

இப்பதிப்பில் *943 +554* மூன்று அடிப் பாடல்கள் சர்வக்ஞரின் உண்மையான கவிதைகள் என ஏற்றுக் கொள்ளப்பட்ட பாடல்களும் அடங்கியுள்ளன. இதில் அடங்கி உள்ள மற்றொரு வியப்பு யாதெனில் பாடலின் இறுதி அடியில் சர்வக்ஞர் எனக் குறிப்பிடப்படாமல் 'பராமார்த்தர்' என்ற பெயர் குறிப்பிடப்பட்டு இருந்ததாகும். இந்தப் பாடல் ஒன்றில்தான் 'பரமார்த்தர்' என்னும் பெயர் இயற்றியவர் பெயராகக் குறிப்பிடப் பெறுகிறது. இதனால் உண்மையில் பாடலாசிரியர் யார் என்ற வினா எழுந்தது. இருப்பினும் 'பரமார்த்தர்' என்ற பெயரே சர்வக்ஞரின் உண்மையான பெயராக இருக்க வாய்ப்புண்டு என்றார் பசவராசு. பரமார்த்தரா சர்வக்ஞரா என்பதில் சுதேச வேற்று ஏற்படினும் பின்னர் ஏற்றுக்கொண்டார்.

## சர்வக்ஞரின் காலமும் குழப்பங்களும்

சர்வக்ஞரின் காலத்தைக் குறித்துத் தெளிவானது இஃது எனக் குறிப்பிடல் ஆகாது. இருப்பினும் பல்வேறு ஆய்வு அறிஞர்கள் பல வகைக் கருத்துக்களைப் பொதிந்துள்ளனர். விஜயநகரம் வீழ்ச்சியடைந்த காலம் கி.பி.*1365* ஆம் ஆண்டு. கி.பி.*1763* மற்றும் *1799* ஆகிய ஆண்டுகளில் 'இக்கேரி' என்னும் குறுநில வீழ்ச்சியும் ஸ்ரீரங்கப்பட்டணம் ஆங்கிலேயர் வசமான நிகழ்வும் நடந்தேறின.

- இவற்றைக் கருத்தில் கொண்ட ஐரோப்பிய மதபோதகரான பாதிரியார் ரெவரெண்ட் கிட்டில் (Rev.F.Kittil) என்பவர் கன்னட இலக்கிய வரலாறு எனும் நூலில் சர்வக்ஞரின் காலம் கி.பி.1800 என்று குறிப்பிட்டுள்ளார்.
- கி.பி.1800 க்குப் பின்னர்க் கிடைக்கப்பெற்ற சர்வக்ஞர் உரைப்பாவின் ஓலைச்சுவடிகளில் பழங்கன்னட எழுத்தான 'ற' எனும் வடிவமானது ஆர் நரசிம்ம ஆசாரியரைச் சிந்திக்க வைத்தது. இந்த எழுத்து கன்னட மொழியில் வழக்கில் இருந்த காலத்தை உறுதிப்படுத்திச் சர்வக்ஞர் வாழ்ந்த காலம் க.பி.1700 க்குப் பின்னராக இருக்காது என்னும் முடிவுக்கு வருகிறார்.
- சம்பாதனேயள சித்த வீரண்ண ஆசார்யா என்பவர் 'சர்வக்ஞமூர்த்தி' நிலுபிசித்த திரிபதி' என்னும் ஓலைச்சுவடி கண்டெடுத்தவர் ஆவார். இவர் கி.பி.1600 க்கு முன்னரே சர்வக்ஞர் வாழ்ந்ததாகக் கருத முடியாது எனக் கருதினார்.
- ஐரோப்பிய மதபோதகரும் கன்னட ஆய்வாளருமான கே.பி.ரைசு (K.P.Rice) என்பவர் கன்னட இலக்கிய வரலாற்றில் சர்வக்ஞர் காலம் கி.பி.1600 என்பதை ஐயத்துடனே பதிவு செய்துள்ளார். சர்வக்ஞர் ஆய்வுக்காகவே தனது வாழ்வின் பெரும்பகுதியைச் செலவிட்ட சென்னப்பா என்பாரும்கூட 16 ஆம் நூற்றாண்டே என்பதைக் கூறி உள்ளார்.
- எச்.தேவிரப்பா என்பவர் சர்வக்ஞர் வாழ்ந்த காலம் கி.பி.1500 முதல் கி.பி.1600 வரையில்ள இருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். இவருடைய கூற்றும் சென்னப்பா கூற்றும்ள நெருங்கிய தொடர்பு உள்ளதென அறிய முடிகிறது.
- எல்.பசவராசு என்பவர் சர்வக்ஞரின் காலத்தினைப் புதியதொரு கோணத்தில் கூறியுள்ளார். பிட்டமண்டேன் பிரபு என்பவரின் காலமான கி.பி.1530 ஆண்டைச் சர்வக்ஞர் காலம் எனக் குறிப்பிடுகின்றார்.
- ஆவணங்களை ஆய்ந்தவரான எம்.எம்.கலபுர்சியோ சர்வக்ஞரின் காலத்தைக் கி.பி.1474 என உறுதிப்படுத்துகிறார்.

இவ்வாறு பல கோணங்களில் சர்வக்ஞரின் காலத்தை விளக்குகின்றனர். எது எப்படிக் கூறினாலும் சர்வக்ஞர் வாழ்ந்ததும் அவர் இயற்றிய பாடல்களும் உண்மை என்பது ஆணித்தரமாக உள்ளது.

## மூன்று அடிப் பாடல்

சர்வக்ஞரின் கவிதைகள் மூன்று அடிகள் கொண்டனவாகத் திகழ்கின்றன. இம்மூன்று அடிக் கவிதைகளைக் கன்னடத்தில் 'திரிபதி' என்று குறிப்பிடுவர். கன்னட இலக்கியத்தில் நாட்டுப்புற இலக்கியத்தின் வரவாக இந்த மூன்று அடிக் கவிதைகள் அமைந்துள்ளன. தாம் எண்ணிய, கூற வேண்டிய செய்திகளை மிகச் சிறந்த முறையில் தம் ஆளுமையால் வெளிப்படுத்தியுள்ளார். எனவே இவர் 'திரிபதிய திரிவிக்ரமன்' என்று சிறப்புப் பெயரினைப் பெற்றுத் திகழ்ந்துள்ளார். ஏழை எளிய மக்களுக்குப் புரியும் வகையில் எளிமையாகத் தன் கருத்துக்களைத் தந்துள்ளார். எனவேதான் ஏழை எளிய மக்களுக்கு மட்டுமின்றி அனைவருக்கும் அறிவுரைக் களஞ்சியமாகத் திகழ்ந்து உள்ளார். தமிழில் இதே அமைப்பு கொண்ட மூன்று அடிப் பாடல்களும் அமைந்து உள்ளன. அதனைக் 'கண்ணி' எனக் குறிப்பிடுவர். இலக்கிய நடையும் படிப்பவரின் மனங்களைக் கவர்வது இவரின் சிறப்பாகும். அதே போல் பா வகைகள் தமிழில் அதிகம் இருப்பினும் ஆசிரியப்பாவுக்குச் சிறந்த இடம் உண்டு.

**"ஆசிரியப் பாட்டின் அளவுக்கு எல்லை**

**ஆயிரம் ஆகும் இழிவு மூன்றடியே"**

என ஆசிரியப்பாவிற்கு அடிச் சிறுமை மூன்றடிதான் என இலக்கணம் உள்ளது.

இவரது காலத்தில் சமயக் கருப்பொருள் அடிப்படையான பல்வேறு காவியங்கள் நீண்ட வடிவத்தில் தோன்றின. அவை தம்முடைய தார்மீகச் சமயக் கருத்துக்களை வெளியிடுவதை வழக்கமாகப் பிற கவிஞர்கள் பின்பற்றினர். பிற கவிஞர்கள் தம் புகழுக்காகவும் இன்ப வாழ்விற்காகவும் அரசவையில் இடம்பெற்றுத் தமது திறமைகளை வெளியிட்ட காலமாகத் திகழ்ந்தது. அப்படிப்பட்ட காலத்திலும் சர்வக்ஞர் பிற கவிஞர்களைப் போலத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள முனையவில்லை. அதேபோல் இலக்கிய உலகிலும் அரசவைக் களத்திலும் தனக்குப் புகழ் வேண்டுமென்ற எண்ணம் சர்வக்ஞருக்கு இல்லாமல் இருந்தது. மாறாக மக்களுக்கு அறக் கருத்துக்களை அறிவித்தும் சமுதாயத்தைச் சீர் செய்ய வேண்டும் என்கிற குறிக்கோளோடும் திகழ்ந்தார். பெரும்பாலும் கிராமத்து மக்களை நோக்கி அவர் கண் சென்றது. எனவேதான் எவரும் எளிதில் அறியும்படிக்கு மூன்று அடிகளில் தம் பாடல்களை எடுத்தியம்பியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

வள்ளுவரைப் போன்று தன் பாடலை இயற்றி உள்ளார். அவரது பாடலில் கருப்பொருள் பலவாகத் திரிந்து காணப்படுகின்றன. அவை மனித வாழ்க்கையோடு தொடர்புடையனவாகவும் இன்றியமையாத அனைத்துச் செய்திகளையும் பதிவு செய்துள்ளார். குடும்பம், சமுதாயம், அரசியல், பொது நிர்வாகம், பொருளாதாரம், வேளாண்மை, கைவினைக் கலைகள், பல்வேறு தொழில்கள், வாணிபம், சுகாதாரம், பேச்சு, இசை, மருத்துவம், கல்வி, ஒழுக்கம், சோதிடம், தர்க்கம், சாதி, மதம், சமயம் போன்ற பல்வேறு நிலைகளில் தன் பாடலைப் பாடியுள்ளார். தெளிவாகவும் தெளிந்து முடிவுகளோடும் விடைகள் காணப்படுவது அவரின் இலக்கிய ஆளுமைகளாக வெளிப்படுகின்றன. வள்ளுவர் தன் திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என மூன்று பாடல்களை இட்டது போன்று இவரும் தன் பாடலில் மூன்று தலைப்பினை மையமாக வைத்துச் சுட்டியுள்ளார். 1.உலகியல் கோட்பாடு, 2.அறக்கோட்பாடு, 3.ஆன்மீகக் கோட்பாடு எனும் அடிப்படையில் இவற்றினைப் பகுத்து 34 துணைப் பிரிவுகளின்கீழ் வரிசைப்படுத்தியுள்ளார் (பத்ததி என்பதற்குப் பலரும் நடந்து தடமாக நிலைத்திருக்கும்ள பாதை என்பது பொருள்.).

## உரைப்பாக்கள்

சர்வக்ஞரால் எழுதப்பட்ட பாடல்களைப் பல்வேறு வகையில் திரட்டி ஒன்று சேர்த்தவர் உத்தங்கி சென்னப்பா என்பவர் ஆவார். இவர் ஏறக்குறைய 1928 உரைப்பாக்களைக் கி.பி.1924 இல் சேகரித்தார். அவற்றில் சர்வக்ஞரால் இயற்றப் பட்ட மூன்று அடிப் பாடல்கள் 1309 மட்டுமே என்றும் மீதமுள்ள 619 பாடல்கள் இடைச் செருகல்கள் எனக் கூறினார். அதன் பின்னர் இலக்கியம் மற்றும் பண்பாட்டுத் துறையினருக்காக 1960 இல் உரைப்பாக்களை மேலும் சேர்த்தார்.

- அக்பர் அலி என்பவர் 1980 இல்ள சர்வக்ஞர் உரைப்பாக்களை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றர். இவர் தனது ஆய்வின் மூலமாகச் சர்வக்ஞரின் மொத்தப் பாடல்கள் ஏறக்குறைய 2000 என்று கூறி உள்ளார்.
- வெங்க என்பவரின் ஓலைச்சுவடிகளின் மூலம் 937 உரைப்பாக்கள் மட்டுமே உள்ளன எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.
- எல்.பசவராசுஎ என்பவர் நூறு முதல் நூற்றிருபது வரை சேர்த்தாலும் சர்வக்ஞரின் உரைப்பாக்களின் எண்ணிக்கை 1050 மட்டுமே என்று கூறுகின்றார்.
- சிதானந்த மூர்த்தி என்பவர் பிறருடைய உரைப்பாக்களைச் சர்வக்ஞர் உரைப்பாக எனப் படிப்பதால் பிழையில்லை. அவ்வாறன்றிச் சர்வக்ஞர் உரைப்பாக்களைப் பிறருடையதெனத் தள்ளிவிட்டால் அதனின் பாதிப்புப் பெரிதாகும் என்று கூறியுள்ளார்.

சர்வக்ஞருக்கு முன்னோடியாக விளங்கிய பசவண்ணர், அல்லம்ம பிரபு போன்றவர்களின் பாடல்களுடைய இறுதிச் சீர்களில் தாங்கள் வழிபட்ட கடவுள் பெயர் கூறும் முறை மரபாக இருக்கின்றமையைக் காண முடிகின்றது. அல்லம்ம பிரபு தன் பாடல்களில்ள இறுதியாகக் 'குகையீசனே' எனவும் பசவண்ணர் தன் பாடலில் இறுதியில் 'கூடல சங்கமதேவ' என்றும் பாடியதைப் போலவே சர்வக்ஞர் தனது உரைப்பாவின் இறுதியில் 'சர்வக்ஞ' என முடிக்கிறார். இவை கன்னட இலக்கியத்தின் மரபாக உள்ளது என அறியலாம்.

## ஊர் சுற்றிக் கருத்துரைத்தல்

சமுதாயத்தின்மீது அக்கறை எல்லா மனிதர்களிடமும் காணலாகாது. தன்னலம் மிக்க மனிதர்களிடமும் சமுதாயத்தைப் பற்றி அக்கறை காணப்படாது. பொதுநலமிக்க எல்லாராலும் சமூகத்தோடு இயைந்து பணியாற்றுவதும் அரிது. தன்னலம் மறந்து சமூகத்தைப் பேணிக் காக்க வேண்டுமெனப் பொறுப்பு எந்தவோரிடத்தில் இருப்பது தனிச் சிறப்பாகும். அந்த ஒருவர் சர்வக்ஞர் ஆவார். மக்களிடையே அறக் கருத்துக்களை எடுத்தியம்புவதற்குப் புறப்பட்ட இவரை அறச்சூறாவளி எனலாம். சிவ சிந்தனையும் அழகு கொண்ட உள்ளம் படைத்த இவ்வுலகில் வாழ்ந்து வந்தார். காடு, மலை, வயல் எனப் பார்க்காமல் கால் செல்கின்ற இடங்களுக்கெல்லாம் வெகு தொலைவுள நடந்தே சென்று மக்களைக் காண்கின்றார். மிகுதியான மக்கள் வட்டத்தினை அதிகமாக விரும்பியவர் சர்வக்ஞர். தனக்கெனஎ ஒரு நிலையான இடத்தினைப் பற்றிக் கொண்டால் அனைத்து மக்களையும் காண முடியாது என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியிருக்கலாம். அதனால் என்னவோ மனம் நினைக்கும் இடங்களுக்குச் சென்றுள்ளார். தன் நீண்ட பாதநடைப் பயணங்கள் ஒரு கோவிலிலோ ஒரு கிராமப்புறத்திலோ ஓரிரு நாளில் தங்கி ஓய்வெடுத்துப் பழையபடி தனது நடையைத் தொடங்கும் பழக்கம் உடையவராகத் திகழ்ந்துள்ளார். மக்கள் கூட்டங்களைக் கண்டதும் சில நேரங்களில் உடனே வர முடியாத அளவிற்குப் பேச்சில் ஆழ்ந்து போகும் நிலைகளில் அங்கே தங்கும் சூழல் ஏற்படும். அவ்வாறு ஏற்படும் சூழலானது ஒரு வாரமோ அதற்கு மேற்பட்ட நாள்களோ என்பதை அறுதியிட்டுக் கூற முடியாதவர். இவ்வாறு ஊர் ஊராய்ச் சென்று அவர் கூறிய அறச் செய்திகள் அவரின் பாடல்கள்வழி வெளிப்படுகின்றன.

பசியுற்றோர்க்கு உணவு படைக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். இவ்வாறு வடக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் கிழக்கிலும் சென்று நாடு நகரமெல்லாம் சுற்றித் திரிந்த யாத்ரீகராகள வாழ்ந்தார் யோகி சர்வக்ஞர். தனது பாடல்களில் சென்று வந்த உள்ளூர்ப் பழக்க வழக்கங்கள், உணவு, உடை போன்ற செய்திகள் பற்றி இங்கும் அங்குமாகக் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். உணவு என்பதைப் பற்றி உயர்வாகத் தன் பாடலில் குறிப்பிட்டுள்ளார். அதனை

**"அன்ன தானம்போல் பிறதானம் உண்டோசொல்**
**அனைத்தினு முயர்ந்தது யாதுமில — உலகில்**
**அன்னமேள உயிராம் சர்வக்ஞ"** *(ச.உ.361)*

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இப்பாடலில் அன்னதானம் செய்ய வேண்டும் என்பதனை வலியுறுத்தியுள்ளார். ஊர் ஊராய் அலைந்த நேரங்களில் அவருக்குப் பசிள ஏற்பட்டிருக்கலாம். உணவு உண்பதற்குப் பொருளாதாரம் இல்லாமலும் இருந்திருக்க வாய்ப்புண்டு. பசிக்கொடுமை தாங்க முடியாத நிலையில் பசி பற்றிய பாடல்களைள இயற்றியிருக்கலாம் எனக் கருத முடிகிறது. அன்னமே உயிர் என்று குறிப்பிட்டு உள்ளதால் அந்நிலை ஏற்பட்டிருக்கின்றது எனக் கணிக்க முடிகின்றது.

## எளிமையான வாழ்க்கை முறை

தம் ஒற்றைப் பயணத்தில் கிராமத்தை அணுகும்போது அனைத்து மக்களும் திரண்டு அவரை வரவேற்கிறார்கள். அப்பொழுது பேசிப் பார்த்துச் சென்ற சர்வக்ஞர் பல ஆண்டுகளுக்குப் பின்புதான் காண முடிகிறது. மீண்டும் அதே மனிதர்கள் பார்க்கும் போது வேறு எவ்வித மாற்றமும் இல்லாமல் முன்பு போலவே காணப்படுகின்றார். மழுங்க வழித்த மொட்டைத்தலை, பளீரென்ற முகம், ஒளி உமிழும் கண்கள். ஒரு கோவணத்தைத் தவிர அவர் உடுத்தும் ஆடை வேறு ஒன்றுமில்லை. தன் உடம்பை மூடிய தோற்றம். தோள்களிலிருந்து தொங்கிய முரட்டுக் கம்பளிப் போர்வை ஒன்று. கையில் நீண்ட வளமையான கோல் ஒன்றினைப் பிடித்த காட்சியாக இருந்துள்ளார். ஒரு முறை மக்களிடம் பேசிக்கொண்டிருக்கையில் 'ஐயா எல்லாம் அறிந்த ஞானாசிரியரான நீங்கள் சர்வக்ஞரே என்று அவரைக் கூறிப் பெருமைப் படுத்தினார்கள். அதனையறிந்த அவர் 'வாஸ்தவம்தான் நீங்கள் சொல்வது. ஆனால் இந்த அறிவு எனக்கு எவ்வாறு கிட்டுகிறது என்பதை நீங்கள் அறிவீர்களா என அவர்களைப் பார்த்துப் பெருமிதப்படாமல் பணிவுடன் கூறியுள்ளார். அவரின் எளிமையானள வாழ்க்கை முறையினை வெளிப்படுத்தும் முகமாக

**"ஆவணத்தின் விளைவோ நினதறிவு சர்வக்ஞ**
**அவரிடமும் இவரிடமும் ஆர்வத்துடன் கேட்டு**
**இவன் ஞான மலையானன் சர்வக்ஞ"** *(சர்வக்ஞர்:ப.19)*

எனும் பாடலடிகள் விளக்குகின்றன.

இவ்வாறு அவர் ஒரு பிறவிக் கவிஞராக இருந்தும் ஒரு கவிஞனின் புகழுக்காக அவர்ள பேசியது இல்லை. அரசவை மரியாதைகளுக்காகவும் வெகுமதிகளுக்காகவும் அவர் ஆசைப்பட்டவராகத் திகழவில்லை. தனக்கு வாய்க்கப்பெற்ற இத்திறமையை வைத்து எளிய முறையில் ஏழை எளிய மக்களைப் பார்த்து ஒரு சரியான மனப் போக்கைத் தனது கவிதையை ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளார்.

## மக்களின் ஆர்வம்

மனத்திற்குப் பிடித்தவர்களாயினும் ஒரு குறிப்பிட்ட நேரம்தான் அவர்களின் பேச்சு ஆர்வத்தைத் தரும். நீண்ட நெடிய நேரங்கள் பேசுவதால் சலிப்பு ஏற்படக்கூடும். சர்வக்ஞரின் பேச்சு அவ்வாறில்லாமல் அனைவரையும் எவ்வளவு நேரமாயிருந்தாலும் அசராமல் கேட்க வைக்கும். சிறியவர், இளையவர், பெரியோர் என எல்லாத் தரப்பினரையும் தனது பேச்சின்

திறத்தால் கவர்ந்திழுத்தார். பகற்பொழுதில்ள வேலைக்குச் சென்று அந்தி வேளையில் ஆசிரமத்தின் முற்றத்திலோ கோயிலிலோ அவரைச் சூழ்ந்து கொள்கின்றார்கள். அனைத்து மக்களும் அவரிடமிருந்து மேலும் அறிவு பெற விரும்புகிறார்கள். இதனால் தங்கள் பணிகளை விரைவாக முடித்துக் கொண்டு வருகின்றனர்.

## உதவும் மனப்பான்மையும் நற்குணமும்

அவரது வாழ்க்கையின் அமைப்பும் எளிய தோற்றமும் கிராமத்து மக்களைத் தன் சார்பு ஈர்த்தன. எப்பொழுதும் சுறுசுறுப்பான ஏதாவது ஒரு பணியில் தன்னை ஈடு படுத்திக் கொண்டுள்ளார். குறிப்பாக அவர் சும்மா இருந்து யாரும் கண்டதில்லை என்ற கூற்று அனைவராலும் பேசப்பட்டது. தனது பணி நிறைவடைந்ததும் தனக்கென ஓய்வு பெறாமல் குடியானவர் முதல் குயவன் வரை உதவி செய்யும் உள்ளம் கொண்டவர். நெசவுத் தொழில் செய்யும் மனிதனுக்குத் தன்னால் முடிந்த உதவிகளையும் செய்து உள்ளார். அது மட்டுமல்லாது இல்லத்தில் தனியாகக் கிடந்து வேதனைப்படும் நோயாளிக்கு மருத்தும் செய்து பாரம் தாங்க முடியாமல் கடினப்படும் மூதாட்டிக்கு இரக்கம் காட்டியுள்ளார். தனது பசியைப் போக்குவதற்கு யாரையும் நாடிச் செல்வதில்லை. அவர்மீது பற்று வைத்த யாராவதுள ஒருவர் தனது இல்லத்திற்கு அழைக்கச் சென்று விருந்துக்கு அழைக்கிறார். அவ்விருந்தில் ஆடம்பர உணவோ பழைய கஞ்சியோ எதுவாயிருப்பினும் வழங்குபவர் உள்ளம் மகிழ்ச்சி அடைய மகிழ்ச்சியாய் உண்பார்.

நெசவுத் தொழில் செய்வோர்க்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து கொடுப்பார். அவ்வாறு நெசவுத் தொழிலில்ள ஈடுபடும்போது அவற்றின் சிறப்பினைப் போற்றும் விதமாக

**"அழகு ஏழைக்கு வலிமை அழகு வண்ணானுக்கு ஊற்று**
**அழகு மடுவின் வயல் உழவுக்கு — செய்வோனுக்கு**
**அழகு சுழலும் தறியாம் சர்வக்ஞ"** *(ச.உ.798)*

எனும் பாடல் அமைகிறது.

சர்வக்ஞர் உலக ஆசையற்றவர். தன் சொந்த ஆசாபாசங்களிலிருந்து தன்னை விடுவித்தவர். செயல், எண்ணம், சொல் இம்மூன்றிலும் பரிசுத்தர். அனைத்து உயிர்கள்மீதும் பேரன்பு மிக்கவர். பெரும்பாலும் அவர் ஒரே இடத்தில் இருப்பதில்லை. ஊர்ஊராகத் தொண்டு செய்து உலா வந்தவர். தன்னைக் கொடையாளியாக அர்ப்பணித்தார். அதே நேரத்தில் பணி செய்யாமல் உண்டு கொடுத்தோரை அச்சம் இன்றிக் கடிந்து பேசியுள்ளார். தன்னுடைய தேவைக்குப் பிறரிடம் கைநீட்டாமல் முடிந்த வரை நாளும் உழைத்து வந்தவர் என்பது அவரின் நற்குணமாகத் திகழ்கின்றது. எச்சமயத்தின் மடங்களில் தன்னை அடிமைப்படுத்தாதவர். மக்களிடையே காணுகின்ற அனைத்து மாயைகளையும் கண்டு குமுறியவர். மாயக்காரரின்ள செயலை உணர்த்தும் விதமாகக்

**"கடனாளி தட்டான் நெய்வோனை நம்பலாம்ள**
**உடனிருக்கும் மாயக் காரன்பால் கருணையறம்**
**உடனிருக்காது எக்காலும்"** *(ச.உ.791)*

எனும் பாடலடிகள் காணப்படுகின்றன.

சர்வக்ஞர் குரு, ஈஸ்வர ஆகிய இருவரின்மீது அளவற்ற பக்தியுடையவராகத் திகழ்ந்துள்ளார். தனது வாழ்க்கையில் ஏற்படும் துயர நிகழ்வுகளைக் கண்டு சிறு துளியும் கலங்காமல் வாழ்க்கையை நேசித்து வந்தார். நற்செயல்களைச் செய்யும் மனிதரைப் போற்றுவதில் சிறந்தவர். அதே நேரத்தில் தீமையையும் தீமை செய்வோரையும் கண்டு நேரடியாகக் கண்டிக்கத்தக்கவராகவும் திகழ்ந்தார்.

## சர்வக்ஞரும் எண்ணங்களும்

சிறுவயதிலே பெற்றோரால் புறக்கணிக்கப்பட்டவர் எனக் கருதும் இவர் வெகு தொலைவு ஊர் ஊராய்ச் சுற்றித் திரியும் நிலைக்கும் கட்டுப்பட்டுள்ளார். கால் போன போக்கிலும் மனம் போன போக்கிலும் சென்றுள்ளார். பசி ஏற்படும் நேரம் எங்காவது யாரிடமாவது வாங்கிச் சாப்பிட்டுள்ளார். பசிக்காக உணவு கொடுத்த ஒவ்வொருவரும் அவரை முதலில் கேட்ட வினா நீ என்ன சாதி என்பதுதான். இதைக் கண்டு அவரின் மனம் வெதும்பியது. எலும்பும் தோலும் காணுகின்ற இவ்வுடலுக்குச் சாதி எப்படி வந்தது என்ற எண்ணம் உருவாகியதன் விளைவாக

**"என்புதோல் போர்த்திய மலமூத்திர குட்டைக்கு**
**ஜாதி என்ன சொல்வாய் சர்வக்ஞ**
**ஜாதி என்ன சொல்வாய்"** *(சர்வக்ஞர், ப.25)*

எனும் பாடல் உணர்த்துகிறது.

இளமைப் பருவத்தில் சாதி என்ற ஒன்று எவ்வாறு மனிதனிடம் ஒட்டிக் கொண்டிருக்கிறது என வியப்புக்குள்ளானார். இருப்பினும் சாதியை அவர் விரும்பவில்லை. மாறாக வெறுத்தார். உயர்ந்தோன்-தாழ்ந்தோன், பக்தன்-நாத்திகன் எனும் மெய்ப்பாடல்கள் எவ்வாறு வந்தது என வியந்துள்ளார்.

**"மெய்யுறுப்புகள் ஒத்தன மாந்தருக் கெனில்**
**உயர்ந்தோன் தாழ்ந்தோன் பக்த நாத்திகானனும்**
**பொய்ப்பாடல்கள் வந்ததெங்கே"** *(ச.உ.535)*

எனும் அடிகள் மனிதப் பாகுபாட்டினை விளக்குவதாக அமைந்துள்ளன.

நிலம் என்பது அனைத்து மக்களுக்கும் பொதுவானது. அந்நிலப் பகுதியிலிருந்து வரும் தண்ணீர் யாவருக்கும் பொதுவானதாகும். இருப்பினும் பொதுவான நீரை எடுத்துச் சமைத்துக் கீழோர், மேலோர் என்ற பாகுபாட்டால் அருகில் அமர்ந்து உண்ணுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மனிதர்களின் உறவு தேவையில்லை என்றும் தம் பாடலில் கடிந்துள்ளார். அதனைப்

**"பருகுகின்ற பொதுநீரைக் கொண்டு சமைத்தே**
**அருகருகே அமர்ந்துண்ண மறுக்கும் மாந்தரின்**
**நெருங்கிய உறவுமேன் சர்வக்ஞ"** *(ச.உ.537)*

எனும் பாடல் விளக்குகின்றது.

இவ்வாறாகச் சர்வக்ஞர் சாதி எனும் குறுகிய எல்லைக்கு அப்பாற்பட்டவராகத் திகழ்ந்துள்ளார். குறுகிய விருப்புணர்வோ கோட்பாடுகளோ கொண்டதாக இல்லாமல் அனைத்து மக்களிடமும் இயல்பாய்ப் பழகும் உள்ளம் கொண்டவராக விளங்கி உள்ளார். பிராமணர்கள் 'தாம் பிறப்பில் உயர்ந்தவர்' என்று கூறும் கருத்தையும்ள நாங்களே வேதஞானத்திற்குரியவர் என்று கூறும் வாக்குகளைக் கடுமையாக விமர்சித்தும் எச்சரித்தும் இருக்கிறார். விண்ணுலகப் பாதையினைப் பார்ப்பனர் மட்டும்தான் அறியக் கூடுமோ மேன்மையாகத் திகழும் பெண்ணாலும் விண்ணுலகத்தின் பாதையினைக் காட்டுவர் என்று பார்ப்பனரின் சொற்களைக் கடிந்து உள்ளார். அதனை

**"விண்ணுலகப் பாதையைப் பார்ப்பனரே அறிவரோ**
**மண்ணில் மேன்மைச் செயலாற்றும் பெண்ணும்**
**விண்ணுலகைக் காட்டுவாள் சர்வக்ஞ"** *(ச.உ.538)*

எனும் பாடலில் விளக்கியுள்ளார்.

அதுபோலவே மனித குலத்தில் கீழ்ச்சாதி, தீண்டத்தகாதவர், ஒடுக்கப் பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் போன்றவற்றைக் கூறுவதைப் பழித்துள்ளார். இறைவன் அருள் பெற்றவனே மேலோர் என்று கூறியுள்ளார். இதனை

**"மணம் நிறைந்திருக்க எம்மவர் இருந்தென்ன**
**மண்சாதியில் மேல்கீழென வேண்டற்க — இறையருளுள்**
**மணந்தவனே மேலாம் சர்வக்ஞ"** *(ச.உ.541)*

எனும் அடிகள் உயர்வு, தாழ்வு இல்லையென்பதை உணர்த்துகின்றது.

சாதிகளைப் பற்றிக் கடுமையாக எச்சரித்த சர்வக்ஞர் அவ்வாறு ஈடுபட்டு உள்ளவர்களை வெறுத்துள்ளார். இவ்வாறாகச் சாதி எனும் மூட நம்பிக்கையினைக் கடந்த மாமனிதனாகத் திகழ்ந்துள்ளார்.

## பிணி போக்க வந்த மருத்துவர்

இவரது காலத்தில் ஆன்மீக நெறியைப் பின்பற்றும் மக்கள் குறைந்தே காணலாயினர். உலக வாழ்க்கைக்கு ஆசை கொண்டு கீழ்த்தரமான செய்கைகளும் நடத்தைகளும் விரவிக் காணப்பட்டன. பணம் மட்டும் நன்று இருப்பின் அவரை எச் செயலிலும் (தீய) ஈடுபடலாம் எனும் விதி உருவாகியிருந்தது. பிறரை ஏமாற்றித் துன்பப்படுத்தும் செயல் நிறைவாகவே காணப்பட்டது. தான் மட்டுமே அனைத்தும் அனுபவிக்க வேண்டுமென்கிற எண்ணம் பரவியிருந்தது. குறிப்பாக அரசியல், பதவி, சாதிகள் போன்றவற்றில் மதம் பிடித்த யானையாகத் திரிந்தனர். பழி, பாவங்களுக்கு நாணாமல் தன் கட்டுப்பாட்டினை இழந்து தனக்காக யாவற்றையும் செய்து முடிக்கும் உயிர்களாகத் திகழ்ந்தனர். நியாயம்-அநியாயம், நல்லது-கெட்டது, சரி-தவறு போன்றவற்றைப் பகுத்தாராயும் எண்ணம் முற்றிலும் மழுங்கிப் போயிருந்தது. பணமும் பொருளும் மட்டும் போதும். எதையும் அடைந்துவிடலாம் என்ற உல்லாசத்தில் அலைந்தனர். அரசர்களுக்கும் அரண்மனையில் பொறுப்பேற்றுத் திகழும் முக்கியத் தலைவர்களுக்கும்ள பதவி, அதிகாரம் போன்றவற்றில் வெறிபிடித்து அலைந்தனர். முதல்நிலை அதிகாரி முதல் கடைநிலை ஊழியர் வரையிலும் பொருள்களையும் பணத்தையும் அபகரிக்கும் எண்ணத்திற்கு உள்ளாயினர். உழைக்கும் வர்க்கமான ஏழைகளும் குறிப்பாகப் பெண்களும் நலிவற்ற பிரிவினர் போன்றவர்கள் எல்லாரும் ஊழல் சமூகத்திற்கு உணவாயினார்கள். இதனால் நேர்மையாய் வாழ்ந்த மக்களையும் வழிதவறி நடக்கும் சூழலுக்குத் தள்ளியது. பாலியல் ஆசையும் வன்முறை வெறியும் இருபெரும் கோட்டைகளாகத் திகழ்ந்தன. இவற்றினைக் கண்டு மனம் கொதித்து எழுந்தார். மனிதன் இவ்வாறெல்லாம் இருக்கக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டார். சமூகத்தைச் சீர்குலைக்கும் கரும்புள்ளிகளை அழிப்பதற்குத் தான் முடிந்த வரை அறக்கருத்துக்களைக் கூறி வந்தார்.

## சர்வக்ஞரும் தமிழ்ப் புலவர்களும்

சர்வக்ஞரின் கருத்துக்களும் தமிழ்ப் புலவர்களின் கருத்துக்களும் ஒற்றுமையாகத் திகழ்கின்றன. இவ்விரு மொழி வேறுபாட்டாலும் கருத்துக்கள் ஒரே தன்மையுடையனவாக விளங்குகின்றன. குறிப்பாக வள்ளுவர், ஔவையார், திருநாவுக்கரசர் போன்றோரின் கருத்துக்களில் ஒன்றுபடுகின்றனர்.

ஈசன் தன்னுள்ளேயே இருக்கிறான் என்று உணராமல் கங்கை ஆற்றில் நீராடினேன். காவிரி ஆற்றில் மூழ்கினேன். குமரித் துறையிலே ஆடினேன் என்று சொல்வதில் எப்பயனுமில்லை. இப்படிப்பட்டவர்கள் ஈசனை அறியாதவர்கள் என்று திருநாவுக்கரசர் கூறுகின்றார். அதனை விளக்கும் முகமாக,

**"கங்கை ஆடில்என் காவிரி ஆடில்என்**
**கொங்கு தண்கும ரித்துதுறை ஆடில்என்**
**ஓங்கு மாகடல் ஓதம்நீர் ஆடில்என்**
**எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே"**

எனும் பாடல் விளக்குகின்றது. இதே கருத்தினை வெளிக்காட்டும் முகமாக

**"கங்கை கோதாவரி துங்கபத்ரா ஆறுகளில்**
**பங்கமின்றி மூழ்கிப் பயனென்ன — மங்காத**
**தன்பால் இலிங்கத்தின் மெய்ம்மை அறியாதோன்**
**என்செய்தால் என் சர்வக்ஞ"** *(ச.வெ.164)*

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

திருவள்ளுவரின் கருத்துக்களைத் தம் திரிபாதியில் எடுத்துரைத்துள்ளார். தீயினாலே சுட்ட தோற்காயம் ஆறக்கூடும். ஆனால் நாவினால் பேசும் கடுஞ் சொல்லால் உண்டாகும் உள்காயம் எப்போதும் ஆறவே ஆறாது என்பதனைத்

**"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு"**

என வள்ளுவர் கூறுகிறார். இதனைப் போலவே சர்வக்ஞர் பாடலின்

**"கத்தியிலாம் காயம் மருந்துகொண்டு போக்கிடலாம்**
**சுற்றி சுழலும் சுடுநாக்கால் — உற்றபுண்**
**என்றைக்கும் ஆறா திறுதிவரை சர்வக்ஞ**
**நின்றுவிடும் மாறா வடு"** *(ச.வெ.1162)*

இவ்வடிகளும் ஒத்துப் போகின்றன. பல்வேறு வகையில் ஏமாற்றித் தொழில் செய்யும் மக்களைக் குறிப்பிட்டுத் தன் பாடலில் அவர்களின் தவறுகளைச் சுட்டியுள்ளார். பொற்கொல்லர்கள்ள குணத்தை வெளிப்படுத்தும் முகமாகப்

**"புடமெனக் காட்டியே சாம்பலுள் மறைப்பான்**
**படர்தீயில் சுட்டுச் சோப்பான்பிற — தங்கம்**
**தீட்டுகையில் திருடுவான் சர்வக்ஞ"** *(ச.வெ.783)*

எனும் பாடலடிகள் விளக்குகின்றன.

பிறரின் பொருள்மீது ஆசை கொள்வோர், மதுவுண்பவர், பாம்பினை வைத்துப் பிறருடைய வீட்டினை அபகரிப்போர் இம்மூவர்க்கும் நல்ல சாவு ஏற்படாது என்பதை

**"எரிவீட்டில் பொருள்தேடுவோர் உயர்வான மதுவுண்போர்**
**ஊரும் நாகமொடு பிறன்மனையை கைப்பிடிப்போர்**
**துர்மரணம் தப்பார் சர்வக்ஞ"** *(ச.உ.702)*

எனும் பாடடிலகளில் காணலாம். மண்ணாசை, பெண்ணாசை எனக் கொண்டவர்களுக்குப் பாடம் புகட்டும் விதமாகப் பிறர் திருந்துதல் வேண்டுமென்பதை வலியுறுத்தும் முகமாக

**"மண்ணும் பெண்ணும் ஆள்வோர் எனவேண்டா**
**பெண்ணால் கெட்டவன் இலங்கைத் துரியன்**
**மண்ணால் கெட்டான் சர்வக்ஞ"** *(ச.உ.692)*

எனும் பாடலடிகளின் மூலம் தெளிவுறுத்துகின்றார். இதுபோன்ற பலவகையில் குறுக்கு வழியில் ஈடுபட்டவர்களைக் கண்டு இனிமேல் இவ்வாறு இருக்கக்கூடாது என்ற எண்ணமுள்ளவராகத் திகழ்ந்து அறக்கருத்துக்களைப் பாடியுள்ளார். பண முதலாளிகளின் போலி மற்றும் வறட்டுக் கௌரவம், அறிவுடையோரின் கர்வம், படைவீரர்களின் திமிர் பிடித்த போக்கு, ஏழைகளின் மனத் துயரம், வாணிகர்கள், அதிகாரிகள் போன்றவர்களின் நேர்மை இன்மை சிதறியிருந்ததைக் கண்டு மாய்ந்துள்ளார். நலிந்து கிடக்கும் சமூகத்தை உயர்த்த வேண்டுமென்பதில் இருபுறமும் பட்டை தீட்டிய கருவியாகத் திகழ்ந்தார். நலிந்து கிடந்த சமூகத்திற்கு அறநெறியும் ஆன்மீகக்

கருத்துக்களும் சமுதாயப் புரட்சிக்கான செயல்களும் தேவையாக இருந்தன. இதை நிறைவு செய்யும் முகமாகச் சர்வக்ஞர் தன் அறப்பாடல்களை அதிகமாக மக்களுக்கு வழங்கினார். இவ்வாறாக வழங்கிய அமுதமானது பிணி போக்கும் மருந்தாகத் திகழ்ந்தது.

## கருப்பொருள்

அறக்கருத்தினை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்பது சர்வக்ஞரின் நோக்கம். அதனை எவ்வாறு சொல்வது என்ற மதிநுட்பத்தினை நன்றாகக் கையாண்டு உள்ளார். திருவள்ளுவருக்கும் இவருக்கும் இடையே உள்ள கருத்து ஒற்றுமை மிகவும் நெருக்கமானது. வேறுபாடு யாதெனில் அவர்களின் கருத்துக்களை வெளிக் கொணர்ந்த விதம்தான். அதாவது வள்ளுவர் மென்மையாகவும் அன்பாகவும் பேசி உள்ளார். சர்வக்ஞர் தான் கூற வந்ததை அப்படியே கூறுவார். குடும்பம், சமுதாயம், பொது நிருவாகம், அரசியல், வேளாண்மை, பல்வேறு தொழில்கள், வாணிபம், சுகாதாரம், மருத்துவம், பேச்சு, இசை, பருவக் காலங்கள், கல்வி, ஜோதிடம், தர்க்கம், சாதி, மதம், ஆன்மீகம், மகளிர் நிலை, நாடு, கேடு பயப்பன போன்ற கருப்பொருள்களில் பாடியுள்ளார்.

## மொழிபெயர்ப்பு

கன்னடத்தில் சர்வக்ஞர் பாடல்களைப் பல அறிஞர் தொகுத்துள்ளனர். அவற்றில் மிகச் சிறப்பான தொகுப்பு எனக் கருதுவது உத்தங்கி சென்னப்பாவின் நூல். இவர் தொகுத்த பாடல்களைக் கையாண்டு தமிழில் இறையடியான், கிருட்டினமூர்த்தி எனும் இருவர் மொழிபெயர்த்துள்ளனர்.

இறையடியான் மொழிபெயர்த்த 1194 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. உத்தங்கி சென்னப்பா இட்ட தலைப்புகளைப் பின்பற்றியதை இவரும் கையாண்டுள்ளார்.

இறையடியானின் 'சர்வக்ஞர் உரைப்பா' எனும் மொழிபெயர்ப்பு நூலில் 31 தலைப்புகளின்கீழ் 1194 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இரு பகுதியாகப் பிரித்து முதல் 20 தலைப்புகள் ஒரு குறிப்பிட்ட பொதுவான வரையறைகளை 684 பாடல்களில் தந்துள்ளார். அவையாவன கடவுள் வாழ்த்து, குருவின் சிறப்பு, இலிங்கத்தின் மேன்மை, இலிங்க வழிபாடு, இறைப்பெயர், பக்தியின் மேன்மை, ஈசனின் மேன்மை, ஞான வழி, யோகம், சிவயோகம், அறம், அரசநீதி, நட்பு, ஊழ், அந்தணர், சமணம், மூடர், கால அறிவு, கேடு, நடுவுநிலைமை என்பன.

இரண்டாவது பகுதியாகப் பிரிக்கப்பட்ட பாடல்கள் 'பல்வேறு தலைப்புகள்' என்று 11 தலைப்புகளின்கீழ் 684 பாடல்கள் தந்துள்ளார். அவையாவன : பெண், மண், கண், நா, பெயரிடுதல், பிள்ளை, மாந்தர் நிலை, உறக்கம், அபின், மது, நீர்ப்பானம், புகை பிடித்தல், தாம்பத்யம், சூதாட்டம், ஒழுகுகின்ற வீடு, கல்விப்பணி, சாதனை, பாடகன், படித்தல், வெற்றுச் சொற்கள், சொல்வன்மை, நகைப்பு, உழவு, பசுக்கன்று, கோடை, வறுமை, பணிப்பெண், கடன்காரர், பெயர் சொல்வகை, தச்சன், தையற்காரன், வணிகன், பாதகன், மாயக்காரன், அடம்பிடிப்போர், அச்சமுடையோர், கண்ணாடி, வாணிகன், நெசவு, வேடன், வன்கண்ணர், கழைக்கூத்தாடி, வரி தண்டுவோர், இழிந்தோர், புறங்கூறல், பரத்தையின் தாய், மாந்தர் வகை, உயர்வு, பட்டறிவு, நாடு, பெண்பிரிவுகள், இருண்ட வீடு, கணிகைத் தொழில், வேசியர், உணவு, மருந்து, மதிநுட்பம் போல்வன.

தமிழில் இரண்டாவதாகச் சர்வக்ஞர் பாடல்களை மொழிபெயர்த்த மொழி பெயர்ப்பு நூல் 'சர்வக்ஞர் வெண்பா' ஆகும். இதனை மொழிபெயர்த்தவர் தா.கிருட்டினமூர்த்தி என்பார். சர்வக்ஞருடைய பாடல்கள் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டிருந்தாலும் அவற்றை வெண்பாவால் தமிழுலகிற்கு அளிக்கும் முயற்சியில் இவர் வெளியிட்டுள்ளார்.

சர்வக்ஞர் தான் எழுதிய பாடலில் மூன்று அடிகளில் மட்டுமே எழுதியுள்ளார். இது போலவே தமிழில் மொழிபெயர்த்த இறையடியான் என்பாரும் மூன்று அடியில் சர்வக்ஞர் உரைப்பாவை மொழிபெயர்த்துள்ளார். இருப்பினும் தா.கிருட்டினமூர்த்தி அவர்கள் நான்கு

அடிகளில் (வெண்பா வடிவில்) இயற்றியுள்ளார். இவ்வாறு ஏன் இயற்றினார் என்பதற்கு விடை காணும்போது

> "தமிழில் அற நூல்கள் பெரும்பான்மையும் நாலடி வெண்பாக்களிலேயே பாடப்பட்டுள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள் நீங்கலாக மற்ற அற நூல்கள் அனைத்தும் நாலடி வெண்பாக்களாலேயே யாக்கப்பட்டுள்ளன. கன்னட மொழியில் சர்வக்ஞர் மிகச் சிறந்த அறவாணர். அவர்தம் வசனங்களும் விழுமிய அறக்கருத்துக்களை உட்கொண்டனவாக உள்ளன. அதனால் தமிழின் இயல்புக்கு ஏற்ற அறத்தின் பிழிவாக உள்ள சர்வக்ஞர் வசனங்களை நாலடி வெண்பாக்களில் பொதிந்து வைப்பதே பொருந்துவது என்று கருதினேன்"

எனத் தனது முன்னுரையில் பகர்ந்துள்ளார்.

சர்வக்ஞர் வெண்பா எனும் இந்நூலில் *384* தலைப்புகளின்கீழ் *1892* வெண்பாக்கள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. சர்வக்ஞரின் பாடல்கள் முழுவதையும் தொகுத்து மொழிபெயர்ப்பு செய்ய வேண்டுமென்ற இவரின் இலக்கு நிறைவேறியுள்ளது. வெண்பாக்களில் உள்ள கருத்துக்கள் மிக நுணுக்கமாகவும் சான்றெண் விளக்கத்தோடும் எடுத்துரைத்துள்ளார்.

## பார்ப்பனிய எதிர்ப்பு

ஊரெங்கும் பல்வேறு இடங்களையும் சுற்றித் தன் அறக்கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார். இருப்பினும் அவர் சென்ற இடங்களில் சாதி வேறுபாடு காணப்பட்டு உள்ளது. பார்ப்பனியர்கள் தமக்கும் கீழான மக்களை இழிவாகவும் தீண்டாமையோடும் பார்த்துள்ளனர். இவற்றைக் கண்டு சர்வக்ஞர் மனம் வெதும்பியுள்ளார். தனது பாடல்களில் பார்ப்பனர்களை முன்வைத்து அவர்களின் குணம், இலக்கணம் போன்றவற்றினை விளக்கியுள்ளார்.

அனைத்து மலர்களிலும் மணம் நிறைந்திருக்கின்றது. மணம் வேறாயினும் மலர்கள் அனைத்தும் ஒரே இனத்தைச் சார்ந்தவையே. அதுபோல் மண்ணுலகில் மேல்சாதி, கீழ்ச்சாதி எனப் பாகுபடுத்த வேண்டாம் எனவும் இறையருள் மணந்தவரே மேலானவர் என்பதை

**"மணம் நிறைந்திருக்க எம்மலர் இருந்தென்ன**
**மண்சாதியில் மேல்கீழென வேண்டற்க — இறையருள்**
**மணந்தவளே மேலாம் சர்வக்ஞ"** *(ச.உ.541)*

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

உலகிற்கு நீர் என்பது பொதுவானதாகும். சுற்றுகின்ற உலகம் ஒன்றே. தாகம் தணிக்கும் நீரும் ஒன்றே. அதுபோல் சுடுகின்ற தீயும் ஒன்றே. இவ்வாறு உலகத்தை இயக்கக்கூடிய அனைத்துப் பொருளும் சமமாகக் கருதப்படும்போது சாதியும் குலமும் என்றவை நடுவில் புகுந்து மனிதரை ஆட்டிப் படைப்பது ஏனென்று தன் பாடலில் விளம்புகின்றார். இதனைச்

**"சுழலும் உலகொன்றே பருகும் நீரொன்றே**
**சுடுகின்ற தீயொன்றே சாதியும் குலமும்**
**நடுவே புகுந்தெவன் சர்வக்ஞ"** *(ச.உ.536)*

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

சமுதாயத்தில் நிலவிய குறைபாடுகளை வெறுத்தும் வன்மையாகவும் கண்டித்து உள்ளார். நீராடிப் புனல் தரித்து வேள்வி செய்தால் சொர்க்க வீட்டை அடைந்திடலாம் என மக்களை ஏமாற்றி வரும் பார்ப்பனர்களைத் தன் அடிகளால் சர்வக்ஞர் அடி கொடுத்துள்ளார்.

பிறப்பால் அனைவரும் சமம். கீழோர் மேலோர் என யாரும் கிடையாது என்பதை வலியுறுத்துகின்றார். எழுவகைத் தாதுக்களாகக் குருதி, தோல், தசை, நிணம், நரம்பு, எலும்பு,

விந்து, ஐவகைப் பூதங்களான நிலம், நீர், தீ, வளி, வான் இவை எல்லாம் இயற்கையாய் அமைந்திருக்கச் செயற்கையாய் அமைந்த சாதி மட்டும் எங்கிருந்து வந்தது எனச் சாடுகின்றார். இதனை

**"தாதுக்கள் ஏழு கொண்டு பூதங்கள் ஐந்த மைத்துப்**
**பேதம் ஏதுமின்றிக் கட்டிநன்கு — வேதித்த**
**வாதஉடல் தாங்கும் மனிதர்க்குச் சர்வக்ஞ**
**சாதி வந்த தெங்கிருந்து சர்வக்ஞ"** *(ச.வெ.913)*

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

## முடிப்பு

தனது வாழ்க்கையை அர்ப்பணித்து மக்களின் நலனை நோக்கி ஊர் சுற்றித் திரிந்தவராகத் திகழ்ந்துள்ளார். சர்வக்ஞர் அன்று அவர் போட்ட இவ்வறக் கருத்துக்களின் விதையானது வளர்ந்து அனைவரும் பின்பற்றும் வண்ணம் அமைந்துள்ளது. மொழியின் இலக்கியத்தையோ இலக்கணத்தையோ அறிந்து கொண்டு அதனைப் ஒப்பீடு செய்வது தற்கால நடையாகும். ஒப்பீடு இன்னும் அறியப்படாத பிற புலவர்கள் தன்மையை அறிய வழி செய்கிறது.

## துணைநூற் பட்டியல்


- இறையடியான், ப. (மொ.ஆ.), சர்வக்ஞர் உரைப்பா, 2004, உலகத் தமிழாராச்சி நிறுவனம், சென்னை
- கிருட்டினமூர்த்தி, தா. (மொ.ஆ.), சர்வக்ஞர் வெண்பா, 2011, மணிவாசகர் பதிப்பகம், சென்னை
- பிரபு பிரசாத், கே.பி., சர்வக்ஞர் (இந்திய இலக்கியச் சிற்பிகள்), 2009, சாகித்திய அகாதெமி, புதுடெல்லி.

மதிப்பிடப்பெற்றது

# குழந்தையின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு


**யேசுஜியா டிலானி**

உதவி விரிவுரையாளர், கல்வி பிள்ளை நலத்துறை

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை




**அறிமுகம்**

சமூகத்தின் மிகச் சிறிய ஆக்க அலகுகளாகப் பெற்றோர்களும் அவர்களின் வாழ்க்கையினை ஒளியூட்டும் ஒளிவிளக்குகளாகக் குழந்தைகளும் காணப்படுகின்றனர். ஈன்றெடுத்த மகவுகள் நட்சத்திரங்களாக சமூகவானில் ஒளிர வேண்டும் என்பதே ஒவ்வொரு பெற்றோரினது அவாவாகும். ஆற்றலும் ஆளுமையுமுள்ள பிள்ளைகளாக அவர்களை மாற்றியமைக்க வேண்டுமெனின் கருவறையிலிருந்தே பிள்ளைக்குக் கற்பித்தலை வழங்க வேண்டும். குழந்தையானது தனது தாயின் கருவறையில் இருக்கும்போதே கற்க ஆரம்பித்து விடுகிறது. அதனையடுத்து தனது குடும்பம், அதுசார் சூழலிலிருந்தும் கற்றுக் கொள்கிறது. இதனாலேதான் குழந்தையின் முதல் ஆசான் அதன் தாயாகும். அதனையடுத்துக் குழந்தை தாய்மடியிலிருந்தும் தாயெனும் ஆசானிடமிருந்தும் விடைபெற்று முன்பள்ளி எனும் வட்டத்தினுள் கால்பதிக்கிறது.

இவ்வாறு குடும்பத்திலிருந்து விடைபெற்றுப் புதுமுகங்களுடன் பழக ஆரம்பிக்கும் குழந்தை புதிய சூழலுடன் இசைவாக்கப்படவும் இயைந்து செல்லவும் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறான பலதரப்பட்ட சூழலிலிருந்து வரும் குழந்தைகளை வழிப்படுத்தி வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்துவதற்குப் பிள்ளைகளின் வளர்ச்சி பற்றிய அறிவு ஒவ்வோர் ஆசிரியருக்கும் இன்றியமையாத ஒன்றாகும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. எனவே இதனையடிப்படையாகக் கொண்டு முன்பள்ளிப்பருவச் செயற்பாட்டினை எவ்வாறு குழந்தைகளின் முழுமையான விருத்தியை நோக்கி நகர்த்தலாம் என்பதனை பிள்ளை விருத்தி பற்றிய அறிவினூடாகவும் அனுபவத்தினூடாகவும் விளக்கல் சாலச் சிறந்ததாகும்.

குழந்தை விருத்தி, பிள்ளைவிருத்தி என்றெல்லாம் கூறப்படும் பிள்ளைகளின் வளர்ச்சிக்கட்டம் பற்றிப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவிப்பதோடு பலதரப்பட்ட கொள்கைகளையும் கோட்பாடுகளையும் முன்வைக்கின்றனர். அந்த வகையில் ஆர்னலட் கெஸலின், சிக்மன் பிறைட், வில்கெம்வூன்ட், அல்பிறட் பீனே, இயன்பவ்லோவ், ஜீன் பியாஜே போன்றோர் முக்கிய இடம் வகிக்கின்றனர். இங்குப் பிள்ளையின் வளர்ச்சி என்பது கருவறையில் உருவானது முதல் உடலியல், உளவியல் ரீதியாக அடையும் மாற்றத்தினையும், விருத்தி என்பது வயது முதிர்ச்சியடைய பிள்ளையின் உருவத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு மேலதிகமாக அவனிடம் விருத்தியடையும் சிக்கல் நிறைந்த திறன் காரணமாக ஏற்படும் மாற்றத்தினையும் குறிக்கும். வளர்ச்சி, விருத்தியெனும் இருவழியினூடாக குழந்தையிடம் மாற்றம் உண்டாகிறது. வளர்ச்சியானது உருவ மாற்றத்தினையும், விருத்தி பண்புகளில் நுட்பமுறையில் மாற்றத்தினையும் ஏற்படுத்துகிறது. ஒரு பிள்ளையின் திறன்விருத்தியானது ஒழுங்கமைப்பு முறையில் ஏற்படும் மாற்றத்தினூடாக மட்டுமன்றி சூழலிலிருந்து பெற்றுக்கொள்ளும் அனுபவ உந்துதல்களினூடாகவும் ஏற்படுகிறது. பிள்ளையின் செயற்பாட்டு விருத்திக்கு அடிப்படையான புலனறிவைப் பெற்றுக்கொள்ள அப்பிள்ளையின் அவயங்களின் வளர்ச்சியே துணைபுரிகிறது. எனவே பிள்ளை விருத்தி என்பது சூழலிலிருந்து பெற்றுக்கொள்ளும் அனுபவம் பிள்ளைவிருத்தியில் விசேட செல்வாக்கு செலுத்துவதோடு பிள்ளையின் அவயங்களில் தூண்டல் விருத்தியை உண்டாக்குகிறது. எனவே பிள்ளைவிருத்தி என்பது சூழலிலிருந்து பெற்றுக்கொள்ளும் பிள்ளையின் வளர்ச்சியுடன் தொடர்பான உதவிகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் ஏற்ப ஒழுங்கமைக்கப்பட்ட முறையான உருவாக்கத்தின் விளைவாகும். இவ்வாறு பிள்ளையின் விருத்தியிலும் வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகளாகப் பரம்பரையும் சூழலும் முதிர்ச்சியும் கற்றலும் காணப்படுகின்றன.

மனித வாழ்வில் பிரதான வளர்ச்சிக்கட்டங்களைக் குழந்தைப்பருவம், பிள்ளைப்பருவம், கட்டிளமைப்பருவம், வளர்ந்தோர் பருவம் என வகைப்படுத்தலாம். அவற்றில் பிள்ளைகளின் ஆரம்ப நிலை விருத்திப் பருவமானது மிக முக்கியமானதாகும். ஏனெனில் இதிலேதான் பிள்ளையின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் அறிவு நடத்தைசார் அம்சங்களுக்கான அத்திவாரமிடப்படுகிறது. அந்தவகையில் அது

தொடர்பான அறிவைக் கொண்டிருத்தல் ஆசிரியர்களுக்கு இன்றியமையாததோடு வெற்றிகரமான கற்பித்தல் செயற்பாடுகளுக்கு வழிவகுக்கும்.

குழந்தைப்பருவமானது சகலவிதமான அடிப்படை ஆற்றல்களோடும் பிறக்கும். சாதாரண குழந்தை தான் வாழும் சூழலுக்கேற்றவாறு தூண்டல் துலங்கலைக் காட்டும். அதேவேளை தன்னுடைய வாழும் தன்மையையும் வளர்ச்சியையும் நிச்சயிக்க முற்படும். குழந்தையின் வாழ்வில் முதல் வருடமானது விருத்திக்குரிய சாதகமான சூழலை வழங்குவதோடு தன்சார்பான வளர்ந்தோரிலேயே முற்றாகத் தங்கியிருக்கும். அதனையடுத்த வருடம் குழந்தையால் மொழியை முழுமையாகப் பயன்படுத்த முடியாவிட்டாலும் அசைவிற்கேற்ற திறன்களைப் பெற்றுக்கொண்டு மெதுவாக கற்க ஆரம்பிக்கிறது. பாடசாலை வாழ்வின் தொடக்கம் முதல் முடிவு வரையான காலப்பகுதியாகும். பிள்ளைக்குச் சிறந்த விருத்தி ஏற்படவேண்டுமெனின் இயற்கையான உடலில் வளர்ச்சி மட்டுமன்றி கற்றலும் நடைபெற வேண்டும். கற்றலின்றி உடல்வளர்ச்சியோ உடல்வளர்ச்சின்றி கற்றலோ வெற்றிகரமான பிள்ளைவிருத்திக்கு ஏதுவாகமையாது. எனவே கற்றலுடனான இயற்கைவிருத்தி பிள்ளைவிருத்திக்கு இன்றியமையாததாகும்.

பிள்ளைவிருத்தியில் பிறப்பு முதல் 19 வயது வரையேற்படுகின்ற கற்றலும் வளர்ச்சியும் இன்றியமையாததாகும். ஏனெனின் இக்காலப்பகுதியிலேயே பிள்ளையின் உடல், உள, மனவெழுச்சி, சமூகம், ஒழுக்கம்சார் வளர்ச்சிகள் ஏற்படுகின்றன. குழந்தைப்பருவத்தினை வயதினடிப்படையில் உளவியளாலர்கள் இருவகைப்படுத்துகின்றனர். அவை,

1. முன்பிள்ளைப் பருவம்
2. பின்பிள்ளைப் பருவம்

ஆகியனவாகும். ஆரம்பகாலத்தில் குழந்தைகளைப் பெரியவர்களின் விருப்பின்படி மாற்றியமைக்கூடிய வெற்றுக் காகிதங்கள் தமது வளர்ச்சியைத் தீர்மானிக்கப் பொருத்தமற்றவர்கள் எனும் கருத்து நிலவியது. ஆனால் நவீனகால பிள்ளைசார் ஆய்வில் குழந்தைகள் முக்கியமான இயக்கப் புலக்காட்சித் திறனையும் வளர்ச்சியில் முக்கிய பங்குதாரர்களெனவும் முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன. பிள்ளையின் பிறப்புடன் புலக்காட்சி சிறப்பாகத் தொழிற்பட ஆரம்பிக்கிறது. இது கற்றலை ஒழுங்குபடுத்தவும் தகவல்களைப் பரிமாறவும் பெரிதும் உதவுகிறதென அறியப்படுகிறது. எனவே பிள்ளைவிருத்தியில் கற்றல் செயற்பாடானது வளர்ச்சியுடன் இணைந்தே காணப்படுகிறது.

**முன்பிள்ளைப் பருவம்**

குழந்தை பிறந்தது முதல் இருவருடங்கள் முடியும் வரையுள்ள காலப்பகுதியை உளவியலாளர்கள் முன்குழந்தைப் பருவம் என்கின்றனர். குழந்தைகள் சில தெறிவினைகளுடனேயே பிறக்கின்றது. தெறிவினையென்பது அதி சிறப்பான தூண்டல்களுக்காகக் காட்டப்படும் தன்னிச்சையான அதாவது இச்சையின்றிய உடற் செயற்பாடாகும். தலையைத் திருப்புதல் விழுங்குதல், மொரோ தெறிவினை, பவின்ஸி தெறிவனை, பற்றுதல் பிடித்தல் என்பன முக்கிய தெறிவினைகளாகும். முக்கியமான ஒன்றாக காணப்படினும் இது நிலையற்ற ஒன்றாகவே காணப்படுகிறது. இக்காலப் பகுதியில் கண்களால் பார்ப்பவற்றை ஞாபகம் வைத்திருத்தல் விளங்கல் ஒழித்து வைத்த பொருளைத் தேடல் நிரப்புத்தன்மையடைவதே காரணமாகும். இதனால் மனப்பாடம் தோன்றும் என்கிறார் பியாஜே. இதனால் உளவிருத்தி ஏற்படுவதோடு குடும்ப அங்கத்தவர் உறவினருடன் தொடர்பை ஏற்படுத்துவதால் குழந்தை சமூக ரீதியான விருத்தியும் அடைகிறது.

இப்பருவத்தினைப் பின்வரும் விருத்தியின்கீழ்ச் சிறப்பாக ஆராயலாம்.

1. உடலியக்க வளர்ச்சி
2. இயக்கத்திறன்களின் வளர்ச்சி
3. புலனுணர்ச்சிகளின் வளர்ச்சி
4. சமூகமனவெழுச்சி வளர்ச்சி
5. மொழி வளர்ச்சி
6. ஆரம்ப அறிவு வளர்ச்சி

உடலியக்க வளர்ச்சியென்பது வயது அதிகரிப்பதுடன் ஒருவரின் உடல் உறுப்புக்களில் ஏற்படுகின்ற மாற்றங்களையே குறித்து நிற்கிறது. அதாவது குழந்தையின் முதலிரு வருடத்திலும் உயரத்திலும் நிறையிலும் விரைவான வளர்ச்சியை அடைவதோடு குழந்தை ஐந்து மாத நிறைவில் இருமடங்காகவும் 12 மாதத்தில் மூன்று மடங்காகவும் விருத்தியடையடைவதோடு முதல் வயதில் 10-12

அங்குல உயரத்தையும் இருவயது முடிவில் தளர்நடைபகுதியினராகத் தமது வளர்ச்சியின் மறுபகுதி உயரத்தையும் பூர்த்தி செய்வர். முதல் இருவருடமும் வளர்ச்சியும் கற்றலும் மிக விரைவாக இருக்கும். குழந்தையின் உருவவியல் மாற்றம் உடலியல் ரீதியாகவும் விகிதாசார அடிப்படையில் நிகழும். அத்தோடு தசைகள், ஓமோன்கள் ஆகியவற்றில் மாற்றம் நிகழ்வதோடு எலும்பு, மூளை வளர்ச்சியைப் போலன்றி சகல தசைநார்களையும் குழந்தை ஆரம்பத்திலேயே பெறுவதோடு தசைஇழையங்களின் அதிகரிப்பினால் தசைநார்கள் நீளத்திலும் தடிப்பிலும் வலுவிலும் மாற்றம் நிகழ்கிறது. இது கட்டிளமைப்பருவம் வரை இடம்பெறுவதனால் உடலியக்க வளர்ச்சி சிறப்பாக அமையும். இயக்கத்திறன்களில் மாற்றம் ஏற்படும். உயரம், நிறை போன்ற அளவு ரீதியான அளவைகள் மூலம் இதனையறியலாம். இவ்வாறு பிள்ளைகளின் ஆரம்பநிலை உடலியக்க வளர்ச்சி பற்றி ஆசிரியர் அறிந்திருப்பதானது அவசியமாகும்.

ஏனெனில் முன்பள்ளியிலே பல்வேறுபட்ட பிள்ளைகள் வருவார்கள். அவர்கள் வேறு இயல்புள்ளவர்களாகவும் உடலியக்க செயற்பாடு உடையவர்களாகவும் காணப்படுவர். உதாரணமாக அதாவது சில குழந்தை நல்ல சுறுசுறுப்பாகக் காணப்பட சில குழந்தைகள் சுறுசுறுப்பற்றுக் காணப்படலாம். இவ்வாறு ஏன் வேறுபடுகின்றது என்பதனைக் கண்டறிவதும் தீர்வுகளை வழங்குவதும் இன்றியமையாததாகும். இவ்வாறு அறிந்திருந்தால்தான் பிள்ளையின் விருத்திக்குத் தடையாக அமைந்த காரணியைக் கண்டறிந்து குழுவாகப் பிள்ளைகளைச் செயற்படச் செய்தல் விளையாட்டுக்களில் ஈடுபட வைத்தல் என ஒவ்வொருவரின் உடலியல் வளர்ச்சிக்கேற்ப கற்பித்தலை மேற்கொள்ளலாம்.

சிறந்த எடுத்துக்காட்டாக முன்பள்ளிக் குழந்தைகளைக் குழுக்களாக்கி ஓட்டப்பந்தயம், சறுக்கல், நீச்சல், நடனம், உடற்பயிற்சி போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களுக்கிடையேயுள்ள உடலியக்க விருத்திசார் வேறுபாடுகளை இனங்கண்டு அவற்றினை நிவர்த்தி செய்ய பிள்ளையின் உடலியல் விருத்தி தொடர்பான அறிவு இன்றியமையாததாகும். அதனை அறிந்திருந்தால்தான் பிள்ளையின் விருத்திக்கேற்றவாறு கற்பித்தலை மேற்கொண்டு முன்பள்ளிச் செயற்பாட்டில் குழந்தைகளுக்குச் சிறந்த விருத்தியை ஏற்படுத்தலாம் என்பதில் ஐயமில்லை. உடலியக்க விருத்திசார் அறிவு இல்லையேல் முன்பள்ளிச் செயற்பாட்டில் விருத்தியை ஏற்படுத்துவதென்பது எட்டாக்கனியாகும். மேலும் இயக்கத்திறன்களின் வளர்ச்சியானது இப்பருவம் பிறப்பில் எதிர்நோக்க வேண்டியிருக்கும் சகல சூழற்றாக்கத்திலிருந்தும் விடுபடுவதற்கான மாற்றங்களைப் பெறுகிறது. ஆரம்பநிலை சீராக்கத்தின் பின்பு அதன் வளர்ச்சி துரிதமடையும் முதிர்ச்சியுடன் கூடிய நரம்புத்தசைப் பயிற்சியும் இயக்கச் செயற்பாடுகளுடன் இயைவடைகிறது. உளவியலாளர்கள் இயக்க வளர்ச்சியென்பது பிள்ளையின் அசைவிலும் நடத்தையிலும் ஏற்படும் சிக்கலான மாற்றமே என்கினறர். குழந்தைகளின் இயக்கத்திறன் வளர்ச்சியிலே பல சிக்கலான பருவங்கள் உண்டாகின்றன.

தன்னிச்சையான அடிப்படைத் திறன்களிலே காணப்படும் ஒன்றிணைதலும் இயைபூக்கமும் காரணமாகப் படிப்படியாக ஏற்படும் சிக்கலான திறன்களுடன் வளர்ச்சியின் தொடர்ச்சியான நிகழ்வு இணைந்து செல்லும்போது இவ்வாறான பிரச்சினைக்குரிய பருவம் ஏற்படுகிறது. இதனுள் குழந்தைகள் திறன் தேர்ச்சியடையும் காலப்பகுதியுமுண்டு. பிள்ளையானது உடல், புலக்காட்சி, நுண்ணறிவு ரீதியாக தொழிற்பட போதிய முதிர்ச்சியும் ஏற்படுகின்றது. குழந்தைகளின் இயக்கத்திறனை கட்டுப்படுத்த விளையும் போது அதன் ஏனைய திறன் விருத்தியையும் இழக்க நேரிடும். இருப்பினும் பிள்ளைகளின் இயக்கத்தில் சில குறைபாடுகள் காணப்படுவது பொது நிகழ்வாகும் இதனை நிவர்த்தி செய்ய பல்வேறு வழிகள் காணப்படுகின்றன. இயக்கதிறன் விருத்தியை மேற்கொள்ள வெறுமனே பிள்ளைகளுக்கு எழுத்துப் பயிற்சிகளை மட்டும் மேற்கொள்ளாமல் பிள்ளையின் மூளை, தசைநார்கள் போன்றன சிறப்பாக செயற்படக்கூடிய வகையிலான நீந்தல், ஆடல், பாடல், கண்கட்டி விளையாடல், ஊஞ்சலாட வைத்தல், மண்ணில் விளையாட வைத்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தி அவர்களின் இயக்கத்திறனை விருத்தியடையச் செய்தல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

குழந்தைகளுக்குப் புலனுணர்ச்சி சிறந்த வகையில் இடம்பெறல் இன்றியமையாததாகும். அதனடிப்படையில் குழந்தை பிறந்தவுடன் அதன் ஐம்புலன்களால் சூழலியல் மாற்றங்களை உணர முடிகிறது. அதாவது கட்புல விருத்தியில் கண்பார்வைக் கூர்மை மிக முக்கியமானது. ஏனெனில் குழந்தை கண்ணால் பார்ப்பதனையே கைவழியாக வெளிப்படும். அதாவது கண்களால் காணும் விடயங்களைப் பிள்ளை கைகளால் செயற்படுத்த முயற்சிக்கும். பிறந்த குழந்தையால் எட்டு அங்குல தூரத்திலுள்ள பொருட்களின் மீது பார்வையைச் செலுத்த முடியும். இரண்டு மாதமளவில் குழந்தையின் பார்வை துரிதகதியல் கூர்மையாவதுடன் பொருட்களை அடையாளம் காணவும் வலிமை பெறுகிறது. இது

இனங்காணல் திறனில் முதல் முயற்சியாகும். ஐம்புலன்களால் அடையாளங்கண்ட யாதேனுமொன்றை உள்ளத்தால் இனங்காணல் புலக்காட்சி எனப்படும். அதாவது சூழலில் பெற்ற அனுபவத்திற்கு அர்த்தம் கற்பித்தலாகும்.

குழந்தைக்கு ஆறுமாதமாகும்போது புலக்காட்சி பற்றிய தெளிவான அறிவைப் பெறும். உதாரணமாக தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை யாருமில்லாத நேரத்தில் திடீரென விழித்தால் அதிலிருந்து தானாக வெளியேற முயற்சிக்காது. இதிலிருந்து புலக்காட்சி விருத்தியடைந்துள்ளது எனலாம். கட்புலவிருத்தியானது அப்பருவத்தில் உண்டாகும் அறிவு விருத்தியின் விளைவேயாகும். பியாஜே இரண்டு வயது வரையுள்ள இப்பருவத்தினையே அறிவு வளர்ச்சியன் புலனியக்கப் பருவம் என்கிறார். அத்தோடு கேட்டல் திறன்விருத்தியையும் பெற்றுக் கொள்கிறது. குரல், முகம், ஒலி வேறுபாடுகளை இனங்காண்பதோடு அதனூடாக நபர்களை இனங்காணல் மொழிவிருத்தி என்பன வளர்ச்சியடைகி**ன்றன.**

பிள்ளையைச் சிறந்த வகையில் வழிநடத்தி முன்பள்ளிச் செயற்பாட்டில் விருத்தியை ஏற்படுத்த ஆசிரியருக்குப் பிள்ளையின் புலனுணர்ச்சி தொடர்பான அறிவு இன்றியமையாததாகும். ஏனெனில் மீதிறன் கூடிய பிள்ளைகளும் குறைந்த பிள்ளைகளும் வகுப்பறையில் காணப்படுவர். அவரவர் திறன்களுக்**கு ஏ**ற்றாற்போல் கற்பித்தலை மேற்கொண்டு அனைத்து**ப்** பிள்ளைகளிலும் முழுமையான விருத்தியை ஏற்படுத்துவதே ஆசிரியரது இலக்கு. அந்த வகையில் புலனுணர்வினூடாக பிள்ளைகளை விருத்தியடையச் செய்யலாமெனின் வர்ணப்படங்கள், உருக்களை இனங்காணல், வித்தியாசங்களை இனங்காணல், சிறுவர் பாடல்கள், சிறுவர் தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காண்பித்தல் இயற்கைச்சூழலுக்கு அதாவது வண்ணப் பூங்காக்கள் போன்றவற்றிற்கு**ப்** பிள்ளைகளை அழைத்துச் சென்று அதனை அங்குள்ள இயற்கைக்காட்சி ஒலிகள் போன்றவற்றை அவதானிக்கச் செய்தல் போன்றவற்றினூடாக முன்பள்ளி விருத்திச் செயற்பாட்டினை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும். எனவே பிள்ளையின் புலனுணர்ச்சிசார் விருத்தி தொடர்பான அறிவினை அடிப்படையாகக் கொண்டு முன்பள்ளிச் செயற்பாட்டில் சிறந்த விருத்தியை ஏற்படுத்தலாம்.

வகுப்பறை கற்றல் கற்பித்தலை**ச்** சிறந்த வகையில் கொண்டு செல்ல பிள்ளைகளின் சமூக-மனவளர்ச்சி பற்றிய அறிவும் ஆசிரியருக்கு இன்றியமையாத வொன்றாகும். குழந்தையின் சமூக-மனவெழுச்சி வளர்ச்சிகள் பெருமளவில் முதிர்ச்சியிலும் சூழலிலுமே தங்கியுள்ளது. பெற்றோர் பிள்ளைகளில் அன்பு செலுத்தும்போது பிள்ளைகள் அதனையொரு பாதுகாப்பான இடமாகவே உணருவர். பெற்றோரிடமிருந்து நல்ல தொடர்பைப் பெற்றுக்கொள்ள முடியாது போன குழந்தைகள் சமூகமயமாதலுக்குட்படாமல் பாடசாலையிலும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படு**வர்.** பிள்ளைகள் சில நேரங்களில் தம்மால் கட்டுப்படுத்த முடியாத கோபம், அடம்பிடிப்பு போன்றவற்றை**ச்** செய்யும் போது பெற்றோர் அவர்களை**த்** தண்டிக்காமல் வேறு ஏதாவது விடயங்களினூடாக அவர்களைத் திசைதிருப்பி மனமுறிவைத் தவிர்க்க வேண்டும்.

ஏனெனின் இப்பருவத்தில் அவர்களின் மனவெழுச்சி தற்காலிகமானதாகவே இருக்கும். பெற்றோரால் மனவெழுச்சியின்போதான சந்தர்ப்பங்கள் சரியா**கக்** கையாளாப்படாவிட்டால் பிள்ளைகளிடையே உளவியல் பாதிப்புக்களும் ஏற்படலாம். குழந்தை பிறந்து சில வாரங்களில் தாயுடனும் அதனைத் தொடர்ந்து குடும்ப உறுப்பினர்களுடனும் இன்னும் சில காலத்திற்குப் பின் ஒத்த வயதினர் ஆகியோருடனும் இணைந்து செயற்பட முயற்சிக்கும் போது சமூகமயமாதலுக்குட்பட்டு சமூகத்துடன் இணைந்து செயலாற்றும் மனநிலையைப் பெறும். இவ்வாறு சிறந்த சமூகமயமாதல் பண்பினை வளர்க்க இடமுண்டு. ஆசிரியருக்குப் பிள்ளையின் சமூக மனவெழுச்சி பற்றிய அறிவும் இன்றியமையாத ஒன்றாகவே காணப்படுகிறது. இதனை அறிந்து பிள்ளையி**ன்** முன்பள்ளிச் செயற்பாட்டினைச் சிறப்பாகத் திட்டமிட முடியும். இவ்வறிவோடு பிள்ளைகளைக் குழுச்செயற்பாடுகளில் ஈடுபடச்செய்தல் அதாவது குழு விளையாட்டு, நடனம், உரையாடல்கள் கைகுலுக்கல்கள் போன்றவற்றின் மூலம் பிள்ளைகளைச் சமூகமயமாக்கல் அதன் மூலம் பிள்ளைகளிடையே அன்பு, பாசம், ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு போன்ற நற்பண்புகளை விருத்தியடைச் செய்ய முடியும்.

மொழிவளர்ச்சியானது குழந்தைகள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தவும் பிறரின் கருத்துக்களைச் செவிமடுக்கவும் இன்றியமையாத ஒரு திறனாகக் காணப்படுகிறது. குழந்தையானது சூழலை அறிந்து கொள்ளவும் பொருட்கள் செயல்கள் ஆகியவற்றின் பெயரை அறியும் போதே சூழலை புதிய அமைப்பில் நோக்குகிறது. மொழி மூலம் தன்சூழலைப்பற்றி பேசவும் சிந்திக்கவும் மொழியினூடாக முனைகிறது. மொழிமூலம் பிறதொடர்புகள் விரிவடைந்து சூழல்பற்றிய விளக்கமும் கிடைக்கும்.

மொழிவளர்ச்சியடைய சமூகவகுப்பு முக்கிய காரணமாக இருக்கின்றதென பேர்ணஸ் ரீன் குறிப்பிடுகிறார். முதிர்ச்சி, பயிற்சி இரண்டும் மொழிவளர்ச்சிக்கு வேண்டியனவாகும். குழந்தைகள் ஆரம்பத்தில் பல்வேறுபட்ட ஒலிகளை எழுப்புவதுடனும் குடும்ப அங்கத்தவர்கள் மூலம் எழுப்பப்படும் ஒலிகள் மூலமும் தனது மொழிவிருத்திக்கு தேவையான அறிவைப் பெறுகிறது. எனினும் பத்துமாதமளவிலேயே பாவனை செய்யத்தொடங்கும். ஒருவருடத்தின் பின் குழந்தை கையாளும் சொற்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். எனினும் ஒன்றரை வருடங்களின் பின் கையாளும் சொற்களின் எண்ணிக்கை **விரைவாக** அதிகரிக்கும்.

ஐந்து வயதளவில் சுமார் 5000 சொற்களைக் கையாளும் திறனைப் பெற்றுக்கொள்வர். ஒரு சொல்லிலிருந்து 6 அல்லது 8 சொற்களைக் கொண்ட வசனங்களைப் பாவிக்குமளவிற்கு மொழிவளர்ச்சியடையும். மூன்று வயதாகும் போது தன்மயமான விடயங்களைத் தவிர்த்து சூழல்சார் விடயங்களைப் பேச எத்தனிக்கும். இந்நிலையில் பேசவும் தன்கருத்தைப் பரிமாறவும் பிறர் கருத்தை ஏற்கவும் பழகும். நுண்மதியானது மொழிவிருத்தியல் அதிக பங்கு வகிக்கிறது. குறைந்த நுண்மதியுடைய குழந்தைகள் தாமதமாகவே பேசத்தொடங்குவர். குடும்பத்தில் அங்கத்தவர் கறைந்த எண்ணிக்கையில் காணப்படல் தனித்த சூழல் போன்றன பிள்ளைகள் தாமதமாகப் பேசக்காரணங்களாகவும் அமையும். தொலைத்தொடர்பு சாதனம், பத்திரிகை, சஞ்சிகை, குடும்ப அங்கத்தவர்கள் அதிகமாகக் காணப்படல் என்பன பிள்ளையின் மொழிவிருத்தியை துரிதப்படுத்தும். பெற்றோர் குழந்தைகளுடன் தொடர்ந்து மழலை மொழியில் பேசுவதனைத் தவிர்க்க வேண்டும். இல்லையேல் இதனைக் குழந்தைகள் வழக்கமாக்கிக்கொள்வர்.

குழந்தை வளர்ச்சி தொடர்பான அனுபவத்தினூடாக எவ்வாறு மொழிவிருத்தியை ஏற்படுத்தலாமெனின் குழந்தைகளைத் தமக்கிடையே உரையாட விட**லாம்**. ஆசிரியர் பிள்ளைகளுக்கு இடையேயான உரையாடலின் மூலம் அதிக அறிவு வளர்க்கப்படுகிறது. சமவயதுக் குழுக்களுக்கிடையே ஆசிரியர் பாடி கதைகளைக் கூறிவிட்டு அதனைக் குழந்தைகளிடம் செய்து காட்டும் படி தூண்டுதல், சந்தைகள், பொருட்காட்சிகள் நடாத்தி பொருட்களின் பெயர்களைக் கூவி விற்கச் செய்தல், படம் பார்த்துக் கதை கூறச் செய்தல், வர்ணப்படங்களைக் காண்பித்து அதன் பெயர்களை உச்சரித்துக் காட்டல், குழந்தைகளுடன் மழலை மொழியில் பேசாமல் சிறந்த உச்சரிப்பை உச்சரித்தல் இயற்கை ஒலிகளை**க்** கேட்க வைத்தலும் அதனைப் போல ஒலியெழுப்ப**க்** கற்றுக் கொடுத்தலும் எல்லா மொழிகளிலும் கற்பித்தல் அதாவது சிறுசிறு சொற்கள், வசனம் போன்றவற்றைக் கற்பித்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் மொழிவிருத்தி ஏற்படுத்தலாம். இவ்வாறு செய்தல் ஆசிரியரின் இன்றியமையாத பணியாகும்.

அதே போல் அறிவுசார் வளர்ச்சி பற்றிய அறிவும் வெற்றிகரமான முன்பள்ளி ஆசிரியருக்கு இன்றியமையாததாகும். அறிவுசார் எனும் சொல்லானது அறிவு, ஞாபகம், நினைவு, பிரச்சினைகளைத் தீர்த்தல் எண்ணக்கருக்களை சிந்தித்தல் போன்ற அறிவாற்றலுக்குரிய அம்சங்களை உள்ளடக்கியிருக்கும். அதனை ஏனைய வளர்ச்சிகளை இனங்காண்பது போன்று இலகுவானதன்று. இது தொடர்பான ஆய்வுகளைச் சுவீடன் நாட்டைச்சேர்ந்த பியாஜே எனுமறிஞர் The psychology of Intelligence (1950) எனும் நூலில் தகவல்களை முன்வைக்கிறார். தனது மூன்று பிள்ளைகளையும் முப்பது வருடங்கள் அவதானிப்பு சிகிச்சை முறைகளில் Clinic method ஆய்வுசெய்து செய்து அறிவுசார் கொள்கையை முன்வைத்தார்.

அறிவுசார் விருத்திச் செயன்முறையில் முதலிரு வருடங்களிலேயே சூழலுக்குரிய தூண்டில்கள் பெறும் முக்கியத்துவத்தை முதலில் எடுத்துக்காட்டியவராவார். 3-4 வயதுகளிலேயே ஏறக்குறைய 50% நுண்ணறிவு வளர்ச்சி பிள்ளைகளிடையே ஏற்படுகிறது என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இது வேறெந்தப் பருவத்திலும் ஏற்படுவதில்லை. எனவே இக்காலப்பகுதியில் பெற்றோர் சிறந்த நுண்ணறிவு விருத்திக்கான அத்திவாரத்தை**ப்** பிள்ளைகளுக்கிட வேண்டும். இது அவர்களின் எதிர்காலத்திற்கு பேருதவியாக அமையுமென்பது திண்ணம்.

இன்னும் ஆரம்ப அறிவுவிருத்தி தொடர்பாக ஆசிரியர் அறிந்திருப்பது முக்கியமானதாகும். குழந்தைகளின் அறிவு, நினைவாற்றல், ஞாபகம் எவ்வாறு வளர்ந்துள்ளது. எவ்வாறு அறிவுவிருத்திக்கு உதவலாம் போன்ற திட்டமிடல்களைக் கொண்டிருப்பர். முன்பள்ளி ஆசிரியரானவர் அனுபவத்தினூடாக அறிவை ஊட்டும்போது புதிர்கள், விடுகதைகள் போன்றவற்றைக் கேட்டல், விரல்கள், கட்டைகள், புளியம்விதைகள் போன்றவற்றைக் கொண்டு எண்ணுதலில் ஈடுபடுத்தல், படங்களுக்கு நிறந்தீட்டச் செய்தல், சூழலிலுள்ள கழிவுப் பொருட்களை வைத்து ஆக்கங்களைச் செய்ய வைத்தல், உதாரணமாக

தேங்காய்ப்பூ, சணல், பஞ்சு, பருப்பு, மரத்தூள், போன்றவற்றைப் பயன்படுத்தி ஆக்கங்களைச் செய்ய வைத்தல். நினைவாற்றலை அதிகரிக்கச் செய்ய பிள்ளையைக் கடைக்கு அனுப்பிச் சில பொருட்களை வாங்கி வரச் செய்தல், குறிப்பிட்ட பொருட்களைக் கொடுத்து வித்தியாசங்களை இனங்காணச் செய்தல். அதாவது சிறிய, பெரிய வித்தியாசமான உருக்களை இனங்காணச் செய்தல் பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்குச் சலிப்படையாமல் பதிலளித்தல், களிகள் மூலம் உருவங்களை வடிவமைத்தல் பிரச்சினையின்போது குழந்தையுடன் உளப்பூர்வமாக உரையாடி தீர்வைக் காண வைத்தல். இக்கருத்தையே **ரூசோ** வலியுறுத்துகிறார். முன்பள்ளி ஆசிரியர் பிள்ளையின் சிந்தனையைத் தூண்டும் விதமாகக் கேள்வி கேட்க வேண்டும். அதனூடாக அவர்களிடமிருந்தே பதில்களைப் பெறவேண்டும். உதாரணமாகக் கிளியின் நிறமென்ன? அது எவ்வாறு குரலெழுப்பும்? **என்பன** போன்ற வினாக்களைத் தொடுத்து அவர்களிடமிருந்து விடைகளைப் பெற வேண்டும். இதனூடாக நுண்ணறிவை வளர்க்**கக்** கூடியதாக அமையும். எனவே மேற்கூறியவற்றைத் தொகுத்து நோக்கும்போது முன்பள்ளி ஆசிரியர் தன்னிடம் வரும் குழந்தைகளை அவர்களின் தன்மைகளை இனங்கண்டு அவர்களின் வளர்ச்சிக்கட்டம் பற்றிய அறிவுடன் வகுப்பறை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தல் அவசியமாகும். ஏனெனில் நிகழ்கால வகுப்பறைகளே எதிர்காலத் தலைவர்களைத் தீர்மானிக்கின்றன. இவ்வாறான அறிவு அனுபவத்துடன் கற்பித்தலில் ஈடுபடலானது பிள்ளைகளின் முன்பள்ளிச் செயற்பாட்டில் சிறந்த விருத்தியை ஏற்படுத்தலாம்.

பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் விருத்தியை ஏற்படுத்துவதற்காகவே **இலங்கை** அரசு *5E Methods, smart classes, play schools, early childhood education, pre-school courses* போன்றவற்றினை ஏற்படுத்தியும் நடைடுறைப்படுத்தியு**ம் உ**ள்ளது. ஆசிரியர்களுக்குச் சுதந்திரமாகக் கற்கக்கூடிய சூழலை ஏற்படுத்தி இருப்பதோடு 2017ஆம் ஆண்டிண் ஆசிரியர் தினத்தின் தொனிப்பொருளாகக் 'கற்பித்தலில் சுதந்திரம், ஆசிரியர்களை வலுப்படுத்தல்' என்பன அமைந்திருந்தது. அதன் நோக்கமாகப் பிள்ளைகளின் கல்வி விருத்தியே அடிப்படையாக்கப் பட்டுள்ளது.

எனவே பிள்ளை**களி**ன் வளர்ச்சி பற்றிய பூரண அறிவுடன் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடலா**ல்** சிறந்த முறையில் முன்பள்ளி**ப்** பிள்ளைகளிடையே விருத்தியை ஏற்படு**த்துவ**தோடு, நவீன சூழலுக்கேற்றவாறு ஆற்றலும் ஆளுமையுமுள்ள இளைய தலைமுறையினரின் உருவாக்கத்திற்கு **அடித்தளமிட** முடியுமென்பதில் சிறி**தும்** ஐயமில்லை.

**உசாத்துணைகள்**


- அருள்மொழி செ., 2010, 'பிள்ளை வளர்ச்சியும் கற்றலும்', rajah's book centre, மட்டக்களப்பு.
- மகேசன் ஏ., 2010, 'விஷேட கல்வியும் ஆலோசனை வழங்கலும், கிறா அச்சகம், ஏறாவூர், மட்டக்களப்பு.
- சந்திரசேகரன் சோ., 2008, 'சமயக்கல்வி முறையின் சில பரிணாமங்கள், சேமமடு பதிப்பகம்.